# சங்க காலத்தில் நீதிக்கருத்துரு – ஆய்வு

முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப் பெறும் ஆய்வேடு


ஆய்வாளர்

**சு. கலைச்செல்வன்**

முழுநேர ஆய்வாளர்

(2009 - 2014)

நெறியாளர்

முனைவர் திருமதி **ஆர். காஞ்சனா** **M.A.,M.Phil., Ph.D., MBA**

இணைப்பேராசிரியர் (ஓய்வு)

பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 600 030.



பச்சையப்பன் கல்லூரி

வரலாற்றுத்துறை

சென்னை – 600 030.

ஆகத்து 2019

# சங்க காலத்தில் நீதிக் கருத்துரு - ஆய்வு

## 1. அறிமுகம்

தமிழகத்தின் ஒப்பற்ற காலமாகக் கருதப்படுவது சங்கக்காலம். ஏறத்தாழ கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை சங்கக்காலம் எனக் குறிப் பிடலாம்.

பழங்காலத்திலேயே பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியமைக்கான சான்று கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. ஆட்சி, வணிகம், போர், அறிவியல், உழவு, கல்வி, தொழிற்கூடம், கட்டடக்கலை எனப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. நீதித்துறையும் சிறப்பாக இருந்திருக்க வேண்டும். இன்றைய காலக்கட்டத்தில் *நீதி*யின் விளக்கம் விரிந்துள்ளது. சங்கக்காலத் தமிழகத்தில் *நீதி* என்பதற்கான விளக்கம் என்ன? எதனடிப்படையில் *நீதி* வரையறுக்கப்பட்டது? எழும் வழக்குகளில் என்னென்ன நெறி முறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன? முதலியவற்றை அறிவதற்காக மேற்கொள்ளப் படும் ஆய்வு இஃதாம்.

### சங்கக்கால அரசுகள்

சங்ககாலத்தில் பல்வேறு அரசுகள் தமிழகத்தில் இருந்தமையை அறிய முடிகிறது. இதற்கு முதன்மைச் சான்றாக அமைவது சங்க இலக்கியங்களாம். சங்க காலத்தைப் பொருத்தவரை,

- பாண்டிய அரசு
- சோழ அரசு
- சேர அரசு

ஆகியவை முதன்மை அரசுகளாகவும் பேரரசுகளாகவும் திகழ்ந்துள்ளன. ஒவ்வொரு காலக்கட்டத்தில் ஒவ்வொரு அரசு தமிழகத்தின் பெருவாரியான நிலப்பகுதியை ஆண்டுள்ளது. என்றாலும், குறிப்பிட்ட இடங்கள் குறிப்பிட்ட அரசுகளின் அடையாள மாகத் திகழ்வதைக் காணமுடிகிறது. 'மதுரை' பாண்டிய அரசுக்கு உட்பட்டது என்றும், 'தஞ்சை' சோழ அரசுக்கு உட்பட்டது எனவும் இன்றளவும் மக்கள் வழக்கில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பேரரசுகள் மட்டுமன்றிச் சிலவகை பிற அரசுகளும் இருந்தமையைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன.

- கிழார்
- வேளிர்
- வேந்தர்

எனும் பெயரில் அவை அமைந்திருக்கின்றன. கிழாரைக் காட்டிலும் வேளிர் அதிக அதிகாரம் கொண்ட அரசாகவும், வேளிரைக் காட்டிலும் வேந்தர் அதிக அதிகாரம் கொண்ட அரசாகவும் திகழ்ந்துள்ளன எனலாம்.
அகழாய்வும் சங்க இலக்கியமும்

அண்மைக்கால அகழாய்வு கண்டுபிடிப்புகள் சங்க இலக்கியத்தில் சுட்டப்பட்டுள்ள செய்தியை உறுதிப்படுத்தியுள்ளன. பதிற்றுப்பத்து எனும் சங்க இலக்கியத்தில் சேர அரசுகளின் தொடர்ச்சியைப் பற்றிய குறிப்பு உண்டு. அந்தத் தொடர்ச்சியை உறுதிப்படுத்தும் வண்ணம் சங்கக்கால அகழாய்வும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது சங்க இலக்கியத்தின் உண்மைத் தன்மைக்குச் சான்றாகும்.

***நீதி***

முறையாகத் திட்டப்படுத்தப்பட்ட துறைகளிலும் கூட சிக்கல்கள் எழுகின்றன என்பது உலக இயற்கை. அவ்வாறு எழும் சிக்கல்களை,

- உரிமைபாற்பட்ட சிக்கல்கள்
- இழப்பின்பாற்பட்ட சிக்கல்கள்
- சட்டத்தின்பாற்பட்ட சிக்கல்ள்

என முப்பெரும் வகையாகப் பிரிக்கலாம்.

ஒவ்வொரு தனிமனிதனுக்கு எனச் சில உரிமைகள் இயற்கையாகவும் சில உரிமைகள் சட்டப்படியும் சில உரிமைகள் சமயக்கோட்பாட்டின்படியும் அமைகின்றன. அவ்வாறு அமைந்திருக்கும் உரிமைகளை எவராவது அல்லது ஏதாவது தடுக்கின்ற போது சிக்கல் எழுகின்றது. அத்தகைய சிக்கல்களுக்கு உரிமைகளை மீட்டுத் தருவது நீதியாக அமைகின்றது.

ஒருவர் மற்றொருவர்க்குச் சொந்தமான உடைமைகளைக் களவாடும் போதோ அல்லது சிதைக்கும் போதோ தனிமனிதனுக்கு இழப்பு ஏற்படுகிறது. இதன் அடிப்படை யில் சிக்கலும் எழுகின்றது. இவ்வாறான சிக்கல்களுக்கு இழந்த பொருளை அப்படியே

மீட்டுத் தருவது என்பது இயலாமல் போகலாம். அத்தகைய சூழலில் இழப்பீடு கணக்கிடப்பட்டு அதனை வழங்குதலும், இழப்பை உருவாக்கிய நபருக்குத் தண்டனை வழங்குதலும் நீதியாக அமைகின்றது.

அரசுகளால் இயற்றப்பட்டச் சட்டங்களில் ஏற்படும் முரண்களைச் சட்டத்தின் பாற்பட்ட சிக்கல்கள் எனலாம். அதனைத் தீர்க்க சட்ட வல்லுநர்களும் அரசியலாளரும் இணைந்து செயல்படுவர்.

**சங்கக்காலத்து நீதிமன்றங்கள்**

மேற்சுட்டிய சிக்கல்களில் முதல் இரண்டு சிக்கல்களான உரிமைபாற்பட்ட சிக்கல், இழப்பின்பாற்பட்ட சிக்கல் மற்றும் இவை தொடர்பானவை மட்டுமே சங்கக் காலத்தில் இருந்திருக்கின்றன. சட்டம்பாற்பட்ட சிக்கல் எழ வாய்ப்பே இருந்திருக்க வில்லை. காரணம், தற்காலத்தில் இயற்றப்படும் சட்டங்கள் போன்று அக்காலத்தில் இல்லை எனக் கருதுவதால்.

உரிமை மற்றும் இழப்பின்பாற்பட்டச் சிக்கல்களைத் தீர்க்கச் சங்கக்காலத்தில் கீழ்க்காணும் வகையில் நீதிமன்றங்கள் செயல்பட்டதாக அறிய முடிகிறது.

- அறம் வழங்கும் மன்றம்
- உலக அற அவை
- அறங்கூறு அவையம்

**நீதி வரையறை**

நேரடியாக நீதி என்பதனைத் திருக்குறள் கீழ்க்காணும் வகையில் வரையறுத்துள்ளது.

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை" - திருக். 541

என்பதே அது. ஒருபக்கமாகச் சாய்ந்து, யார்மீதும் இரக்கப்படாது, முறையாகத் தேர்ந்து வழங்குவதே நீதியாகும் என்பது இதன் பொருள்.

## 2. ஆய்வுப் பொருள்

இன்றைக்குக் குறிப்பிடத் தகுந்த வளர்ச்சி பெற்றுவரும் நீதிக் கருத்துரு (Concept of Justice) சங்கக்காலத் தமிழகத்தில் எவ்வாறு திகழ்ந்துள்ளது என்பதை ஆய்ந்து கண்டறிவதே இவ்வாய்வுப் பொருளாகும். ஏறத்தாழ சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் ஊடுருவித் தன் தேவையை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது *நீதி*. சங்க கால வரலாற்றில் நீதி கையாளப்பட்ட விதம், அதற்கென அன்றைக்கு இருந்த நெறி முறைகள் மற்றும் நீதிவழங்கும் அதிகார மையங்கள் முதலியன குறித்ததே இவ்வாய்வு. ஆய்வுக்குப் பல்வேறு தரவுகள் முதன்மைச் சான்றாகவும், துணைமைச் சான்றாகவும் அமைகின்றன.

**முதன்மைச் சான்றாதாரங்கள்**

- சங்கக்காலப் பதிவுகளில் முதன்மையானதாகத் திகழும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், தொல்காப்பியம் ஆகிய தமிழ்நூல்களும்
- நீதி குறித்த சட்டத்துறை அறிஞர்களின் வரையறைகளும்
- பன்னாட்டளவில் உருவாக்கம் பெற்றுள்ள நீதி, மனித உரிமை அமைப்பு களின் வெளியீடுகளும்

முதன்மைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

**துணைச் சான்றாதாரங்கள்**

- நீதி குறித்து வெளிவந்துள்ள இந்திய மற்றும் அயல்நாட்டு நூல்கள்
- சங்கக்காலத் தமிழகத்தின் பண்பாட்டையும், சமூக அமைப்பையும் விளக்கும் வகையில் வெளிவந்துள்ள நூல்கள்
- தொல்லியல் துறை வெளியிட்டுள்ள சங்கக்காலப் பதிவுகள் குறித்த அறிக்கைகள்
- ஆய்வுப் பொருண்மையோடு தொடர்புள்ள நாளேடு, வார இதழ், மாத இதழ்களின் செய்திகள்
- பொதுத்துறை அகராதிகள், சட்டத்துறை அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் முதலியன

முதலியவை துணைச்சான்றாதாரங்களாக அமைகின்றன.

### 3. ஆய்வுத் தலைப்பு

"சங்கக்கால நீதிக் கருத்துரு – ஆய்வு" (Research on Concept of Justice in Sangam Age) என்பதே இவ்வாய்வின் தலைப்பாகும்.

### 4. ஆய்வின் நோக்கம்

- தொடர்ந்து வளர்ச்சி பெற்றுவரும் நீதிக் கருத்துருவின் பழங்கால வடிவம் சங்கக்காலத் தமிழகத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆய்ந்து வெளிக்கொணர்தல்.
- சங்கக்காலத் தமிழகம் நீதி எனும் கருத்துருவைக் கையாள என்னென்ன நெறிமுறைகளை மேற்கொண்டிருந்தது என்பதை ஆய்ந்து முன்வைத்தல்.
- தற்காலப் பன்னாட்டளவிலான நீதி குறித்த கருத்துருக்களோடு ஒப்பிட்டு ஆய்தல்.
- சங்கக்காலத் தமிழகத்தில் நீதி குறித்த விழிப்புணர்வு நிலையையும், நீதி வழங்கும் நடைமுறையையும் கிடைத்துள்ள தரவுகளின் அடிப்படையில் ஆய்வு செய்து ஆவணப்படுத்தல்.
- இப்பொருண்மை சார்ந்த மேலாய்வுக்கு உதவும் வகையில் பல்வேறு களங்களைச் சுட்டிக் காட்டவும் உருவாகவும் முற்படுதல்.

முதலியவை இவ்வாய்வின் நோக்கங்களாகத் திகழ்கின்றன.

### 5. ஆய்வு அணுகுமுறை

சங்கக்கால நீதிக் கருத்துரு தொடர்பான இவ்வாய்வில் கீழ்க்காணும் ஆய்வு அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

- விளக்கமுறை ஆய்வு
- பகுப்புமுறை ஆய்வு
- ஒப்பீட்டுமுறை ஆய்வு

'நீதி' 'அறம்' 'சட்டம்' போன்றவற்றுக்கு முறையான விளக்கம் காணுவது இவ்வாய்வுக்கு மிகவும் இன்றியமையாததாகும். எனவே அவற்றுக்கு விளக்கம் காணும்படியாக உள்ளமையால் விளக்க ஆய்வு அணுகுமுறையும்,

தற்கால ஆய்வு வளர்ச்சியில் நீதியின் வகைகள், துறைகளின் வகைகள் போன்றவற்றைப் பகுத்துப் பார்த்து ஆய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளமையால் பகுப்பாய்வு அணுகுமுறையும்,

'நீதி' 'நன்னெறி' 'அறம்' 'சட்டம்' முதலியவை ஒன்றனோடு ஒன்று தொடர் புடையன. என்றாலும் இவற்றுக்கிடையேயும் வேற்றுமைகள் அமைந்துள்ளன. எனவே இவை சார்ந்த ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டும் பிற கருத்துரு வினோடு ஒப்பிட்டும் ஆய்வு செய்யவிருப்பதால் ஒப்பீட்டாய்வு அணுகுமுறையும் பின்பற்றப் படுகின்றன.

## 6. ஆய்வு எல்லை

'சங்க கால நீதிக் கருத்துரு - ஆய்வு' எனும் இவ்வாய்வுக்கு நில எல்லையாகத் தமிழகமும்; கால எல்லையாகச் சங்கக்காலம் அமைகின்றது. சங்கக்காலம் என்பது பொதுவாகக் கி.மு. 3 முதல் கி.பி. 2 நூற்றாண்டு வரை கணக்கிடப்படுகின்றது. நீதி குறித்த தரவுகளுக்குத் தேவைக்கேற்பத் தற்கால ஆராய்ச்சிகள் வரை எடுத்துக் கொள்ளப் படுகிறது.

ஆய்வுக்குரிய தரவு, செய்தி முதலியவை வரையறுக்கப்பட்ட நில எல்லைக்கு அப்பாற்பட்டிருப்பினும் அவையும் ஒப்பிடலுக்காகவும், வளர்ச்சி வரலாற்றை நிரல்படுத்தலுக்காகவும் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன

## 7. ஆய்வு அமைப்பு

முன்னுரை நிறைவுரை நீங்கலாக ஐந்து இயல்களை உடையதாக இவ்வாய்வு பகுக்கப்பட்டுள்ளது.

### முன்னுரை

முன்னுரைப் பகுதியில் அறிமுகம், ஆய்வுப் பொருள், ஆய்வுத் தலைப்பு, ஆய்வின் நோக்கம், ஆய்வு அணுகுமுறை, ஆய்வு எல்லை, ஆய்வேட்டின் அமைப்பு ஆகியவை இடம்பெற்றுள்ளன. இடம்பெற்றுள்ள அமைப்பு விரிவாகக் கீழே சுட்டப் படுகிறது.

இயல் 1 நீதி - பொது அறிமுகமும் வரலாற்றுப் பின்னணியும்

இயல் 2 சங்கக்காலப் பதிவுகளில் நீதி சார்ந்த கருத்துரு

இயல் 3 சங்கக்காலத் தமிழகத்தின் அறக்கோட்பாடும் நீதியின் நிலைப்பாடும்

இயல் 4 சங்கக்காலத்தில் பல துறைசார்ந்த நீதி மேலாண்மை

இயல் 5 சங்கக்கால நூல்களில் நீதியின் அங்கங்கள்

**நிறைவுரை**

மேற்குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு இயல்களின் ஆய்வின்படிக் கிடைத்துள்ள முடிபுகள் இப்பகுதியில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

**இயல் ஒன்று**

**நீதி - பொது அறிமுகமும் வரலாற்றுப் பின்னணியும்**

**நீதி அகராதிப் பொருளும் வரையறைகளும்**

தற்காலத்தில் எல்லாத் துறைகளிலும் அகராதிகளின் ஆளுமை குறிப்பிடத் தக்க அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது. ஒரு பொருள் குறித்த ஆய்வுக்கு அகராதிகளின் பங்களிப்பு இன்றியமையாததாக அமைந்துள்ளது. பொது அகராதிகள் எனும் நிலை கடந்து துறை சார்ந்த அகராதிகளின் வருகை நுணுக்க ஆய்வுக்கும் மேலாய்வுக்கும் பெரிதும் உதவி புரிகின்றன.

நீதி எனும் சொல்லின் பொருளைப் பொது அகராதிகளின் வழியும் நீதியின் எனும் சொல்லின் மேல்விளக்கத்தைச் சட்டச்சொல் அகராதிகள் வழியும் தொகுத்து இப் பகுதியில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நீதி குறித்து சட்டத்துறை அறிஞர்களின் வரையறைகள் தொகுக்கப்பட் டுள்ளன. அவ்வரையறைகளை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டும் அகராதிப் பொருள் களோடு ஒப்பிட்டும் நீதி எனும் பொருண்மை குறித்த தீர்க்கமான முடிவை எட்ட இப்பகுதி முற்படுகிறது.

**நீதி வகைகளும் விளக்கமும்**

நீதி - அது வழங்கும் தன்மையைப் பொருத்தும் மற்றும் கோரும் தன்மையைப் பொருத்தும் பல வகைப்படுகிறது.

- ✓ பகிர்வுமுறை நீதி (Distributive Justice)
- ✓ நடைமுறை நீதி (Procedural Justice)
- ✓ இழப்பீட்டுமுறை நீதி (Restorative Justice)
- ✓ தண்டிப்புமுறை நீதி (Retributive Justice)

என வகைப்படுத்துவது வழக்கம். இவ்வகைமுறைகளின் விளக்கம் இப்பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அன்றாடப் பயன்பாட்டில் உள்ள இயற்கை நீதி (Natural Justice) சமூக நீதி (Social Justice) பொருளாதார நீதி (Economical Justice) முதலியவற்றையும் விளக்கி நீதியின் பல பரிணாமங்களை இப்பகுதி கூறுகிறது.

**நீதி - தோற்றமும் வளர்ச்சியும்**

மனிதர்கள் படிப்படியாய் வளர்ச்சி பெற்றுத் தற்கால நாகரிக மனிதர்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் படிநிலை வளர்ச்சியில் எச்சூழலில் நீதி எனும் கருத்துரு உருவாகியிருக்கும் என்பதை ஆய்வு செய்யும் பகுதியாக இது அமைகிறது. தமிழகம் என்கிற எல்லை கடந்து உலக அளவில் உள்ள மனிதர்களின் படிநிலை வளர்ச்சியை இப்பகுதி ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறது.

உலகம் தழுவிய மாந்த வரலாற்றில் நீதியின் தோற்றத்திற்கான காரணங்களைக் கண்டறிய முற்படுகிறது. மேலும் அக்காரணங்களை ஒன்றனோடு ஒன்றை ஒப்பிட்டு அவற்றிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது இப்பகுதி. இதன்மூலம் நீதியின் தோற்றத்தில் வரலாற்றின் பங்களிப்பை உணர்ந்து கொள்ள முடியும்.

**தற்கால நீதியின் நிலைப்பாடு**

தற்காலத்தில் நீதி எல்லாத் துறைகளிலும் இன்றியமையாத பங்களிப்பு செய்து வருகிறது. நீதி வழங்கும் தளங்கள் பன்னாட்டளவில் என்னென்ன அமைமந்துள்ளன என்றும்; அவற்றை வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நெறிமுறைகள் என்னென்ன என்பதும்; அவற்றின் அடிப்படைகளை ஆய்ந்து கொடுத்துள்ளது இப்பகுதி.

**நீதியால் உண்டாகும் சமூகப் பயன்**

சமூகத்தில் சிக்கல்கள் ஏற்படாமல் இருப்பதற்குப் பாதிப்புக்கு உள்ளானோர்க்குத் தீர்வும்; பாதிப்பை ஏற்படுத்தியவர்க்குத் தண்டனையும் வழங்க வேண்டியதாகிறது. இதனால் சமூகத்தில் விளையும் பயன்கள் பட்டியலிடப் பட்டுள்ளன.

மேலும், உள்நாட்டளவில் என்பதோடு இல்லாமல் பன்னாட்டளவில் ஏற்படும் அரசியல் சிக்கல்களுக்கும் நீதி நெறிமுறைகளே தீர்வாக அமைந்துள்ளன. ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் ஏற்படும் அரசியல் சிக்கல்கள் அமைதியான முறையில் தீர்க்கப்படுவதற்கு நீதி நடைமுறை எந்தளவுக்கு உதவியுள்ளது என்பதை விளக்கும் பகுதியாக இது அமைந்துள்ளது.

## இயல் இரண்டு

### சங்கக்காலப் பதிவுகளில் நீதி சார்ந்த கருத்துரு

**சங்கக்காலப் பதிவுகள் அறிமுகம்**

ஒரு காலத்தின் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் பிற இன்றியமையாத வரலாற்று நிலைமைகளை அக்காலக்கட்டத்தில் கிடைக்கும் பதிவுகள் மூலமே அறிந்து கொள்ள முடியும். இலக்கியங்கள், செப்பேடுகள், தொல்லியல் பொருட்கள், தகுதி வாய்ந்த பயணியர் குறிப்புகள், கல்வெட்டுகள் முதலியவை காலத்தின் வரலாற்றுத் தன்மைகளைச் சுட்டும் பதிவுகளாகக் கருதப்படுகின்றன.

‘சங்க காலம்’ என்பதன் கால வரையறையை ஆய்ந்து தீர்மானிக்கும் விதமாக இப்பகுதி அமைகிறது. மேலும், தீர்மானிக்கப்பட்ட கால நிலைக்குள் தமிழகத்தில் கிடைத்துள்ள வரலாற்றுப் பதிவுகளைத் தொகுத்தளிக்கும் வண்ணமாக இப்பகுதி உள்ளது. தொகுக்கப்பட்ட பதிவுகளைக் கால வரிசைப்படுத்தி அவற்றின் வரலாற்றுப் பொருத்தத் தரவுகள் மற்றும் அவற்றிலிருந்து இவ்வாய்வுக்கு உகந்த தரவுகளைச் சுட்டிக் காட்டி ஆய்வு செய்கிறது இப்பகுதி.

**நீதி சங்கக்கால வரையறை**

கிடைத்துள்ள சங்கக்காலப் பதிவுகளில் விரவியுள்ள நீதி குறித்த கருத்துகளை ஒருங்கே தொகுத்தளித்தல்; தொகுக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் *நீதி* எனும்

கருத்துரு எந்த வடிவங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது? பயன்படுத்தப்பட்டுள்ளது? என்பதை வெளிக்கொணரும் வகையில் இப்பகுதி இயற்றப்பட்டுள்ளது. மேலும், மேற்சுட்டிய தொகுப்பிலிருந்து தமிழர்கள் நீதியினை எவ்வாறு வரையறுத்து உள்ளனர் என்பதை ஆய்வு செய்து கண்டறியும் பகுதியாக இவ்வியல் நடையிடுகிறது.

**நீதியும் வாழ்க்கை முறையும்**

மனிதர்களின் வாழ்க்கை முறைமை எல்லையில்லாத் தன்மைகளாக அமைகிறது. பழக்கவழக்கம், வணிகம், சடங்கு, உடை, பொருளாதாரம், சொத்து, விளையாட்டு, உணவு கட்டட அமைப்பு, சமயக் கோட்பாடு, வழிபாட்டு முறைமை, நகரத்தைத் திட்ட மிடல், பொழுதுபோக்கு, தொழில் என மனிதர்களின் வாழ்க்கை முறையின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

மேற்காட்டிய பல்வேறு தரப்பட்ட வாழ்க்கை முறையில் ஏதோ ஒரு காரணத்தால் சிக்கல் உருவாகிறது. அவ்வாறு எழும் சிக்கல் ஏதோ ஒரு வகையில் தீர்க்கப்பட்டு உள்ளது. தீர்க்கப்பட்ட வகை மக்களால் ஏற்கப்பட்டோ ஏற்கப்படாதோ இருந்துள்ளது. எனவே மனிதர்களின் வாழ்க்கை முறையில் நீதியின் பங்கு தவிர்க்க இயலாதது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. இப்பகுதியில் மனிதர்களின் வாழ்க்கை முறையோடு நீதி எவ்வாறு தொடர்பு கொண்டு இருக்கிறது என்பதைப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நீதி வழங்கும் அதிகார மையம்**

மக்களிடையே ஏதோ ஒரு காரணத்தால் சிக்கல் எழுகின்ற போது அது ஏதோ ஒரு வகையில் தீர்க்கப்படுவதே வழக்கமாய் உள்ளது. சிக்கலைக் கேட்டறிந்து அதற் குரிய தீர்வாகிய நீதியை வழங்கும் பொறுப்பு யாருடையதாக அல்லது எதனுடையதாக இருந்துள்ளது? என்பதைக் கண்டறியும் பகுதியாக இப்பகுதி அமைகிறது.

கட்டாயம் ஒரே ஒரு மனிதரோ அல்லது அமைப்போ எல்லா மக்களுக்கும் நீதி வழங்கியிருக்க முடியாது என்பது உலகறிந்த செய்தி. அச்சூழலில் நீதி வழங்கும் அதிகாரம் தீர்மானிக்கப்பட்டது என்றும், அதிகாரப் பகிர்வு (Delegation of Powers) எந்தளவுக்கு நீதி வழங்குதலில் உதவியாக இருந்துள்ளது என்பதையும் இப்பகுதி பதிவு செய்துள்ளது.

## இயல் மூன்று

## சங்கக்காலத் தமிழகத்தின் அறக்கோட்பாடும் நீதியின் நிலைப்பாடும்

### அறம் - அறிமுகமும் தொகுப்பும்

அறம் என்பது நன்னெறி, நன்னடத்தை முதலியவற்றின் அடையாளம் ஆகும். தனிமனிதர்க்கு ஏற்பட்ட பட்டறிவு அடிப்படையில் தனிமனித அறக்கோட்பாடுகளும் கடந்த கால வரலாற்றை ஆய்ந்ததன் அடிப்படையில் சமூக அறக்கோட்பாடுகளும் உருவாக்கம் பெற்றன எனலாம். பன்னாட்டளவில் பெரும்பான்மையான சமூகங்கள் அறக்கோட்பாட்டை உருவாக்கி உள்ளன. உருவாக்கிய அறக்கோட்பாடுகளை அந்த மண்ணின் மக்கள் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளன என்பது உணரத்தக்கது.

நீதியின் வளர்ச்சி வரலாற்றில் 'அறம்' எனும் தன்மையின் பங்களிப்பு இன்றியமையாதது மட்டுமன்று நீக்க முடியாததுமாகும். அறத்தை அடிப்படையாகக் கொண்டு நீதி அடுத்தகட்ட படிநிலைக்குச் சென்றுள்ளது. இதனால் நீதியை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டுமெனின் அறத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியதாகிறது. எனவே சங்கக்காலப் பதிவுகளின் மூலம் அன்றைய தமிழகத்தில் நிலவிய அறக்கோட்பாடுகளைத் தொகுத்தளித்து உள்ளது இப்பகுதி.

### நீதி வழங்கலில் அறத்தின் பங்கு

சிக்கல் உருவாக்கம்; பாதிப்புக்கு உள்ளானோர்; பாதிப்பு ஏற்படுத்தியோர்; இழப்பை/ பாதிப்பை அளவிடல்; பாதிக்கப்பட்டோர்க்குத் தீர்வு என நீதி வழங்கும் நடைமுறை தொடர்கிறது. நீதி வழங்குதலில் அறம் பங்களிப்புச் செய்கிறது. என்றாலும், முழுமையான பங்களிப்புச் செய்கிறது என்று சொல்ல முடியாது. எனவே சங்கக்காலத் தமிழகத்தின் அறக்கோட்பாடுகளை நீதி வழங்கலைக் கட்டுப்படுத்தும் அறக்கோட்பாடுகள் எனவும் நீதி வழங்கலைக் கட்டுப்படுத்தா அறக்கோட்பாடுகள் எனவும் வகைப்படுத்த முடிகிறது.

மேற்சுட்டிய இருதிற வகைப்பாட்டு ஆய்வுக்கு அறக்கோட்பாடுகளின் தொகுப்பு பெரிதும் துணைநிற்கும்.

**அறமும் நீதியும் வேறுபடும் சூழல்**

அறத்திலிருந்து நீதி கிளைத்தது என்று கருத இடமிருப்பினும் சில சூழல்களில் அறத்திலிருந்து நீதி வேறுபட்டு நிற்கிறது. அறம் என்பவை தத்துவ நிலையில் நின்றுவிட, நீதி என்பது நடைமுறைக்கு ஏற்றதாக அமைகிறது. இதனால் சில சூழல்களில் அறம் சுட்டிக்காட்டாத கூறுகளையும் நீதி வழங்கலில் பயன்படுத்த வேண்டியுள்ளது.

அறம் முதற்படியாகவும், நீதி வழங்குதல் அடுத்த படியாகவும் அமையும் இடங்களும் உண்டு. இதற்குத் தற்கால நீதியின் நிலைப்பாட்டோடு சங்க காலத் தமிழகத்தின் நிலைப்பாட்டை ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறான ஆய்வை மேற்கொண்டு அதன் முடிவுகளை இப்பகுதி சுட்டுகிறது.

## இயல் நான்கு

## சங்கக்காலப் பதிவுகளில் பல துறைசார்ந்த நீதி மேலாண்மை

**வணிகம் சார்ந்த நீதி மேலாண்மை**

வணிகம் என்பது சமூகத்தின் இன்றியமையாத நடைமுறையாகும். உற்பத்தி யாகும் பொருள் ஒரே இடத்தில் தேங்கிவிடாமல் இருக்க அவற்றை வணிகம் செய்தாக வேண்டியது கட்டாயமாகும். சங்கக்காலத்தில் பொருள் உற்பத்தி தொடங்கிவிட் டிருந்தது என்பதைச் சான்றுகளின் மூலம் அறியமுடிகிறது. அவற்றை எவ்வாறு வணிகம் செய்தார்கள் என்பதும் வணிகம் செய்யும் நெறிமுறைகளாக எவை கடைப்பிடிக்கப் பட்டன என்றும் இப்பகுதி பதிவு செய்கிறது.

சங்கக்காலத்தில் தமிழக எல்லைக்குள் உள்ளூர் வணிகம் மட்டுமன்றி,

- ஊரிடை வணிகம்
  (Inter Town Trade)
- நில எல்லை கடந்துள்ள நாட்டிடை வணிகமும்
  (Inter Kingdom Trade beyond Land Boundary)
- கடல் கடந்துள்ள நாட்டிடை வணிகமும்
  (Inter Kingdom Trade beyond Maritime Boundary)

நடைபெற்றுள்ளன. இவ்வகை வணிகச் சூழலும் அச்சூழலில் எழும் சிக்கலைத் தீர்க்கக் கூடிய நெறிமுறைகளையும் இப்பகுதி பதிவு செய்துள்ளது.

**அரசியல் சார்ந்த நீதி மேலாண்மை**

இனக்குழுச் சமூகம் உருவாக்கம் பெற்றதிலிருந்து சமுதாயத்தின் அனைத்துத் துறைகளின் தலைமைத் துறையாகத் திகழ்வது 'அரசு'தான். அத்தகைய அரசின் நடைமுறைகள் எவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருந்தன என்று இப்பகுதி ஆய்வு செய்கிறது. அரசின் தலைமைப் பொறுப்பில் எவர் இருக்க வேண்டும்? அவர்க்குப் பின் அப்பொறுப்பு எவர்க்கு வழங்க வேண்டும் முதலிய நடைமுறைகள் எவை என்றும்; அந்நடைமுறைகளில் ஏதோ ஒரு காரணம்பற்றி சிக்கல் வருகின்ற போது அச்சிக்கல் எவ்வாறு எல்லாம் தீர்க்கப்பட்டு நீதி வழங்கப் பட்டிருக்கிறது என்றும் இங்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அரசின் உறுப்புகளாகப் படை, அமைச்சு, ஒற்று, தூது முதலியவை அமைகின்றன. இவற்றின் செயல்பாடுகள் நாட்டுக்குள்ளும் நாட்டுக்கு வெளியேயும் நிகழ்கின்றன. இத்துறையில் உள்ளோர் செயல்பட வேண்டிய நெறிமுறைகளாக எவை வழக்கத்தில் இருந்துள்ளன என்றும் இப்பகுதி பதிவு செய்துள்ளது.

**பொருளாதாரம் சார்ந்த நீதி மேலாண்மை**

சங்கக்காலத்தில் 'பணம்' எனும் நடைமுறையில் வந்துவிட்டது என்பதை அறிய முடிகிறது. தமக்கு வேண்டிய ஒரு பொருளைப் பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாக இன்னொரு பொருளைக் கொடுக்கும் செயல்பாடான *பண்டம் மாற்று* முறை முற்றிலும் மாறி இருந்தமையைச் சான்றுகள் உறுதி செய்கின்றன. பணம் உருவாக்கம், கையாளுதல், வரி விதிப்பு, கொடை ஆகியவை குறித்தும்; இவை சார்ந்து வழங்கப்படும் நீதிக்கு அடிப்படையாக அமையும் நெறிமுறைகளையும் இவ்வியல் பதிவு செய்கிறது.

**போர் சார்ந்த நீதி மேலாண்மை**

பழங்காலத்தில் உலகம் முழுதும் பொதுப்படையாக இருந்துள்ள ஒரு செயலைக் குறிப்பிட வேண்டுமென்றால் மன்னர்கள் செய்த போரினைக் குறிப்பிடலாம். அந்த அளவுக்குப் போர் அன்றைய சமுகத்தோடு ஒன்றியிருந்தது எனலாம். தமிழகத்தைப் பொருத்தவரை போர் செய்தலிலும் கூட சில நெறிமுறைகள் பின்பற்றப்பட்டு வந்துள்ளன.

போர்முறைக்கு என்று நெறிமுறைகள் பின்பற்றப்பட்டு வந்தாலும் அந்நெறி முறைகள் முறையாகப் பின்பற்றனவா என்பதைக் கண்காணிக்கவோ, அவை பின்பற்றப் படாத சமயத்தில் போர்க்குற்றம் செய்தவரைத் தண்டிக்கவோ பொதுவான அமைப்பு ஒன்று இருந்ததாகத் தெரியவில்லை. என்றாலும், சிற்றரசர்கள் தமக்குள் செய்யும் போரைக் கண்காணிக்கும் வகையில் பேரரசர்கள் இருந்தனர் எனலாம்.

## இயல் ஐந்து

## சங்கக்கால நூல்களில் நீதியின் அங்கங்கள்

### நீதியின் அங்கங்கள் - பொது அறிமுகம்

சட்டவியலைப் பொருத்தவரை நீதி என்பது பாதிக்கப்பட்ட நபருக்கு அல்லது பாதிக்கப்பட்ட அமைப்புக்கு இறுதியாக வழங்கப்படும் தீர்வு எனப்படும். இறுதித் தீர்வை அடைவதற்குச் சில நடைமுறைகள் உதவி புரிகின்றன. அந் நடைமுறைகளே நீதியின் அங்கங்கள் எனப்படுகின்றன. எவை நீதியின் அங்கங்களாகத் திகழ்கின்றன என்றும் ஏன் அவை நீதியின் அங்கங்கள் எனச் சுட்டப்படுகின்றன என்றும் இவ்வியல் பதிவு செய்துள்ளது.

மேலும், ஒவ்வொரு அங்கத்திற்கும் விரிவான அறிமுகமும் விளக்கமும் கொடுக்கப்பட்டு உள்ளன. கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தில் பன்னாட்டுச் சட்டவியல் அறிஞர்களின் கோட்பாடுகளும் மேற்கோள்களும் சுட்டப்பட்டுள்ளன.

### விசாரணை குறித்த செய்திப் பதிவு

இரு தரப்புக்குள் வழக்கு ஒன்று எழும் போது இரு தரப்புமே தம் பக்கமுள்ள உரிமைகளையும் சரித்தன்மையையும் முன் வைப்பார்கள். அவ்வாறு முன்வைக்கப் படுபவை சரியானவைதாமே என்று ஆராய்ச்சி செய்தல் வேண்டியதாகிறது. இவ்வாறு செய்யப்படும் ஆராய்ச்சியே 'விசாரணை' எனப்படுகிறது.

இவ்வகை நடைமுறை சங்கக்காலத்தில் இருந்ததா என்றும் இருந்தது என்றால் எவ்வாறு அது செயல்படுத்தப்பட்டது என்றும் இவ்வியல் பதிவு செய்கிறது.

**தண்டனை குறித்த செய்திப் பதிவு**

பாதிக்கப்பட்ட தரப்புக்குத் தீர்வாக நீதி வழங்கும் அதே நேரத்தில் பாதிப்பு கொடுத்த தரப்புக்குத் தண்டனை வழங்குதலும் நீதியின் அங்கமாகக் கருதப்படுகிறது. இந்நடைமுறை எதிர்காலத்தில் பாதிப்பு கொடுக்க முனைவோர்க்கு உளவியல் அச்சம் ஏற்படுத்தப் பயன்படும் என்பது உலகப் பொதுக் கூற்றாகும். இதன்மூலம் குற்றங் களின் எண்ணிக்கை குறையும் என்று கருதப்படுகிறது.

தண்டனை குறித்துச் சங்கக்காலத்தில் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டது என்று இப்பகுதி பதிவு செய்கிறது.

**பிற நடைமுறை குறித்த செய்திப் பதிவு**

மேற்குறிப்பிட்டுள்ள விசாரணை, தண்டனை மட்டுமல்லாமல் இன்னபிற நடைமுறைகளும் நீதியின் அங்கங்களாகச் சுட்டப்படும். அவற்றைக் குறித்த அறிமுகமும் விளக்கமும் இப்பகுதியில் பதிவு செய்யப்படுகிறது. மேலும், அவை சங்கக்காலத்தில் எவ்வாறு நடைமுறையிலும் வழக்கத்திலும் இருந்தன என்பதையும் இப்பகுதி ஆய்ந்து முன்வைக்கிறது.

**நிறைவுரை**

மேற்குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு இயலின் ஆய்வின்படிக் கிடைத்துள்ள முடிபுகள் இப்பகுதியில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

# நன்றியுரை

“சங்க காலத்தில் நீதிக் கருத்துரு – ஆய்வு” என்னும் ஆய்வினை மேற்கொள்ள எனக்கு வாய்ப்பளித்த பச்சையப்பன் கல்லூரிக்கும், கல்லூரி முதல்வர் அவர்களுக்கும், வரலாற்றுத்துறைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் பட்டம் மேற்கொள்ள எனக்கு வேண்டிய நிர்வாக உதவிகளை உடனுக்குடன் செய்து கொடுத்த சென்னைப் பச்சையப்பன் கல்லூரி வரலாற்றுத் துறை முன்னாள் தலைவர் திருமதி வசந்தி அவர்களுக்கும் இந்நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வுத் தலைப்பினைத் தேர்ந்தெடுக்க முழு உரிமை நில்கியதோடு ஆய்வுத் தொடர்பான தரவுகளைச் சேகரிக்க வழிகாட்டியாகவும், இவ்வாய்வேடு செம்மையாக உருவாவதற்குக் காரணமாகவும் இருந்த என் நெறியாளர் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் முனைவர் ஆர். காஞ்சனா அம்மா அவர்களுக்கு எண்ணிலடங்கா நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் ஆய்வுக்கு ஊக்கமளித்த சென்னைப் பச்சையப்பன் கல்லூரி வரலாற்றுத் துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் என் நன்றியினை மனமார உரித்தாக்குகிறேன்.

இவ்வாய்வின் தொடக்கம் முதல் இறுதிவரை உடனிருந்து உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நேர்காணலுக்கு அனுமதி அளித்த தொல்லியல் அறிஞர் முனைவர் நடன காசிநாதன் அவர்களுக்கும் தமிழறிஞர் முனைவர் வே.சிவசுப்பிர மணியன் அவர்களுக்கும், இவ்வாய்வுக்கு வேண்டிய தரவுகளை இன்முகத்தோடு வழங்கி உதவிய சட்டப்பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் வணங்காமுடி அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

சு. கலைச்செல்வன்

## சுருக்கக் குறிப்பு விளக்கம்

**தொல்காப்பியம்**

| | |
|---|---|
| தொல். | - தொல்காப்பியம் |
| எழுத். | - எழுத்ததிகாரம் |
| சொல். | - சொல்லதிகாரம் |
| பொருள். | - பொருளதிகாரம் |

**பதிணென்கீழ்க்கணக்கு நூல்**

| | |
|---|---|
| திருக். | - திருக்குறள் |

**எட்டுத்தொகை நூல்கள்**

| | |
|---|---|
| நற். | - நற்றிணை |
| குறுந். | - குறுந்தொகை |
| ஐங். | - ஐங்குறுநூறு |
| பதிற். | - பதிற்றுப்பத்து |
| பரி. | - பரிபாடல் |
| கலித். | - கலித்தொகை |
| அகம். | - அகநானூறு |
| புறம். | - புறநானூறு |

**பத்துப்பாட்டு நூல்கள்**

| | |
|---|---|
| பொருநர். | - பொருநராற்றுப்படை |
| சிறுபாண். | - சிறுபாணாற்றுப்படை |
| பெரும்பாண். | - பெரும்பாணாற்றுப்படை |
| பட்டினப். | - பட்டினப்பாலை |
| மதுரைக். | - மதுரைக்காஞ்சி |
| முல்லைப். | - முல்லைப்பாட்டு |

**இரட்டைக் காப்பியங்கள்**

| | |
|---|---|
| சிலப். | - சிலப்பதிகாரம் |
| மணிமே. | - மணிமேகலை |

**பிறநூல்கள்**

| | |
|---|---|
| பெரிய. | - பெரிய புராணம் |
| பெருங். | - பெருங்கதை |
| முத்தொள். | - முத்தொள்ளாயிரம் |

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இயல் 1 நீதி - பொது அறிமுகமும் வரலாற்றுப் பின்னணியும் | 16 |
| 3. | இயல் 2 சங்கக்காலப் பதிவுகளில் நீதி சார்ந்த கருத்துரு | 57 |
| 4. | இயல் 3 சங்கக்காலத் தமிழகத்தின் அறக்கோட்பாடும் நீதியின் நிலைப்பாடும் | 108 |
| 5. | இயல் 4 சங்கக்காலத்தில் பல துறைசார்ந்த நீதி மேலாண்மை | 119 |
| 6. | இயல் 5 சங்கக்கால நூல்களில் நீதியின் அங்கங்கள் | 175 |
| 7. | நிறைவுரை | 236 |

**பின்னிணைப்புகள்**

- துணைநூற்பட்டியல்
- நேர்காணலின்போது எடுத்த ஒளிப்படங்கள்

# இயல் 1: நீதி பொது அறிமுகமும் வரலாற்றுப் பின்னணியும்

சங்க காலத்தில் 'நீதி கருத்துரு' எனும் தலைப்பில் மேற்கொள்ளப் பட்டிருக்கும் இவ்வாய்வுக்கு முதன்மைத் தேவைகளாகத் திகழ்வது இரண்டு கூறுகள் ஆகும். முதலாவது 'நீதி' எனும் சொல்லின் பொருளும் விளக்கமும்; இரண்டாவது சங்ககாலம் குறித்த தெளிவு. 'நீதி' எனும் சொல்லின் பொருளையும் விளக்கத்தையும் பல்வேறு அகராதிகளின் துணைகொண்டும் பல்வேறு வரையறைகள் (Definitions) மூலமாகவும் ஆய்வு செய்ய முற்படுகிறது இப்பகுதி. இதன்மூலம் நீதிக் கருத்தியலின் வளர்ச்சி வரலாற்றையும் அறிந்துகொள்ள முடியும்.

5 துணைத்தலைப்புகளாகப் பகுக்கப்பட்டு இவ்வியல் அணுகப்பட்டுள்ளது. அவை வருமாறு,

- நீதி அகராதிப் பொருளும் வரையறைகளும்
- நீதி – வகைகளும் விளக்கமும்
- நீதி – தோற்றமும் வளர்ச்சியும்
- தற்கால நீதியின் நிலைப்பாடு
- நீதியால் உண்டாகும் சமூகப் பயன்

இவ்வியலில் நீதி எனப்படும் பொருண்மையை விளங்கிக் கொள்ள அதன் பொருள், வரையறை, விளக்கம், கருத்து முரண்கள், கருத்துரு வளர்ச்சி முதலியன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதனால் நீதி குறித்த பொதுவான அறிமுகம் வரையறுக்கப்படுவதுடன் இவ்வாய்வின் போக்கிற்குப் பெரிதும் பயன்பாடாக அமையும்.

**நீதியும் - கட்டுப்படுத்தும் பொருண்மைகளும்**

நீதி என்கிற சொல்லின் பின்னணியில் சட்ட அறிஞர்கள் பல்வேறு கருத்து களைப் பதிவு செய்துள்ளனர். நீதி என்பது ஒருவகையான தீர்வு எனப் பொது வாகக் கொள்ளப்படுகிறது. எனினும் அதற்கான எல்லைகள் வரையறுக்கப்

பட்டுள்ளன என்று சட்டவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். சிக்கல் ஒன்று எழுந்துள்ள சூழல், பாதிக்கப்பட்டவர்கள், பாதிப்பின் அளவு, சாட்சிகள், குற்றத் தின் விளைவு, குற்றமனம் எனப் பலவகையான கட்டுப்படுத்தும் பொருண்மைகள் நீதி வழங்குவதில் தலையிடுகின்றன. ***பாதிக்கப் பட்டவர்க்குச் சரியான தீர்வு கிடைக்கச் செய்யும் நீதி வழங்குதலில் 'கட்டுப்படுத்தும் பொருண்மை'களின் தலையீடு இருத்தல் தேவையானதா?*** என்பது வினாவாக அமைகிறது.

முறையான நீதி வழங்குதலில் கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றனவா இல்லையா? கட்டுப்படுத்தும் பொருண்மைகளின் அளவீடு என்ன? கட்டுப்படுத்து கின்ற பொருண்மைகளால் நீதி வழங்குவது தவறுகிறதா? எனப் பலப்பல துணை வினாக்களும் எழுகின்றன. முதன்மையான ஆய்வுவினாவிற்கும் அதனோடு சேர்ந்து எழும் ஆய்வுத் துணை வினாக்களுக்கும் உரிய விடைகள் காண, **நீதி என்பதன் பொருளை மிகச் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது**. அதற்காகப் பல்வேறு பொது அகராதிகள், சட்ட அகராதிகள், சட்ட அறிஞர்களின் வரையறைகள் முதலியவை ஒருங்கே தொகுக்கப்பட்டு ஆய்வு செய்கிறது இப்பகுதி. இதன்மூலம் நீதி எனும் கருத்துருவைப் பல்வேறு கோணங்களில் அணுகி இவ்வாய்வுக்குத் தேவையான தரவுகளினைத் தொகுத்தறிய வாய்ப்புகள் உண்டு.

## நீதி அகராதிப் பொருளும் வரையறைகளும்

தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டுள்ள பொது அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் (ஆங்கிலம்), சட்ட அகராதிகள் (ஆங்கிலம்), சட்ட அறிஞர்களின் வரையறைகள் இப்பகுதிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இனி ஒவ்வொரு நூலிலிருந்தும் கிடைத்த தரவுகள் வருமாறு:

### *நீதி – சில பொது அகராதிகளின் சொற்பொருள்*

*நீதி*[1] s. Equity, righteousness, justness, justice, நியாயம். 2. Reasonableness, propriety, தகுதி. 3. Law, பிரமாணம். 4. Right conduct, morality, நன்னெறி. 5. Established custom, முறைமை. 6. Truth, உண்மை. W. p. 484. NEETI. (c.)--For the compounds compare with நியாயம்.

நீதி[2] s. justice, நியாயம்; 2. ethics, morals, right conduct, சன்மார்க்கம்; 3. law, பிரமாணம்; 4. (chr. us.) righteousness, தர்மம்

நீதி[3] 1. Equity, justice; நியாயம். நீதியாவன யாவையு நினைக்கிலேன் (திருவாச. 26, 2). 2. Discipline; முறைமை. கட்டமை நீதி தன்மேற் காப்பமைந்து (சீவக. 1145). 3. Rightconduct, morality; ஒழுக்கநெறி. நீதியால் அவர்கடம்மைப் பணிந்து (பெரியபு. தடுத்தாட். 197). 4. Truth; மெய். (பிங்.) 5. Conformity with the ways ofthe world; உலகத்தோடு பொருந்துகை. (குறள் 97, உரை.) 6. Nature; இயல்பு. ஊர்தியிற் சேறலுநீதி யாகும் (நம்பியகப். 83). 7. Law; தருமசாஸ்திரம். உணர்ந்தாய் மறைநான்கு மோதினாய் நீதி (திவ். இயற்.2, 48). 8. That which guides; நடத்துவது. (சி.போ. பா. பக். 20, சுவாமிநா.) 9. Means, contrivance; உபாயம். உலகமெல்லா மாண்டிட விளைக்குநீதி (சீவக.755). 10. Pārvatī; பார்வதி. (கூர்மபு.திருக். 21.)

நீதி[4] சமூக நெறி, சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் வழக்கு, பிரச்சனை போன்றவற்றில் காரணங்களைக் கூறி நடுநிலைமை யோடு வழங்கப்படும் முடிவு (Justice)

Justice[5] 1. the fair treatment of people: laws based on the principles of justice **o** They are demanding equal rights and justice. OPP injustice see also POETIC JUSTICE, ROUGH JUSTICE

2. the quality of being fair or reasonable : who can deny the justice of their cause? OPP injustice

3. the legal system used to punish people who have committed crimes: the criminal justice system o the European court of justice o (Brt) They were accused of attempting to pervert the course of justice o (NAmE) They were accused of attempting to obstruct justice see also MISCARRIAGE OF JUSTICE

4. also JUSTICE [C] (NAmE) a judge in a court (also used before the name of a judge) see also CHIEF JUSTICE

5. Justice [C] (BrE, CanE) used before the name of a judge in a COURT OF APPEAL: Mr. Justice Davis

IDM bring sb to justice to arrest sb for a crime and put them on trial in court do justice to sb/ ‘sth; do sb/sth justice 1 to treat or represent sb/sth fairly, especially in a way that shows how good, attractive, etc they are: *that photo doesn’t do you justice* 2 to deal with sb/sth correctly and completely: *you cannot do justice to such a complex situation in just a few pages,* **do yourself justice** to do sth as well as you can in order to show other people how good you are: *she didn’t do herself justice in the* exam

Justice[6] 1. **FAIRNESS** fairness or reasonableness, especially in the way people are treated or decisions are made

**2. APPLICATION OF LAW** the legal system, or the act of applying or upholding the law

3. **VALIDITY** validity in law

4. **GOOD REASON** sound or good reason

5. LAW = justice of the peace [12C. via French < Lat n justitia < Justus (see JUST)] <> **bring somebody to justice** to arrest somebody to be tried in a court of law <> **do justice to somebody or something 1** to deal with somebody or something fairly 2. To convey the true qualities, especially the merits, of somebody or something <> **do yourself justice** to display your own abilities fully or perform to your full potential (*often in the negative*)

Justice (n)[7] 1. Fairness நியாயம், நீதி, நேர்மை 2. A judge நீதிபதி

Justice[8] quality of being just நீதி நியாயம் நேர்மை

Judicial proceedings நீதிமன்ற நடவடிக்கை

Just Conduct முறைதவறா நடத்தை

Impartiality நடுநிலை ஒருசார்பின்மை

Judge நீதிபதி

Render justice to, treat justly – நேர்மையான முறையில் நடந்து கொள்

Justice[9] n. 1. The quality of being just; righteousness, equitableness, or moral rightness: *to uphold the justice of a cause*. 2. Rightfulness or lawfulness, as of a claim or title; justness of ground or reason: *to complain with justice* 3. The moral principle determining just conducts 4. Conformity to this principle, as manifested in conduct; just conduct, dealing or treatment. 5. The administering of deserved punishment or reward 6. The maintenance or administration of what is just by law, as by judicial or other proceedings: *a court of justice* 7. Judgment of persons or causes by judicial process: *to administer justice in a community* 8. A judicial officer; a judge or magistrate 9. (cap.) Also called Justice Department. the Depart ment of Justice. 10. Bring to justice, to cause to come before a court for trial or to receive punishment for one's misdeeds: *the murderer was brought to justice* 11. Do justice a. to act or treat justly or fairly b. to appreciate properly: *we must see this play again to do it justice* c. to acquit in accordance with one's abilities or potentialities: *He finally got a role in which he could do himself justice as an actor*

மேற்காணும் பதிவுகள் அனைத்தும் பொது அகராதிகள் 'நீதி' என்கிற சொல்லுக்குத் தந்துள்ள விளக்கங்கள் ஆகும். இவை சட்டவியல் எல்லையைக் கடந்தும் 'நீதி' எனும் சொல்லினை விளக்கியுள்ளன. நடத்தை, நீதிபதி, கைது முதலிய விளக்கங்களும் 'நீதி' எனும் சொல்லுக்குத் தரப்பட்டுள்ளமை கவனிக்கத் தக்கது. இனி, துறை சார்ந்த அகராதிகள் அதாவது சில 'சட்ட அகராதிகள்' தரும் விளக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

***நீதி – சில சட்ட அகராதிகளின் சொற்பொருள்***

Justice[10] n. 1) fairness. 2) moral rightness. 3) a scheme or system of law in which every person receives his/ her/its due from the system, including all rights, both natural and legal.

Justice[11] 1 a : the quality of being just, impartial, or fair [it is not the province of the court to decide upon the or injustice…of these laws "Scott v. Sanford , 60 U.S. 393 (1857)"]
b : the principle or ideal of just dealing
;also
: conformity to the principle or ideal of just dealing
2 a : the administration of law [a fugitive from ]
;esp : the establishment or determination of rights according to law or equity [system of ]
b : fair, just, or impartial legal process [courts or tribunals... for the administration of international "G. R. Winters"]
3 : judge
;esp : a judge of an appellate court or court of last resort (as a supreme court) [insults to particular s and threats of civil disobedience were bandied freely.

மேற்குறிப்பிட்டுள்ள சட்ட அகராதிகள் 'நீதி' எனும் சொல்லிற்குப் பலபல பொருள்களைத் தந்திருப்பினும் அவை அனைத்தும் சட்டவியல் துறையோடு தொடர்பு கொண்டவை என்பதை எளிதில் விளங்கிக் கொள்ள முடிகிறது. நீதி மன்ற நடவடிக்கை, நீதிபதிகள், அநீதி இழைக்காமை, சட்டங்களைக் கையாளுதல் எனச் சட்டவியலோடு மட்டுமே தொடர்புள்ள விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவ்விளக்கங்களுக்கு எல்லாம் நேர்மை, நடுநிலைமை என்னும் பொருண்மைகள் அடிப்படையாகப் பொருந்தியிருப்பதைக் காண முடிகிறது.

**நீதி – சில வரையறைகளும் விளக்கங்களும்**

Justice[12] The balanced and equitable administration of law. என்று நியூ வேல்ர்டு சட்ட அகராதி வரையறுத்துள்ளது. இதன் மூலம் *ஏற்றத்தாழ்வு இல்லாமல் நடுநிலைமையோடு சமவாய்ப்பளித்துச் செய்யப் படும் சட்ட மேலாண்மையே நீதி எனப்படும்* என்கிற கருத்துப் புலப்படுகிறது.

Justice[13] The constant and perpetual disposition to render every man his due. என்று பிளாக்ஸ் சட்ட அகராதி வரையறுத்துள்ளது. இதன்மூலம் *அனைவருக்கும் அவர்களுக்கு உரிய உரிமைகளை நிலையாகவும் தொடர்ச்சியாகவும் வழங்கும் இயல்பே நீதி* எனப்படும் என்கிற கருத்துப் புலனாகிறது.

Justice[14] Moral disposition which renders men apt to do just things and which causes them to act justly and to wish what is just. என்று அரிஸ்டாடில் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம், *நேர்மையான செய்கைகளைச் செய்ய மனிதர்களை வழிநடத்தும் மற்றும் நேர்மையாக இயங்குவதற்கும் எண்ணுவதற்கும் தூண்டுகிற அற இயல்பே நீதி எனப்படும்* என்கிற கருத்தை விளங்கிக் கொள்ளலாம்.

Justice[15] consists in speaking the truth and paying one's debt என்பது கிரேக்க நாட்டில் வாழ்ந்த அறிஞர் செப்பாலஸின் கருத்தாகும். இதன்மூலம், *உண்மை, நியாயம் இவற்றின் மீது நீதி திகழ்கிறது* என்கிற கருத்தாக்கம் வெளிப்படுகிறது.

"For judges, whose function is supremely practical, the word justice refers, not to some abstract principle of law or morality, but to an attitude of mind and self-discipline that regulates their reasoning and actions while hearing cases in court and discharging associated responsibilities – an attitude that directly hears on their duty to resolve disputes".[16] என ஆஸ்ட்ரேலியா நாட்டின் மேனாள் உச்சநீதிமன்ற நீதியரசர் திரு. வெல்ஸ்

அவர்கள் தான் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம், நீதி என்பது வரையறுக்கப்பட்ட சட்டங்களோ அல்லது விதிகளோ இல்லை என்றும், வழக்குகளை விசாரிக்கும்போது காரணம் காணுதல் மேல் நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றை ஒழுங்குப்படுத்தும் மனநிலை மற்றும் தன்னொழுக்கமே நீதி ஆகும் எனச் சுட்டியுள்ளார். இதன்மூலம், சிக்கல்களைத் தீர்த்து வைக்கும்போது சட்டத்திற்கு உட்பட்டும் அதேநேரத்தில் சட்டத்தைத் தாண்டியும் சிந்திக்கும் மனநிலையும் நீதி எனப்படும் என்கிற கருத்து வெளிப் படுகிறது.

**நீதி – நேர்மை, சமவுரிமை, ஏற்றத்தாழ்வின்மை முதலியன**

"Dictionaries give the word 'justice' a range of diverse meanings, the core of which appears to carry the notion of **moral righteousness in action**"[17] என நீதியரசர் வெல்ஸ் கூறுகிறார். அகராதிகள் நீதி எனும் சொல்லுக்குப் பல வகையான பொருள்களைத் தருகின்றன; செயலில் காட்டப்படும் அறமுறையே அவற்றின் அடிநாதமாக விளங்குகிறது எனும் பொருள்படும்படி அவர் கூறியுள்ள கருத்தையே சொற் பொருள் தொகுப்பின் ஆய்வு முடிவும் வெளிப்படுத்துகிறது.

மேற்சுட்டிய பொது அகராதிகள், துறைசார்ந்த சட்ட அகராதிகள், நீதி குறித்த வரையறைகள், சட்டவியல் அறிஞர்கள் தம் நூல்களுள் குறிப்பிட்டுள்ள கருத்துகள் முதலியவற்றை ஒருங்கே தொகுத்துப் பார்க்கும்போது நீதி குறித்த பொது அறிமுகம் கிடைக்கிறது. மேற்சுட்டிய எல்லாப் பதிவுகளுமே 'நேர்மை' 'நடுநிலைமை' 'ஏற்றத்தாழ்வின்மை' 'சமவாய்ப்பு' 'உரிய உரிமை வழங்கல்' 'உழைப்புக்குரிய ஊதியம்' 'பொறுப்புக்குரிய கடமைகள்' முதலியன நீதியோடு பிரிக்க முடியாத தொடர்பு கொண்டவை என்பதை உறுதிப்படுத்துகின்றன. அதே நேரம், நீதியோடு பிரிக்க முடியாத தொடர்பு கொண்டிருந்தாலும் அவற்றைச் சட்டத்தின் மூலமாகவே மக்களுக்குக் கொண்டு செலுத்த வேண்டும் என்பதும் தெரியவருகிறது. இதனால்தான் 'சட்டத்தின் பயனே நீதி வழங்குதல்' எனும் தொடர் உருவாக்கம் பெற்றது எனலாம். என்ற போதிலும் வெறும் சட்டத் தொகுப்புகளைக் கொண்டே நீதி வழங்கிட முடியாது என்பதுதான் சட்ட

அறிஞர்களின் வாதமாக உள்ளது. இதனால், சில சூழல்களில் மட்டும், உரிய நீதி வழங்குதல் பொருட்டு சட்ட வரம்பையும் தாண்டி நீதிபதிகள் சிக்கல்களைத் தீர்த்து வைக்க முற்படுவதற்கும் சமூகம் அனுமதி அளிக்கிறது. இதனை மேற் சுட்டிய ஆஸ்ட்ரேலிய உச்சநீதிமன்ற நீதியரசர் வெல்ஸ் இயற்றிய நூல் பதிவின் மூலம் உறுதிப்படுத்த முடிகிறது.

எனவே மேற்சுட்டிய சொற்பொருள் தொகுப்பின் மூலம் அடுத்து வருவது நீதிக்கான பொது அறிமுகமாக அமைகிறது. *நன்னெறி எனக் கருதப்படும் நேர்மை நடுநிலைமை ஏற்றத்தாழ்வின்மை சமவுரிமை போன்றன ஒருங்கிணைந்த நடை முறைச் செயன்மையை நீதி எனலாம்.* இது மேற்குறிப்பிட்டிருக்கும் அகராதிகள் சட்டக் களஞ்சியங்கள் முதலியவை மூலம் பெறப்பட்டிருக்கும் ஒரு வரையறை ஆகும். வழக்கத்தில் இருக்கின்ற நடைமுறைகளைச் சேர்த்து ஆய்வுசெய்கின்ற போது இவ்வரையறை மேலும் விரிவடைய வாய்ப்பிருக்கிறது.

**நீதி – இரண்டு வகை இயங்குதளங்கள்**

பொருளாதாரத் துறையில் இருவர்க்கு இடையில் எழுந்த சிக்கலை விசாரித்துப் பாதிக்கப்பட்டவர்க்கு உரிய தீர்வைச் சட்டப்படிக் கொடுப்பது நீதி எனப்படும். இதனைத்தான் பல்வேறு அகராதிகள் மற்றும் வரையறைகள் மூலம் அறிந்துகொள்ளப்பட்ட நீதி குறித்த விளக்கமாகும். ஆனால் இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது ‘பொருளாதார நீதி’ (Economic Justice) ஆகும். பொருளாதார நீதிக்கும், பொருளாதாரத் துறையில் எழுந்த சிக்கலுக்கு வழங்கும் நீதிக்கும் வேறுபாடு உண்டு.

‘பொருளாதார நீதி’ என்பது பொருளாதாரத் துறையில் கடைப்பிடிக்க வேண்டிய சமவாய்ப்புகள், நடைமுறைகள், கொள்கைகள், விதிமுறைகள் குறித்த சட்டதிட்டமாகும். இதன்மூலம் அனைத்துத் தரப்பினர்க்கும் சம உரிமை

கிடைக்க வாய்ப்புண்டாகும். இது இயல்பாக நடைபெறவிருக்கும் அத்துமீறலை நிறுத்த உதவும் சட்டதிட்டமாகும். எனவே பாதிப்பு நிகழ்வதற்கு முன் அவை நிகழாமல் இருப்பதற்கு உருவாக்கப்படும் சட்டதிட்டங்களையும் 'நீதி' எனும் சொல்லாட்சி குறிக்கின்றது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இனி, பொருளா தார அடிப்படையில் எழும் சிக்கலுக்குக் கொடுக்கப்படும் நீதி என்பது பாதிப்பு உண்டான பிறகு பாதிக்கப்பட்டவர்க்கு வழங்கப்படும் தீர்வு ஆகும். எனவே 'நீதி' என்பது பாதிப்பை உண்டாக்காமல் தடுக்கும் சட்டதிட்டங்களையும் அதே நேரத்தில் பாதிப்பு உண்டானால் அதற்கு வழங்கப்படும் சட்டத் தீர்வையும் குறிப்பதாக வழக்கத்தில் உள்ளது.

நாகரீகம் மற்றும் அறிவியல் வளர்ச்சி பெற்றுள்ள தற்காலச் சமுதாயத்தில் நிலவும் நீதி குறித்த கருத்துருவை விளங்கிக் கொள்ள முடிகிறது. மேற்காணும் தரவுகள் மற்றும் ஆய்வுகளின்படி 'நீதி' என்பது இரண்டு தளங்களில் செயல் படுகிறது எனலாம். சிக்கல்கள் வருமுன்னர், அவை வராமல் தடுத்து நிறுத்திக் காப்பாற்றும் சட்டதிட்டங்களும் ***நீதி*** எனப்படுக்கின்றன; சிக்கல்கள் வந்த பின்னர், அவற்றால் பாதிப்பு அடைந்தவர்க்கு வழங்கப்படும் உரிய சட்டத் தீர்வும் ***நீதி*** எனப்படுகின்றன. இதனால் தடுக்கப்படும் அத்துமீறலும் வழங்கப்படும் பாதுகாப்பும் நீதியின் கருத்துருக்களாக அமைகின்றன என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

எனவே நீதியின் வரையறைக்குள் அத்துமீறல் தடுப்பும், பாதுகாப்பு தரப் படுவதும் இணைக்க வேண்டியுள்ளதை உணரமுடிகிறது. இதனால் கீழ்க்காணும் வகையில் நீதியின் பொது அறிமுகம் அமைகிறது.

*'நன்னெறி எனக் கருதப்படும் நேர்மை நடுநிலைமை ஏற்றத்தாழ்வின்மை சமவுரிமை போன்றன ஒருங்கிணைந்த நடைமுறைச் செயன்மை மூலம் தடுக்கப் படும் அத்துமீறல் கொடுக்கப்படும் பாதுகாப்புத் தன்மையை நீதி எனலாம்'.* இந்த வரையறை முன்னதைக் காட்டிலும் சற்றே பொருள்விரிவு கொண்டதாக

அமைகிறது. இதனுடன் நீதியின் தன்மையையும் கருத்தில் கொள்ளும்போது மேலும் இவ்வரையறை விரிவடைகிறது.

***நீதி – அருவநிலை***

சட்டங்கள் எங்கே என வினவினால்? நாடாளுமன்றத்தாலோ அல்லது சட்டமன்றத்தாலோ இயற்றப்பட்ட சட்டங்களைக் கண்முன் காட்டிவிட முடியும். அரசாணை எங்கே என வினவினால்? மைய அரசோ அல்லது மாநில அரசோ பிறப்பித்த அரசாணைகளைக் கண்முன் காட்டிவிட முடியும். நீதிமன்ற உத்தரவு எங்கே? என வினவினால் உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றம் அல்லது கீழ்நீதிமன்றத்தாலோ வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுகளைக் கண்முன் காட்டிவிட முடியும். மேற்சுட்டிய வினாக்களைப் போல 'நீதி' எங்கே என வினா எழுப்பினால் எவராலும் இதுதான் நீதி எனக் கண்முன் காட்டிவிட முடியாது. நீதி என்பது உணர்ந்து கொள்ள முடியுமே தவிர அடையாளப்படுத்திக் கண்முன் காட்ட முடியாது என்பது உலகறிந்த உண்மை. இதற்குக் காரணம் நீதி என்பது மனிதர்களின் ஒருவித உளவியல் நிறைவுக்கு உட்பட்டு அருவ நிலையில் இருப்பதே ஆகும்.

எடுத்துக்காட்டுக்குக் கொலைக் குற்றத்தைக் கொள்ளலாம். கொலைக் குற்றம் செய்தவர்களுக்கு உலகம் முழுவதும் ஒரே வகையான தண்டனை தரப்படுவது இல்லை. கொலை செய்தவரைக் கல்லால் அடித்தே கொல்லுவது ஒருசில நாடுகளில் வழக்கத்தில் உள்ள தண்டனை எனக் கொள்வோம். ஆனால் இந்தியா போன்ற பல நாடுகளில் கொலை செய்தவரைக் கல்லால் அடித்துக் கொல்லுவது ஏற்றுக்கொள்ள முடியாத தண்டனையாகும். மேலும் கொலை செய்தவனைக் காவல்துறையில் ஒப்படைத்து நீதிமன்றத்தின் மூலம் சட்டப்படி பெற்றுத்தருவதே தண்டனை ஆகும் என்பர். குற்றச் செய்கை ஒன்றாக இருந்தாலும் அதற்கு வழங்கப்பட்ட தீர்ப்பு வெவ்வேறாக அமைகிறது.

கல்லால் அடித்துக் கொல்லுவதுதான் சரி என்பது அந்நாட்டு மக்களுக்கு உளவியல் நிறைவைத் தருகிறது. காவல்துறையில் ஒப்படைத்து நீதிமன்றம் மூலம் தண்டனை தருவதுதான் சரி என்பது இந்தியா போன்ற நாட்டு மக்களுக்கு உளவியல் நிறைவைத் தருகிறது. இதனால் *மனிதர்களுடைய உளவியல் நிறைவில் இயங்கும் அருவத்தன்மை நீதிக்கு உண்டு* என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. எனவே நீதியின் வரையறைக்குள் உளவியல் நிறைவில் இயங்கும் அருவத்தன்மையையும் இணைக்க வேண்டியுள்ளதை உணர முடிகிறது. இதனால் கீழ்க்காணும் வகையில் நீதியின் பொது அறிமுகம் அமைகிறது.

*'நன்னெறி எனக் கருதப்படும் நேர்மை நடுநிலைமை ஏற்றத்தாழ்வின்மை சமவுரிமை போன்றன ஒருங்கிணைந்த நடைமுறைச் செயன்மை மூலம் தடுக்கப் படும் அத்துமீறலும் கொடுக்கப்படும் பாதுகாப்பும் மனிதர்களின் உளவியல் நிறைவும் உள்ளடங்கிய அருவநிலையை நீதி எனலாம்'.* நீதி குறித்த இந்தப் பொது விளக்கத்துடன்தான் இவ்வாய்வு இனி நடைபெறவிருக்கிறது. சங்க காலத்தில் நீதியின் கருத்துரு எவ்வாறு இருந்துள்ளது என்பதை இந்தப் பொது விளக்கத்துடன் ஒப்பிட்டே இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது.

**நீதி – பொதுச்சொல் பயன்பாடு**

மேற்குறித்த விளக்க வரையறையோடு உருவாக்கம் பெற்ற பின்னர், நீதி என்பது பொதுச்சொல்லாகவும் பயன்பாட்டில் வரத் தொடங்கிவிட்டது. எல்லாத் துறைகளிலும் அத்துமீறல் ஏற்படாமல் தடுப்பதற்காகச் *சமவுரிமை நேர்மை முதலியவை ஒருங்கிணைந்த நடைமுறைச் செயன்மைகள்* வகுக்கப்பட வேண்டி யுள்ளன. அவ்வாறு வகுக்கப்படும் நடைமுறைச் செயன்மைகளை அவ்வத் துறையின் நீதி எனக் குறிக்கும் வழக்கம் உள்ளது. எடுத்துக்காட்டாகக் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவரைக் கைது செய்யும்போது அவரை எப்படி நடத்த வேண்டும் அவர்க்குரிய உரிமைகள் என்ன? அவர்க்கான வாய்ப்புகள் என்ன? என்று பற்பல

நடைமுறைச் செயன்மைகள் வகுக்கப்பட்டு உள்ளன; மேலும் அவை காலத்தின் தேவைக்கேற்ப அப்போதைக்கு அப்போது மாற்றியமைக்கப்பட்டும் வருகின்றன. இந்நடைமுறைச் செயன்மைகள், அனைத்துத் தரப்பினராலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்நடைமுறைச் செயன்மைத் தொகுப்பைக் *குற்றவியல் நடைமுறைச் சட்டம்* (Criminal Procedure Code) என்கின்றனர். இச்சட்டத்தின் மூலம் தடுக்கப்படும் அத்துமீறலும் வழங்கப்படும் பாதுகாப்பும் உளவியல் நிறைவும் உள்ளடங்கிய அருவநிலையைக் *குற்றவியல் நீதி* (Criminal Justice) என்கின்றனர். இதற்கு ஏராளமான சான்றுகளைக் கூற முடியும். கீழ்க்காணும் பகுதி இதனை மேலும் விளக்கும் விதத்தில் அமைந்துள்ளதைக் காணலாம்.

"The judges (including magistrates) of Australia, and the courts over which they preside and in which they administer justice, constitute, for Commonwealth or State, the second arm of government. Fundamentally, a court is an institution of government whose prime function is to settle disputes, and in civilized communities governed by and through laws, to settle disputes according to law. Many people entertain vague notions about what justice is. We hear of ***Bush Justice***, meaning a rough and ready fairness without particular regard to strict law. The expression ***Industrial Justice*** is vague amalgam of industrial law and compromise under the constraints of circumstance. Governments speak of a just policy, which is a political decision that to same extent, takes account of relevant arguments and social pressures and embodies, for the time being, as much as could be hoped for the aims and ideologies of the government in power. Nations strive for ***International Justice***, which usually denotes the settlement of a dispute or imbroglio between nation – states, that has been reached without resort to war, leaving both sides satisfied, in part and dis-satisfied in part.[18] என ஆஸ்ட்ரேலிய உச்சநீதிமன்ற மேனாள் நீதிபதி தெரிவித்துள்ளார். நெகிழ்நீதி, தொழிற்நீதி,

பன்னாட்டக நீதி என்பவற்றைச் சுட்டிக் காட்டியுள்ளார். இவை மட்டுமன்றி அண்மைக் காலங்களில் பல்வேறு துறைகளில் 'நீதி' பொதுச்சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது.

**நீதியும் தண்டனையும்**

பாதிப்பு ஏற்படுத்தியவர்க்குத் தரும் தண்டனை நீதி பொருண்மைக்குள் வராதா? என்கிற வினா எழுவதற்கு வாய்ப்புண்டு. பாதிப்பு ஏற்படுத்தியவர்க்குத் தரப்படும் தண்டனை நீதிப் பொருண்மைக்குள் முழுமையாக வருவதில்லை எனலாம். ஏனெனின் குற்றம் புரிந்தவரைத் தண்டிப்பது சமூகத்தின் கட்டாய கடமையாகிறது. அப்போதுதான் வருங்காலத்தில் அதுபோன்ற குற்றச் செயல்களில் மற்றவர்கள் ஈடுபடாமல் இருக்கவும், எதிர்காலத்தில் அந்தக் குற்றவாளியே வேறுபிற குற்றங்களைச் செய்யாமல் இருக்கக்கூடிய சூழலை உண்டுபண்ணவும் முடியும். சுருக்கமாகக் கூற வேண்டுமெனின் நாட்டில் நிலவ வேண்டிய சட்ட ஒழங்கைப் பாதுகாக்கும் பொருட்டுத் தண்டனை கொடுக்கப் படுகிறது எனலாம். அதே நேரத்தில் பாதிப்பு அடைந்தவர்க்குத் தரப்படும் *உளவியல் ஆறுதலாகவும் 'தண்டனை'யை அணுக முடியும்*. ஆகையால் பாதிப்பு ஏற்படுத்தியவர்க்கு வழங்கப்படும் தண்டனை என்பது, பாதிப்பு அடைந்தவர்க்கு வழங்கப்படும் '*உளவியல் ஆறுதல்*' என்கிற அளவில்தான் நீதியின் எல்லைக்குள் வருகிறது எனவும், மிகுதியும் சட்ட ஒழுங்கு பாதுகாப்புப் பொருண்மைக்குள்தான் அது வரும் எனவும் அறிந்துகொள்ள முடிகிறது.

**நீதி – வகைகளும் விளக்கமும்**

சட்டவியல் அறிஞர்கள் நீதியைப் பல வகையாகப் பகுத்துள்ளனர். நீதி என்னும் கருத்துரு வளர்ச்சி பெறத் தொடங்கிய காலத்திலிருந்து பல்வேறு கோணத்தில் நீதியை வகைப்படுத்தியுள்ளனர். சட்டவியல் அறிஞர் ஒருவர் முன்வைத்த நீதி வகைப்பாடுகளை வேறொரு சட்டவியல் அறிஞர் மறுப்பதும்;

வேறுவகையான பகுப்புமுறைகளை முன்வைப்பதும் என நீதிக் கருத்துருவின் வகைப்பாடுகள் காலந்தோறும் வளர்ந்து வந்துள்ளதைச் சட்டவியல் வரலாறு மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இத்தகைய நெடிய விவாதத்திற்கும் ஆய்வுக்கும் பின்னர் நீதியை நான்கு வகையாகப் பகுத்துப் பார்க்கும் பார்வை அண்மைக் காலத்தில் தோன்றியுள்ளது. அவை வருமாறு,

| | | |
|---|---|---|
| *பகிர்வுமுறை நீதி* | - | Distributive Justice |
| *நடைமுறை நீதி* | - | Procedural Justice |
| *மீட்புமுறை நீதி* | - | Restorative Justice |
| *தண்டிப்புமுறை நீதி* | - | Retributive Justice[19] |

மேற்சுட்டியுள்ளவை, சமூகத்தில் நீதி நிலைநாட்டப்படும் நான்கு வகையான பாதைகளை முன்வைக்கின்றன. ஒவ்வொரு வகையின் விளக்கங்களும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

***பகிர்வுமுறை நீதி***

சமுதாயத்தில் உள்ள வளங்களை அல்லது பொருட்களை மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது அரசுகளின் வழக்கமான பணிகளுள் ஒன்றாகும். அவ்வாறு பகிர்ந்து அளிக்கின்றபோது ஓர் அரசு அல்லது நிர்வாகம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைச் செயன்மைகள் *பகிர்வுமுறை நீதி* எனப்படுகிறது. இந்த நடைமுறைச் செயன்மைகள் மூலம் அரசின்கீழ் அல்லது ஒரு நிர்வாகத்தின் கீழிருக்கும் மக்கள் அவர்களுக்குரிய பங்கைப் பெறுவது உறுதி செய்யப்படுகின்றது. “The justice that is concerned with the apportionment of privileges, duties, and goods in consonance with the merits of the individual and in the best interest of society”[20] என வெப்ஸ்டர் மின் அகராதி பகிர்வுமுறை நீதிக்கு விளக்கம் கூறுகிறது. *தனிமனிதப் பங்களிப்புடன் கொண்ட உடன்படிக்கை மற்றும் சமுதாயத்தின் மீதான அக்கறை ஆகியவற்றின் அடிப்படையில் உரிமைகள் கடமைகள் பொருட்களை முறையாகப் பகிர்ந்தளிப்பதில் தனிக்கவனம் செலுத்துதல் பகிர்வுமுறை நீதியாகும்* என்பது இதன் திரண்ட பொருள். இவ்வகை நீதியைச் செலுத்துதல் ஓர் அரசுக்கு மிக மிக இன்றியமையாததாகும்.

பகிர்வுமுறை நீதியில் குறைபாடு எழுகிறபோது மக்களிடையே கொந்தளிப்பும், அரசுக்கு எதிராகச் செயல்படும் சூழலும் ஏற்பட்டுவிடும் என்பது சட்டவியல் அறிஞர்களின் கருத்தாகும்.

பல வழிகளில் அரசிடம் குவியும் பொருட்கள், செல்வம், தானியம் முதலிய வற்றை அவ்வரசின் பாதுகாப்பில் வாழும் மக்களுக்கு முறையாகப் பகிர்ந்தளிக்க வேண்டும். *எதன் அடிப்படையில் 'முறையாகப் பகிர்ந்தளித்தல்' நிகழ முடியும்? என்பது ஆய்வுவினா*-வாக எழுகிறது. "பகிர்ந்தளிக்கக் கடைப்பிடிக்கப்படும் சில வழிமுறைகள் வருமாறு பங்களிப்புக்கேற்ற பகிர்வு, சமப் பகிர்வு, தேவைக்கேற்ற பகிர்வு".[21] என மைக்கல் எனும் சட்டவியல் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

**பங்களிப்புக்கேற்ற பகிர்வு**

சமூகத்தின் உறுப்பினர்களாகத் திகழும் மக்களுக்கு அரசிடமிருக்கும் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதற்குக் கையாளப்படும் வழிகளுள் ஒன்று *பங்களிப்புக்கேற்ற பகிர்வு* ஆகும். அதாவது உழைப்பு, தகுதி, ஆற்றல், திறமை முதலியவற்றின் மூலம் மக்கள் சமூகத்துக்குத் தரும் பங்களிப்பின் அடிப்படையில் அவர்களுக்கேற்ற ஊதியம், பயன், உரிமை முதலியவற்றைப் பகிர்ந்தளிப்பது 'பங்களிப்புக்கேற்ற பகிர்வு' எனப்படும். எடுத்துக்காட்டாக ஒரு சான்றினைக் காணலாம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் 4 நபர்கள் இருக்கின்றனர்; அச்சமூகத்தை நிர்வகிக்கும் அரசிடம் நூறு பொருள்கள் உள்ளன. இதனைப் பங்களிப்புக்கேற்ற பகிர்வுமுறை மூலம் எப்படிப் பகிர்ந்தளிப்பது எனும் வினா எழுகிறது. முதல் நபர் ஒருமணிநேரமும், இரண்டாம் நபர் இரண்டு மணிநேரமும், மூன்றாம் நபர் மூன்று மணிநேரமும், நான்காம் நபர் நான்கு மணிநேரமும் பணி புரிந்தனர் எனக் கொள்வோம். ஒவ்வொருவரின் பங்களிப்பும் வேறுபடுகிறது. இச் சூழலில் அவர்களின் பங்களிப்புக்கேற்ப அதாவது ஒருமணிநேரப் பணிக்குப் பத்துப் பொருள்கள் எனும் **சமவிகிதத்தில்** முதல் நபர்க்குப் பத்துப் பொருளும், இரண்டாம் நபர்க்கு இருபது பொருளும், மூன்றாம் நபர்க்கு முப்பது பொருளும், நான்காம் நபர்க்கு நாற்பது பொருளும் என நூறு பொருள்கள் பகிர்ந்தளிக்கப் படுவது இம்முறையைச் சார்ந்ததாகும்.

- ✓ ஊதியம், உதவித்தொகை முதலிய பணப்பயன்
- ✓ விருது, போட்டியில் பரிசு முதலிய அங்கீகாரம்
- ✓ நியாயவிலை கடை மூலம் தரப்படும் உணவுப் பொருட்கள்
- ✓ இடஒதுக்கீட்டின் மூலம் கொடுக்கப்படும் உரிமையியைந்த சலுகை
- ✓ தேர்வின் மூலம் பெறும் தேர்ச்சி

முதலியவை பங்களிப்புக்கேற்ற பகிர்வுமுறைக்குச் சான்றுகளாக அமைகின்றன.

**சமப் பகிர்வுமுறை**

பகிர்ந்தளிக்கும் வழிமுறையில் அடுத்து வருவது 'சமப்பகிர்வுமுறை' என்பதாகும். சமூகத்தின் உறுப்பினர்களாக இருக்கும் அனைத்து மக்களுக்கும் அவர்தம் உழைப்பு, தகுதி, திறமை என எதனையும் கருத்தில் கொள்ளாமல் உரிமை, பயன், அங்கீகாரம் முதலியவற்றைச் சமமாகப் பகிர்ந்தளிப்பது 'சமப்பகிர்வுமுறை' எனப்படும். எடுத்துக்காட்டாக ஒரு சான்றினைக் காணலாம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் 4 நபர்கள் இருக்கின்றனர்; அச்சமூகத்தை நிர்வகிக்கும் அரசிடம் நூறு பொருள்கள் உள்ளன. இதைப் சமப்பகிர்வுமுறை மூலம் எப்படிப் பகிர்ந்தளிப்பது எனும் வினா எழுகிறது. முதல் நபர் ஒருமணிநேரமும், இரண்டாம் நபர் இரண்டு மணிநேரமும், மூன்றாம் நபர் மூன்று மணிநேரமும், நான்காம் நபர் நான்கு மணிநேரமும் பணிபுரிந்தனர் எனக் கொள்வோம். இங்கு ஒவ்வொருவருடைய பங்களிப்பும் வேறுபடுகிறது. என்றாலும் இவர்களின் உழைப்பை, திறமையை, ஆற்றல் முதலியவற்றைக் கருத்தில் கொள்ளாமல் இவர்கள் அனைவருக்கும் நாட்டிலுள்ளவற்றுள் ஒருசிலவற்றைச் சமமாகப் பகிர்ந்தளிக்க வேண்டிய கடமை அரசு அல்லது நிர்வாகத்திற்கு உண்டு. அவ்வகையில் பகிர்ந்தளிக்கப்படுவதுதான் '*சமப்பகிர்வுமுறை*' எனப்படும்.

- ✓ நீதிமன்றத்தை அணுகும் வாய்ப்பு
- ✓ இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகள்
- ✓ தேர்தலில் வாக்களிக்கும் உரிமை
- ✓ கட்டாயக் கல்வி பெறும் உரிமை
- ✓ நாட்டில் (சட்டத்துக்குட்பட்டு) தொழில் செய்யும் உரிமை

- ✓ அரசு மருத்துவமனை முதலிய அரசு இயந்திரங்களைப் பொதுவாகப் பயன்படுத்தும் உரிமை

முதலியவை சமப் பகிர்வுமுறைக்குச் சான்றுகளாக அமைகின்றன.

**தேவைக்கேற்ற பகிர்வுமுறை**

சமூகத்தின் உறுப்பினர்களாக இருக்கும் மக்களின் தேவைக்கு ஏற்றவாறு சமூகத்தில் இருக்கும் வளங்களை அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் முறைமையே தேவைக்கேற்ற பகிர்வுமுறை எனப்படும்.

- ✓ மாற்றுத் திறனாளிகளுக்காக அரசுப் பேருந்துகள், கட்டடங்கள் முதலியவற்றில் செய்துதரப்படும் வசதிகள்
- ✓ மூன்றாம் பாலினத்தினரான திருநங்கைகளுக்கு வழங்கப்படும் சிறப்பு வசதிகள்
- ✓ மூத்த குடிமக்களுக்கு வயதின் அடிப்படையில் கொடுக்கப்படும் சலுகைகள் மற்றும் செய்துதரப்படும் வசதிகள்
- ✓ மக்களின் வருமானத்தின் அடிப்படையில் வழங்கப்படும் உதவித் தொகை மற்றும் சலுகைகள்

முதலியவை தேவைக்கேற்ற பகிர்வுமுறைக்குச் சான்றுகளாக அமைகின்றன.

மேற்சுட்டிய மூன்று வழிமுறைகள் எல்லாத் துறை மற்றும் சூழல்களுக்கும் பொருந்தி வருவதில்லை என்றும்; ஒருசில சூழல்களுக்குப் பங்களிப்புக்கேற்ற பகிர்வுமுறையும், சில சூழல்களுக்குச் சமப்பகிர்வுமுறையும், சில சூழல்களுக்குத் தேவைக்கேற்ற பகிர்வுமுறையும் பொருந்திவருவதைக் காணமுடிகிறது. இவ்வாறு தக்க சூழல்களின் அடிப்படையில் வளம், வாய்ப்பு, உரிமை, கடமை முதலிய வற்றைச் சரியான முறையில் பகிர்ந்தளிப்பது பகிர்வுமுறை நீதி எனப்படுகிறது. இது, நீதியின் வகைகளில் முதன்மையானதும் அடிப்படையானதும் ஆகும்.

### நடைமுறை நீதி

“முறையாக முடிவெடுப்பதற்கும், எடுத்த முடிவை முறையாக நடைமுறைப் படுத்தவும் வேண்டியது சமூக நிர்வாகத்தில் மிக இன்றியமையாத ஒன்றாகும். இது குறித்த கொள்கைகளை, நடைமுறைச் செயன்மைகளை உள்ளடக்கியதுதான் நடைமுறை நீதி எனப்படும். இதன்மூலம் சமூகத்தின் உறுப்பினர்களான மக்கள் நியாயமாக நடத்தப்படுவர்.

நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் முதலியவற்றில் இயற்றப்படும் சட்டங்கள் மூலம் வகுக்கப்படும் விதிகளை எந்த வேறுபாடின்றியும் ஓரவஞ்சனை இல்லாமல் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் பாரபட்சம் இல்லாத தீர்ப்புகள் முடிவுகள் எடுக்கப்படும். நடைமுறைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தில் இருப்பவர்கள் நடுநிலைமையாடு நடந்துகொள்ள வேண்டும்.

முறையாக எடுக்கப்படும் முடிவுகளால் பாதிக்கப்படும் தரப்பினர்கள்கூட, முடிவு எடுக்கும் நடைமுறையில் பங்கேற்கும்படி விதிகளை வகுத்திருப்பதுதான் நடைமுறை நீதியின் மிகச்சிறந்த கொள்கையாகும். அப்போதுதான் முடிவு ஒருவர்க்கு எதிராக அமைந்தாலும்கூட அதை ஏற்றுக் கொள்ளும் மனநிலை தானாகவே உருவாகும்.”[22]

இதன்மூலம் மக்கள் தாங்கள் முறையாகவே கையாளப்படுகிறோம் எனக் கருதும் சூழல் உண்டாகும். இதுதான் நடைமுறை நீதியினால் விளையும் பயன் எனப்படுகிறது.

### மீட்புமுறை நீதி

நன்றாக இருக்கும் ஒன்று அல்லது ஒருவர் பாதிப்புக்கு உள்ளாக்கப்படும் போது நிலைகுலைவு ஏற்படுகிறது. இந்த நிலைகுலைவை எப்படிச் சீராக்குவது? எனும் வினாவிற்கு விடையாக அமைவதுதான் மீட்புமுறை நீதியாகும். பாதிப்பு ஏற்படுத்தியவரையே பாதிப்புகளுக்குப் பொறுப்பாக்கிப் பாதிக்கப்பட்டவர்க்குத்

தீர்வும் உளவியல் ஆறுதலும் சமூகப் பாதுகாப்பும் வழங்குவதுதான் மீட்புமுறை நீதியின் அடிப்படையாகும்.

ஏற்பட்ட பாதிப்பு முழுமைக்கும் பாதிப்பு ஏற்படுத்தியவரைப் பொறுப்பாக்கி நிகழ்ந்த பாதிப்பிலிருந்து பாதிப்படைந்தவரை மீட்டெடுப்பதற்கு எடுக்கப்படும் தேவையான நடைமுறைச் செயன்மைகள் மீட்புமுறை நீதி எனப்படும்.

- ✓ ஒருவர்க்கு வழங்கப்படும் இழப்பீடு
- ✓ மனிதர்களுக்கும் பொருட்களுக்கும் செய்யப்படும் காப்பீடு

முதலியவை இவ்வகை நீதியின் வரம்பிற்குள் வருவனவாகும்.

**தண்டிப்புமுறை நீதி**

நீதி என்பது மனிதர்களின் உளவியல் நிறைவிலும் இயங்கும் தன்மை கொண்டது என்பதை அதன் வரையறையில் கண்டுள்ளோம். அதற்கேற்ப மக்கள் குற்றவாளிக்குக் கொடுக்கப்படும் தண்டனையில் மனநிறைவு கொள்கின்றனர். மேலும் அவ்வாறு தண்டனை வழங்குவது சட்ட ஒழுங்கு பாதுகாப்பாக இருக்கவும் உதவும். தவறிழைக்கும் ஒருவர்க்குத் தரப்படும் கடுமையான தண்டனை மற்ற மக்களுக்கும் ஒருவித உளவியல் அச்சத்தை ஏற்படுத்தக் கூடும் எனும் கொள்கை இவ்வகை நீதியின் பின்னணியாகும்.

முறைதவறியதால் ஒருவர்க்கு ஏற்பட்ட நன்மைகளை அவர்க்குத் தரப்படும் தண்டனையின் மூலம் நேர்படுத்திவிட முடியும் எனவும்; முன்னர் நடைபெற்ற அநீதிக்கும், தவற்றுக்கும் உரிய மருந்தாக தண்டனை அமையும் எனவும் இதன் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

மேற்சுட்டிய நீதியின் நான்கு வகைகளும் நீதியை ஒவ்வொரு கோணத்தில் அணுகி நீதியின் தன்மையை விளக்கும் வகையில் அமைந்துள்ளன. பல்வேறு வகையாகப் பகுக்கப்பட்டிருப்பினும் நீதியின் அடிப்படை ஒன்றாகவே திகழ்வதை

அறிந்துகொள்ள முடிகிறது. சமூகத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களையும் விதத்தில் நீதியின் தன்மை அமைந்துள்ளதை உணரமுடிகிறது.

பகிர்வுமுறை நீதியின் மூலம், சமூகத்தின் உறுப்பினராகத் திகழும் மக்கள் அனைவருக்கும் பொதுவான சமவாய்ப்புகளையும் உரிமைகளையும் முறையாகக் கொண்டு சேர்க்கப்படுவது உறுதியாகிறது. நடைமுறை நீதியின் மூலம், எவ்வித ஓரவஞ்சனையும் யில்லாத நடுநிலையான முடிவு/தீர்வு சீரான நடைமுறைகளால் மக்கள் அனைவருக்கும் சென்றடைவது உறுதியாகிறது. மீட்புமுறை நீதியின் மூலம், பாதிப்படைந்தவர்க்கு அவர் இழந்த உரிமைகள், உடைமைகள் மீளவும் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படுவது உறுதியாகிறது. தண்டிப்புமுறை நீதி மூலம், முறைதவறியவர் திருந்துவதற்கான வாய்ப்பும், மற்றபிற பொதுமக்கள் தண்டனை கண்டு அச்சமுற்று தவறு இழைக்காமல் இருக்கச்செய்யும் சூழலும் ஏற்படுத்தப்படுவது உறுதியாகிறது.

இவற்றின்மூலம் நீதி என்பதன் பரிமாணம் மேலும் விளக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு:

- ஒரே அளவுகோல் கொண்டு அனைவருக்கும் நீதி செலுத்த முடியாது.
- முறையான நீதி செலுத்த வெவ்வேறு சூழல்களுக்கு வெவ்வேறு அணுகுமுறை பின்பற்ற வேண்டியுள்ளது.
- அணுகுமுறைகள் வேறுபடினும் அவற்றின் அடிப்படையில், மக்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே அமைந்துள்ளது.
- மக்களின் நலன் உரிமை உடைமை அங்கீகாரம் முதலியவை பாதிக்கப்படாமல் இருப்பதற்கான நடைமுறைச் செயன்மைகள் நீதியின் எல்லைக்குள் இடம்பெறுகின்றன.
- ஒருவேளை மக்களின் நலன் உரிமை உடைமை அங்கீகாரம் முதலியவை பாதிக்கப்பட்டால் அவற்றைச் சீரமைக்கும் நடைமுறைச் செயன்மைகளும் நீதியின் எல்லைக்குள் வருகின்றன.

- பாதிப்பு ஏற்படுத்தியவர் (பாதிப்படைந்தவர் நலனுக்காக) நேரடியாக மீட்டெடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுதல் அல்லது மீட்டெடுப்புக்கு ஆகும் செலவை மேற்கொள்ளுதல் ஆகியவையும் நீதியின் எல்லைக்குள் இடம்பெறுகின்றன.
- பாதிப்பு ஏற்படுத்தியவரைத் தண்டித்தல் (இதன்மூலம் அவர் திருந்துவதற்கு வாய்ப்பு அளித்தலும், பொதுமக்கள் தண்டனை கிடைக்குமெனும் அச்சத்தால் எதிர்காலத்தில் தவறிழைக்காதிருத்தலும்) நீதியின் எல்லைக்குள் உள்ளன.
- ஒரு நாட்டில் ஏற்றக்கொள்ளப்பட்ட தண்டனை இன்னொரு நாட்டில் ஏற்றுக் கொள்ளப்படாத தண்டனையாகத் திகழ்கிறது. சான்றாகக் கல்லால் அடித்துக் கொல்வதைக் குறிப்பிடலாம். ஒரு நாட்டில் இதற்குச் சட்ட அனுமதி உண்டு ஆனால் இந்தியா போன்ற பல நாடுகளில் இது குற்றமே ஆகும். இந்த வேறு பாட்டிற்கு அடிப்படைக் காரணமாகத் திகழ்வது மனிதர்களின் உளவியல் ஆறுதலே என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எனவே பெரும்பான்மை மனிதர்களின் உளவியல் ஆறுதல் மீதும் நீதி திகழ்கிறது எனலாம்.
- காலந்தோறும் நீதிப் பொருண்மை மாறிக் கொண்டு வருவதைக் காணமுடிகிறது. சான்றாகத் தூக்குத் தண்டனையைக் குறிப்பிடலாம். பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்னர்க் கொடுங்குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை தரப்பட்டது. பெரும்பான்மையான உலக நாடுகள் தூக்குத் தண்டனைக்குச் சட்ட அடையாளம் தந்திருந்தனர். ஆனால் அண்மைக் காலங்களில் தூக்குத் தண்டனைக்கு எதிரான பரப்புரை உலகம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் உலக நாடுகளுள் சில தூக்குத் தண்டனை முறையை முற்றிலும் ஒழித்தே விட்டன. இந்தியாவிலும் தூக்குத் தண்டனை கூடாது என்கிற மனநிலை மெதுவாகப் பரவி வருகிறது. ஒருகாலத்தில் கொடுங் குற்றவாளிக்குத் தரப்படும் தூக்குத் தண்டனை பெரும்பான்மை மக்களால் சரியானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் இன்று காலச்சூழல் மாறி வருகிறது. விளைவு இந்தியாவிலும் தூக்குத் தண்டனை கூடாது என்கிற மனநிலை

ஏற்பட்டு வருகிறது. ஒருகாலத்தில் சரியான நீதியாகக் கருதப்பட்ட தூக்குத் தண்டனை இக்காலத்தில் குற்றவாளிக்கு அளிக்கப்படும் அநீதியாகக் கருதப்படுகிறது. இதன்மூலம் காலந்தோறும் மக்களின் மனநிலை மாற்றத்திற்கு ஏற்ப நீதியின் வரையறையும் மாறும் இயல்பு உடையது என்பதை விளங்கிக் கொள்ளமுடிகிறது.

- பொதுமக்களின் மதிப்புக் காப்பாற்றப்படுவதோடு உரியவையை உரிய பொழுதில் மக்களிடம் இருக்க வேண்டும் என்பது அடிநாதமாக விளங்கு கிறது.

***நீதியின் பிற வகைகள்***

நீதியின் அடிப்படைப் பொருண்மைகளைக் கருத்தில் கொண்டு மேற்சுட்டிய வாறு நீதி நான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகைப்பாடுகள் மட்டுமின்றி வேறுசில முறைகளிலும் நீதியை வகைப்படுத்திக் கூறுவர். அவை நீதியின் பயன் பாட்டுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டவை எனலாம். மேலும் துறை சார் பொருண்மையில் உருவாக்கப்பட்ட கருத்தாக்கங்கள் எனலாம். அவற்றுள் *இயற்கை நீதி* மற்றும் *சமூக நீதி* மட்டும் பொதுத்தன்மை கொண்டவை.

**இயற்கை நீதி**

வழக்கு விசாரணையின் போது இரு தரப்பினர்க்கும் உரிய வகையில் வாய்ப்புகள் வழங்கப்பட்டதை உறுதி செய்யும் நடைமுறைச் செயன்மை மற்றும் ஓரவஞ்சனைக்கு எதிராக அமைவது இயற்கை நீதி எனப்படும் என்று ஆங்கிலச் சட்டவியல் கூறும். ஆனால் தற்காலத்தில் அதன் பொருளெல்லை வெகுவாக விரிவடைந்துள்ளது. நியாயமான முறையில் நடைபெற வேண்டிய அனைத்தும் இயற்கை நீதிக்குள் கொண்டுவரும் சூழல் ஏற்பட்டுள்ளது.[23]

***சமூக நீதி***

நீதிக்குக் கொடுக்கப்படும் வரையறையே ஏறத்தாழ சமூக நீதிக்கும் பொருந்தி வரும். சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் இடையே அமைந்துள்ள

ஒருவகை நேர்மையான நடுநிலையான ஒப்பந்தம் சமூக நீதி எனலாம். சமவுரிமை சமவாய்ப்பு ஏற்றத்தாழ்வின்மை வஞ்சிப்பின்மை இவற்றை நிலைநாட்ட அரசு எடுக்கும் நியாயமான முயற்சிகள் சமூக நீதி எல்லைக்குள் இடம்பெறுகின்றன. பொது நிறுவனங்களை (அதாவது பள்ளிக்கூடம், மருத்துவமனை, தொழிலாளர் நல வாரியம், சந்தை ஒழுங்குமுறை ஆணையம் முதலியவற்றை மக்களின் பயன் பாட்டிற்காகக் குறிப்பாக வளம், வாய்ப்பு முதலியவற்றின் முறையான பகிர்வு முறையை நிலைநாட்ட) அரசு தோற்றுவித்து நிருவகித்தல் சமூக நீதியின் ஒரு கூறாகும்.[24]

துறைசார்ந்து நீதியின் வகைப்பாடுகள் பலப்பல அண்மைக் காலமாக உருவாகி வருகின்றன. அவற்றுள் சில வருமாறு:

| | | |
|---|---|---|
| தொழிற் நீதி | - | Industrial Justice |
| இனச்சார்பு நீதி | - | Racial Justice |
| குற்றவியல் நீதி | - | Criminal Justice |
| குடிமையியல் நீதி | - | Civil Justice |
| பன்னாட்டக நீதி | - | International Justice |
| நெகிழ் நீதி | - | Bush Justice |
| மருந்தியல் நீதி | - | Pharmaceutical Justice |
| கல்வியியல் நீதி | - | Educational Justice |
| உளவியல் நீதி | - | Psychological Justice |
| அரசியல் நீதி | - | Political Justice |
| இணைய நீதி | - | Cyber Justice |
| உணவு நீதி | - | Food Justice |
| சுரங்கவியல் நீதி | - | Mining Justice |
| கவிதையியல் நீதி | - | Poetic Justice |

எனப் பட்டியல் நீண்டுகொண்டே போகும். ஒவ்வொரு துறையைச் சார்ந்தும் நீதி நிலைநாட்டப்பட வேண்டியுள்ளதால் இத்தகைய நீண்ட பட்டியல் உருவாகி யுள்ளது எனலாம்.

மேற்குறிப்பிட்டவற்றுள் இயற்கை நீதி என்பதும் சமூகநீதி என்பதும் துறை சார்ந்த நீதிகளாகக் கருதப்படுவதில்லை. அவை துறை கடந்த பொதுமை நீதிகளாகவே கருதப்படுகின்றன. அதாவது அனைத்துத் துறைகளுக்கும் பொது வாகத் திகழும் தன்மை கொண்டவை.

## நீதி – தோற்றமும் வளர்ச்சியும்

வரலாற்று அடிப்படையில் எந்தவொன்றையும் பதிவு செய்வது கடந்த கால சூழல்களை அறிந்துகொள்ள உதவுவதுடன் வருங்காலத்தைத் திட்டப் படுத்தி வடிவமைக்கும் ஆய்வுகளுக்குப் பெரிதும் உதவுவதாகும். அந்த வகையில் நீதி (Justice), நீதி செலுத்துதல் (Administration of Jusctice) என்ப வற்றின் வரலாற்றைத் தெரிந்து கொள்வதும் இன்றியமையாததாகிறது. இதனால் காலந்தோறும் ஏற்பட்டிருக்கும் கருத்தியல் மாற்றத்தை ஆய்வு செய்ய ஏதுவாக இருக்கும்.

உலகத்தில் மனிதர்கள் ஒரே ஒரு இடத்தில்தான் தோன்றிப் பின்னர்ப் பிற இடங்களுக்குப் புலம்பெயர்ந்தனர் என்பது இன்னமும் உறுதி செய்யப்படாத கோட்பாடாகும். உலகின் பல பகுதிகளில் மனிதர்கள் தோன்றியிருக்கின்றனர். எனவே இந்த இடத்தில்தான் இந்தக் காலத்தில்தான் 'நீதி' எனும் கருத்தியல் தோன்றியது என உறுதியாகக் கூறுவதற்கில்லை. எனினும் மனித வளர்ச்சி வரலாற்றோடு நீதி எனும் கருத்தியல் தோற்றமும் வளர்ச்சியும் கணிக்கப்படுகிறது.

"The origin and growth of administration of justice is identical with the origin and growth of man. The social nature of man demands that he must live in society. While living so, he must have experienced a conflict of interests and that created the necessity for providing for the administration of justice."[25] என வழக்கறிஞர் ஓமர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம், 'மனிதனின் சமூக இயல்பு அவனைச் சமுதாயத்தில் வாழத் தூண்டுகிறது. அவ்வாறு வாழ அவன் முற்படும்போது பல்வேறு முரண்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. இந்த முரண்களின் சந்திப்பே 'நீதி' 'நீதி செலுத்துதல்' எனும் கருத்தியலின்

தேவையை உருவாக்கியது' என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. மனிதர்கள் தங்களின் வாழ்வாதாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள உதவிய கொள்கைகள் அனைத்தையும் நீதி எனத் தொடக்கத்தில் கருதினர். இதனால் தனிமனிதன் ஒவ்வொருவருக்கும் தான் செய்யும் செயலே சரியாகத் தோன்றியது எனலாம். இதனால் மனிதர்கள் இடையே கருத்து முரண்கள் மிகுதி யாக ஏற்பட்டபோது நீதியின் தேவை ஏற்பட்டது எனலாம். இதனால் தனிமனித எல்லைக்குள் மட்டுமே முடங்கிக் கிடந்த நீதி பின்னர்க் குறிப்பிட்ட இனக்குழு என்கிற எல்லை வரை விரிவடைந்தது எனக் கருதமுடிகிறது.

மனிதர்களின் தோற்ற வரலாற்றோடு நீதியின் தோற்ற வரலாற்றை ஒப்பிடும் வழக்கறிஞர் ஓமர் அவர்கள் பொதுவாக நீதியின் தோற்ற வளர்ச்சி வரலாற்றை மூன்று நிலைகளாக[26] வகுத்து விவரித்துள்ளார். அவை வருமாறு:

**முதல் நிலை**

தொடக்கக் காலத்தில் தனிமனிதச் சிந்தனையே மனிதர்களிடம் பெரிதும் காணப்பட்டது. அவன் எந்நேரத்திலும் மற்றவர்களால் அல்லது மற்றவைகளால் தாக்கப்படுவதற்கு வாய்ப்பிருந்தது. எனவே அவன் தன்னைப் (அதிகளவு தன் குடும்பத்தை) பாதுகாத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்தது. எதிரிகளை விடவும் அதிக ஆதிக்கம் செலுத்தியதன் மூலம் தாக்குதலை எதிர்கொண்டான். இந்நிலையில் எல்லா மனிதர்களுமே நீதிபதியாகத் திகழ்ந்தனர்; அவர்களின் சிக்கல்களை அவர்களே அவ்வப்போது உண்டாக்கிய விதிகளைக் கொண்டு தீர்த்துக் கொண்டனர் எனலாம்.

**இரண்டாம் நிலை**

அரசியல் இணக்கம் கொண்ட கூட்டமைப்பின் எழுச்சியாக அடுத்த காலக் கட்டம் அமைந்தது எனக் கூறமுடியும். என்றாலும், இந்தக் கூட்டமைப்புக் குற்றச் செயல்களையும் குற்றவாளிகளுக்குத் தரும் தண்டனைகளையும் முறையாகக் கையாளுகிற வலிமை கொண்டு அமையவில்லை. இக்கூட்டமைப்பு வெறும்

பழிக்குப் பழி என்கிற கோட்பாட்டின் அடிப்படையிலேதான் இயங்கியது எனக் கூற வாய்ப்புண்டு. இதனால் ‘பல்லுக்குப் பல்’ ‘கண்ணுக்குக் கண்’ ‘உயிர்க்கு உயிர்’ என்கிற கொள்கையைத்தான் இந்தக் கூட்டமைப்பு ஆதரித்தும் கடைப் பிடித்தும் வந்தது. எக்காரணம் கொண்டு பல்லுக்குப் பதிலாகவோ கண்ணுக்குப் பதிலாகவோ உயிர் எடுக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த சமூகம் எனலாம்.

**மூன்றாம் நிலை**

அரசியல் இணக்கம் கொண்ட கூட்டமைப்பு எனும் நிலையைக் காட்டிலும் வலிமையான நாடு என்கிற அரசியல் சமூகம் உருவான காலக்கட்டம் மூன்றாம் நிலையாகக் கருதப்படுகிறது. இக்காலக்கட்டத்தில் பொறுப்புகளை ஆய்ந்து பார்த்து தண்டனை விதிக்கக்கூடிய அதிகாரங்களை அரசு தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. குடிமையியல் வழக்கு, குற்றவியல் வழக்கு எனத் தரம் பிரித்துப் பார்க்கக்கூடிய தெளிவும்; அவற்றைக் கையாள வேண்டிய வழிகளும் அமைந்த அரசாக அது உருவெடுத்தது. எனவே நீதி எனும் கருத்தியல் அதன் உச்சக்கட்ட வளர்ச்சி நோக்கிய பாதையில் பயணப்படத் தொடங்கியது இக்காலத்தில்தான் எனலாம்.

**முடியாட்சியில் நீதிமன்றங்கள்**

நீதி செலுத்துவதில் அரசன்தான் தலைமையிடத்தில் இருந்துள்ளான் என்ற போதிலும் எல்லா வழக்குகளையும் அவனால் கண்காணிக்க முடிய வாய்ப்பில்லை. எனவே அவன் சார்பாக அவ்வழக்குகளை விசாரிக்க சில அமைப்புகளை நிறுவிய வரலாற்றுப் பதிவுகளைக் காணமுடிகிறது. சங்க காலத் தமிழகத்திலும் ‘மன்றம்’ ‘அறங்கூறு அவையம்’ முதலிய அமைப்புகள் இப்பணியை மேற்கொண்டிருந்தன என்பதை அறியமுடிகிறது.

“As in the field of legislation, the kings and princes resumed a greater role in the administration of justice during the Late Middle Ages. This did not

mean that all these other courts lost all significance or disappeared altogether. The king's jurisdiction increased in competition with that of these local and regional courts."[27] என இராண்டல் லசாப்பர் ஐரோப்பிய சட்ட வரலாறு குறித்த தம் நூலில் பதிவு செய்துள்ளார். அதாவது, நீதி செலுத்துதலில் அரசர்கள் இளவரசர்களின் ஆதிக்கம் இறுதி இடைக்காலம் முதல் ஐரோப்பியாவில் அதிகரித்து வந்துள்ளது எனவும், இதனால் அப்போதிருந்த நீதிமன்ற அமைப்புகள் முழுமையாக இல்லாமல் போய்விடவில்லை எனவும், அரசரின் நீதி செலுத்தும் அதிகார வரம்பு மட்டுமே அதிகரித்தது எனவும் குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் மேற்கத்திய நாடுகளிலும் முடியாட்சிக் காலக்கட்டத்தில் நீதிமன்றங்கள் இருந்துள்ளன என்பதை உறுதி செய்ய முடிகிறது.

### நீதி வளர்ச்சி வரலாற்றில் சமயங்களின் பங்கு

அரசுகள் நன்கு வளர்ந்த பின்னர் நீதி செலுத்துதலில் சமயங்களின் பங்கு இருந்துள்ளது. தொடக்கத்தில் அரசிடமிருந்த நீதி செலுத்தும் அதிகாரத்தில் பின்னர் சமய குருமார்களின் தலையீடு இருந்துள்ளதை வரலாற்றின் பக்கங்களில் காணமுடிகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க இடைக்காலம் வரை இத்தலையீட்டின் பதிவுகளைக் காணலாம். முழுமையான முடியாட்சி மலர்ந்த பின்னர் இத்தலையீடு வெகுவாக அல்லது முற்றிலுமாகக் குறைந்து விட்டது எனக் கருதமுடியும்.

### கி.பி. 600 முதல் கி.பி. 1200 வரையிலான தமிழகம்

தமிழகத்தைப் பொறுத்தவரை கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதலே அரசியல் அதிகாரத்தில் சமயத் தலைவர்களின் தலையீட்டினைக் காணமுடிகிறது. பல்லவர் காலம், பிற்காலச் சோழர் காலம் ஆகியவை சமயங்களின் தலையீட்டுக்குச் சான்றாக அமைகின்றன. பிற்காலத் தமிழகத்தில் முந்தைய அளவில் இல்லை

எனினும் ஓரளவுக்கேனும் சமயங்களின் தலையீட்டை அரசியல் அதிகாரத்தில் காணலாம்.

**தொடக்க இடைக்காலம்**

மேற்கத்திய நாடுகளிலும் சமயங்களின் தலையீடு அரசியலில் இல்லாமல் இல்லை. ஏறத்தாழ இருபதாம் நூற்றாண்டின் தொடக்க இடைக்காலம் வரை சமயக் குருமார்களின் தலையீடு இருந்துள்ள காட்சிகளைக் காணமுடிகிறது. இது குறித்து இராண்டல் லசாப்பர் (Randall Lesaffer) இயற்றியுள்ள ஐரோப்பாவின் சட்ட வரலாறு குறித்த தம் நூலில் பதிவிட்டுள்ளார். “From the Early Middle Ages to the turn of the twentieth century, the relation between church and state was a matter of severe contention in western Europe”[28] எனும் பதிவின் வழியாக தேவாலயத்திற்கும் அரசுக்கும் நீதி செலுத்துவதில் முரண் ஏற்பட்டிருந்ததை அறிந்துகொள்ள முடிகிறது. இதன்மூலம் சமயக் குருமார்களின் தலையீடு நீதி செலுத்துதலில் இருந்துள்ளது உறுதியாகிறது.

நீதியின் தோற்றம் வளர்ச்சி குறித்த மேற்சுட்டிய பதிவிலிருந்து நீதி பற்றிய வரலாற்று ஆய்வுக் கருத்தியல்கள் வருமாறு:

- ✓ இன்ன காலக்கட்டத்தில் இன்ன இடத்தில்தான் நீதி எனும் கருத்துரு தோற்றம் பெற்றது எனத் தெரிந்து கொள்ள வாய்ப் பில்லை.
- ✓ மனித இன வளர்ச்சியின் அடிப்படையில் நீதியின் தோற்ற வளர்ச்சி மூன்று நிலையில் வகுக்கப்பட்டுள்ளது.
- ✓ தனிமனிதன் தன்னுடைய அல்லது தன் குடும்பத்தினுடைய நலன் மற்றும் பாதுகாப்புக்காகச் செய்யப்படும் அனைத்தும் நீதியாகவே கருதப்பட்ட காலக் கட்டம் நீதியின் முதல்நிலையாகச் சுட்டப் படுகிறது.

- ✓ மனிதன் இனக்குழுக்களாக இயங்கிய நேரத்தில் ஏற்பட்ட சிக்கல் களுக்குப் பெரிதும் ‘பழிக்குப் பழி’ என்பதை நீதியாகக் கருதப்பட்ட காலக்கட்டம் நீதியின் இரண்டாம் நிலையாகச் சுட்டப்படுகிறது.
- ✓ குற்றம், குற்றவாளி, உரிமை, கடமை முதலியவற்றை நன்கு உணர்ந்து கொண்டு நேர்மை, நியாயம், நடுநிலைமை, சமவுரிமை முதலிய கோட்பாடுகளைப் பின்பற்றுவது நீதியெனக் கருத வேண்டும் என்கிற நிலைக்குப் படிப்படியாக வளர்ந்துவந்த காலக் கட்டம் நீதியின் மூன்றாம் நிலையாகச் சுட்டப்படுகிறது.
- ✓ முதல் நிலையும், இரண்டாம் நிலையும் வரலாற்றுப் பதிவுகளைப் பெரிதாக வைத்துவிட்டுப் போகவில்லை. மனிதவியல் வரலாற்றின் அடிப்படையிலே அவ்விரு நிலைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. என்றாலும் கிடைத்துள்ள வரலாற்றுப் பதிவுகளில் ஓரளவிற்கு இரண்டாம் நிலை குறித்த வரலாற்றுப் படிவங்கள் இல்லையென மறுப்பதற்கில்லை. அதிலிருந்து நீதி கருத்தியல் உண்டாக்கப்பட்டு உள்ளது.
- ✓ மூன்றாம் நிலை என்பது வரலாற்றுப் பதிவுகள் கிடைக்கத் தொடங்கிய காலக்கட்டத்திலிருந்து இன்றைய காலக்கட்டம் வரை பரவியுள்ளது. தொடக்கக் காலத்தில் ஏற்றத்தாழ்வு சமூகத்தில் இருந்துள்ளது. மேல்தட்டு மக்கள் ஒருவகையிலும் அடிதட்டு மக்கள் ஒருவகையிலும் நடத்தப்பட்டுள்ளனர். இதனை, “பயன்களைப் பகிர்ந்தளிக்கும்போது, மேல்தட்டு மக்களுக்கு அதிகமான பயனும்; தண்டனைகளை விதிக்கும்போது, அடிதட்டு மக்களுக்கு அதிகமான துயரும் வழங்கப்பட்டமை சரியெனக் கருதிய காலம் இருந்துள்ளது”[29] எனக் கலிபோர்னியா பல்கலைக்கழகத் தத்துவவியல் பேராசிரியர் கிறிஸ்டோபர் மெக்மகான் குறிப்பிட்டுள்ளதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.
- ✓ நீதி தோற்ற வளர்ச்சி வரலாற்றில் நீதிமன்றம் போன்ற அமைப்புகள் இருந்துள்ளதை உறுதி செய்ய முடிகிறது. இவ்வமைப்புகள், தாம் இருக்கின்ற இடம் சார்ந்த வழக்குகளை

மட்டும் கையாண்டு நீதி செலுத்தி வந்துள்ளன என அறிய முடிகிறது.

- ✓ வரலாற்றுப் பதிவுகளின் மூலம் நீதி செலுத்துவதில் சமயங்களின் பங்கு இடைக்காலத்தில் இருந்துள்ளதை உணரமுடிகிறது.
- ✓ முழுமையான குடியாட்சி மலர்ந்த பின்னர்ச் சமயம், அரசியல் முதலிய தலையீடுகள் பெரிதாக இல்லாமல் தன்னாட்சி பெற்று இயங்கும் நீதித்துறை உண்டாகி யிருக்கிறது. இதன்மூலம் நேர்மை, நடுநிலைமை, ஏற்றத்தாழ்வின்மை, சமவுரிமை முதலியவற்றின் மூலம் சட்டப்படியான நீதி வழங்கும் அமைப்பாகத் திகழ்கிறது.

## தற்கால நீதியின் நிலைப்பாடு

தற்காலத்தில் நீதி செலுத்தும் அமைப்பாக நீதிமன்றங்கள் உலகெங்கிலும் உள்ளன. அவையனைத்தும் அரசியல் உள்ளிட்ட எல்லா வகை அதிகார மையங் களிலிருந்தும் தனித்து இயங்கும் துறையாகச் செயல்படுகின்றன. தன்னாட்சி அமைப்பாகச் செயல்பட்டுப் பொதுமக்களுக்கு வேண்டிய நீதியினைச் செலுத்தி வருகின்றன. முறையான நீதி வழங்கல் பொருட்டு அரசுகளையே கட்டுப்படுத்தும் அதிகார மையமாகத் திகழ்கின்றன.

சமூகத்தின் அனைத்துத் தரப்பினர்க்கும் முறையான நீதி கிடைத்திட வேண்டும். அதற்காக பகுதி தோறும் நீதிமன்றங்கள் அமைத்து மக்கள் எளிமை யாய் நீதிமன்றங்களை அணுகும்படி கட்டமைக்கப்பட்டுள்ளது. பாதிப்பு ஏற்பட் டிருக்கிறது எனக் கருதும் எந்தவொரு குடிமகனும் தயங்காமல் நீதிமன்றத்தை அணுகலாம். உரிய விசாரணை மேற்கொண்டு உண்மையில் பாதிப்பு ஏற்பட் டுள்ளதா? தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் உண்மைத் தன்மை உள்ளதா? என நீதிமன்றம் கண்டறிந்து உரிய தீர்வு/ தீர்ப்பு கொடுக்கும். கொடுக்கப்பட்ட தீர்ப்பில் அல்லது தீர்வில் நிறைவு காணாத மக்கள் அதனை மேல்முறையீடு செய்து உரிய தீர்வுகாணவும் வாய்ப்புள்ளது.

**இந்தியாவில் நீதிமன்ற அமைப்புமுறை**

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 124, 214, 233[30] மூலம் முறையே உச்சநீதிமன்றம், மாநில உயர்நீதிமன்றங்கள், மாவட்ட மற்றும் பிற நீதிமன்றம் ஆகியன மைய மற்றும் மாநில அரசுகளால் சட்டப்படி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருக்கும் நீதிமன்றங்கள் அனைத்திற்கும் மேலான அதிகார வரம்பு படைத்தது 'உச்ச நீதிமன்றம்' ஆகும். இதற்கடுத்த நிலையில் வருபவை ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கக் கூடிய 'உயர்நீதிமன்றம்' ஆகும். இதற்கடுத்த நிலையில் மாவட்ட நீதிமன்றங்கள் திகழ்கின்றன. வழக்கின் பொருண்மை அடிப்படையில் மாவட்ட நீதிமன்றங்கள் இருவகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று மாவட்டக் குடிமையியல் நீதிமன்றம், அடுத்தது மாவட்டக் குற்றவியல் நீதிமன்றம் ஆகும். இதற்கும் கீழ் செயல்படக்கூடிய சார்பு நீதிமன்றங்கள் உண்டு.

கீழ்நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்பை அதற்கடுத்த மேல்நிலையிலுள்ள நீதிமன்றத்தில் முறையீடு செய்ய வாய்ப்பளிக்கப்படும்.

**நீதிமன்றங்களைப் போன்ற பிற நீதி வழங்கும் அமைப்புகள்**

நீதிமன்றங்களைப் போலவே செயல்படக்கூடிய அமைப்புகள் உள்ளன. நீதிமன்றங்களின் நேரத்தை மிச்சப்படுத்தும்வகையில் அடிப்படை தரவு சேகரிப்பு அல்லது துறைசார் விசாரணை முதலியவற்றை மேற்கொண்டு முதற்கட்ட தீர்ப்பு தரும் வகையில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. தீர்ப்பாயம், ஆணையங்கள், அங்கீகரிக்கப்பட்ட சமரச மன்றங்கள், உடன்படிக்கை மூலம் செய்துகொண்ட நடுவர்மன்றங்கள் முதலியவை நீதிமன்றங்களைப் போலவே செயல்படக்கூடிய பிற அமைப்புகளாகும். சமரச மன்றங்களின் மூலம் கிடைத்த தீர்ப்புகளைத் தவிர ஏனையவற்றை மேல்முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

***இலவச சட்ட உதவி***

பணம் என்பது நீதி கிடைப்பதற்குத் தடையாக இருக்கக் கூடாது. "The concept of seeking justice cannot be equated with the value of dollars. Money plays no role in seeking justice"[31] என நீதியரசர் பிளாக்முன், 'ஜாக்சன் எதிர் பிஷப்' எனும் புகழ்வாய்ந்த வழக்கின் தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் நீதிக்கும் பொருளாதாரத்திற்கும் தொடர்பு இல்லை என்பதை விளங்கிக் கொள்ளமுடிகிறது. ஏழை ஒருவராலும் கூட நீதிமன்றத்தை அணுகக்கூடிய சூழல் ஏற்பட வேண்டும் என்பதற்காக ***இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 39A*** இலவச சட்ட உதவிகள் குறித்து வரையறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் அனைத்து நீதிமன்றங்களிலும் பொருளாதார வசதியில்லாத ஒருவரால் வழக்குத் தொடுத்துத் தனக்குரிய நீதியைப் பெறமுடியும். கீழ்நீதி மன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் இலவச சட்ட உதவி தரும் பொறுப்பு மாநில அரசைச் சார்ந்ததாகும். உச்ச நீதிமன்றத்தில் இலவச சட்ட உதவிகளை வழங்க வேண்டிய பொறுப்பு மைய அரசைச் சார்ந்த தாகும். அரசின் நிலைப்பாட்டைக் கடந்து தனியார்களும் இலவச சட்ட உதவி களை மக்களுக்கு வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பன்னாட்டு அளவில் நீதி செலுத்தல்**

ஒரு நாட்டின் எல்லைக்குள் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து வைக்க உள்நாட்டு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. அவ்வாறு நாடுகள் இடையே ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் நீதிமன்றங்களின் தேவை எழுகின்றது. இரண்டு நாடுகள் இடையே எழுகின்ற ஒப்பந்தங்கள் பன்னாட்டுச் சட்டங்கள்

எனப்படும். இவ்வொப்பந்தங்களின் அடிப்படையில் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடுவர்மன்றம் (Arbitration) ஏற்படுத்தி உரிய நீதி கிடைக்க வழிவகை செய்யப் படும்.

இவ்வகை நடுவர்மன்றம் அன்றி ஐக்கிய நாடுகள் அவையத்தால் (United Nations Organisation) ***நீதிக்கான பன்னாட்டு மன்றம்*** (International Court of Justice) ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாடுகளிடையே ஏற்படும் உரிமைச் சிக்கல்களை உரிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்த்து வைத்துத் தீர்ப்புக் கொடுக்கும் நீதி மன்றமாக இது செயல்படுகிறது. பன்னாட்டு நீதிமன்றத்தில் மொத்தம் 15 நீதியரசர்கள் இருக்கின்றனர். 9 ஆண்டுகள் இவர்களின் பதவிக் காலம். ஐக்கிய நாடுகள் அவையின் பொதுசபை மற்றும் பாதுக்காப்புச் சபை இவர்களைத் தேர்ந்தெடுக்கின்றன.[32]

இவ்வாறான நீதிமன்ற அமைப்பு தவிர்த்து ஐக்கிய நாடுகள் அவையின் சார்பாகப் பல்வேறு துணையமைப்புகள் *சமூக நீதிக்காக* உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. அவ்வமைப்புகள் பொருளாதாரம் மற்றும் சமூகச் சபை (Economic & Social Council) கீழ் செயல்படுகின்றன. ஒவ்வொரு துணை அமைப்பும் தனக்கென ஓர் அலுவலகம், நிதி ஆதாரம் முதலியவற்றை உருவாக்கிக் கொண்டு உலகளாவிய அளவில் செயல்பட்டு வருகின்றது. ஐக்கிய நாடுகள் அவையத்தில் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ள எல்லா நாடுகளிலும் செயல்படும் அமைப்புகளாக இவையுள்ளன. அவ்வமைப்புகளுள் சில வருமாறு,

| | |
|---|---|
| உணவு மற்றும் உழவு அமைப்பு | Food and Agricultural Organisation |
| பன்னாட்டக அணுவாற்றல் மையம் | International Atomic Energy Agency |
| பன்னாட்டக மக்கள் வானூர்திப் போக்குவரத்து அமைப்பு | International Civil Aviation Organization |
| உழவு மேம்பாட்டுக்கான பன்னாட்டக | International Fund for Agricultural |

| | |
|---|---|
| நிதியம் | Development |
| பன்னாட்டகத் தொழிலாளர் சங்கம் | International Labour Organization |
| பன்னாட்டகக் கடல்சார் மையம் | International Maritime Organization |
| பன்னாட்டக நாணய நிதியம் | International Monetary Fund |
| பன்னாட்டகத் தகவல்தொடர்பு ஒன்றியம் | International Telecommunication Union |
| ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலைப்பண்பாட்டு அமைப்பு | United Nations Educational, Scientific and Cultural Organization |
| ஐக்கிய நாடுகளின் தொழிற்துறை மேம்பாட்டுக்கான அமைப்பு | United Nations Industrial Development Organization |
| உலகச் சுற்றுலா மையம் | World Tourism Organization |
| உலக அஞ்சல் ஒன்றியம் | Universal Postal Union |
| உலக வங்கி கூட்டமைப்பு | World Bank Group |
| உலக உணவுத் திட்டம் | World Food Programme |
| உலகச் சுகாதார மையம் | World Health Organization |
| உலக அறிவுசார் சொத்துரிமை மையம் | World Intellectual Property Organization |

இவ்வகை துணை யமைப்புகள் உலகளவில் சமூக நீதியினையும் பொருளாதார நீதியினையும் நிலைநாட்ட பெரிதும் உதவுகின்றன. இவை மட்டுமின்றி இன்னும் ஏராளமான துணையமைப்புகள் ஐக்கிய நாடுகள் அவையத்தின் ஆதரவோடு சிறப்பாகச் செயல்பட்டு நீதியை நிலைநாட்டி வருகின்றன.

இவ்வாறு உள்நாட்டளவிலும் பன்னாட்டளவிலும் நீதியின் தற்கால நிலைப்பாடு சிறப்பாகவே அமைந்து செயல்படுகிறது எனலாம். குறிப்பாகப் போர் தடுப்பு, அகதிகள் மேலாண்மை, வறுமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம் முதலான பணிகள் மூலம் தற்கால நீதிக் கருத்தியல் சிறப்பான வளர்ச்சி பெற்று இருக்கிறது. அறிவியல் வளர்ச்சிக்கேற்ப அதற்கிணையான அறைகூவல்களைச் சந்திக்க வேண்டியுள்ளன. எண்ணற்ற புதிய துறைகள் உண்டாகிவருகின்றன.

அவ்வத் துறைகளிலெல்லாம் முறையான நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என உள்நாட்டளவிலும் பன்னாட்டளவிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஒருவேளை எவர்க்கேனும் எச்சூழலிலாவது அநீதி இழைக்கப்பட்டால் அதைச் சீர்செய்ய சட்ட அங்கீகாரம் பெற்ற பல்வேறு அமைப்புகள் தோன்றியுள்ளன. உள்நாட்டளவில் நீதிமன்றத்தை ***அணுகும் வழிமுறைகள் எளிமையாக உள்ளன***. மேலும், வழக்குகளைச் சந்திக்கும் அளவிற்கு வசதி இல்லாதவர்களுக்கு ***இலவச சட்ட உதவி*** அரசாங்கத்தால் செய்யப்படுகிறது.

இவற்றையெல்லாம் நோக்கும்போது தற்கால நீதியின் நிலைப்பாடு மிகச் சிறப்பாகவே உள்ளது எனக் கருதமுடிகிறது.

### ***நீதியால் உண்டாகும் சமூகப் பயன்***

சமூகத்தில் எப்போதும் அமைதியும் சட்ட ஒழுங்கும் சீராக நிலவ வேண்டும் என்பதே அனைத்து அரசுகளின் நோக்கமாக இருக்க முடியும். தனிமனிதர்கள் தான் விரும்பும் பயனை அடைய முறைதவறி நடக்கும் வாய்ப்பே மிகுதியாகும். அச்சமயத்தில் வன்முறை கட்டுக்கடங்காத நிலையில் ஏற்படும். மேலும் ஏழைகள் அல்லது அடிதட்டு மக்கள் அதிகமான துயரைச் சந்திக்க வேண்டி வரும். மேல் தட்டு மக்கள், வன்முறையாளர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் முதலியோர் அதிக பயனைத் துய்த்து வருவர். இந்த ஏற்றத்தாழ்வு களையப்பட வேண்டும் என்றால் முறையான நீதி நிர்வாகத்தினால்தான் முடியும். எனவே உரிய நீதி நிர்வாகம் சமூகத்தில் அமைதியையும் சட்ட ஒழுங்கையும் நிலைநாட்ட உதவி புரியும் எனலாம்.

சமூகத்தின் அடிப்படை உறுப்பினர்களான மக்களுக்கும் சமூகத்தை நிர்வகிக்கும் பொறுப்புடைய அரசுக்கும் இடையிலான தொடர்பு நல்ல விதமாக அமைய வேண்டும். அப்போதுதான் அக்குறிப்பிட்ட சமூகத்தின் வளர்ச்சி சீராகத்

தொடரும். சில நேரங்களில் அரசுக்கும் மக்களுக்கும் இடையே கருத்து முரண் ஏற்படுவதுண்டு. அச்சூழல்களில் நீதிமன்றங்களின் தலையீடு பேருதவியாக அமைகின்றது. அரசின் கொள்கையில் தவறிருந்தால் அதனை இரத்துச் செய்தும்; அதே நேரத்தில் மக்கள் மீது தவறிருந்தால் அதனைச் சுட்டிக் காட்டி உத்தரவு பிறப்பிக்கிறது. இதன்மூலம் அரசு மக்கள் இடையிலான உறவைச் செம்மைப் படுத்த நீதி உதவுகிறது எனலாம்.

ஒவ்வொரு தனிமனிதனும் அவனுக்குரிய உரிமைகளைப் பெற்று வாழ நீதி உதவுகிறது. எக்காரணத்திலாவது அவனது உரிமை பாதிக்கப்படுமாயின் நீதிமன்றத்தில் முறையிட்டு மீண்டும் அவ்வுரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடிகிறது.

நீதி எனும் கருத்தியலைப் பாதுகாக்க ஒவ்வொரு அரசும் முயற்சி செய்து வருகிறது. இதனால் செம்மையான நடைமுறை விதிகள் உருவாக்கப்பட்டு எதிர் காலத்தில் சிக்கல் பெரியளவில் உருவாகாமல் தடுக்கப்படுகிறது. எனவே வருங் காலக் குற்றத்தடுப்புக்கு நீதியெனும் கருத்தியல் துணைபுரிகிறது எனலாம்.

சமூகத்தில் ஏதோ ஒரு காரணத்தால் புறக்கணிப்படும் மக்களுக்கும் சம வாய்ப்பு கிடைக்க நீதி எனும் கருத்தியல் உதவுகிறது. மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், ஒடுக்கப்பட்ட மக்கள் முதலியோர்க்கு வேண்டிய வசதிகளையும் வாய்ப்புகளையும் நீதியெனப்படும் கருத்தியல் உருவாகித் தர முன்வருகிறது எனலாம்.

இவ்வாறு பலவகையான பயன்களை நீதியெனும் கருத்தியல் சமூகத்தில் விளைவிக்கிறது. நீதி என்பது அருவமாகத் திகழ்ந்தாலும் நடைமுறையில் எல்லா அரசுகளையும் எல்லா நிர்வாகங்களையும் கட்டுப்படுத்தும் பெரும்பேர் அதிகார மையமாகத் திகழ்கிறது. இதனால் உலகத்தில் எங்காவது எவராவது துன்பம் அடைந்தாலும் நீதியின் பெயரால் அவரை மீட்டெடுக்க முயற்சிகள் நடைபெறும் என்பது உண்மையிலும் உண்மை.

நீதி எனும் சொல்லுக்குப் பொது அகராதிகள், சட்ட அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், வரையறைகள், நூல் மேற்கோள்கள் மூலம் பொருள் கண்டறியப் பட்டுள்ளது. இதன்மூலம் நீதி என்பதற்கு இவ்வாய்வேட்டிற்கான வரையறை உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அது வருமாறு: '*நன்னெறி எனக் கருதப்படும் நேர்மை நடுநிலைமை ஏற்றத்தாழ்வின்மை சமவுரிமை போன்றன ஒருங்கிணைந்த நடைமுறைச் செயன்மை மூலம்* ***தடுக்கப்படும் அத்துமீறலும் கொடுக்கப்படும் பாதுகாப்பும்*** *மனிதர்களின் உளவியல் நிறைவும் உள்ளடங்கிய அருவநிலையை நீதி எனலாம்'.*

நீதியின் வகைகளைப் பகுத்து ஆய்ந்ததன் மூலம் மேற்சுட்டிய வரையறை மேலும் உறுதியானது. எத்தனை புதிய துறைகள் உருவானாலும் அத்தனை துறைகளிலும் தலையிடும் தன்மை நீதிக்கு உண்டு என்பதை அதன் வகை பகுப்புகளைக் கொண்டு அறிய முடிகிறது.

நீதியின் தோற்ற வரலாற்றை ஆய்வு செய்ததன் மூலம், காலந்தோறும் மாறும் இயல்புடையது நீதி என்பது தெளிவானது. மேலும், நீதி வரையறையில் இடம்பெற்றுள்ள 'மனிதர்களின் உளவியல் நிறைவு' எனும் தொடர் முற்றிலும் பொருத்தமானது என்பதை நீதியின் தோற்ற வளர்ச்சி வரலாற்றின் மூலம் உறுதி செய்யமுடிகிறது.

நீதியின் சொற்பொருள், நீதியின் வகைகள், நீதியின் தோற்ற வளர்ச்சி வரலாறு மூலம் நீதியின் வரையறை உறுதி செய்யப்பட்டதுடன் அதன் தற்கால நிலைப்பாடு சிறப்பாக உள்ளது எனவும், அதனால் சமூகத்தில் பல பயன்கள் ஏற்படும் என்பதும் அறிந்து கொள்ள முடிகிறது.

## அடிக்குறிப்புகள்


1. Miron Winslow, ***A Comprehensive Tamil and English Dictionary***, Madras, 1862.
2. J.P. Fabricius, ***Tamil and English Dictionary***. 4th ed., Tranquebar, 1972.
3. ***சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி*** (Lexicon), சென்னை, 1982.
4. ***நர்மதாவின் தமிழ் அகராதி***, சென்னை, 2001.
5. ***Oxford Advanced Learner's Dictionary*** (8th Ed.), New York, 2010.
6. Kathy Rooney, ***Encarta – Concise English Dictionary***, London, 2001.
7. ***Mega Lifco Dictionary*** (Eng. – Eng. – Tamil) [Reprint], Chennai, 2009.
8. S. Subramanian, ***Pals Dictionary*** **(Eng – Eng - Tamil)** [Revised Print], Chennai, 2000.
9. ***Webster's Encyclopedic Unabridged Dictionary Of The English Language***, New York, 1986.
10. Gerald and Kathleen Hill, ***The People's Law Dictionary: Taking the Mystery Out of Legal Language***, New York, 2002.
    (Available at http://dictionary.law.com/Default.aspx?selected=1086, Accessed on 27.03.2016)
11. ***Merriam-Webster's Dictionary of Law***, Springfield, 1996.
    (Available at http://dictionary.findlaw.com/definition/justice.html Accessed on 27.03.2016)
12. ***Webster's New World Law Dictionary***, New Jersey, 2006.
    (Available at http://www.yourdictionary.com/justice#law Accessed on 27.03.2016)
13. ***Black's Law Dictionary***, 1910.
    (Available at http://thelawdictionary.org/letter/j/page/20/ Accessed on 27.03.2016)
14. Aristotle, ***Nicomachean Ethics*** (English), Book 5, 1129a 6 f.

(Available http://perseus.uchicago.edu/perseus-cgi/citequery3.pl?dbname=GreekFeb2011&query=Arist.%20Eth.%20Nic.%201129a&getid=1 Accessed on 27.03.2016)

15. Plato, ***Republic.***
(Available at http://www.iep.utm.edu/justwest/ Accessed on 27.03.216)

16. W.A.N. Wells, ***Law Judges & Justice For The Community,*** Australia, 1991, p.13.

17. Ibid p.13.

18. Ibid pp.12-13.

19. ***Four Types of Justice.***
(http://changingminds.org/explanations/trust/four_justice.htm Accessed on 12.12.2012)

20. ***Distributive justice.***
**(**http://www.merriam-webster.com/dictionary/distributive justice, accessed on 3.4.2015)

21. Maiese, Michelle. "***Types of Justice" Beyond Intractability***. Eds. Guy Burgess and Heidi Burgess. Conflict Information Consortium, University of Colorado, Boulder. Posted: 2003.
(from http://www.beyondintractability.org/essay/types-of-justice, Acessed on 02.04.2011)

22. Ibid.

23. ***Natural Justice***.
**(**https://en.wikipedia.org/wiki/Natural_justice, Accessed on 4.7.2013)

24. ***Social Justice.***
**(**https://en.wikipedia.org/wiki/Social_justice, Accessed on 4.7.2013)

25. Omar, ***Administration of Justice in English Jurisprudence***, 2010.
(Available at http://www.articlesbase.com/national-state-local-articles/administration-of-justice-in-english-jurisprudance-3830866.html Accessed on 04.05.2012)

26. Ibid.

27. Randall Lesaffer, ***European Legal History A Cultural and Political Perspective***, UK, 2009, p.278.

28. Ibid, p.139

29. Christopher McMahon, Review of the Book '***A Brief History of Justice***', Wiley-Blackwell, 2011.
(Available at https://ndpr.nd.edu/news/28323-a-brief-history-of-justice/
Accessed on 04.08.2014)

30. ***The Constitution of India***.
(Available at http://lawmin.nic.in/olwing/coi/coi-english/coi-4March2016.pdf
Accessed on 17.12.2015)

31. Justice Blackmun***, Jackson v. Bishop***.
**(**Available @ Varun Pathak, *A Brief History of Legal Aid*, New Delhi
http://www.legalserviceindia.com/articles/laid.htm Accessed on 12.10.2015)

32. ***International Court of Justice***.
(Available @ http://www.icj-cij.org/court/index.ph p?p1=1 Accessed on 15.10.2015)

# இயல் 2: சங்க காலப் பதிவுகளில் நீதி சார்ந்த கருத்துரு

நீதி குறித்த வரையறை, முதல் இயலில் தெளிவாக்கிக் கொள்ளப்பட்டது. இனி, சங்கக்காலத் தமிழகத்தில் நீதி சார்ந்த கருத்துரு (concept) குறித்த ஆய்வு தேவைப்படுகிறது. அவ்வாய்வுக்குச் சங்கக்காலத்தின் வரலாற்றுப் பதிவுகளைத் தொகுத்தறிய வேண்டிய கட்டாயம் எழுகிறது. சங்கக்காலத்தின் வரலாற்று ஆவணங்களைக் கொண்டுதான் நீதி கருத்துரு குறித்த ஆய்வே மேற்கொள்ள முடியும். எனவே சங்ககால வரலாற்று ஆவணங்கள் (Historical Evidence) மற்றும் நீதி கருத்துரு (Concept of Justice) குறித்த பகுதியாக இவ்வியல் அமைந்துள்ளது. மொத்தம் நான்கு பகுப்புகளாக இவ்வியல் பிரிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. அப்பகுப்புகள் வருமாறு,

- சங்க காலப் பதிவுகள் அறிமுகம்
- நீதி – சங்க கால (தமிழக) வரையறை
- நீதியும் வாழ்க்கை முறையும்
- நீதி வழங்கும் (சங்க காலத்து) அதிகார மையம்

மேற்சுட்டிய நான்கு துணைத்தலைப்புகள் மூலம் தமிழகம் சார்ந்த சங்க காலப் பதிவுகள் என்னென்ன கிடைத்துள்ளன, அவை வரலாற்று ஆவணம் ஆவதற்கான தகுதி பெற்றுள்ளனவா? சங்க காலத் தமிழகத்தின் நீதி சார்ந்த கருத்துருக்கள் குறித்த தொகுப்பும் ஆய்வும், சங்க காலத்தில் நீதி வழங்கும் அதிகார மையமாகத் திகழ்ந்தது எது? அவ்வமைப்பின் பணிகள் என்னென்னவாக இருந்தன எனப் பல செய்திகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, '*சங்ககாலத் தமிழகத்தில் நீதி குறித்த கருத்துருவின் வரலாற்றுப் பின்னணி' என்னவாக இருந்துள்ளது*? என்பதை ஆய்வு செய்கிறது இப்பகுதி.

## சங்க காலப் பதிவுகள் அறிமுகம்

சங்க காலப் பதிவுகள் என்னென்ன என்பதைப் பட்டியலிடுவதற்கு முன்பு 'சங்க காலம்' என்று எக்காலம் வரையறுக்கப்பட்டுள்ளது எனத் தெளிய வேண்டும். சங்க காலத்தின் கால வரையறை குறித்துப் பல கருத்தாக்கங்கள் உள்ளன. "Sangam age is the period during which the poets of the third Sangam joined together and did research on Tamil. This period lasted for 400 years from B.T. 200 to A.T 200. Some considered that ***it was between B.T. 300 to A.T. 300*** (BT - AT was calculated based on the birth year of Thiruvalluvar i.e. 31 B.C.)[1] என வரலாற்றுத்துறை பேராசிரியர் ஜான் பிரிட்டோ குறிப்பிட்டுள்ளார். சங்க காலம் குறித்துப் பல்வேறு கணிப்புகள் இருப்பினும், பரவலாக கி.மு. 300 முதல் கி.பி. 300 வரையிலான காலத்தைச் சங்க காலம் (சங்கம் மருவிய காலத்தையும் சேர்த்து) எனப் பெரும்பான்மையோர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்வாய்வும் இந்தக் கால வரையறையோடே இயங்குகிறது.

### சங்க காலத் தமிழகம் குறித்த பதிவுகள்

சங்க காலத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வரலாற்று ஆவணங்கள் தேவைப்படுகின்றன. வரலாற்று ஆவணங்களின் அடிப்படையிலேயே ஆய்வு மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆய்வுக்கேற்ற வரலாற்று ஆவணங்களாக அனைத்தையும் பயன்படுத்திவிட முடியாது. வரலாற்று ஆவணங்கள் உண்மைத் தன்மையோடு விளங்க வேண்டும். அவ்வாறு பழங்காலத் தமிழகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள பயன்படக்கூடிய வரலாற்று ஆவணங்கள் எவை எனும் வினா எழுகிறது. "The evidence on the early history of the southern India consists of the epigraphs of the region, the Sangam literature, and archaeological data".[2] என கோல்டன் ரிசெர்ச் தாட்ஸ் (Golden Research Thoughts) எனும் பல்துறை ஆய்வுக் கோவை இதழில் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம்,

கல்வெட்டுகள் சங்க இலக்கியங்கள், அகழாய்வுத் தரவுகள் ஆகியவை பழங்காலத் தமிழகம் குறித்து அறிய பயன்படும் வரலாற்று ஆவணங்களாகத் திகழ்கின்றன என உணர்ந்து கொள்ளமுடிகிறது. இவற்றோடு பழங்காலத்தைச் சேர்ந்த நாணயங்கள் (காசுகள்) மற்றும் அயல்நாட்டினரின் பயணக் குறிப்புகள் ஆகியவற்றையும் இவ்வாய்வு பயன்படுத்திக் கொள்ளவிருக்கிறது.

*கிடைத்துள்ள சங்க கால வரலாற்று ஆவணங்களுள் எவ்வெவ்வற்றில் நீதி தொடர்பான கருத்தியல் பதிவாகியுள்ளது என இனி காணலாம்.*

**அகழ்வாய்வுத் தரவுகள்**

தமிழ்நாட்டில் அகழ்வாய்வுக்குரிய வரலாற்றுப் பகுதிகள் பல இடங்களில் அமைந்துள்ளன. அங்கெல்லாம் கடந்த காலத்திலும் தற்காலத்திலும் தொடர்ந்து அகழ்வாய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. குறிப்பாக அரிக்கமேடு, கொடுமணல், பேரூர், காவிரிபூம்பட்டினம், அழகன்குளம், காஞ்சி புரம், வாசவசமுத்திரம், மலையம்பட்டு, செங்கம்மேடு, காரைகாடு, திருக்கம்புலி யூர், உறையூர் முதலிய பகுதிகளில் அகழ்வாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். தொல்லியல் துறை, வரலாற்றுத் துறை ஆகியன இப்பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன.

அகழ்வாய்வுப் பணிகளின் மூலம் இதுவரை கிடைத்துள்ள தரவுகள் பெரும்பாலும் பொருட்களாகவே உள்ளன. சங்க காலத்தைச் சேர்ந்த எண்ணற்ற பொருட்கள் கிடைத்துள்ளன. என்றபோதிலும் நீதி தொடர்பான தரவுகள் எதுவும் குறிப்பிடும்படி இல்லை எனலாம். இக்கருதுகோள், கீழ்க்காணும் பகுதி மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

"Artifacts such as brick walls, ring wells, pits, industrial items, remains of seeds and shells provide clues about the nature of the settlements and the other aspects of life during the *Sangam age*. **Archaeologists agree that activities best illustrated in the material records of Tamilakam are trade, hunting, agriculture and crafts**".[3] எனப் புகழ்பெற்ற வரலாற்றுத்துறை ஆர்வத்தர் திரு. ஆப்ரகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அதாவது வணிகம், வேட்டை, உழவு மற்றும் தொழில்திறன் ஆகியவற்றை மட்டுமே அறிந்துகொள்ளும் வகையில் அகழ்வாய்வில் இதுவரை கிடைத்துள்ள பொருட்கள் அமைகின்றன என்று விளங்கிக் கொள்ள முடிகிறது. மேலும் நீதி சார்ந்த கருத்தியல் செய்திகள் எவையும் அகழ்வாய்வுப் பொருட்களில் இல்லையெனத் தொல்லியல் அறிஞர் நடன. காசிநாதன் அவர்கள் (இவ்வாய்வேட்டுக்கான) நேர்காணலின்போது குறிப்பிட்டுள்ளார். எனவே திரு.ஆப்ரகம் அவர்களின் கருத்தினை வழிமொழிவது போலவே திரு. நடன. காசிநாதன் அவர்களின் கருத்து அமைந்திருப்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆகையால் அகழ்வாய்வுப் பணிகளில் கிடைத்துள்ள பொருட்களில் நீதியியல் சார்ந்த பொருண்மைகள் இல்லையெனும் முடிவுக்கு வரமுடிகிறது.

என்றாலும், அகழ்வாய்வில் கிடைத்துள்ள பானை ஓடுகளில் பொறிக்கப் பட்டுள்ள எழுத்துகள் மூலம் சில நீதியியல் சார்ந்த செய்திகளை அறிய முடிகிறது. அவை அடுத்துவரும் கல்வெட்டு எனும் துணைத்தலைப்பில் ஆய்வுக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

**கல்வெட்டு/ பானையோட்டு எழுத்துத் தரவுகள்**

சங்க காலப் பதிவுகளுள் மிக இன்றியமையாத பதிவாகக் கருதப்படுவது எழுத்துப் பொறித்த குகைகள், கற்கள், பானை ஓடுகள் முதலியவை ஆகும். இவற்றில் எழுத்துகள் பதிவாகியிருப்பதனால் சங்க கால மக்களின் கருத்தோட்டம்

என்னவாக இருந்தது என்பதை ஓரளவுக்கு அறிந்துகொள்ள முயற்சி செய்யலாம். அவ்வெழுத்துகள் தரும் தரவுகள் மிக நேர்த்தியான வரலாற்று ஆவணமாகக் கருதப்படுகின்றன. இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுத் தரவுகள், பானை யோட்டு எழுத்துத் தரவுகள், (குகைச்)சுவர் எழுத்துத் தரவுகள் ஆகியவற்றில் நீதி என்பதற்கான வரையறை எங்கும் குறிப்பிடப்படவில்லை. என்றாலும் நீதிபெற அணுகும் (Access to Justice) வாய்ப்புகள் பற்றிய குறிப்புகள் கிடைத்துள்ளன. இதன்மூலம் சங்க காலத்திலேயே மக்கள் நீதி குறித்த விழிப்புணர்வோடு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. நீதி குறித்த கருத்தியல் தெளிவு இல்லாமல் இத்தகைய விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பது கடினம் என்பது நடைமுறைப் பட்டறிவில் உறுதியாகும் ஒன்றாகும்.

பாதிப்பு ஏற்பட்டவுடன் அதனை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு பாதிப்படைந்தவர்க்கு உண்டு; தனக்கான உரிமையை அவர் எக்காலத்திலும் விட்டுத்தரக்கூடாது; உரிய முறையில் வாதம் செய்து தனக்கான பயனைப் பெற, பாதிப்படைந்தவர் முனைப்புக் காட்ட வேண்டும் என்கிறது தற்காலச் சட்டவியல் கொள்கைகள். அதேபோல அரசுகளும் தனிமனிதன் ஒருவன் வாதம் செய்வதற் கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரத் தவறிவிடக் கூடாது என்கிறது. சங்க காலத் தமிழகத்தில் இவ்வாறாக வாதம் செய்வதில் வல்லுநர்கள் இருந்திருக்கிறார்கள். இதனைப் பானையோட்டு எழுத்துத் தரவுகளின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

அழகன்குளம் பகுதியில் கிடைத்துள்ள மட்கலன்கள் சிலவற்றுள் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. அதுகுறித்த செய்தி வருமாறு, “எழுத்துப் பொறித்த மட்கலன்கள் (Inscribed potshreds), எழுத்துப் பொறித்த ரௌலட்டட் வகை மட்கலன்கள் அதிகளவில் கிடைத்துள்ள பகுதி ***அழகன்குளம்*** மட்டுமே எனலாம். உரோமானிய மட்கலன்களிலேயே தமிழி எழுத்துப் பொறிப்புகள் கொண்ட மட்கலன்கள் சுமார் 60-க்கும் மேற்பட்டவை கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்

தக்கது. அழகன்குளம் அகழ்வாய்வில் 190-க்கும் மேற்பட்ட குறியீடுகள் பொறித்த மட்கலன்களும் கிடைத்துள்ளன. உரோமானிய மட்கலன்களான கருப்பு நிற ரௌலட்டட் மட்கலனில், 'சாமுதக' என்பதும், பிற எழுத்துப் பொறிப்புகளாக திசஅன், தானியது சேரமான், கோன், ஆதன், அத்தன், குவிரஅன்அ, பதுமாற்கோதை, ***வாதுமேத*** போன்றவை குறிப்பிடத்தக்கன".[4] அழகன்குளம் பகுதியில் கிடைத்துள்ள எழுத்துப் பொறித்த மட்கலன்களுள் இடம்பெற்றுள்ள சொற்களில் 'வாதுமேத' என்பது கவனிக்கத்தக்கது. இது நீதி அணுகல் வாய்ப்போடு தொடர்புடைய சொல்லாட்சியாகக் கருத வாய்ப்புகள் அதிகம். இச்சொல்லுக்கான பொருளுக்கும் நீதி கருத்தியலுக்கும் சற்றுத் தொடர்பு உள்ளது எனலாம். 'வாதுமேத' என்னும் சொல்லுக்குத் தொல்லியல் அறிஞர் திரு நடன. காசிநாதன் அவர்கள் 'வாதாடுவதில் வல்லவன்' எனும் பொருள் கொடுத்திருக்கிறார்.[5] வாதிடுதல் என்பதை மொழியியல் அடிப்படையில் இரண்டு கோணத்தில் அணுகமுடியும். ஒன்று ஏதேனும் ஒரு தத்துவத்தைக் கொண்டு வாதம் புரிதல்; அடுத்தது உரிமையை நிலைநாட்ட அவையில் வாதம் புரிதல் ஆகும். பானையோட்டு எழுத்துத் தரவு எவ்வகை வாதத்தைக் குறிக்கிறது என்பதில் தெளிவு இல்லை. என்றாலும் பிற தரவுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இதனை உரிமைக்கான வாதமாகக் கொள்ள அதிக வாய்ப்புள்ளது.

இனி, அழகன்குளத்தில் கிடைத்துள்ள பானையோட்டின் காலம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும். அது சங்க காலத்தோடு தொடர்புடையதா அல்லது பிற்காலத்தோடு தொடர்புடையதா? என்பதை ஆய்வு செய்ய வேண்டும். இதற்குப் பின்வரும் பகுதி உதவிபுரிகிறது. "உறையூர், ***அழகன்குளம்***, கொடு மணல் போன்ற பகுதிகளில் மேற்கொண்ட அகழ்வாராய்வுகளில் இருந்தும் பல்வேறு இடங்களில் நடாத்தப்பட்ட மேற்புற ஆய்வுகளில் இருந்தும் தமிழில் தமிழ் பிராமி எழுத்துகளால் எழுதப்பட்ட ***(காலம்:கி.மு 2ஆம் - கி.பி 3ஆம் நூற்றாண்டு)*** எண்ணிக்கையில் பெருகிக்கொண்டு இருக்கும் மட்பாண்ட

சிதைவுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன."[6] எனச் சுட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் அழகன்குளம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மட்கலன்கள் சங்க காலத்தவை என்பதை உறுதி செய்யமுடிகிறது. எனவே சங்க காலத்தில், நீதியை அணுகும் வாய்ப்புகளுள் ஒன்றான வாதிடுதல் இருந்துள்ளது என்பதைப் பானையோட்டு எழுத்துத் தரவு மூலம் அறியமுடிகிறது. வாதம் என ஒன்றுண்டெனின் எங்கு வாதிடுவது எனும் அடுத்தொரு ஆய்வு வினா எழுகிறது.

இக்காலத்தில் நீதி வழங்குவதற்கெனத் தனிமன்றம் (நீதிமன்றம்) இருப்பது போல அக்காலத்திலும் இருந்திருக்கிறது எனலாம். அதற்கு 'அவை' 'மன்றம்' எனப் பெயர் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. மதுரை மாவட்டம் முதலைக்குளம் பகுதியில் கிடைத்துள்ள கல்வெட்டு ஒன்றில் 'ஊர் அவை' என ஒன்று இயங்கியதாகப் பதிவு இருக்கிறது. அக்கல்வெட்டில் இருந்த குறிப்பினைத் தொல்லியல் அறிஞர் ஐ. மகாதேவன் அவர்கள் கீழ்க்காணுமாறு படித்துள்ளார்.

"வெம்பிற்ஊர் பேர்அய்அம் சேதவர்"

இத்தொடர்க்கு 'வெம்பிற்றூர் ஊரவையினர் அமைத்த பெரிய ஏரி' எனப் பொருள் கூறியிருக்கிறார். இதே கல்வெட்டில் இருக்கும் குறிப்பினைத் தொல்லியல் அறிஞர் நடன. காசிநாதன் அவர்கள் வேறுவிதமாகப் படித்துள்ளார். அது வருமாறு,

"வெம்பிறூர் பேராயம் சேதவர்"

இத்தொடர்க்கு, 'வெம்பிற் ஊரைச் சேர்ந்த பெண்கள் அவையினர் இக்கொடை (குடைவரையை)ச் செய்தவர்கள்' எனப் பொருள்கூறியுள்ளார். மேலும் இக்கல்வெட்டு கி.மு. 3-ஆம் நூற்றாண்டிற்கும் முந்தையது எனப் பதிவு செய்துள்ளார்.[7] இதன்மூலம் கி.மு. 3 நூற்றாண்டுக்கும் முந்தைய அதாவது சங்க காலத்துக்கும் முந்தைய (Pre Sangam Age) முதலே ஊர் அவை தமிழகத்தில்

செயல்பட்டு வந்திருக்கிறது என்கிற செய்தியை இதன்மூலம் உறுதி செய்துகொள்ள முடிகிறது.

மேலும், கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்கு உட்பட்ட கல்வெட்டு ஒன்றிலும் ‘அவை’ செயல்பட்ட செய்தி பதிவாகியுள்ளது. இக்கல்வெட்டு மன்னார்கோயில் பகுதியில் கிடைத்ததாகும். “Inscriptions from the 2nd century CE found at Mannarkoil village in Tirunelveli district contain a reference to a katikai, which could mean an assembly of learned persons or an institution of higher learning”.[8] எனக் கடிகை குறித்த செய்திப் பகிர்வு நோக்கத்தக்கது. சான்றோர் அவையமாகவோ அல்லது உயர்கல்வி நிறுவனமாகவோ கடிகை செயல்பட்டிருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு. கி.மு. 3-ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட காலத்திலிருந்தே தமிழகத்தில் வாதிடுதலும் அதற்குக் களமாக அவையமும் இருந்து வருவதைக் கல்வெட்டுத் தரவுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இதன்மூலம் நீதியை அணுகும் வாய்ப்பும் (Access to Justice) அது குறித்த விழிப்புணர்வும் சங்க காலத்தில் இருந்துள்ளது எனத் துணியலாம்.

**காசுகள் மற்றும் அயல்நாட்டினரின் பயணக்குறிப்புகள்**

தமிழகத்தில் எண்ணற்ற காசுகள் கிடைத்துள்ளன. அவற்றை மூன்று விதமாகப் பகுத்துக் கூற முடியும். அவை வருமாறு,

1. வடநாட்டுக் காசுகள்
2. அயல்நாட்டுக் காசுகள்
3. உள்நாட்டுக் காசுகள்

வடநாட்டுக் காசுகள் மகதம் மற்றும் சதவாகன பகுதிகளைச் சேர்ந்தவை. அயல்நாட்டுக் காசுகள் உரோம், (தற்கால சிரியா மற்றும் எகிப்து பகுதிகளை

உள்ளடக்கிய) பொனிஷியா (Phoenicia), நடுநிலக்கடல் பரப்பு (Mediterranean region) தேசங்கள் முதலிய நாடுகளைச் சார்ந்தவை. உள்நாட்டுக் காசுகள் சோழ, சேர, பாண்டியன் முதலிய தமிழக மன்னர்களுடையவை.

கிடைத்திருக்கும் காசுகள் மூலம் சங்க காலத் தமிழகத்தில் பன்னாட்டு வணிகம் செழித்திருந்தது என்பதை அறிந்து கொள்ள முடிகிறதே தவிர, நீதி நிர்வாகம் குறித்தோ நீதி கருத்தியல் குறித்தோ அறிந்து கொள்ள முடியவில்லை. “The coins belonging to the first two categories mostly attest to the trading relationships that the Tamil people had with the kingdoms of northern India and the outside world. But they do not offer much information regarding the Sangam age Tamil polity”.[9] என்கிற பதிவிலிருந்து உள்நாட்டுக் காசுகளைத் தவிர பிறகாசுகள் மூலம் சங்க காலத் தமிழகத்தின் அரசியலைக் கூட அறிய இதுவரை முடியவில்லை என விளங்கிக்கொள்ள முடிகிறது.

இனி, அயல்நாட்டினரின் பயணக்குறிப்புகளும் சங்க காலம் குறித்த வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது. மெகஸ்தனீஸ் (Megasthenes), பிளினி (Pliny), ஸ்ட்ரேபோ (Strabo), டோல்மி (Ptolemy), பெரிபிளஸ் (Periplus) நூலின் ஆசிரியர் முதலானோர்களின் படைப்புகளில் சங்க காலம் குறித்த செய்திகள் பதிவாகியுள்ளன. அப்பதிவுகள் அனைத்தும் சிறந்த வரலாற்று ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. அப்பதிவுகளில் இருந்து வணிகம் தொடர்பான செய்திகள் மிகுதியாகக் கிடைக்கின்றனவே தவிர நீதிக் கருத்தியல் செய்திகள் கிடைக்க வில்லை. “The Early Pandyas had active maritime trade relationships with the west, a fact testified by western classical writers such as Pliny the Elder (1st century CE), Strabo, Ptolemy and the author of the Periplus”.[10] என விக்கிபீடியா குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கது.

**இலக்கியச் சான்றுகள்**

சங்க காலத்துத் தமிழகம் குறித்த செய்திகளைத் தரும் அடுத்த வரலாற்று ஆவணமாகத் திகழ்வது சங்க இலக்கியங்கள் ஆகும். "*Sangam Literature is one of the main sources used for documenting the early history of the ancient Tamil country*".[11] எனக் கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிபீடியா குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

இலக்கியங்களை வரலாற்று ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனின் அவ்விலக்கியங்களில் கற்பனை இடம்பெற்றிருப்பினும் அவ்விலக்கியங்கள் முன்வைக்கும் அடிப்படைப் பொருள்கள் உண்மைத் தன்மை கொண்டவையாக இருக்க வேண்டும். இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கும் செய்திகள் பிற வரலாற்றுச் சான்றுகளுடன் ஒத்துப் போக வேண்டும். அப்படியிருக்கும் போது மட்டுமே 'இலக்கியங்களை' வரலாற்று ஆவணமாகப் பயன்படுத்த வேண்டும் என்பது ஆய்வியல் நெறிமுறையாகும்.

**சங்க இலக்கியங்களின் உண்மைத் தன்மை**

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் செய்திகள் உண்மைத் தன்மை வாய்ந்தவையாகத் திகழ்கின்றன. அவை மற்ற வரலாற்றுச் சான்று ஆவணங்களோடு ஒத்துப் போகின்றன. அகழ்வாய்வு செய்ததன் மூலம் கிடைத்த தரவுகளோடு நேரடியாகச் சங்க இலக்கியச் செய்திகள் ஒத்துப்போகும் தன்மை உடையனவாய்த் திகழ்கின்றன. "The historical authenticity of sections of Sangam literature has been confirmed by archaeological evidence".[12] என உலகப் புகழ்வாய்ந்த பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

இக்கருத்தினை உறுதிப்படுத்தும் விதமாகத் தற்கால ஆராய்ச்சி ஒன்றைச் சான்றாகக் காட்டலாம். அண்மையில் தஞ்சை மாவட்டத்தில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. சங்க இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கும் செய்தி அவ்வகழ்வாய்வு ஆராய்ச்சியின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. “சங்க இலக்கியங்களும், தொல்லியல் சான்றுகள் கூறிய கருத்துப்படி, நிலையான அரசாட்சி மட்டுமின்றி, பொருளாதாரத்தை வளப்படுத்தக்கூடிய, அயல்நாட்டு வாணிகத்திற்கு, மூவேந்தர்கள் முன்னுரிமை அளித்துள்ளனர். ***கிழக்கு கடற்கரை பந்தர் என்ற துறைமுக நகரத்தை, சங்க இலக்கியமான பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது.*** *இந்நகரம், அணிமணிகளுக்குப் புகழ் பெற்ற நகரமாக இருந்துள்ளது. பந்தர் என்னும் பெயரில் சோழ நாட்டில், மணல்மேல்குடிக்கு அருகில் உள்ள ஊர் பந்தர்பட்டிணம்.* ***பந்தர்பட்டிணம் என்னும் பெயர், தற்பொழுது, மந்திரிபட்டினம் என்னும் பெயரில் வழங்கப்படுகிறது***”.[13] என அகழ்வாய்வு இயக்குநர் திரு. இராஜவேலு கூறியுள்ளார். இதன்மூலம் சங்க இலக்கியக் குறிப்புகள் உண்மைத் தன்மை வாய்ந்தவை என்பது உறுதிப்படுகிறது.

தென்மேற்குத் தமிழ்நாட்டில் அண்மையில் கிடைத்த கல்வெட்டுகளில் சேர மன்னர்களின் பெயர்கள் அறியப்பட்டுள்ளன. மூன்று தலைமுறை அரசாட்சிகள் பெயர்கள் கிடைத்துள்ளன. அவை யாவும் சங்க இலக்கியங்களுள் ஒன்றான பதிற்றுப்பத்துடன் ஒத்துப்போகின்றன. இதனை, “Recent researches examining Chera inscriptions found in southwestern Tamil Nadu have revealed names of three generations of rulers from the Chera clan. These names are also found in some of the Sangam anthology Pathirruppaththu. Palaeographic analysis of the inscriptions has revealed its age to be within the first two centuries of the Common Era”.[14] என விக்கிபிடியா குறித்துள்ளது.

அகழ்வாய்வுத் தரவுகளுடன் மட்டுமன்றிக் கல்வெட்டுத் தரவுகளுடனும் சங்க இலக்கியங்கள் ஒத்துப் போகின்றன என்பதை மேற்காணும் தகவல் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

தமிழ்நாட்டில் கிடைத்துள்ள காசுகளை மூன்றுவகையாகப் பகுக்கலாம் என முன்னரே இவ்வாய்வேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாம் வகையான உள்நாட்டுக் காசுகள் சங்க இலக்கியத்தின் வரலாற்று உண்மைத் தன்மையை நேரடியாக நிலைநாட்டும் விதத்தில் அமைந்துள்ளன. "The third category of coins, however, have provided direct testimony to the existence of ancient Tamil kingdoms and have been used to establish their period to coincide with that of the Sangam literature".[15] எனப் பழந்தமிழக வரலாற்று ஆவணங்கள் எனும் கட்டுரையில் சுட்டப்பட்டுள்ளது.

**சங்க காலப் பதிவுகள் - ஆய்வுத் தொகுப்பு**

மேற்குறிப்பிட்டவாறு,

- அகழ்வாய்வுத் தரவுகள்
- கல்வெட்டுத் தரவுகள்
- பானையோட்டு எழுத்துகள்
- (குகைச்) சுவர் எழுத்துகள்
- பழமையான காசுகள்
- அயல்நாட்டினர் தம் நூல்களில் பதிவு செய்துள்ள குறிப்புகள்
- சங்க இலக்கியக் குறிப்புகள்

ஆகியவை சங்க காலத் தமிழகம் பற்றித் தெரிந்து கொள்ள உதவும் வரலாற்றுப் பதிவுகளாகத் திகழ்கின்றன. இவையனைத்தும் உலக அரங்கில் ஏற்றுக்கொள்ளக் கூடிய வரலாற்று ஆவணமாக உள்ளன. குறிப்பாகச் சங்க இலக்கியச் செய்யுள்கள் உண்மைத் தன்மை வாய்ந்த வரலாற்று ஆவணமாகத் திகழ்கின்றன. அவை பிற சங்க காலப் பதிவுகளோடு ஒத்துப் போகின்றன.

பட்டியலிடப்பட்டிருக்கும் வரலாற்று ஆவணங்களுள் *கல்வெட்டுத் தரவுகள்* மூலம் மற்றும் *சங்க இலக்கியக் குறிப்புகள்* ஆகியவற்றிலிருந்து மட்டுமே நீதிக் கருத்தியல் தொடர்பான தரவுகள் கிடைக்கின்றன. இவற்றுள்ளும் சங்க இலக்கியக் குறிப்புகளில் மிகுதியாக நீதிக் கருத்தியல் உள்ளன.

**சங்க இலக்கியங்கள் – அறிமுகம்**

தொல்காப்பியம் திருக்குறள் எட்டுத்தொகை பத்துப்பாட்டு சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய நூற்தொகுதிகள் இவ்வாய்வேட்டின் முதன்மை ஆதாரம் எனத் திகழ்கின்றன. இவற்றுள் நீதி கருத்தியல் குறித்த செய்திகள் நிரம்ப உள்ளன. அவற்றைத் தொகுத்துச் சங்க காலத் தமிழகத்தில் நீதி எனும் கருத்துருவின் நிலைப்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

**தொல்காப்பியம்**

இதுவரை கிடைத்துள்ள தமிழ்நூல்களில் முதல்நூல் தொல்காப்பியம் ஆகும். ஆனால் தொல்காப்பியத்திற்கும் முற்பட்ட பல்லாயிரம் நூல்கள் தமிழ் மொழியில் தோன்றியிருந்தன. இந்நூல் எழுத்ததிகாரம்,சொல்லதிகாரம், பொருள் அதிகாரம் என மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இதில் பொருள் அதிகாரத்தில் வாழ்வியல் செய்திகள் பலவாகும். அவற்றுள் நீதி குறித்த தரவுகள் பயன்படுத்தப்படவுள்ளன. இதன்காலம் சங்க காலத்திற்கும் முற்பட்டது என்பர்.

**எட்டுத் தொகை**

எட்டு நூல்களின் தொகுப்பு எட்டுத் தொகை எனப்படும். அகத்துறை புறத் துறை சார்ந்த செய்யுள்கள் இடம்பெற்றுள்ளன. சமயம் சார்ந்த செய்யுள்களும் சில வுள்ளன. எட்டு நூல்களின் பெயர்கள் வருமாறு,

- ✓ நற்றிணை - அகம்
- ✓ குறுந்தொகை - அகம்
- ✓ ஐங்குறுநூறு - அகம்
- ✓ பதிற்றுப்பத்து - புறம்
- ✓ பரிபாடல் - பன்மணித்திரள்
- ✓ கலித்தொகை - அகம்
- ✓ அகநானூறு - அகம்
- ✓ புறநானூறு - புறம்

மேற்சுட்டிய எட்டு நூல்களும் வரலாற்றுச் செய்திகளைக் கொண்டுள்ளன. எல்லா நூல்களிலிருந்தும் வரலாற்றுச் செய்திகள் கிடைப்பினும் புறநானூறு மிகுதியாக வரலாற்றுச் செய்திகளைத் தருகின்றது எனலாம். இவற்றுள் பல செய்யுள்கள் நீதியைப் பல்வேறு கோணத்தில் அணுகியுள்ளன. கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரையிலான சங்க காலப் பரப்பெல்லைக்குள்ளேயே இச்செய்யுள்களின் காலமும் அடங்கி இருக்கிறது.

**பத்துப்பாட்டு**

பத்து நெடும் பாடல்களின் தொகுப்பு 'பத்துப்பாட்டு' எனப்படுகிறது. அகம், புறம் என இரு துறை சார்ந்த செய்யுள்களும் இடம்பெற்றுள்ளன. சமயம் சார்ந்த செய்யுளும் இடம்பெற்றுள்ளது. பத்து நூல்களின் பெயர்களும் வருமாறு,

- ✓ திருமுருகாற்றுப்படை - சமயம்
- ✓ சிறுபாணாற்றுப்படை - புறம்
- ✓ பெருபாணாற்றுப்படை - புறம்
- ✓ பொருநராற்றுப்படை - புறம்
- ✓ முல்லைப்பாட்டு - அகம்
- ✓ நெடுநல்வாடை - அகம்

- ✓ மதுரைக்காஞ்சி - நிலையாமை
- ✓ குறிஞ்சிப்பாட்டு - அகம்
- ✓ பட்டினப்பாலை - அகம்
- ✓ மலைபடுகடாம் - புறம்

மேற்சுட்டிய பத்து நூல்களிலும் வரலாற்றுச் செய்திகள் நிரம்பியுள்ளன. சங்க காலத் தமிழகத்தின் மக்கள் பண்பாடு நடைமுறைகள் முதலியவற்றை அறிந்து கொள்ள இவை பயன்படுகின்றன.

**திருக்குறள்**

உலகப்பொதுமறை எனப் புகழ்வாய்ந்த நூல் திருக்குறள். தமிழர்களின் வாழ்வியல் நூலாகத் திகழ்கிறது. வாழ்வியலுக்கு வேண்டிய அத்தனைச் செய்தி களும் இந்நூலில் உண்டு. அறம், பொருள், இன்பம் என மூன்று பால்களாகப் பகுக்கப்பட்டுள்ள இந்நூல் மொத்தம் 133 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. சங்க காலத் தமிழகத்தில் நீதி குறித்த கருத்தியல் தெளிவை அறிந்துகொள்ள திருக்குறள் பெரிதும் உதவுகிறது.

**சிலப்பதிகாரம்**

தமிழ்மொழியில் எழுந்துள்ள மண்ணின் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். மூன்று வேந்தர்களையும் இணைத்து அதேநேரம் அவர்களைப் பாடாமல் நாட்டின் குடிமக்களைத் தலைவன் தலைவியாகக் கொண்டு பாடியமையால் இதனைக் குடிமக்கள் காப்பியம் எனச் சுட்டிக் கூறுவர். மூன்று வேந்தர்களின் ஆள்நிலத்தை ஆசிரியர் பதிவு செய்துள்ளமையால் ஒரே நூலில் தமிழகத்தை மொத்தமாகக் காண முடிகிறது. இதன் காலம் ஏறத்தாழ கி.பி.250 ஆகும்.

**மணிமேகலை**

சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகத் தோன்றிய காப்பியம் மணிமேகலை ஆகும். எனவே சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகியவற்றை இரட்டைக் காப்பியங்கள் என்பர். சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய காப்பியம். சங்க காலத் தமிழகத்தின் எச்சங்களை இந்நூலில் காணமுடிகிறது. கற்பனை மிகுதி யாக இடம்பெற்றுள்ளது எனக் கூறின் அது மிகையில்லை. எனினும் நீதி கருத்தியல் சார்ந்த செய்திகள் இந்நூலிலும் இடம்பெற்றுள்ளன.

**வரலாற்று ஆவணமாக இலக்கியங்கள்**

இலக்கியங்களில் கற்பனை கலந்திருக்கும் எனவும்; அவற்றின் உண்மைத் தன்மை ஐயத்திற்கு உரியவை எனவும் ஆய்வாளர்கள் கருதிய காலம் ஒன்று இருந்தது. ஆனால் தற்போதைய வரலாற்று ஆய்வின் போக்கு இலக்கியங்களை *தகுதி படைத்த வரலாற்று ஆவணமாகவே* ஏற்றுக் கொள்கின்றன. “There was a time when historians thought they had escaped the ‘merely literary’ when they thought they had established historical studies on the solid foundation of objective method and rational argument. But recent developments in literary criticism and the philosophy of language have undermined that confidence. Now, after a hundred-year absence, literature has returned to history.”[16] (தமிழாக்கம்: வரலாற்று ஆய்வுகளை நிலைநிறுத்தத் தொடங்கிய காலக்கட்டத்தில் ‘வெறும் இலக்கியப் பதிவுதானே’ என வரலாற்றாய்வர்கள் கருதிய காலம் ஒன்றிருந்தது. ஆனால் இலக்கிய அணுகுமுறை மற்றும் மொழி அணுகுமுறை துறைகளில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால வளர்ச்சி இத்தகைய நிலைபாட்டைத் தகர்த்துள்ளது. ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், வரலாற்றுக்கு இலக்கியங்கள் திரும்பி வந்துள்ளன. தற்கால வரலாற்று

ஆராய்ச்சியாளர்கள் இலக்கியங்களைப் புறக்கணிப்பது இல்லை. அவற்றுள்ளும் புதைந்திருக்கும் வரலாற்று உண்மைகளைக் கண்டறியவே முயல்கிறார்கள்.) “For the reconstruction of the past, the historian employs a variety of sources – primary and secondary – such as records, documents in archives, eyewitness reports, recollections, diaries, letters, newspapers, archaeological remains, folklores and **popular literature**.”[17] (தமிழாக்கம்: பதிவுகள், காப்பாவணங்கள், கண்ணால் பார்த்த சாட்சிகளின் பதிவுகள், நாள்குறிப் பேடுகள், கடிதங்கள், செய்தித்தாள்கள், தொல்லியல் படிவங்கள், நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் புகழ்வாய்ந்த இலக்கியங்கள் முதலியவை கடந்த கால வரலாற்றைக் கட்டமைக்கும் பணியில் முதன்மை மற்றும் துணைமைச் சான்றாவணமாகப் பயன்படுத்தப்படுகின்றன.) வரலாற்று ஆவணமாக இலக்கியங்கள் கருதப்படுவது, வரலாற்றுத் துறை மற்றும் மொழியியல் துறைகளில் ஏற்பட்டுள்ள முற்போக்கான மாற்றமாகும்.

வரலாற்றுத் தொகுப்புப் பணியிலும் வரலாற்று ஆய்வுப் பணியிலும் இலக்கியங்களின் பங்களிப்பு பெரும்பகுதி உண்டு. “Literature becomes a form of universal truth articulated through powerful personal expression”[18] (தமிழாக்கம்: தனிமனிதனின் அழுத்தமான வெளிப்பாட்டுப் பதிவின் காரணமாக உலகளாவிய உண்மைத்தன்மை வடிவம் இலக்கியங்களுக்கு ஏற்பட்டுள்ளது.) தனிமனிதர்கள் அக்காலக்கட்ட சூழலைத் தம் படைப்புகளில் பதிவு செய்யத் தவறுவதில்லை.

அவர்களின் கற்பனை கூட அவர்கள் வாழ்ந்த காலச்சூழலை ஒட்டியதாகவே அமைகின்றன. “Literature is nothing but ideology in a certain artistic form and the work of literature are just expressions of ideologies of their time.”[19] (தமிழாக்கம்: இலக்கியங்கள் எனப்படுபவை, குறிப்பிட்ட

கலைவடிவத்தில் அமைக்கப்பட்ட கருத்தியலே அன்றி வேறொன்றுமில்லை. மேலும், அவர்கள் (படைப்பாளர்கள்) வாழ்ந்த காலத்தின் கருத்தியல் வெளிப்பாடே இலக்கியப் படைப்புகளாகும்.) எனவே, 'பெண்ணியம்' 'காதல்' 'நீதி' 'பகை' 'அரசியல்' முதலான பல்வேறு கருத்தியல்களின் வளர்நிலை வரலாற்று ஆய்வுகளுக்கு இலக்கியப் பதிவுகள் கட்டாயத் தேவையாகின்றன.

இதனால், வரலாற்று ஆய்வர்களுக்கும் இலக்கிய ஆய்வர்களுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு ஏற்பட்டுள்ளது. "Literary critics are now studying theories of history; and professional historians seem to be searching freshly for the unique insights a literary document may elicit."[20] (தமிழாக்கம்: வரலாற்றுக் கோட்பாடுகளை இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் தற்போது படிக்கத் தொடங்கியுள்ளனர்; இலக்கியப் படைப்புகள் வெளிப்படுத்தும் தனித்துவமான செய்திகளை நேர்த்தியான வரலாற்று ஆசிரியர்கள் புதிதாகத் தேடத் தொடங்கியிருக்கிறார்கள் எனலாம்.) இவ்விரு துறை வல்லுநர்களிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கம் பல வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்த உதவும்.

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி எனப் போற்றப்படுகின்றன. இதனால், இலக்கியப் படைப்பாளர்களும் வரலாற்றுப் பதிவர்கள் ஆவார்கள் என்பதில் இருவேறு கருத்துகள் இருக்கமுடியாது. "The critical analysis of literature proves if a writer is deeply rooted in the popular life and if his writing stems out of this intimacy, he can plumb the real depths of historical truth."[21] (தமிழாக்கம்: புகழ்வாய்ந்த வாழ்வில் ஒரு படைப்பாளர் முழுமையாகத் தோய்ந்திருந்தால்; அத்தோய்வின் காரணமாக அவர் படைப்பு விளைந்திருக்குமானால் அவரால் வரலாற்று உண்மைகளின் நிகர் ஆழத்தை வெளிப்படுத்த முடியுமென இலக்கிய ஆய்வுப் போக்குகள் உறுதிப்படுத்துகின்றன.) வரலாற்றுத் துறையின் பரப்பு மிகப்பெரியது. வெறும்

நிகழ்ச்சிகளை அடுக்குவது மட்டுமன்று வரலாறு. எல்லாத் துறையிலும் வரலாறு இடம்பெறுவது உண்டு. நோய் வரலாறு, மருந்து வரலாறு, தொழில் வரலாறு, உற்பத்தி வரலாறு, அறிவியல் வரலாறு, காவல்துறை வரலாறு என அத்தனைத் தளங்களிலும் வரலாறு இடம்பெறுகிறது. அவ்வத் துறைசார்ந்த ஆவணங்கள் அவ்வரலாறு எழுத உதவுகின்றன. அந்த வகையில், 'கருத்தியல் வரலாற்று ஆய்வு' (Research on History of Concepts) எனும் பொருண்மைக்கு **இலக்கியங்கள் தகுதிவாய்ந்த சான்றாவணமாகத் திகழ்கின்றன** என மேற்சுட்டிய குறிப்புகளிலிருந்து அறிய முடிகிறது.

சங்க காலம் என்பது கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை என வரையறை செய்யப்பட்டுள்ளது. தொல்லியில் படிவங்கள், பிற நாட்டு வரலாற்றுக் குறிப்புகள் முதலியவற்றோடு ஒத்துப் போவதனால் வரலாற்று ஆவணங்களாகப் பயன்படுத்துவதற்குச் சங்க இலக்கியங்கள் முற்றும் தகுதியானவை. சங்க இலக்கியங்களுள் இடம்பெற்றிருக்கும் நீதி சார்ந்த கருத்தியல்கள் (Concepts) ஆய்வுக்குப் பயன்படவிருக்கின்றன.

## நீதி - சங்க கால வரையறை

1996-ஆம் ஆண்டு '*பழங்கால இந்தியாவில் சட்டம் மற்றும் நீதி* எனும் பொருண்மையில் கருத்தரங்கம்[22] ஒன்று வட இந்தியாவில் நடைபெற்றுள்ளது. அக்கருத்தரங்க வெளியீட்டில் 18 ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பழங்கால இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்ட சட்டம் மற்றும் நீதி குறித்த வரலாற்று ஆய்வுக்கு, ஆய்வாளர்கள் அனைவரும் பல்வேறு மொழியிலிருந்த இலக்கியப் படைப்புகளையே சான்றாவணமாகப் பயன்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் வரலாற்று ஆய்வுக்கு இலக்கியங்களின் பங்களிப்பை உணர்ந்துகொள்ள முடிகிறது. இதன்தொடர்ச்சியாக, நீதி எனும்

கருத்தியலின் வரலாற்று ஆய்வுக்குச் (Research on Conceptual History of Justice) சங்க இலக்கியங்கள் பயன்படுகின்றன.

‘நீதி’ என்னும் சொல் சங்க காலப் பதிவுகளான கல்வெட்டுகளிலோ சங்க இலக்கியங்களிலோ காணப்படவில்லை. நீதி என்னும் வடமொழிச் சொல்லுக்கு இணையாகச் சங்ககாலத் தமிழர்கள் ‘**முறை**’ எனும் சொல்லைப் பயன்படுத்தி யுள்ளனர். இதற்கான சான்றுகள் மிகுதியாகச் சங்க காலப் பதிவுகளில் கிடைக்கின்றன.

அனைத்துத் துறைகளிலும் ‘முறை’ கடைப்பிடிக்கப்பட வேண்டும். பிறரை பாதிப்படையச் செய்யும் வண்ணம் முறைதவறி எவரும் செயல்படக் கூடாது.

- இல்லறம் * அரசியல்
- துறவறம் * வரிவிதிப்பு
- வணிகம் * களவுக் காதல்
- போர் * கல்வி

என எல்லாத் துறைகளுக்கும் இக்கொள்கை பொருந்துவதாகும். அரசாட்சித் துறையின் கீழ் எல்லாமும் அடங்குகின்றன. முறையான ஆட்சிக்கு அடையாள மாகச் சங்ககாலத்தில் ‘**செங்கோல்**’ திகழ்ந்தது. இதற்கான சான்றுகளும் உள்ளன.

**செங்கோல்**

“படையும் கொடியும் குடையும் முரசும்
நடைநவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய”[23]

எனத் தொல்காப்பியம் பதிவு செய்கிறது. செங்கோல் போன்றே அரசாட்சியின் அடையாளமாகப் பிறவும் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளன. என்றாலும், அவை யாவும் நேரடியாக நீதியோடு தொடர்புற்று இருக்கவில்லை. செங்கோல்

மட்டுமே நீதி செலுத்துதலின் விளைவாக இருந்துள்ளது. நீதி தவறும்போது செங்கோல் வளைந்தது எனக் கூறும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது.

“கோல் என்பது, அரசன் அதிகார முறையில் வீற்றிருக்கும்போதும் செல்லும்போதும் கையிற் பிடித்திருக்கும் தண்டு. அது மணியிழைத்து ஓவிய வேலைப்பாடமைந்த பொன் தகட்டால் பொதியப் பெற்றிருப்பது. கோல் ஆட்சிக்கு அறிகுறியாதலால், அரசனுடைய ஆட்சி நேர்மையானதாயிருக்க வேண்டும் என்பதைக் குறித்தற்கு, அது நேரானதாகச் செய்யப்பட்டிருக்கும். அதனால் அதற்குச் செங்கோல் என்று பெயர். செம்மை - நேர்மை. கொடுமையான ஆட்சி *கொடுங்கோல்* என்னும் பெயராற் குறிக்கப்படும். கொடுமை-வளைவு. ஆட்சியின் நேர்மையாவது அறநெறி வழி நேரே செல்லுதல்; அதன் கொடுமை யாவது அறநெறியினின்று திறம்பி வளைதல்.”[24] என அரசாட்சியின் அடையாளமாகச் செங்கோல் இருந்துள்ளது என்பதை வரலாற்றை ஆய்ந்து பாவாணர் பதிவு செய்துள்ளார்.

பதினாறு ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை[25] மன்னனைப் பற்றிய பதிவுகளுள் அவனது செங்கோல் திறத்தைப் பதிற்றுப்பத்து பதிவு செய்துள்ளது.

“மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்”[26]

(பொருள்: தன்னாட்சிக்கு உட்பட்ட மக்களைக் காத்த குற்றமில்லாத செங்கோல் ஆட்சிக்கு உரியவன்.)

சங்க கால மன்னர்களுள் ஒருவன் ‘பசும்பூண் பாண்டியன்’. தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் மன்னனையே பசும்பூர் பாண்டியன் எனச் சங்க இலக்கியம் குறிப்பிட்டுள்ளது.[27] இவ்விரு அரசர்களும் வெவ்வேறானவர்கள் அல்லர்[28] என்பது வரலாற்று ஆசிரியர்களின் ஆய்வு முடிவாகும். இம்மன்னனின் செங்கோல் ஆட்சியை அகநானாறு பதிவு செய்துள்ளது.

"அறம்கடைப் பிடித்த செங்கோ லுடன்அமர்"[29]

(பொருள்: அறத்தைக் கடைப்பிடிப்பதன் அடையாளமான செங்கோலுடன் அரியணை அமரும் மன்னன்.)

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பவன் சங்க காலச் சேர மன்னர்களுள் ஒருவன். "குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை வழியில் யானைக் கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை தோன்றிச் சேர நாட்டு அரசு கட்டிலேறிச் சேரமானாய் விளங்கினான். சேய் என்பது இந்த இரும்பொறையின் இயற்பெயராகும்."[30] இவனின் அரசாட்சியில் செங்கோல் இடம்பெற்றிருந்தது என்பதைக் குறுங்கோழியூர் கிழார் புறநானூற்றில் பதிவு செய்துள்ளார்.

"அறம் துஞ்சும் செங்கோலையே"[31]

(பொருள்: அறம் உறைகின்ற செங்கோலை உடையவன்)

சங்க காலத் தமிழகத்தை ஆண்ட மன்னர்களுள் ஒருவனான '**சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்**' பற்றிப் பத்துப் புலவர்கள் பதினெட்டுச் செய்யுள் இயற்றியுள்ளனர். இவையாவும் சங்க இலக்கியத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. வெள்ளைக்குடி நாகனார் மற்றும் இடைக்காடனார் இவனின் செங்கோல் ஆட்சித் திறத்தைப் புறநானூற்றில் பதிவு செய்துள்ளனர்.

"அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து"[32]

(பொருள்: அறமே மனிதவுரு கொண்டு ஆட்சி புரிந்தது போன்ற அரசாட்சி எனக் கூறுமளவு செங்கோல் மீது நாட்டம் கொண்டிருந்தவன்)

"புலிபுறங் காக்கும் குருளை போல,
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்பப்"[33]

(பொருள்: தன்னுடைய குட்டியைத் தாய்ப்புலி எவ்வாறு கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாக்குமோ அது போல சோர்வில்லாமல் செங்கோல் ஆட்சியை நீ காத்து வருகிறாய்)

அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி என்பவன் சங்க கால ஆட்சி யாளர்களுள் ஒருவன். தகடூர் போரில் கலந்து கொண்டவன்.[34] "அதியமான் நெடுமான் அஞ்சியின் தந்தை பெயர் எழினி யென்பது. அதனாற்றான், அஞ்சி, தன் மகனுக்கும் எழினி யெனப் பெயர் வைத்தான். தந்தை பெயரைத் தன் மகனுக்கு வைப்பது தமிழர் மரபு. இம் மரபுபற்றியே தந்தையை நோக்கத் தன் மகனைத் தன் தந்தைக்குப் பெயரன் என்பது வழக்காயிற்று. தந்தை பெயரையும் உடன்கூட்டி 'எழினி யதியமான்' என்றலும் தமிழியல்பாதலால், இங்கே 'எழினி' யென்றார். 'அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி' என இவனே கூறப்படுமாறு காண்க."[35] என இவனது வரலாறு பதிவாகியுள்ளது. இவன்தன் ஆட்சியின் செங்கோல் திறத்தை அரிசில் கிழார் புறநானூற்றில் பதிவு செய்துள்ளார்.

"... ... கலங்காச் செங்கோல்,
வையகம் புகழ்ந்த வயங்குவினை ஒள்வாள்,
பொய்யா எழினி"[36]

(பொருள்: உலகமே புகழத்தக்க வாள் வீசும் திறமும் பொய்யாக் குணமும் உடைய மன்னன் எழினி, எக்காரணம் கொண்டும் செங்கோல் ஆட்சியைக் கலங்காது பாதுகாத்தான்.)

தொண்டைமான் இளந்திரையன் என்பவன் சங்க கால அரசர்களுள் ஒருவன். இவன் தொண்டை மண்டலத்தின் முதல் அரசன்[37] எனக் கருதப்படுவது உண்டு. முற்காலப் பல்லவருள் முதல்வன் பப்பத் தேவன்[38] அவன் மகன் சிவக்கந்தவர்மன் ஆகியோர்க்கு முற்பட்டவன் எனவும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இவன் ஆட்சி செங்கோல் ஆட்சியாக இருந்ததைப் புலவர் உருத்திரக் கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில் குறிப்பிடுகிறார்.

“அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்”[39]

(பொருள்: தீயவற்றை அழித்தொழித்து, அறம் ஆட்சிபுரிகிற செங்கோலுக்கு உரிமையானவன்.)

சங்க காலத் தமிழகத்தில் மிகவும் புகழ்பெற்ற அரசர்களுள் சோழன் கரிகால் பெருவளத்தானும் ஒருவன். சங்க காலத்திலேயே, “கரிகாலன் என்று பெயர் தாங்கிய சோழர் இருவர் இருந்தனர்.”[40] இதில் இமயம் வரை சென்று திரும்பிய இரண்டாம் கரிகாலனின் செங்கோல் திறம் குறித்து முடத்தாமக் கண்ணியார் பொருநர் ஆற்றுப்படையில் பதிவு செய்துள்ளார்.

“அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்”[41]

(பொருள்: அறத்தோடு ஒன்றியைந்த திறமிக்க செங்கோல் ஆட்சிக்கு உரியவன்)

மேற்குறிப்பிட்டிருக்கும் வரலாற்றுக் குறிப்புகளே அன்றிப் பல்வேறு செய்திகளாகச் செங்கோல் பற்றிய தரவுகளைச் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது.

“செங்கோல் அவையத்து”[42]

“… … செங்கோல்
குட்டுவன் தொண்டி”[43]

“அறம்புரி செங்கோல் மன்னன்”[44]

“பொய்யாமை நுவலும் நின் செங்கோல்”[45]

சங்க காலத் தமிழகத்தின் வரலாற்றில் மிக இன்றியமையாத பொருண்மையாகச் செங்கோல் இருந்துள்ளது என்பதை மேற்காணும் குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது. நல்ல அரசாட்சியின் அடையாளமாகச் செங்கோல் திகழ்ந்துள்ளதை

உணரலாம். சரியாக நீதி செலுத்துவதன் மூலமே செங்கோல் வளையாமல் பார்த்துக் கொள்ள இயலும். அறத்திலிருந்து முறைதவறி ஆட்சி நடைபெற்றது என்றால் அது செங்கோல் ஆட்சியாக இருக்க முடியாது. எனவே செங்கோல் ஆட்சிக்கு முறை (நீதி) அடிப்படைத் தளமாக அமைந்துள்ளது என்பது ஆய்வு முடிவாகும்.

**'முறை' (நீதி) – அரசாட்சியின் முதன்மை நோக்கம்**

சங்க காலத் தமிழகத்தில் அரசு இயந்திரத்தின் முதன்மை நோக்கமாக முறை திகழ்ந்துள்ளது. அரசு இயந்திரத்தின் தலைமைப் பொறுப்பில் நாட்டு மன்னன் இருந்துள்ளான். எனவே 'முறை' (நீதி)யை நிலைநாட்டும் கடமை மன்னனைச் சார்ந்திருந்தது. இக்கருத்தியல் பின்வரும் புறநானூற்றுக் குறிப்பு மூலம் உறுதி யாகிறது.

"நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**;
அதனால், யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"[46]

(கருத்தியல் பொருண்மை: நாட்டிற்கு உயிராவது நெல், நீர் முதலியவை அல்ல. மன்னனே நாட்டிற்கு உயிராவான். எனவே அப்பொறுப்பை உணர்ந்து மன்னன் செயல்பட வேண்டும்.)

"கால்பார் கோத்து, ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்,
ஊறுஇன்றாகி ஆறுஇனிது படுமே"[47]

(கருத்தியல் பொருண்மை: நாட்டைக் காத்து இயக்கக் கூடிய மன்னன் மாண்பு படைத்தவனாக இருந்தால் நாட்டில் இடையூறு இல்லாமல் இருக்கும். மேலும், மக்கள் வாழும் வழிவகைகளும் இனிதாக அமையும்.)

மேற்சுட்டியுள்ள இரண்டு பதிவுகளின் மூலம் கீழ்க்காணும் கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் நிலவியது எனலாம்:

அ) சங்க காலத்தில் மன்னனைச் சார்ந்தே அனைவரும் இயங்கக் கூடிய சூழல் இருந்துள்ளது.

ஆ) மன்னனின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் எது நடந்தாலும் அதற்கு மன்னனே பொறுப்பேற்க வேண்டும்.

இ) மன்னன் மாண்பு படைத்தவனாக இருந்தால் நாடும் சிறப்பாக இருக்கும்.

மன்னனை மாண்பு படைத்தவனாக ஆக்குவதில் அவனது கொடை, வீரம், செயல்திறம் முதலியவை பெரும்பங்காற்றும். என்றாலும், அவனின் நீதி செலுத்தும் பாங்கே பிறவற்றைக் காட்டிலும் முன்னிற்கும் என்பதைப் பின்வரும் கருத்தியல் பொருண்மைகள் மூலம் அறிந்துகொள்ளலாம்.

“**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்** மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்”[48]

“இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்”[49]

“**முறையுடை யரசன்**”[50]

“**அரசுமுறை செய்க**”[51]

“**முறையின் வழாஅது** ஆற்றிப் பெற்ற
கறையடி யானை நன்னன் பாழி”[52]

“**முறைபுரிந்து**
அறன்நெறி பிழையாத் திறன்அறி **மன்னர்**”[53]

"அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து
**முறைவேண்டு பொழுதின்** பதன் எளியோர் ஈண்டு
உறைவேண்டு பொழுதில் பெயல்பெற் றோரே"[54]

"**முறைவேண்டு நர்க்குங்** குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு **அருளி**"[55]

"நீர்யார் என்னாது **முறைகருதுபு சூட்டி**"[56]

"**அருந்திறல் அரசர் முறைசெயின்** அல்லது"[57]

முதலிய செய்யுள்களில் இடம்பெற்றுள்ள முறை (நீதி) சார்ந்த கருத்தியல் நோக்கத்தக்கது. மேற்சுட்டிய சான்றுகள் அனைத்தும் ஒரு மன்னனின் குணம், 'முறை' சார்ந்து அமைய வேண்டும் என்பதைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளன. அரசர்கள் நீதியைச் சார்ந்தே அரசாள வேண்டுமென்பது சமூகக் கட்டமைப்பாக இருந்துள்ளது என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. மன்னன் முறைதவறி நடப்பானேல், அதனால் நாட்டுக்குக் கேடு சூழும் எனும் அறிதல் இருந்துள்ளது போலும்.

"எண்பதத்தான் ஓரா **முறைசெய்யா மன்னவன்**
தண்பதத்தான் **தானே கெடும்**"[58]

(கருத்தியல் பொருண்மை: நீதிமுறை செலுத்தாத மன்னவன் கெடுவான்.)

"நாடொறும் நாடி **முறைசெய்யா மன்னவன்**
நாடொறும் **நாடு கெடும்**"[59]

(கருத்தியல் பொருண்மை: நீதிமுறை செலுத்தாத மன்னவன் நாடும் கெடும்.)

**“முறை தளர்ந்த மன்னவன் கீழ்க் குடி போலக் கலங்குபு”**[60]

(கருத்தியல் பொருண்மை: நீதிமுறை தவறும் மன்னன் ஆட்சியின் கீழ் மக்கள் கலங்குவர்.)

மேற்சுட்டியுள்ள கருத்தியல் பொருண்மைகளை நன்கு ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் கீழ்க்காணும் முடிவுகளை எட்ட முடிகின்றன:

அ) சங்க காலத் தமிழகத்தில் முறை (நீதி) குறித்த கருத்தியல் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது

ஆ) நீதி சார்ந்த கருத்தியல் ஏட்டளவிலோ அல்லது அறிஞர்களிடையில் மட்டுமோ நில்லாமல் அன்றாட வாழ்வியல் நடைமுறையில் இருந்துள்ளது.

இ) நீதியைப் பாதுகாக்கும் முதன்மைப் பொறுப்பு மன்னனிடமே இருந்துள்ளது.

ஈ) நீதி சார்ந்தே மன்னன் இயங்க வேண்டுமென்பது சமூகக் கட்டமைப் பாகவே இருந்துள்ளது.

உ) மன்னன் முறைதவறும் சூழல் ஏற்பட்டால், அதைச் சுட்டிக்காட்ட பிறர்க்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

ஊ) நீதிமுறை தவறி அரசாளும் மன்னன் தானே அழிந்துபோவான்.

எ) நீதிமுறை தவறி அரசாட்சி செய்யும் மன்னனின் நாடு எவ்வித முன்னேற்றமும் இன்றிக் கெடும்.

ஏ) நீதிமுறை செலுத்தாத மன்னனின் ஆட்சிக்கு உட்பட்ட மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாவர்.

## ‘முறை’ (நீதி) – சங்க காலத் தமிழகத்தில் நிலவிய விளக்கம்

வாழ்வியலிலும் அரசியலிலும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியது முறை யாகும் என்பது சங்க காலத் தமிழகத்தில் இருந்த கருத்தியல் நெறி

என்பதை மேற்காணும் வரலாற்றுச் சான்றுகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இனி, சங்க காலத் தமிழகத்து மக்களிடையே ‘முறை’ என்பதற்கு எத்தகைய கருத்தியல் விளக்கம் இருந்தது என்பதை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

“அறிவு எனப்படுவது, பேதையார் சொல்நோன்றல்;
செறிவு எனப்படுவது, கூறியது மறாஅமை;
நிறை எனப்படுவது, மறைபிறர் அறியாமை;
***முறை எனப்படுவது, கண்ணோடாது உயிர்வௌவல்***”[61]

(கருத்தியல் பொருண்மை: நீதி வழங்கும்போது கொலைத்தண்டனை வழங்க வேண்டிய அளவுக்குக் கடுங்குற்றம் புரிந்தவர் மீது சற்றும் இரக்கம் கொள்ளாமல் கொலைத் தண்டனை வழங்குவதே முறை – நீதி – எனப்படும்.)

“கொடியோர்த் தெறுதலும், செவ்வியோர்க்கு அளித்தலும்,
ஒடியா **முறை**யின் மடிவிலை யாகி”[62]

(கருத்தியல் பொருண்மை: தவறிழைக்கும் கொடிய மக்களைத் தண்டித்தலும் நல்ல சிறந்த மக்களைப் பாதுகாத்தலுமே முறை (நீதி) எனப்படும்)

மேற்காணும் கருத்தியல் பொருண்மைகளிலிருந்து கீழ்க்காணும் ஆய்வு முடிவுகள் எட்டப்படுகின்றன. அவை வருமாறு,

அ) தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை தருவதே முறையெனப்படும்.

ஆ) தவறிழைக்காத ஆனால் குற்றம் சாட்டப்பட்ட நல்ல மக்களைக் குற்றப் பழியிலிருந்து பாதுகாத்தல் மற்றும் தவறிழைத்தவரால் பாதிப்பு அடைந்தவர்க்குத் தீர்வழி கொடுத்துப் பாதுகாத்தல் என இருவகையிலும் செவ்வியோரைப் பாதுகாத்தல் முறையெனப்படும்.

எனவே, சங்க காலத் தமிழகத்தில் நீதி என்பதற்கான கருத்தியல் வரையறை தெளிவாக இருந்துள்ளது. அதையொட்டியே அரசர்கள் அதிகாரிகள் இயங்கியுள்ளனர். ‘அறவழியிலிருந்து தவறி அத்துமீறலில் ஈடுபடுவோரை

***உரிய*** வகையில் தண்டித்தலும்; அத்துமீறியவர்களால் பாதிப்படைந்தவர்களை ***உரிய*** தீர்வழிகள் மூலம் பாதுகாப்பதும்; தவறாகக் குற்றம் சுமத்தப்பட்ட மக்களைக் குற்றப் பழியிலிருந்து பாதுகாப்பதும் ***முறை*** யெனப்படும்' எனும் புதிய விளக்கம் சங்க காலத் தமிழக மக்களிடையே நிலவியிருக்கக்கூடும் என வரலாற்றுச் சான்றுகளாகத் திகழும் சங்க இலக்கியங்கள் மூலம் ஆய்வு முடிவாகப் பெறப்படுகிறது.

**முறை (நீதி) செலுத்தும் வழிவகை**

நீதிமுறை என்பது தத்துவ நிலையில் நிற்பதன்று. அது நடைமுறையில் இயங்க வேண்டிய ஒன்று. எனவே முறையை (நீதியை) நடைமுறைப்படுத்தும் வழி வகைகளையும் சங்க காலப் பதிவுகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இதற்கு முதன்மை வரலாற்றுச் சான்றுகளாகச் சங்க கால இலக்கியச் சான்றுகள் திகழ்கின்றன. எவ்வாறு நீதி செலுத்தப்பட வேண்டும் என்கிற விழிப்புணர்வு சங்க காலத் தமிழகத்தில் மிகுதியாக இருந்துள்ளது எனக் கருத இடமுண்டு.

"பால் கொளல் இன்றிப், பகல் போல் **முறைக்கு** ஒல்கா
கோல் செம்மை ஒத்தி, பெரும!"[63]

(கருத்தியல் பொருண்மை: நீதி செலுத்தக் கூடியவர், ஒருதலைச் சார்பாக இருந்துவிடாமல் கலப்பையில் இருக்கும் பகலாணியைப் போல நடுவுநிலைமை பின்பற்ற வேண்டும்.)

"உறைவரை நிறுத்தகோல் உயிர்திறம் பெயர்ப்பான் போல்,
**முறை** செய்தி"[64]

(கருத்தியல் பொருண்மை: தராசின் (நிறுத்தகோல்) முள் போல உண்மை கூறும் தன்மை நீதி செலுத்துதலில் இருத்தல் வேண்டும்.)

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
**தேர்ந்துசெய் வஃதே முறை**"[65]

(கருத்தியல் பொருண்மை: *ஓர்ந்து செய்தல்*, *யாரிடமும் கண்ணோடாமல் இருத்தல்*, *இறையாண்மை புரிதல்*, *தேர்தல்* ஆகிய படிநிலைகளை முறை (நீதி) செலுத்த கடைப்பிடிக்க வேண்டும்)

'ஓர்ந்து செய்தல்' – வழக்கைத் தெளிவாக ஆராய்தல். (ஒரு வழக்கைத் தெளிவாக ஆராய வேண்டுமெனின் இரு தரப்பு வாதங்களையும் கேட்க வேண்டும். இரு தரப்பினர்க்கும் சம வாய்ப்பு வழங்கினால் மட்டுமே ஓர்ந்து செயல்பட முடியும்.)

கண்ணோடாமல் இருத்தல் – தெரிந்தவர் என்னும் காரணத்திற்காக எவர்மீதும் இரக்கப்பட கூடாது.

இறைபுரிதல் அரச இறையாண்மையின் அடையாளமான அதிகாரத்தைச் செலுத்தி உரிய தண்டனை கொடுத்தல்.

இவற்றின் மூலம் நீதி செலுத்தும்போது,

- ✓ வேண்டியவர் வேண்டாதவர் என்னும் பாகுபாடு இன்றியும் விருப்பு வெறுப்பின்றியும் இருக்க வேண்டும் என்பதும்
- ✓ இரு தரப்பினரையும் சமமாகக் கருதும் நடுநிலைமை எண்ணம் இருக்க வேண்டும் என்பதும்
- ✓ இருதரப்பு வாதங்களையும் நன்கு கேட்டறிந்து ஆராய வேண்டும் என்பதும்
- ✓ வழக்கை விசாரிக்கும்போது இருதரப்புக்கும் தத்தம் தரப்பு நியாயங்களை முன்வைக்க சம வாய்ப்பு தரப்பட வேண்டும் என்பதும்
- ✓ இறையாண்மையின் அடையாளமாக அதிகாரம் செலுத்திக் குற்றத்திற்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்பதும்

சங்ககாலத் தமிழகத்தில் நீதி செலுத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய கருத்தாகப் பரவியிருந்தது என அறிந்துகொள்ள முடிகிறது.

## நீதியும் வாழ்க்கை முறையும்

நீதி வழங்கும் அதிகாரம் அரசர்களிடமும்; நீதி வழங்குவதற்கென அரசர்கள் அமர்த்திய அதிகாரிகளிடமும் இருந்தது. பொதுமக்கள் பெரும்பாலும் அரசர் தீர்மானிப் பதற்குப் பணிந்தே இருந்துள்ளனர்.

அறிஞர் வட்டம் தீர்மானித்து எடுத்துரைக்கும் பொதுவான அறநெறியை மக்கள் பின்பற்ற வேண்டுமெனும் கருத்தியல் சங்ககாலத் தமிழகத்தில் இருந்துள்ளது. எனினும் எல்லா மக்களும் அறநெறியைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர் எனக் கூற முடியாது. பொது மக்கள் சில சூழல்களில் அறநெறியை விட்டு அகன்றுள்ளனர். அதனால் அவர்களிடையே சிக்கலும் வழக்கும் தோன்றியுள்ளன. அவ்வழக்கைத் தீர்த்து வைக்க அவையங்கள், நீதி செலுத்துநர்கள், மன்னன் முதலிய களங்கள் உண்டாயின. சங்க காலப் பதிவுகளிலிருந்து மிக எளிதாகக் கிடைக்கக்கூடிய செய்திகள் இவை.

பொதுமக்கள் தம் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் வழக்குகளை ஊர்ப்பொது அவை அல்லது மன்னனிடத்தில் முறையிடச் செய்துள்ளனரே அன்றித் தாமே நேரடி யாக வழக்குகளில் முடிவெடுக்கவில்லை.

பாலைத்திணைப் பதிவுகள் கொலை, கொள்ளை முதலிய குற்றக் காட்சிகளைக் காட்டுகின்றன. எனவே சங்க காலத் தமிழகம் குற்றங்களே நடைபெறாத காலமெனக் கூறுவதற்கு இல்லை. இருந்தாலும், பொதுவான அறநெறியும் வலிவான அரசாட்சியும் மக்களை ஒருவாறு கட்டுப் படுத்தியுள்ளன என உணர முடிகிறது.

“நம் வாழ்க்கையின் குறிக்கோள் பிறருக்கு உதவுவதாகவே அமைய வேண்டும். அதுதான் சான்றோர் பண்டு கண்ட நெறி; அவ்வாறு ஒருவேளை

உதவ முடியாமற் போனாலும் பிறருக்குத் தீங்காவது செய்யாமல் இருத்தலே சிறப்பாகும். அதுவே நல்ல கதிக்கு அழைத்துச் செல்லும் பாங்குடைத்தாகும்."[66]

'பழிக்கு அஞ்சுவது' எனும் வாழ்வியல் நடைமுறை, சங்க காலத் தமிழக மாந்தர்களிடம் உருவாகி யிருந்ததை அறியமுடிகிறது. இது எல்லாத் துறையிலும் நிலை பெற்றிருந்தது. போரில் புறமுதுகில் காயப்படுவது பழி[67]; பிறன்மனை நோக்குதல் பழி[68]; காதலித்த பெண்ணைக் கைவிடுவது பழி[69]; முறைதவறிச் செல்வம் ஈட்டுவது பழி[70] எனப் பழிக்குரிய செயல்களின் பட்டியல் நீள்கிறது. மேலும், பழிக்குரிய செயல்கள் செய்ய அச்சப்பட வேண்டும் எனும் பொது அறிவுறுத்தல் சங்க காலத் தமிழகத்தில் நிலவியுள்ளது.

"பிறர் அஞ்சுவது அஞ்சி
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகொடு பெறினும் கொள்ளலர்"[71]

என்னும் கருத்தியல் பொருண்மை அக்கால மக்களிடம் பெரிதும் பரப்பப்பட்டிருக்க வேண்டும். தற்போதைய குடியாட்சியில் அரசியற்றுகின்ற சட்டங்கள் தரும் உளவியல் கட்டுப்பாட்டை அக்கால முடியாட்சியில் இத்தகைய அறக்கோட்பாடுகள் மக்களுக்கு உளவியல் கட்டுப்பாடாக அமைந்துள்ளன. இதனையும் மீறி எழும் சிக்கல்கள் நீதி கூறு அவைகளில் முறையிடப்பட்டுள்ளன.

## நீதி வழங்கும் அதிகார மையம்

பழங்கால ஏதேன்சு (கி.மு. 4 மற்றும் 5 ஆம் நூற்றாண்டு) நகரத்தில் முறைமன்றம் மக்களாட்சியின் அடிப்படை உறுப்பாகச் செயல்பட்டது. அறிஞர்

அரிசுடாட்டிலின் கூற்றுப்படி முறைமன்றத்தை வழிநடுத்துபவர் நாட்டையே வழிநடுத்துபவர் ஆவார்.

நடுவர் இருந்து செயல்படும் முறைமன்றமாக அது திகழ்ந்தது. குறைந்தளவு 201 முதல் 1500 வரையும் கூட நடுவர்கள் இந்த முறைமன்றத்தில் செயல்பட்டதாக அறிய முடிகிறது. நடுவர்களின் ஆயத்திற்கு 'எலிலியா'[72] என்பது பெயர். 'எலிலியா'வில் 6000 நடுவர்கள் இருந்துள்ளனர். ஆண்டுக்கு ஒருமுறையாவது இந்த 6000 நடுவர்களும் ஒரு வழக்கை உசாவ ஒன்று கூடுவர்.

**ஆய்வு வினா**

சங்கக்காலத் தமிழகத்திலும் அதற்கு முன்னரும் மேற்சுட்டியவாறு முறைமன்ற அமைப்பு இருந்துள்ளதா? என்பதாகும். நன்கு வளர்ச்சி பெற்ற நாகரிகமாகத் தமிழ் நாகரிகம் சங்கக்காலத்தில் அமைந்திருந்ததனால் கட்டாயம் முறைமன்ற அமைப்பும் இருந்திருக்க வேண்டும் என்பது கருதுகோள். இனி சங்க இலக்கியக் குறிப்புகள் கொண்டு இவ்வாய்வினை மேற்கொள்ளலாம்.

**மன்றம்**

சமூகத்தில் பொதுமக்களின் தேவை பலவாக இருக்கும். அத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் போது சிக்கல்கள் எழுகின்றன. அச்சிக்கல்களைத் தீர்க்கும் வழிகளை அரசுகள் மேற்கொண்டிருக்கின்றன. தமிழகம் சங்ககாலத்தில் எவ்வாறு பொதுமக்களின் சிக்கல்களைத் தீர்க்க முற்பட்டது என்பது ஆய்வுக்குரிய செய்தியாகும்.

தமிழ்நாட்டில், பொதுமக்களின் சிக்கல்களைத் தீர்க்க 'மன்றம்' என்றொரு அமைப்பு இருந்துள்ளது என்பதைச் சங்க இலக்கியங்கள் உறுதி செய்கின்றன.

என்றாலும், மன்றத்தின் பணிகள் பலவாகும். வழக்குச் சிக்கல்களைத் தீர்ப்பதோடு பிற பணிகளையும் மன்றம் ஆற்றியுள்ளது என்பதை அறியமுடிகிறது.

**மன்றமும் நீதி வழங்கலும்**

மன்றம் என்பதனைப், 'பொதுமக்கள் பங்கேற்கும் வகையிலும், பொதுமக்கள் துய்க்கும் வகையிலும் பொதுத்தன்மைப் பொருண்மையுடன் கூடும் கூட்டம்' என வரையறுக்க முடிகிறது. இனி, மக்களிடையே ஏற்படும் சிக்கல்களை அவர்களே தீர்த்துக் கொண்டால் அது மன்றம் வர வேண்டியதில்லை. ஆனால், அச்சிக்கலை அவர்கள் தீர்த்துக் கொள்ள முடியாமல் ஊர்ப்பெரியவர்கள், அரசு அல்லது அரசால் பொறுப்பு வழங்கப்பட்ட மனிதர்கள் மூலம் தீர்க்க முற்படும் போது அச்சிக்கல் பொதுத்தன்மை பெறுகிறது. பொதுத்தன்மை பெறும் எதுவும் மன்றம் வர வேண்டியதாகிறது. மன்றம் வரும் போது அது பொதுமக்கள் அனைவருக்கும் பொதுவான சிக்கலாக மாற்றம் பெறுகிறது. எனவே பொதுமக்கள் பார்வையாளராகப் பங்கேற்கும் நிலை ஏற்படுகிறது.

இனி, நீதி வழங்கலில் மன்றம் கடைப்பிடித்துள்ள நடைமுறைகளைக் கலித்தொகை சான்று கொண்டு ஆய்வு செய்யலாம்.

"மறுத்து இவ் ஊர் மன்றத்து மடல் ஏறி,
நிறுக்குவென் போல்வல் யான், நீ படு பழியே!"[73]

மிக இயல்பான அகத்துறைச் செய்யுள் இது. இதனை உளவியல் மற்றும் சட்டவியல் துணைகொண்டு அணுகும்போது பின்வருமாறு பொருள்

கொள்ளமுடிகிறது. காதல் வயப்பட்ட ஒருவன் கூறுவதாய் அமைகிறது இவ்வரிகள். அதாவது தன் காதல் உணர்வு மிகுந்துவிட்டதால், பாதிப்பு உறுகிறான். தனக்கு ஏற்பட்ட பாதிப்பைத் தீர்த்துக் கொள்வதற்கான தீர்வழியைத் தேட முயல்கிறான். அவனது முயற்சிக்கு உதவி, தீர்வழியைக் கொடுக்கக் கூடிய அமைப்பாக மன்றம் அவனுக்குத் தோன்றுகிறது. எனவேதான், தலைவியின் வேண்டுகோளையும் மறுத்து ஊர் மன்றத்தில் ஏறி நிற்பேன் என ஒருவித நம்பிக்கையோடு மொழிகிறான்.

இவ்வரிகளிலிருந்து கீழ்க்காணும் செய்திகள் பெறப்படுகின்றன:

- ஒருவர்க்குப் பாதிப்பு ஏற்படும் போது அதனை மன்றத்தில் பலரறியப் பகிர்ந்து கொள்ளலாம் எனும் (சட்டவியல்) விழிப்புணர்வு சங்க கால மக்களிடையே இருந்துள்ளது.
- முறையிடுபவர் தனக்கு ஏற்பட்ட பாதிப்பு முறையானதா இல்லையா எனக் கவலை கொள்வதில்லை.
- முறையிட்ட பின்னர் வழக்கை விசாரித்து, முறையிட்டவர்க்கு ஏற்பட்டது முறையான பாதிப்புதானா என முடிவு செய்யவேண்டிய பொறுப்பு மன்றத்துக்கு உரியது.
- முறையான பாதிப்பு எனின் அதற்குரிய தீர்வழிகளை மன்றம் கொடுக்கும்.

இந்த நடைமுறை இருந்ததனாலும் இதற்கான விழிப்புணர்வு இருந்தத னாலும்தான் காதல் வயப்பட்ட ஒருவனால் தனக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு மன்றம் தீர்வழியைக் கொடுக்கும் என நம்ப முடிந்துள்ளது. இதே போலத் தலைவி ஒருத்தியும் பாதிப்புக்கு உள்ளானாள். அதற்கான தீர்வழியை மன்றத்தின் மூலம் பெற முயற்சிக்கும் இலக்கியச் சான்று வருமாறு,

"அருங்கடி அன்னை காவல் நீவிப்
பெருங்கடை இறந்து மன்றம் போகிப்
பகலே பலரும் காண வாய்விட்டு
அகல்வயற் படப்பை அவன்ஊர் வினவி
சென்மோ வாழி தோழி! பல்நாள்
கருவி வானம் பெய்யாது ஆயினும்
அருவி ஆர்க்கும் அயம்திகழ் சிலம்பின்
வான்தோய் மாமலைக் கிழவனைச்
சான்றோய் அல்லை என்றனம் வரற்கே!"[74]

இதுவும் அகத்துறைச் செய்யுள். தோழி கூற்றாக அமைந்துள்ளது. தலைவனால் தலைவி பாதிப்பு உறுகிறாள். "தோழி தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்கு உரைப்பாளாய் இயற்பழித்து இன்னது செய்தும் என்பாளாய்ச் சொல்லியது."[75] என்பது இச்செய்யுளுக்குரிய துறையாகும். தலைவன் உரிய நேரத்தில் திருமணம் செய்ய வராமல் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறான். இதனால் தலைவி பாதிப்புக்கு உள்ளாகிறாள். இதனை அறிந்த தோழி, தலைவியுற்ற பாதிப்புக்குத் தீர்வழி தேட முயல்கிறாள். இச் சூழலில் தோழி முறையிட அணுகும் இடமாக மன்றம் அமைகிறது. தலைவியின் சார்பாகத் தோழி செயல்பட முனைகிறாள். எனவே, அன்னையின் காவலில் இருக்கும் தலைவியை நோக்கி மன்றத்துக்கு வாவென அழைப்பதாக இச்செய்யுள் அமைகிறது.

மன்றத்துக்கு வருமாறு அழைப்பதன் மூலம், 'மன்றத்தை அணுகினால் தலைவிக்குரிய தீர்வழி கிடைக்கும்' எனத் தோழிக்குத் தெரிந்திருக்கிறது என்பதை உணரமுடிகிறது. இதன்மூலம் மன்றத்தின் பற்பல பயன்பாடுகளுள் பொதுமக்கள் உறும் சிக்கலை ஆய்வு செய்தலும் ஒன்று என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவ்விலக்கியச் சான்றின் மூலம், 'மன்றம்' தொடர்பான பிற செய்திகளையும் அறியமுடிகிறது. அவை வருமாறு,

- '**பகலே**' என்று குறிப்பிட்டிருப்பதனால், அது பகற்பொழுதைச் சுட்டி நிற்கிறது. இதன்மூலம், மன்றத்தின் செயல்படு நேரத்தை ஒருவாறு தீர்மானிக்க முடிகிறது. அக்காலத்தில் அங்காடிகள் (கடைத்தெரு) இருபொழுதும் இயங்கியுள்ளன. பகல் பொழுதில் இயங்குவனவற்றை நாளங்காடி என்றும், இரவுப் பொழுதில் இயங்குவனவற்றை அல்லங்காடி என்றும் குறிப்பிடுவர். இவற்றைப் போல் அல்லாமல் மன்றங்கள் பகல்பொழுதில் செயல்பட்டிருக்கின்றன என்பதற்கு மட்டுமே சான்று கிடைத்துள்ளது.
- '**பலரும் காண**' என்று குறிப்பிட்டிருப்பதனால், மன்றக் கூட்டத்தில் பலர் கூடி யிருந்தனர் என்று தெரிய வருகிறது. 'காணல்' என்பதைக் கண்டறிதல் எனும் பொருளில் பார்த்தால் வழக்கை ஆய்வு செய்ய பலர் இருந்துள்ளனர் எனத் தீர்மானிக்கலாம். என்றாலும், ஒரே வழக்கைப் பலர் ஆய்வு செய்தனரா அல்லது பல வழக்குகளை ஆய்வு செய்ய பலர் இருந்தனரா எனும் குறிப்பு வெளிப்படையாகக் கிடைக்கவில்லை. மதுரைக் காஞ்சியில் அறங்கூறு அவையம் பற்றிக் கூறுகிற போது வழக்கு கொண்டுவரும் மக்களை வரவேற்க மற்றும் அவர்களை அமைதிப்படுத்தி ஆற்றுப்படுத்த எனப் பலர் இருந்ததற்கான குறிப்பு உள்ளது. அதனைப் போல் மன்றத்திலும் பலர் இருந்திருக்கலாம் என எண்ண இடமுண்டு. மேலும், இதற்கு வேறுவகையிலும் பொருளெடுக்க முடியும். காணல் என்பதற்குப் பார்த்தல் எனும் பொருளும் உண்டு. பற்பல மக்கள் பார்க்க மன்றத்தாரிடம் முறையிடப்பட்டது எனவும் கொள்ள முடியும்.
- '**வாய்விட்டு**' எனும் குறிப்பு இருப்பதனால், வழக்குரைஞர் போல் மன்றத்தில் பேசி இருக்க வேண்டும் என அறியமுடிகிறது. தலைவிக்குச்

சார்பாகத் தோழி மன்றத்தில் வாய்விட்டுப் பேசுகிறாள். வாய்விட்டுப் பேசுதல் என்பது உண்மை முழுமையும் மன்றத்தில் சொல்லுதல் என்று பொருளாகும். ‘வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்’ எனும் பழமொழி ஆய்வுக்குரியது. இதனால் ‘வாய்விட்டு’ என்றால் ‘முழுமையாக’ எனப் பொருள்காண முடிகிறது. எனவே, அனைத்து உண்மைகளையும் மன்றத்தில் கூறியிருக்கிறார்கள் என அறியமுடிகிறது.

- அடுத்ததாக, இவர்கள் எதற்காக மன்றம் செல்ல வேண்டும்? எனும் வினா எழுகிறது. ‘**கிழவனைச் சான்றோய் அல்லை என்றனம் வரற்கே**’ என்கிற வரி, முன்னர் எழுந்த வினாவுக்கு விடை கூறுகிறது. அதாவது தலைவன் மீது குற்றம் சுமத்தி அவன் மீதான குற்றத்தை உறுதி செய்ய மன்றம் அணுகப்பட்டிருக்கிறது. இதன்மூலம், தலைவிக்குரிய தீர்வழி எளிதில் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

நீதி வழங்குதலிலும் மன்றம் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது என்பதை மேற்குறித்த சான்றுகளின் மூலம் அறியமுடிகிறது. பிற செய்கைகளோடு மக்களின் சிக்கலை ஆய்ந்து அதற்கான தீர்வழியைக் கொடுத்தலும் மன்றத்தின் பணிகளுள் ஒன்றாக இருந்துள்ளது.

**மன்றத்தின் அதிகார வரம்பு**

நீதி வழங்குதலுக்கான பணியில் மன்றம் ஈடுபட்டிருந்தது என்பது உறுதியாகத் தெரிய வருகிறது. இனி, **மன்றத்தின் அதிகார வரம்பு எதுவாக இருந்திருக்க வேண்டும் எனும் ஆய்வு வினா எழுகிறது**.

“அழிந்த வேலி அங்குடிச் ***சீறூர்***

**ஆளில் மன்றத்து** அல்குவளி ஆட்ட”[76]

“குன்றக **நல்லூர் மன்றத்து**ப் பிணிக்கும்”[77]

“மறுத்து இவ் **ஊர் மன்றத்து** மடல் ஏறி”[78]

“பேரிசை **மூதூர் மன்றங்** கண்டே?”[79]

என வரும் இலக்கியச் சான்றுகளை ஆய்வு செய்கின்ற போது மன்றத்தின் அதிகார வரம்பினை எளிதில் கண்டறிந்து விடமுடிகிறது. மன்றத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள அடைசொற்கள் அத்தனையும் ‘ஊர்’ என்றே உள்ளன. நல்லூர் என்றோ, மூதூர் என்றோ, சீறூர் என்றோ அமைந்துள்ளது கருதத்தக்கது. எனவே மன்றத்தின் அதிகார வரம்பு அம்மன்றம் அமைந்துள்ள ஊர் எல்லைவரை பரவி இருந்திருக்க வேண்டும் எனத் துணியலாம்.

**மன்றம் தவிர்த்த பிற நீதி வழங்கும் மையங்கள்**

ஊர் அளவில் அதிகாரம் செலுத்தி நீதி வழங்கும் இயல்பான அதிகார மையமாக மன்றம் திகழ்ந்துள்ளது. இதனைப் போன்றே பிற நீதி வழங்கும் மையங்களும் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளன. அவற்றை அவை என்றும், அவையம் என்றும் அறங்கூறு அவையம் என்றும் சங்க இலக்கியச் சான்றுகள் காட்டுகின்றன. மன்றத்தின் பயன்பாடுகளுள் நீதி வழங்குதலும் ஒன்று; ஆம் மன்றத்தைப் பலரும் பல செயல்பாடுகளாகப் பயன்படுத்தி யுள்ளனர் என்பது மேற்குறிப்பிட்டுள்ள இலக்கியச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. ஆனால் பிற நீதி வழங்கும் மையங்களின் பணி நீதி வழங்கல் மட்டுமாகவே இருந்துள்ளது.

“மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து,
அறம்நின்று நிலையிற் றாகலின், அதனால்
முறைமைநின் புகழும் அன்றே”[80]

**அறம் கூறு அவையம்**

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி
சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்"[81]

எனும் மதுரைக்காஞ்சி வரிகள் அறம்கூறு அவையத்தின் இயல்புகளை விளக்கிக் கூறுகின்றன. அறம் கூறு அவையம் என்பதற்கு அறிவுரை கூறும் அவையம் எனப் பொருள் கொள்வது பொருந்தாக் கூற்றாகும். ஏனெனின் அறிவுரை கூறுவதற்கு ஞெமன் கோல் போல மனம் இருத்தல் வேண்டியதில்லை என்பதனால். எனவே இது வழக்கு கொண்டு வரும் தரப்பாளர்களுக்குச் சட்டத் தீர்வழி கொடுக்கும் முறைமன்றம் என்றே பொருள் காண வேண்டும்.

**பிறர்பாற்பட்ட செய்கை**

'நீக்கி' எனும் சொல்லின் இலக்கண அமைப்பு நோக்கத்தக்கது. வினையெச்சச் சொல்லாக அமைந்திருக்கும் இது பிறரோடு தொடர்புடையது. 'நீங்கி' என்பது தன்பாற்பட்டு நீங்குதல்; 'நீக்கி' என்பது பிறர்பாற்பட்டு நீக்குதல். அறங்கூறு அவையம் அச்சத்தை, அவலத்தை, ஆர்வத்தை நீக்குகிறது எனச் சுட்டப்பட்டுள்ளது. எனின் யாருடைய அச்சத்தை, அவலத்தை, ஆர்வத்தை அறம்கூறு அவையம் நீக்குகிறது? எனும் வினா எழும்புகிறது. வழக்கு கொண்டுவரும் தரப்பாளர்களின் அச்சத்தை, அவலத்தை, ஆர்வத்தை அறம்கூறு அவையம் நீக்குகிறது எனப் பொருள் கொள்வதே முற்றும் பொருத்தமாகும். முறையாக வழக்கு உசாவப்படுமா எனும் (இதனைப் போன்று பிற) அச்சத்தையும், முறை கிடைக்காது போய்விட்டால் எனும் (இதனைப் போன்று

பிற) ஐயத்தையும், எதிர்நோக்கும் தீர்வழி கிடைத்துவிட்டால் எனும் (இதனைப் போன்று பிற) ஆர்வ மிகுதியையும் அறம்கூறு அவையம் முதலில் நீக்குகிறது.

இன்று உலகம் முழுதும் புகழ்பெற்று வரும் உளவியலை மேற்சுட்டிய செய்கையோடு ஒப்பு நோக்கலாம். இன்றைய நாகரிகம் மிகுந்துள்ள சூழலில், சட்டவியலில் உளவியலின் பங்கு குறிப்பிடத்தக்கது. குடும்பநல முறைமன்றங்களில் இதற்கெனத் தனிப்பிரிவே உண்டு. அதுபோல உரிமையியல் வழக்குகளிலும் கூட இடையில், உளவியல் கருத்துரை வழங்கி வழக்குகளைச் சமன்செய்யும் நடைமுறையும் உண்டு. ஏறத்தாழ இந்நடைமுறைக்கு இணையாகச் சங்கக்கால முறைமன்றம் செயல் பட்டிருப்பதை அறியமுடிகிறது.

தரப்பாளர்கள் வரும்போதே அவர்களுக்கு இன்சொல் வழங்கி, அவர்கள் மனத்துள் ஏற்பட்டிருக்கும் அச்சத்தையும், அவலத்தையும், ஆர்வத்தையும் நீக்க குறிப்பிட்ட அறிஞர் பெருமக்கள் (உளவியல் வல்லுநர்கள்) அறம்கூறு அவையத்தின் உறுப்பினர்களாக இருந்துள்ளனர் என்பதை இதன்மூலம் அறிய முடிகிறது.

**தன்பாற்பட்ட செய்கை**

பிறர்பாற்பட்ட செய்கையைப் போல அறம்கூறு அவையத்திற்கெனத் தன்பாற் பட்ட செய்கையையும் மதுரைக் காஞ்சி சுட்டுகிறது. இதனை 'ஆகி' எனும் சொல்லின் மூலம் அறியலாம். 'ஆக்கி' என்பது பிறர்பாற்பட்டு ஆக்குதல்; 'ஆகி' என்பது தன்பாற் பட்டு ஆகுதல் ஆகும். அறங்கூறு அவையம் 'செற்றமும் உவகையும் செய்யாது காத்து ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகி' நின்றுள்ளது. ஆக, அறம்கூறு அவையத்தின் பொறுப்பாளர்கள் விருப்பு வெறுப்புக்கு உட்படாது, ஞெமன்கோல் போலச் செம்மையாய்ச் செயல்படும் தன்மையராம்.

தன்பாற்பட்ட செய்கைக்குரிய அறம்கூறு அவையத்தின் பொறுப்பாளர்களை நடுவர்கள் என்று கூற இயலாது. இவர்களை, வழக்கு ஆய்வு செய்பவர்களாக மதுரைக் காஞ்சி சுட்டவில்லை. எனவே அறம்கூறு அவையத்துக்கு வரும் பொதுமக்களை ஒழுங்குபடுத்தும் நிர்வாக அலுவலர்களாகக் கருத இடமுண்டு. வழக்கு முறையிடு பவரிடமிருந்து வழக்குக் குறிப்புகளை விருப்பு வெறுப்பின்றிப் பெற்றுக் கொள்ளும் பணி, வேண்டியோர் வேண்டாதார் என வேறுபாடின்றி முறையாக மற்றொரு தரப்புக்கு அறிவிக்கும் பணி, வழக்கு உசாவப்படும் நாள் நேரம் முதலியவற்றைத் தெரியப்படுத்தும் பணி முதலிய நிர்வாகப் பணி இவர்களுக்குரியதாம்.

இன்றைய அரசு அலுவலங்களில் பிற இடங்களிலும் வேறுபாட்டு உணர்வோடு மக்களை நடத்தும் முறை உலகறிந்ததே. வேண்டியோர்க்கு ஒருவித நடைமுறையும், பிறர்க்கு ஒருவித நடைமுறையும் இருப்பதை மிக இயல்பாகக் காணலாம். ஆனால் சங்கக்கால அறம்கூறு அவையத்தில் இவ்விதச் சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ளப் பட்டிருப்பது நனி நாகரிக நடைமுறையாம்.

**சிறந்த கொள்கை**

இவ்வாறு, பிறர்பாற்படும் செய்கையையும் தன்பாற்படும் செய்கையையும் செவ்வனே பின்பற்றுவதனால் அறம்கூறு அவையம் சிறந்த கொள்கைகளை உடையது எனக் கூறப்படுகிறது.

**சிலப்பதிகாரமும் அறங்கூறு அவையமும்**

சங்க காலத்தின் தொடர்ச்சியில் தோன்றிய இலக்கியம் சிலப்பதிகாரம் ஆகும். சேர சோழ பாண்டியர் ஆகிய மூவேந்தர்களின் பண்புநலன்களையும்

நாட்டு நிலைமைகளையும் அரசியல் கூறுகளையும் இலக்கியப் போக்கினில் ஆங்காங்கே அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறது சிலப்பதிகாரம். தமிழ்நாட்டில் அறங்கூறு அவையம் இருந்தமையைச் சிலப்பதிகாரமும் உறுதி செய்கிறது. பின்வரும் செய்யுள் வரிகள் இதனை வெளிப்படுத்தி நிற்கின்றன,

> "அரைசுகோல் கோடினும் அறம்கூறு அவையத்து
> உரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்"[82]

எனும் வரிகளில் உள்ள அறம்கூறு அவையம் சோழ மன்னனுக்கு உரியதாகும். சோழ அரசனின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த அமைப்பு இது. மதுரைக் காஞ்சியில் சுட்டப்பட்டிருக்கும் அறங்கூறு அவையம் பாண்டிய அரசின் தலைநகரான மதுரையில் அமைந்திருந்த அமைப்பாகும் என அறிய முடிகிறது. தமிழ்நாட்டின் மூன்று முதன்மைப் பேரரசுகளுள் இரண்டின் தலைநகரில் அறங்கூறு அவையம் அமைந்து இருப்பதனால் சேர நாட்டிலும் இத்தகைய அமைப்பு கட்டாயம் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்க முடிகிறது.

**அறங்கெழு நல்லவை**

> "கேள்கே டூன்றவும் கிளைஞர் ஆரவும்
> கேளல் கேளிர் கெழீ இயினர் ஒழுகவும்
> ஆள்வினைக் கெதிரிய ஊக்கமொடு புகல்சிறந்
> தாரங் கண்ணி அடுபோர்ச் சோழர்
> அறங்கெழு நல்லவை உறந்தை அன்ன
> பெறலரு நன்கலன் எய்தி நாடும்
> செயலருஞ் செய்வினை முற்றின மாயின்"[83]

மேலேயுள்ள புறநானூற்றுச் செய்யுள் உறந்தைக்கு அடைமொழியாக 'அறங்கெழு நல்லவை' யைச் சுட்டியிருக்கிறது. மதுரைக்காஞ்சி மதுரையில் உள்ள அவையை அறங்கூறு அவையம் என்றும், புறநானூறு உறந்தையில் உள்ள அவையை அறங்கெழு நல்லவை என்றும் சுட்டியுள்ளன. மதுரைக்காஞ்சி விளக்கமாகக் கூறியது போலப் புறநானூறு கூறவில்லை யெனினும் இரு அவையின் முதன்மை நோக்கம் ஒன்றே என்பதை உய்த்துணர்ந்து அறியலாம். நகரத்திற்கு அடைமொழியாகச் சுட்டுமளவு அறங்கெழு மன்றம் புகழுடையதாகவும், சீர்மைத்தாகவும் செயல்பட்டிருந்ததை அறிந்து கொள்ள முடிகிறது.

**அறநிலை பெற்ற வருள்கொள் அவையம்**

"அறநிலை பெற்ற வருள்கொ ளவையத்து
நிறைநூற் பொத்தக நெடுமணை யேற்றி
வல்லோர் வகுத்து வாசனை வாக்கியம்
பல்லோர் பகரப் பயம்பல பருகித்
தரும விகற்பமொடு தானை யேற்பும்
கரும விகற்பமொடு காமமுங் கெழீஇய
இன்பக் கேள்வி யினிதுகொண் டெழீஇ"[84]

சங்க இலக்கியங்களின் காலத்திற்குச் சற்றொப்பக் காலத்தில் தோன்றிய பெருங்கதை அறங்கூறு அவையத்தைப் பற்றிப் பதிவு செய்திருக்கிறது. இதன்மூலம் அறம்கூறு அவையத்தின் தொடர்ச்சி தமிழ்நாட்டில் நன்கு புலப்படுகின்றது.

**அவையின் நோக்கம் பகைதீர்த்து (நீதி வழங்கி) விடல்**

அறங்கூறு அவையம், அருள்கொள் அவையம், அறங்கெழு நல்லவை எனப் பலவாகக் கூறப்படும் அமைப்புகளின் அடிப்படை நோக்கம் மக்களிடையே எழும்

சிக்கலைத் தீர்த்துப் பகையைப் போக்கி உரிய நீதி வழங்கி அவர்களை அமைதி யடையச் செய்யவும் மன ஆறுதல் கொள்ளவும் செய்வதே ஆகும்.

"முதியோர்,

அவைபுகு போழ்தில் தம்பகை முரண்சொலவும்"[85]

எனப் பொருநராற்றுப்படை கூறுகிறது. அதாவது, அவை புகுந்து தமது வழக்கைத் தீர்த்துக் கொள்ள முயற்சி செய்யும் நேரத்தில் முதியோர்கள் தம் பகையை இழந்து விட்டனர் என்பது பொருளாகும். இதன்மூலம் 'அவை' என்பது பகை தீர்க்கும் இடம் என்பதை உறுதிப்படுத்துகின்றன இவ்வரிகள். நீதி என்பதே உள வியல்படி மன ஆறுதலுக்கான பொருண்மையாகும். எனவே பகைதீர்த்து மன ஆறுதல் தரும் வகையில் அவையங்கள் நீதி செலுத்தியிருக்கின்றன என அறிந்து கொள்ளலாம்.

மேற்சுட்டிய தரவுகளிலிருந்து சங்க காலத் தமிழகத்தில் அறம்கூறு அவையங்கள் சிறப்பாக இருந்துள்ளன; இயங்கியுள்ளன என்பது தெள்ளத் தெளிவாகத் புலனாகிறது. பாண்டிய நாட்டின் மதுரையிலும், சோழ நாட்டின் உறந்தையிலும் அறம்கூறு அவை அமையப் பெற்றிருப்பதன் மூலம் நாட்டின் தலைநகரில் இவை அமைந்திருக்கலாம் என்று துணிய முடியும். ஏனெனின் சோழ நாடே ஆயினும் அறம்கூறு அவையம் 'காவிரிப்பூம் பட்டினம்' நகரத்தில் இருந்துள்ளதைச் சிலப்பதிகாரம் பதிவு செய்கிறது. அக்காலக் கட்டத்தில் சோழ நாட்டின் தலைநகராகப் புகார் நகரமே இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே நாட்டின் தலைநகரில் அறங்கூறு அவையம் செயல்பட்டிருக்கிறது எனத் தெளியலாம்.

<u>அடிக்குறிப்புகள்</u>


1. S. John Britto, ***Indian Historical Studies***, Thriuchi, 2013, p.1.

2. J. T. Dharani & Arun Kumar Naronakar, "Caste System In Ancient Tamil Nadu As Reflected In Sangam Literature", ***Golden Research Thoughts***, vol. 2, no. 5, Nov 2012, p.1.

3. Abraham, Shinu, "Chera, Chola, Pandya: Using Archaeological Evidence to Identify the Tamil Kingdoms of Early Historic South India", ***Asian Perspectives***, vol. 42, no.2, p.219.

4. http://www.dinamani.com/tholliyalmani/pudhaiyundathamizhagam/2016/03/18/வரலாற்றுக்-காலம்---7.-அழகன்குளம்/article3334346.ece?service=print accessed on 03.5.2017.

5. நடன. காசிநாதன், ***தொன்மைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் – ஒரு புலனாய்வு***, சென்னை, 2014, பக். 80.

6. "தமிழ் பிராமி எழுத்துகள் திசமகாரகமவில்", thamilkalvi. http://www.thamilkalvi.com/index.php/வரலாற்றுக்-குறிப்புகள்/தமிழ்-பிராமி-எழுத்துகள்-திசமகாரகமவில்....-70.html, Accessed on 20.03.2016.

7. நடன. காசிநாதன், ***தொன்மைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் – ஒரு புலனாய்வு***, சென்னை, 2014, பக். 54-55.

8. ***Sources of Ancient Tamil History***, Wikipedia. https://en.wikipedia.org/wiki/Sources_of_ancient_Tamil_history, seen on 20.3.16.

9. Ibid.

10. ***Early Pandyan Kingdom***, Wikipedia. https://en.wikipedia.org/wiki/Early_Pandyan_Kingdom Accessed on 08.04.2015.

11. ***Tamil History from Sangam Literature***, Wikipedia. https://en.wikipedia.org/wiki/Tamil_history_from_Sangam_literature Accessed on 18.03.2016.

12. "India", ***The new Encyclopædia Britannica*** (Macropædia Vol. 21). Chicago, 2002. p.45.

13. “துறைமுக வாணிக மையமாக திகழ்ந்த மந்திரிபட்டினம்: அகழாய்வு இயக்குனர் ராஜவேலு தகவல்”, தினமலர் (இணையதளச் செய்தி), 11.09.2015. Available @ http://www.dinamalar.com/twitter_detail.asp?id=1339785&Print=1 Accessed on 02.01.2016.

14. ***Tamil History from Sangam Literature***, Wikipedia. https://en.wikipedia.org/wiki/Tamil_history_from_Sangam_literature accessed on 16.3.2016.

15. ***Sources of Ancient Tamil History***, Wikipedia. https://en.wikipedia.org/wiki/Sources_of_ancient_Tamil_history accessed on 16.3.2016.

16. David Harlan, “Intellectual History and the Return of Literature”, ***The American Historical Review***, vol. 94, no. 3, 1989, p.581.

17. Encyclopedia Americana, vol.14, p.227.

18. Ibid, vol. 23, p.559.

19. Terry Eagleton, ***Marxism and Literary Criticism***, Routledge, London, 2003, p.16.

20. Harry R. Garvin (ed.), ***Bucknell Review: Literature and History***, London, 1977, p.9.

21. M. Asaduddin, ***Fiction as History: Partition Stories***, S. Settar and Indira Baptista Gupta (eds.), *Pangs of Partition: The Human Dimension*, Vol. II, Manohar, New Delhi, 2002, p.313.

22. Institute of Oriental Study, ***Seminar on Law and Justice in Ancient India*** on 27.04.1996 at Dr. Bedekar’s Hospital, Naupada, Thane-602.

23. தொல். பொருள். 616.

24. ஞா. தேவநேயப் பாவாணர், ***பழந்தமிழாட்சி***, சென்னை, 1952, பக். 21.

25. பதிற். 9-ஆம் பதிகம் உரைநடைச் செய்தி.

26. பதிற். பதிகம் 9, 16.

27. வ. குருநாதன், ***சங்க கால அரச வரலாறு***, தஞ்சை, பக். 162-177.

28. சீனி. வேங்கடசாமி, ***சங்க காலத் தமிழக வரலாறு***, சென்னை, பக். 186-188 மற்றும் 232.

29. அகம். 338:3.

30. சு. துரைசாமி பிள்ளை, ***சேரமன்னர் வரலாறு***, சென்னை, 2002, பக். 320.

31. புறம். 20:17.

32. புறம். 35:14.

33. புறம். 42:10-11.

34. சி. பாலசுப்பிரமணியன், ***சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்***, சென்னை, 1985, பக். 474.

35. சு. துரைசாமிப் பிள்ளை, ***புறநானூறு விளக்கவுரை***, சென்னை, 1972, பக். 336.

36. புறம். 230:4-6.

37. அ. திருமலை முத்துசாமி, ***தமிழ்நாடும் மொழியும்***, மதுரை, 1959, பக். 63.

38. மேலது, பக். 65.

39. பெரும்பாண். 36.

40. மா. இராசமாணிக்கனார், ***சோழர் வரலாறு***, சென்னை, 1947, பக். 28.

41. பொருநர். 230.

42. குறுந். 276:5.

43. ஐங். 178:2-3.

44. ஐங். 290:1.

45. கலித். 99:11.

46. புறம். 136.

47. புறம். 185:1-3.

48. திருக். 388.

49. திருக். 547.

50. குறுந். 276:5.

51. ஐங். 8:2.

52. அகம். 142:8-9.

53. அகம். 188:3-4.

54. புறம். 35:14-16.

55. பெரும்பாண். 443 – 444.

56. மதுரைக். 739.

57. சிலப். 207.

58. திருக். 548.

59. திருக். 553.

60. கலித். 34:14.

61. கலித். 133:10-13.

62. புறம். 29:9-10.

63. கலித். 86:17-18.

64. கலித். 100, 15-16.

65. திருக். 541.

66. சி. பாலசுப்பிரமணியன், ***வாழ்வியல் நெறிகள்***, சென்னை, 1990, பக். 15.

67. புறம். 66.

68. திருக். 156.

69. குறுந். 143.

70. திருக். 657.

71. புறம். 182.

72. http://en.wikipedia.org/wiki/Law_court_(ancient_Athens) accessed on 27.03.2016.

73. கலித். 58.

74. நற். 365.

75. கதிர். மகாதேவன், ***நற்றிணை உரை***, கோவிலூர், 2003, பக். 488.

76. மேலது, நற். 346.

77. புறம். 389.

78. கலித். 58.

79. புறம். 220.

80. புறம். 39.

81. மதுரைக். 489-492.

82. சிலப். 5:133-134.

83. புறம். 93.

84. பெருங். – 34,25-31.

85. பொருநர். 187-188.

# இயல் 3: சங்க காலத் தமிழகத்தின் அறக்கோட்பாடும் நீதியின் நிலைப்பாடும்

சங்க காலத் தமிழகத்தில் மிகுதியான அறக்கோட்பாடுகள் இருந்தன. இது, சங்க இலக்கியக் குறிப்புகள் மூலம் எளிதில் உறுதியாகிறது. நீதிமுறை என ஒன்று வடிவம் பெறுவதற்கு முன்பே அறம் எனும் கருத்தியல் தோன்றியிருக்க வேண்டும். செய்ய வேண்டியன எவை, செய்யக் கூடாதன எவை என மனிதன் தனக்குத்தானே தன் சூழலின் அடிப்படையில் ஏற்படுத்திக் கொள்ளும் நெறிகள் அறம் எனப்படுகிறது. நீதி செலுத்துவதில் அறத்தின் பங்கு அளப்பரியதாகும். **சங்க காலத் தமிழகத்தின் நீதிக் கருத்தியல் வளர்ச்சிக்கு அறக்கோட்பாடுகள் எவ் வகையில் துணைபுரிந்தன எனும் ஆய்வை மேற்கொள்கிறது இவ்வியல்**.

- அறம் – அறிமுகமும் தொகுப்பும்
- நீதி வழங்கலில் அறத்தின் பங்கு
- அறமும் நீதியும் வேறுபடும் சூழல்

என்கிற இம்மூன்று பகுப்புகள் வழியாக மேற்குறிப்பிட்டிருக்கும் இவ்வாய்வு நிகழ்த்தப்படவிருக்கிறது.

## அறம் – அறிமுகமும் தொகுப்பும்

"அறம் என்பது இதுதான். ஒரு மனிதக்குழு தனக்குள் உருவாக்கிக் கொள்ளும் நெறிகள். இறுதியாக வகுத்துக்கொண்ட நடத்தைகள். செய்யக் கூடியவை, செய்யக்கூடாதவை, செய்தே ஆகவேண்டியவை அடங்கிய ஒரு வழிகாட்டித்தொகை. அதுவே அறம்."[1] எனத் தற்காலத்தில் அறத்திற்கு வரையறை கூறுபவர்கள் உள்ளனர். சங்க காலத் தமிழகம் அறத்தை எப்படி நோக்கியது என்பது கருதத்தக்கது. இதற்கு அக்காலத்தில் நிலவிய அறக்கருத்தியல் தொகுப்புத் தேவைப்படுகிறது.

**சங்க காலத்தில் அறம் - கருத்தியல் பார்வை**

சங்க காலத் தமிழகம் பல 'கருத்தியல் வரலாற்று ஆய்வு'க்குக் களமாகத் திகழ்கிறது. அவ்வகையில் அறம் எனும் கருத்தியல் அக்காலக்கட்டத்தில் எப்படி நோக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

"அரும் பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல"[2]

எனும் நற்றிணைச் செய்யுள் அன்று நிலவிய அறம் குறித்த கருத்தியலைப் பதிவு செய்துள்ளது. நோயாளிகள் ஆசைப்படுவதைக் கொடுக்காமல் அவர்களுக்குத் தேவைப்படும் மருந்தைக் கொடுக்கும் மருத்துவனை அறவோன் எனச் சிறப்பாய் இயம்பியுள்ளனர். இதன்மூலம் அறம் என்பதன் வரையறையை அறிந்துகொள்ள முடிகிறது. '**ஒருவர்க்கு அவர் ஆசைப்படுவதை வழங்குவதைக் காட்டிலும் அவர்க்குத் தேவைப்படுவதை வழங்குவது அறமாகும்**' எனும் கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது என்பதை இதன்மூலம் அறியமுடிகிறது.

"இளையோர் இல்லிடத்து இற்செறிந்திருத்தல்
அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம் என"[3]

எனும் நற்றிணைச் செய்யுளும் அறம் சார்ந்த கருத்தியலைப் பதிவு செய்துள்ளது. அறியாத ஆடவன் ஒருவனோடு பழகக்கூடும் என்பதனால் அதனைத் தடுக்கும் பொருட்டு வீட்டிலிருந்து வெளியே செல்லமுடியாதபடி தலைவி இற்செறிப்புக்கு (வீட்டில் சிறைவைத்தல்) ஆளாகிறாள். இதனால் மனச்சோர்வுற்ற தோழி தலைவியை அவ்வாறு வைத்திருத்தல் அறமில்லை எனக்கூறுவதாகச் செய்யுள் அமைகிறது. இதன்மூலம் '**ஒருவரை அவர் விருப்பத்திற்கு மாறாகச் சிறை வைத்தல் அறமில்லை**' எனும் **முடிவுக்கு எளிதில் வரவியலவில்லை**. காரணம், சிறைவைப்பு *தலைவியின் நன்மைக்காகப் பெற்றோரால்* ஏற்படுத்தப்பட்டது என்பதே ஆகும். எனவே தோழியின் நிலைப்பாடு அறம்சார்ந்ததா? அல்லது

பெற்றோரின் நிலைப்பாடு அறம் சார்ந்ததா? எனும் வினா எழுகிறது. இதற்கு அவரவர் சார்ந்துள்ள சூழல் அடிப்படையில்தான் பதில் சொல்ல முடியும்.

மேற்சொன்ன சங்க காலத் தமிழகத்தில் நிலவிய இரு அறக்கருத்தியல்களி லிருந்து இரண்டு கருத்துகள் பெறப்படுகின்றன. முதலாவது **சூழலுக்கு இடம் கொடுக்காமல் எப்போதும் மாற்றமின்றி ஒரே நிலையிலிருக்கும் *பொது அறக் கருத்தியல்*** ஆகும். அடுத்தது, **சார்ந்துள்ள சூழலைப் பொறுத்து அவரவர் நிலைக் கேற்ப மாற்றம் பெறக்கூடிய *சூழல்சார் அறக்கருத்தியல்*** ஆகும்.

சுருங்கச் சொல்லின் *பொதுவறம்* என்பது எங்கும் எவர்க்கும் மாற்றமின்றி இருக்கும் கருத்தியல் எனவும்; *சூழல்சார் அறம்* என்பது அவரவர் சார்ந்துள்ள நிலையைப் பொருத்து மாற்றம் பெறக்கூடிய கருத்தியல் எனவும் கூறலாம்.

**பொது அறக் கருத்தியல்**

சங்க காலத்தில் நிலவிய பொது அறங்கள் பற்பலவாகும். அவற்றுள் சில மட்டும் பொது அறக் கருத்தியல் தொகுப்பிற்காகப் பதிவாக்கப்படுகின்றன. புற நானூற்றிலிருந்து ஒருசெய்யுளும் கலித்தொகையிலிருந்து ஒருசெய்யுளும் பொது அறக் கருத்தியல் நிலவியதன் சான்றாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

**நீதி செலுத்துவதில் பொது அறம்**

> "அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்;
> அதனால், நமரெனக் கோல்கோ டாது,
> பிறரெனக் குணங்கொல்லாது"[4]

என்கிறது புறநானூறு. அதாவது, அறத்தை முதலாகக் கொண்டே அரசின் கொற்றம் திகழ்கிறது. நீதிநெறி பிறழ்வால் நெருக்கமான ஒருவர் பயன்பெறுவார் என்பதற்காக செங்கோல் வளையாதபடியும்; ஒருவர் நெருக்கமானவர் இல்லை

யென்பதனால் அவரிடமுள்ள குணத்தைப் புறக்கணிக்காமலும் நீதி செலுத்த வேண்டும். இது பொது அறக்கருத்தியலுக்குச் சான்றாக அமைகிறது. ஏனெனின் எந்த நாட்டு அரசனென்றாலும் இக்கொள்கை பொருந்தும்; அதே போல எந்தக் காலத்திற்கும் இக்கொள்கை பொருந்துவதாக அமைகிறது எனலாம்.

**அறிவர்கோடலில் பொது அறம்**

“மை இல் மதியின் விளங்கும் முகத்தாரை
வெளவிக் கொளலும் அறன் எனக் கண்டன்று”[5]

என்கிறது கலித்தொகை. அதாவது, குற்றமற்ற அறிவுத்தெளிவோடு விளங்கும் அறிவாளிகளை என்றும் தம்முடன் கொண்டிருப்பதும் அறமாகும். இதுவும் பொது அறக்கருத்தியலுக்குச் சான்றாக அமைகிறது. ஏனெனின் *குற்றமில்லாத அறிவாளிகளின்* துணை, நன்மைகள் தரக்கூடியது என்பதால் எவர்க்கும் எந்தக் காலத்திற்கும் இக்கொள்கை பொருந்துவதாக அமைகிறது எனலாம்.

**சூழல்சார் அறக் கருத்தியல்**

சூழல்சார் அறக்கருத்தியல் என்பது அவரவர் நிலையில் அவரவர் எண்ணம் அறம் சார்ந்ததெனக் கருத வைக்கும். பின்வருவன இதற்குச் சான்றாக அமையும்.

“அம்ம வாழி தோழி நாம்அழப்
பன்னாள் பிரிந்த அறனி லாளன்”[6]

என்கிறது ஐங்குறுநூறு. தலைவன் அறமற்றவனாகப் பழிக்கப்படுகிறான். பல நாள் தலைவியைப் பிரிந்து சென்றமையால் அவன் அறனற்றவனாகக் கூறப் படுகிறது. *துணையில்லாமல் வாடுவதால்* தலைவியைப் பொருத்தவரை பலநாள் பிரிவு என்பது அறமற்றச் செய்கையாகத் தெரிகிறது. ஆனால் குடும்பத்திற்காகப் *பொருளீட்டச் சென்றதால்* தலைவனைப் பொறுத்தவரை பலநாள் பிரிவென்பது

அறம்சார்ந்த செய்கையாகத் தெரிகிறது. எனவே அவரவர் சூழல்சார்ந்து இதை அணுக வேண்டியுள்ளதால் இது சூழல்சார் அறக் கருத்தியலுக்குச் சான்றாக அமைகிறது எனலாம்.

**சங்க காலத் தமிழகத்தில் அறக்கருத்தியல்**

- பொது அறக்கருத்தியல்
- சூழல்சார் அறக்கருத்தியல்

மேற்குறிப்பிட்ட பதிவுகளிலிருந்து சங்ககாலத் தமிழகத்தில் இவ்விரு வகையான அறக்கருத்தியல் இருந்துள்ளன எனத் தெரியவருகிறது.

## நீதி வழங்கலில் அறத்தின் பங்கு

நீதி செலுத்துவதில் அறத்தின் பங்களிப்புப் பெரிதாகும். பொது அறக் கருத்தியல் அடிப்படையிலும் சூழல்சார் அறக்கருத்தியல் அடிப்படையிலும் நீதி செலுத்தப்பட்டிருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு. சங்க காலத் தமிழகத்தில் நீதி செலுத்துவதில் அறம் எத்தகைய பங்காற்றியது என்பதை இப்பகுதி முன் வைக்கிறது.

**மன்னனும் அறப் பிணைப்பும்**

சங்ககாலத் தமிழகத்தில் நீதி செலுத்தும் அமைப்புகளின் தலைவனாக அந் நாட்டு மன்னனே இருந்துள்ளான். தலைமைப் பொறுப்பில் இருக்கும் மன்னன் எவர்க்கும் கட்டுப்பட்டவன் இல்லை. என்றாலும் அவன் அறத்திற்குக் கட்டுப் பட்டவனாகவே இருக்க வேண்டும் எனும் எதிர்பார்ப்பு இருந்துள்ளது. இதனைப் புறநானூறு மற்றும் அகநானூறு சான்றுகளின் மூலம் உணரமுடிகிறது.

“முறைபுரிந்து

அறன்நெறி பிழையாத் திறன்அறி மன்னர்”[7]

நீதி செலுத்துவதை ‘முறைபுரிதல்’ என்பது சங்க கால வழக்கம். அறன்நெறி பிழையாதவனாகவே நீதி செலுத்தும் மன்னன் இருந்துள்ளான் என இதன்மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

“அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து

முறைவேண்டு பொழுதின் பதன் எளியோர் ஈண்டு

உறைவேண்டு பொழுதில் பெயல்பெற் றோறே”[8]

செங்கோல் என்கிற கருத்துரு என்பது நீதி செலுத்துவதன் அடையாளமாகச் சங்க காலத்தில் கருதப்பட்டது. தவறாக நீதி செலுத்தினால் செங்கோல் வளைந்தது எனப் பழிகூறுவது அக்கால மரபு. சரியான நீதி செலுத்துவதன் அடையாளமாக இருக்கும் செங்கோல் அறத்தால் செய்யப்பட்டது போலுள்ளது எனக் கூறியிருப் பதன் மூலம் நீதி வழங்குவதில் அறக்கருத்தியலின் பிணைப்பு நன்கு விளங்கிக் கொள்ள முடிகிறது.

**நீதி வழங்கும் மன்றங்களும் அறப் பிணைப்பும்**

சங்க காலத் தமிழகத்தில் மக்களுக்கு நீதி வழங்க முறையான ஏற்பாடு இருந்துள்ளது. ஊர்தோறும் மன்றங்களும் தலைநகர்களில் அறங்கூறு அவையம் எனும் பெயரில் செயல்பட்ட அமைப்புகளும் இருந்துள்ளன. நேரடியாக மக்கள் வழக்குகளை அறிந்து அவர்களுக்கான தீர்வழியைக் கொடுக்கும் இத்தகைய அமைப்புகள் அறம்சார்ந்து இயங்கவேண்டும் எனும் எதிர்பார்ப்பு இருந்துள்ளது. இதனைப் பல்வேறு இலக்கியச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது.

“மறங்கெழு சோழர் **உறந்தை அவையத்து,**

**அறம்நின்று நிலையிற் றாகலின்**, அதனால்

முறைமைநின் புகழும் அன்றே!”[9]

“**அறன்நிலை திரியா அன்பின் அவை**யத்து”[10]

“**அறம்அறக் கண்ட நெறிமாண் அவை**யத்து,

முறைநற்கு அறியுநர் முன்னுறப் புகழ்ந்த”[11]

“மறம் கெழு சோழர் **உறந்தை அவையத்து**

**அறம் கெட அறியாதாங்கு**”[12]

மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கியச் சான்றுகள் அனைத்தும் நீதி வழங்கும் அவையத்தோடு அறக்கருத்தியல் நெருங்கிய பிணைப்பு கொண்டிருந்ததை நன்கு பதிவு செய்துள்ளன. அறம் நிலைத்திருக்கும் அவை என்றும், அறம் பிறழாத அவை என்றும் குறிப்பிட்டுள்ளன. இவற்றின்மூலம் நீதி வழங்கும் அமைப்புகள் அறக்கருத்தியல் அடிப்படையில்தான் செயல்பட்டுள்ளன என்பதை அறியலாம்.

**அன்னி மிஞிலி வரலாற்றில் அறமும் நீதியும்**

சங்க காலப் பதிவுகளில் அகநானூறு குறிப்பிடத்தகுந்த அளவில் வரலாற்று மாந்தர்களைப் பதிவு செய்துள்ளது எனலாம். *அன்னி மிஞிலி* எனும் வரலாற்று மகளை அகநானூறே அறிமுகப்படுத்தியுள்ளது. அவளின் வரலாற்றில் அறமும் நீதியும் இணைந்து செயல்பட்டுள்ளன என்பதை அறிகிறோம்.

அன்னி மிஞிலியின் தந்தை மாடுகளை மேய்க்கக்கூடியவர். ஒருநாள் அவர் கண்ணயர்ந்த நேரம் மாடுகள் கழனியிலிருந்த பயறுகளை மேய்ந்துவிட்டன. இது தவறென வாதிடப்பட்டு அவர்க்குத் தண்டனை வழங்க வேண்டுமென முடிவு

ஆனது. கண்ணயர்ந்த நேரத்தில் மாடுகள் மேய்ந்ததால் அவருடைய கண்களைப் பறிப்பதே சரியான தண்டனையாக இருக்குமெனக் கூறிக் கோசர்கள் அன்னி மிஞிலி தந்தையின் கண்களைப் பறித்துவிட்டனர். பலமுறை கோசர்களிடம் முறையிட்டும் பயனளிக்கவில்லை. இதனால் உண்ணாமலும் புத்தாடை உடுத்தாமலும் அன்னி மிஞிலி இருந்தாள். இதனைக் கேள்விபட்ட திதியன் அவளுக்கு உதவி செய்வதாகக் கூறினான். அதனால் கோசர்கள்மீது போர் தொடுத்து அவர்களைக் கொன்றான். இவ்வரலாறு முழுதும் அகநானூற்றில்[13] இடம்பெற்றுள்ளது.

அன்னி மிஞிலியின் தந்தை தவறு செய்தார் என்பது உண்மை. ஆனால் அத்தவற்றுக்கு வழங்கப்பட்ட தண்டனை சற்றும் பொருத்தமில்லாதது. மாடுகள் பயறு மேய்ந்ததால் ஏற்பட்ட இழப்பை இழப்பீடாகப் பெற்றிருக்கலாம். அல்லது நிலத்தில் வேலை செய்யச் சொல்லி உழைப்பைப் பெற்றிருக்கலாம். சற்றும் பொருத்தமே இல்லாமல் அவர் கண்களைப் பறித்தது அவர்க்கு இழைக்கப்பட்ட அநீதியாகும்.

திதியனுக்கும் கோசர்களுக்கும் நேரடியாக எப்பகையும் இல்லை. எனினும் அவன் அவர்களுக்கு எதிராகச் செயல்பட்டுள்ளான் என அறிகிறோம். அவனை அவ்வாறு செயலாற்றத் தூண்டியது எது? எனும் வினாவுக்கு ‘அறம்’ என்பதே விடையாக வரும். அநீதி வழங்கப்பட்டவர்க்கு உதவுதல் அறமெனக் கருதியதால் திதியன் அன்னி மிஞிலிக்காகக் கோசர்களை எதிர்த்துள்ளான் என அறியலாம். இவ்வாறு அன்னி மிஞிலியின் வரலாற்றில் அறமும் நீதியும் இணைந்தே செயல் பட்டுள்ளன என உணரமுடிகிறது.

எனவே சங்க காலத் தமிழகத்தில் நீதி வழங்கலில் அறத்தின் பங்களிப்பு மிகுதியாக இருந்துள்ளது எனத் துணியலாம்.

## அறமும் நீதியும் வேறுபடும் இடம்

நீதி செலுத்துவதற்கு அடிப்படையாக அறம் இருக்கிறது. என்றாலும் சில சூழ்நிலைகளில் அறமும் நீதியும் வேறுபடவே செய்கின்றன என்பதை அன்றாட வாழ்வியல் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. அவ்வாறான வாழ்வியல் வேறுபாடு களையே இப்பகுதி பதிவு செய்கிறது.

நீதிக் கருத்தியலோடு அதிகாரம் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் நீதியரசர்கள் தவறிழைப்பவர்க்குத் தண்டனை வழங்கித் தவற்றைத் தடுக்க முடியும். ஆனால் அறக்கருத்தியலோடு இத்தகைய அதிகாரம் இணைக்கப்பட வில்லை. எனவே தவறிழைப்பவர்க்கு அறவாணர்கள் வெறும் அறிவுரை மட்டுமே கூறமுடிகிறது.

மக்களுக்கு அறிவுறுத்தும் நிலையில்தான் அறக்கருத்தியல்கள் இருந்தன. ஆனால் நீதிக்கருத்தியல்கள் வலியுறுத்தும் நிலையில் இருந்தன. கட்டாயப் படுத்தப்பட்ட அறக்கருத்தியலாக நீதிக்கருத்தியல் இருந்துள்ளதை அறியலாம்.

அறம் அமைதியாக இருந்துள்ளது. ஆனால் நீதி அமைதியாக இருந்த தில்லை. வருபவர்களிடத்தில் உண்மை இருந்தால் நீதிக் கருத்தியல் செயல்படத் தொடங்கிவிடுகிறது. உரிய தீர்வழி அவர்களுக்குக் கிடைக்கும் வரையில் நீதி ஓய்வதில்லை.

அறம்பிறழ்தல் பழிக்குரிய செய்கை. ஆனால் தண்டனையற்ற செய்கை; நீதி பிறழ்வதும் நீதி மறுப்பதும் தண்டனைக்குரிய செய்கை ஆகும். இதனால் மக்கள் நீதி பிறழ்விலிருந்து முடிந்தளவு தம்மைக் காக்க முற்படுகின்றனர்.

இந்திய உச்சநீதிமன்ற வரலாற்றில் **ஷா பானு வழக்கு**[14] மிகவும் புகழ்பெற்ற வழக்குகளுள் ஒன்று. பொதுவாக விவாகரத்து பெறும் இசுலாமிய

பெண்களுக்கு ஆண்கள் ஜீவனாம்சம் எனப்படக்கூடிய வாழ்வாதாரத் தொகை வழங்குவது இல்லை. ஆனால் தனக்கு அத்தகைய வாழ்வாதாரத் தொகை பெறுவதற்கு உரிமை உண்டு எனவும் அதைப் பெற்றுத் தருமாறும் அப்பெண் உச்ச நீதிமன்றத்தை அணுகியபோது அவர்க்குச் சாதகமாகவே உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. தன் பராமரிப்பைச் சந்திக்கவியலாத பெண்ணுக்கு வாழ்வாதாரத் தொகை தராமல் இருப்பது அறமில்லை என்றாலும் அது நீதியின் பார்வைக்கு வந்தபோதே நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை இதன்மூலம் உணரலாம்.

சங்க காலத் தமிழகத்தில் சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துவது அறமாக இருந்தது. தந்தையை இருநாள் முன்பு நடந்த போரிலும் கணவனை ஒருநாள் முன்பு நடந்த போரிலும் இழந்த ஒருத்தி அன்று நடக்கவிருக்கும் போர்க்குத் தன் ஒரே ஆண்மகனை அனுப்பியமை சங்க காலத் தமிழகத்தில் நடந்துள்ளது. இதை புறநானூறு பதிவு[15] செய்துள்ளது. ஆனால் இன்றைய வளர்ச்சி பெற்ற நீதிக் கருத்தியல் சிறுவர்களைப் போரில் ஈடுபடுவதைத் தடுக்கிறது. போர்க்குற்றங் களுள் ஒன்றாக அதை ஐக்கிய நாடுகள் அவையம் முன்மொழிகிறது[16].

மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் தரவுகள் மூலம் நீதிக்கும் அறத்திற்குமான வேறுபாட்டை உணர முடிகிறது.

<u>அடிக்குறிப்புகள்</u>

1. ஜெயமோகன், “அறமெனப்படுவது யாதெனின்” available at https://www.jeyamohan.in/26673#.XWZdUeMzbIU accessed on 28.08.2019.
2. நற். 136:2-3.
3. நற். 68:2-3.
4. புறம். 55:12-14.
5. கலித். 62:14-15.
6. ஐங். 229:1-2.
7. அகம். 188, 4-5.
8. புறம். 35:14-16.
9. புறம். 39:8-10.
10. புறம். 71:7.
11. புறம். 224:4-5.
12. நற். 400:7-8.
13. அகம். 262:1-15.
14. 1985 (1) SCALE 767 = 1985 (3) SCR 844=1985 (2) SCC 556=AIR 1985 SC 945.
15. புறம். 279.
16. “Children and armed conflict”, UN General Assembly: Security Council, 2014, p.3. available at https://www.un.org/ga/search/view_doc.asp?symbol=A/68/878&Lang=E&Area=UNDOC accessed on 28.08.2018.

# இயல் 4: சங்க காலத்தில் பல துறைசார்ந்த நீதி மேலாண்மை

சங்ககாலத் தமிழகத்தில் பல துறைகளில் சிறப்பாக நீதி மேலாண்மை செய்யப்பட்டுள்ளது. அதனைச் சங்க இலக்கியங்கள் வழி நாம் அறிய முடிகிறது. முதன்மையான துறைகள் சிலவற்றை ஆய்வுக்கு உட்படுத்துகிறது இவ்வியல். அவை வருமாறு

- வணிகம் சார்ந்த நீதி மேலாண்மை
- அரசியல் சார்ந்த நீதி மேலாண்மை
- பொருளாதாரம் சார்ந்த நீதி மேலாண்மை
- போர் சார்ந்த நீதி மேலாண்மை

மேற்குறிப்பிட்டுள்ள துறைகள் சங்க காலத் தமிழகத்தில் பெற்றிருந்த வளர்ச்சி, அந்தத் துறைகளில் ஏற்பட்ட சிக்கல், அவற்றிற்கான நீதி வழங்கல் அல்லது நீதி நெறிமுறை வகுத்தல் முதலியவற்றை இப்பகுதி பதிவு செய்துள்ளது. இதன்மூலம் சங்ககாலத் தமிழகத்தில் பலதுறை சார்ந்த **நீதி மேலாண்மைக் குறித்த கருத்தியல் வரலாற்றை அறிந்துகொள்ள முடியும்**.

## வணிகம் சார்ந்த நீதி மேலாண்மை – (Justice Management in Business)

“ஒரு நாட்டின் தொழில்களிலே உழவும் வணிகமுமே தலைசிறந்தன என்பது அறிஞர் கொள்கை. ஒரு நாட்டின் மேம்பாட்டிற்கு இவ்விரு தொழில்களும் ஒருங்கு செழித்திருத்தல் இன்றியமையாததாகிறது. தமிழகமும் சங்க காலத்தில் இவ்விரு தொழிலையும் குறைவறப் பெற்றிருந்தது.”[1] என்பது அனைவரும் ஏற்கக் கூடிய வரலாற்று உண்மையாகும்.

சங்க காலத் தமிழகத்தில் பண்டமாற்று, காசு பரிமாற்றம் முதலியவை வணிக நடைமுறைகளாக இருந்துள்ளன. பாலைக் கொடுத்து அதற்கு ஈடாகத் தானியத்தைப் பெற்றுக் கொண்டமை;[2] தயிரையும் மோரையும் கொடுத்துத்

தானியத்தைப் பெற்றுக் கொண்டமை;[3] மான் இறைச்சியைக் கொடுத்து நெல் பெற்றுக் கொண்டமை;[4] மீனுக்கு ஈடாகப் பயற்றையும், நெல்லையும் பெற்றுக் கொண்டது;[5] நெல்லுக்கு ஈடாக உப்புப் பெற்றுக் கொண்டது;[6] உப்புக்கு ஈடாக நெல்லைப் பெற்றுக் கொண்டது;[7] யானைத் தந்தத்திற்கு ஈடாக மதுபானம் தர, பெற்றுக் கொண்டது;[8] வேடர்கள் புதுத்தேன் மற்றும் கிழங்கைக் கொடுக்கவும் உழவர்கள் அவல் மற்றும் கரும்பைக் கொடுக்கவும் அவற்றிற்கு ஈடாக வறுத்த மானிறைச்சியையும் மதுவையும் பெற்றுக் கொண்டமை;[9] முத்துச் சிப்பிகளுக்கு ஈடாகக் கள் வாங்கிக் கொண்டது;[10] யானைத் தந்தத்திற்கு ஈடாக நெல் பெற்றுக் கொண்டமை[11] எனச் சங்க காலத் தமிழகத்தில் பண்டமாற்று வணிகம் இருந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

பண்டமாற்று வணிகத்திற்கு மாற்றுமுறை வணிக நடைமுறையாகக் காசு, காணம், நாணயம் முதலியவற்றைப் பயன்படுத்தி வணிகம் செய்த நடைமுறையும் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது. நெய்யைப் பண்டமாற்று செய்யாமல் பொற்காசுக்கு விற்று அதைச் சேமித்துப் பின்னர் எருமைமாடு பசுமாடு கன்றுக் குட்டி ஆகியவை வாங்கப்பட்டுள்ளன.[12] பெண்கள் தெருக்களில் பூவைக் காசுக்கு விற்றுள்ளனர்.[13] இக்குறிப்புகளிலிருந்து சங்க காலத் தமிழகத்தில் நாணயத்தை ஊடுபொருளாகப் பயன்படுத்தி வணிகம் செய்யப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது.

“செங்கம் என்னும் ஊரில் ஈயக்காசுகள் வழங்கி வந்ததை அங்குக் கிடைத்த பழங்காசுகளிலிருந்து தெளிகிறோம். அந்த ஈயக் காசுகளில் பொறிக்கப் பட்டுள்ள பிராமி எழுத்துக்களால் அவை கடைச்சங்க காலத்தில் கி.பி.2-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வழங்கி வந்தவை என்பது தெரிகிறது. அந்தக் காசில் உள்ள எழுத்துக்கள் தேய்ந்து உருத்தெரியாமல் மழுங்கிப் போனமையால் அவ்வெழுத்துகளின் வாசகத்தை அறியமுடியவில்லை.”[14] எனும் குறிப்பிலிருந்து சங்க காலத் தமிழகத்தில் பொற்காசுகள் வெள்ளிக்காசுகள் மட்டுமன்றி ஈயக் காசுகளும் வணிக நடைமுறைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என அறியலாம்.

சங்க காலத் தமிழகத்தில் உள்ளூர் வணிகம் சிறப்பாக நடைபெற்றுள்ளது. வணிகத்திற்கெனத் தனியே இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதனை அங்காடி என அழைத்துள்ளனர். “அந்நாள்களில் கொடிகட்டி பறக்கவிடும் வழக்கம் கோயில் களிலும் திருவிழாக் காலங்களிலும் மட்டும் அல்லாமல் கடைவீதிகளிலும் இருந்திருக்கிறது.”[15] “தமிழ்நாட்டில் பகலிலேயன்றி இரவிலும் அங்காடியில் வாணிகம் நடைபெற்றதாம். இரவில் வாணிகம் நடைபெறும் இடம் **அல்லங்காடி** எனவும், பகலில் வாணிகம் நடைபெறும் இடம் **நாளங்காடி** எனவும் பெயர் வழங்கப் பெற்றன.”[16] இவ்வரலாற்றுக் குறிப்புகள் சங்க காலத் தமிழகத்தில் உள்ளூர் வணிகம் (local trade) சிறந்த கட்டமைப்புடன் நடைபெற்றுள்ளதை உறுதி செய்கின்றன.

சங்க காலத் தமிழகத்தில் ஓர் அரசின் நில எல்லைக்கு அப்பாற்பட்டும் வணிகம் நடைபெற்றுள்ளது. இதனை உறுதிப்படுத்த பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. “தரைவழியாக வட இந்திய நகரங்கட்குச் சென்று வாணிகம் செய்தவர் கட்குப் பெருங்குடி வணிகர் என்பது பெயர்.”[17] “தமிழ் வணிகர் கலிங்க நாட்டிலே போய் வாணிகம் செய்தனர். அந்த வணிகச் சாத்து கி.மு.300-150 வரையிலே தங்கியிருந்தது. நாளுக்கு நாள் தமிழ் வணிகரின் செல்வாக்கு வளம்பெறுவதைக் கண்ட கலிங்க வேந்தன் காரவேலன் தன்னுடைய ஆட்சிக்குத் தமிழ் வணிகர் களால் ஆபத்து ஏற்படுமோ என்றஞ்சி அந்த வணிகச் சாத்தினை அழித்தான் என்று அவனது **ஹத்தி கும்பா குகைக் கல்வெட்டு எழுத்துச் சாசனம்** அறிவிக்கின்றது.”[18] மகத நாட்டுடனும் தமிழர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். “மகத வினைஞர், மராட்டக் கம்மர், அவந்திக் கொல்லர், தண்டமிழ் வினைஞர்களோடு கூடிப் பணிபுரியும் யவனத் தச்சரை மணிமேகலை பாராட்டுகிறது.”[19] இந்தத் தொடர்பு வணிகத்திலும் இருந்துள்ளது. இதனை அகநானூற்றின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. ஆந்திராவில் உள்ள நகரின் பெயர் அமராவதி. “அமராவதி நகரில் உள்ள பௌத்தத்தூபி (கி.மு.200 முதல் கி.பி.200) யினைக் கட்டத் தமிழ்வணிகர்களும் (தமிள (தமிழ்) கண்ணன்,

இளங்கண்ணன், இவர்களின் தங்கை, நாகை) உதவி செய்துள்ளனர் என்ற **செய்தியினை 3½' உயரமும் 2 அடி 8 அகலமும் உள்ள ஒரு கல்லில் பிராமி எழுத்தில் எழுதப்பட்ட சாசனம்** தருகின்றது."[20] இவ்வரலாற்றுக் குறிப்புகள் மூலம் சங்க காலத் தமிழகத்தில் நில எல்லை கடந்த நாட்டிடை வணிகம் (Inter Kingdom trade beyond Land Boundary) நடைபெற்றுள்ளதை அறியமுடிகிறது.

கடல் எல்லை கடந்த வணிகமும் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது. "அண்மையில் உருவான ஒரு வரலாற்றுத் தத்துவப்படி, மெஸ்படோமியப் பள்ளத்தாக்கில், பழைய சுமேரிய நாகரிகத்தைத் தோற்றுவித்ததாகக் கூறப் படும், அப்பள்ளத்தாக்கின் தமிழர் குடியேற்றத்திற்கு நனிமிகப் பழைய காலத்தில், கடல்வழி, நில வழிகளில் நடைபெற்ற விரிவான பயணம் மட்டுமே வழி செய்தி ருக்க முடியும். **திருவாளர் எச். ஆர். ஹால் என்ற வரலாற்றுப் பேராசிரியர்** *சுமேரியர்களின் மொழி, செப்டிக், ஆரியம் மற்றும் பிற மொழிகளிலிருந்து வேறு படுவது போலவே, அவர்களின் உருவச்சிலை, மற்றும் படைப்பு ஒவியங்களில் அழுத்தமாகப் பதிக்கப் பெற்றிருக்கும், அவர்களின் இனச் சார்பு வாய்ந்த, மாதிரிப் படிவங்களும், அவர்களைச் சுற்றி வாழ்ந்திருந்த இனத்தவரின் மாதிரிப் படிவங்களிலிருந்து வேறுபடுகின்றன. ஐயத்திற்கு இடன் இன்றி, உறுதியாக மாதிரிப் படிவத்தில், அவை இந்திய இயல்புடையவே. இன்றைய சராசரி இந்தியன் ஒருவனுடைய முகஅமைப்பு ஒரு சிறிது ஐயத்திற்கும் இடமில்லாமல், முழுக்க முழுக்க ஆயிராமாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவராய, அவனுடைய திராவிட முன்னோர்களின் முக அமைப்பேதான்."*[21] என்னும் குறிப்பிலிருந்து தொல்பழங்காலத்திலிருந்து தமிழகம் அயல்நாடுகளுடன் கடல்வழி தொடர்பைக் கொண்டிருக்கிறது என்பதை அறிய முடிகிறது. இக்கடல் வழிப் பயணம் வணிகத் தொடர்புக்குப் பெரிதும் பயன்பட்டுள்ளது. சங்க காலத் தமிழகம் அரேபியர், உரோமாபுரி, கிரேக்கம் முதலிய நாடுகளோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்ததைப் பல்வேறு அகப்புறச் சான்றுகள் நிறுவுகின்றன. "தமிழ்நாட்டிற்கு வடமேற்கிலிருந்து வந்த அராபியர் சேர நாட்டின் முசிறித்

துறைமுகத்தில் வந்து தங்கினர். வாணிகம் செய்தனர். முசிறியில் இவர்கள் செய்த வணிகப் பகுதிக்குப் பந்தர் என்று பெயர்."[22] எனும் குறிப்பு நோக்கத்தக்கது. "One of the most important maps preserved from the ancient world is the Peutinger Table, a medieval copy of a fourth-century version of a Roman map of the world from the Augustan period. It shows the existence of a Temple of Augustus at Muziris, one of the main ports for the Roman trade on the south-west coast of India."[23] (தமிழாக்கம்: பிட்டிங்கர் டேபிள் எனும் மிக முதன்மையான வரைபடத்தின் மூலம் இந்தியாவின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள, உரோமாபுரியின் முதன்மையான வணிகத் தளங்களுள் ஒன்றான முசிறித் துறைமுகம் அருகில் அகஸ்டஸ் கோயில் இருந்த்தை அறிய முடிகிறது) மேற்காட்டியுள்ள வரலாற்றுக் குறிப்புகளின் மூலம் சங்க காலத் தமிழகத்தில் கடல் எல்லை கடந்த நாட்டிடை வணிகம் (Inter Kingdom Trade beyond Maritime Boundary) நடைபெற்றதை உறுதி செய்யமுடிகிறது.

இவ்வாறு சங்க காலத் தமிழகத்தில்

- உள்ளூர் வணிகம்
  (Local Trade)
- நில எல்லை கடந்த நாட்டிடை வணிகம்
  (Inter Kingdom trade beyond Land Boundary)
- கடல் எல்லை கடந்த நாட்டிடை வணிகம்
  (Inter Kingdom Trade beyond Maritime Boundary)

என வணிகநிலை மிகச் செழுமையாகவும் சிறப்பாகவும் இருந்துள்ளது. மேலும், இவையெல்லாம் **முறைப்படுத்தப்பட்ட வணிக அமைப்புகளாகத்** திகழ்ந்துள்ளன.

இத்தகைய வணிக நிலைப்பாடுகளில் சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன. சங்க காலத் தமிழகம் அவற்றை உரியவாறு தீர்த்து நுகர்வோர்க்கும் வணிகர்க்கும் எவ்வாறு நீதி வழங்கியுள்ளது எனும் ஆய்வு வினா முன்னிற்கிறது.

**நுகர்வோரைப் பாதுகாக்கும் நீதிக் கருத்தியல் பதிவு**

வணிகத்தின் இரு கண்களுள் ஒன்றாகத் திகழ்பவர் *நுகர்வோர்* எனலாம். கொடுக்கும் விலைக்கு உரிய பொருளை நுகர்வோர்க்குத் தர வேண்டும். தரப் படுவதும் தரமானதாக இருத்தல் வேண்டும். இந்தக் காலக்கட்டத்தில் இதனை நுகர்வோர் உரிமை (Consumer Rights) என அழைப்பதுண்டு. இவ்வுரிமையை நுகர்வோர்க்கு வழங்குவதே அடிப்படை நீதியாகும்.

இந்தியாவில் இயற்றப்பட்டுள்ள சட்டங்களான Standards of Weights and Measures Act, 1976[24] மற்றும் Consumer Protection Act, 1986[25] ஆகியவை நுகர்வோர் உரிமையைக் காக்க முனைகின்றன. இதுபோன்ற **நுகர்வோர்க்கான ஒரு பாதுகாப்பு உணர்வுக் கருத்தியல்** சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது எனக் கூறலாம்.

வணிகர்கள் நடுவுநிலையோடு செயலாற்றினர்; பழிக்கு அஞ்சும் நல் நெஞ்சி னராக இருந்துள்ளனர்; தம் பொருளையும் பிறர் பொருளையும் சமமாகக் கருதும் ஒப்புணர்வு கொண்டவராக இருந்துள்ளனர்; பொருட்களுக்கு உரிய விலையே அன்றி அதிக விலை பெறாமல் இருந்துள்ளனர்; கொடுக்கும் பொருளின் அளவும் தரமும் குறைவுபடாது பார்த்துக் கொள்ள வேண்டுமெனும் உணர்வுடையவராக இருந்துள்ளனர் எனப் பட்டினப்பாலை பதிவு செய்துள்ளது.

“நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது”[26]

இதிலிருந்து சங்க காலத் தமிழகத்தில் வணிகர்களின் பண்பு எவ்வாறு இருந்தது எனும் கருத்தியலை அறியமுடிகிறது. இக்கருத்தியல் அக்காலத்து மக்களிடம் நன்கு பதிந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. மக்களின் வாழ்வியல் வழி-காட்டியான திருக்குறளும் நுகர்வோரைப் பாதுகாக்கும் நீதிக் கருத்தியலைப் பதி விட்டுள்ளது.

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்"[27]

வணிகம் செய்யக்கூடிய வணிகர்கள் தமமுடைய நலனில் எவ்வளவு அக்கறை கொள்வரோ அவ்வளவு அக்கறை நுகர்வோரிடத்திலும் செலுத்துதலே வாணிகம் பேணக் கூடிய வழிமுறையாகும் என்கிறது இக்குறட்பா. இதன்மூலம் *'உரிய விலையில் தரமும் அளவும் குறைபடாதபடிக்குப் பொருள் விற்கப்படுவதை உறுதிப்படுத்தல்' நுகர்வோரின் நுகர்வுரிமையைக் காக்கும்படியான, 'வணிகம் சார்ந்த நீதிக் கருத்திய'லாகச் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது* என்பதை உறுதி செய்யலாம்.

**வணிகர்களைப் பாதுகாக்கும் நீதிக் கருத்தியல் பதிவு**

இயற்கைச் சீற்றத்தாலும் கொள்ளைக் கூட்டத்தாலும் வணிகர்களுக்குப் பெருஞ்சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் பேரிழப்பை வணிகர்கள் சந்திக்க நேரிட்டுள்ளது. இயற்கைச் சீற்றத்திலிருந்து வணிகர்களைக் காப்பாற்ற முடியாது என்றாலும் கொள்ளைக் கூட்டத்தினரிடமிருந்து வணிகர்களை அரசு காப்பாற்ற முடியும். அவ்வாறு காப்பாற்றுவது அரசின் நீதி சார்ந்த கடமையாகும். சுங்க வரி வணிகர்களிடமிருந்து பெறுவதால் அவர்களின் தொழிலுக்கு இடையூறு எதுவும் நேராமல் காக்க வேண்டிய பொறுப்பு அரசுக்குரியதாகும். தற்காலத்தின் வளர்ச்சி பெற்ற நீதியியல் கோட்பாடுகள் இதனை வலியுறுத்திக் கூறுகின்றன.

இன்றைய சூழலிலும் கூட தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்க வரி வாங்கப் படுவது நடைமுறையில் உள்ளது. சுங்க வரி வாங்கும் நிறுவனமே வரிக்குட்பட்ட சாலையின் பராமரிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது விதி. ஒருவேளை அந்த நிறுவனம் அந்தப் பராமரிப்பை மேற்கொள்ளவில்லை யெனின் பயணி களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கருதப்படும். இதனை உறுதிப்படுத்தும் விதமாக, சாலைப் பயன்பாட்டிற்காகச் சுங்கம் பெறப்பட்டாலும் தரமான மற்றும் தூய்மையான சாலையாக அவற்றைப் பராமரிக்க வேண்டியது அரசின் கடமை யாகும் என உச்ச நீதிமன்றம் ஒரு வழக்கில் சுட்டிக் கூறியுள்ளது. இத்தீர்ப்பை வரவேற்ற Times of India நாளிதழ் பின்வரும் கருத்தினைப் பதிவு செய்துள்ளது. “The court is right when it says that the NHAI or private concessionaries should not be allowed to collect the normal toll if the relevant road is a state of disrepair. After all, *the toll is a price that the road user is paying in return for the assurance that he will get a well-maintained road to drive on. Where that assurance is not met, the very basis for the toll ceases to exist.*”[28] (சுருக்கத் தமிழாக்கம்: முறையாகப் பராமரிக்கப்படும் சாலையை எதிர்பார்த்தே சாலைப் பயன்படுத்துபவர்கள் சுங்கம் செலுத்துகிறார்கள். ஆனால் அந்தக் குறைந்தளவு எதிர்பார்ப்பே நிறைவேறாத போது சுங்கம் பெறுவதற்கான அடிப்படையே தகர் வதாகும்.) இதன்மூலம் சுங்கம் பெறுவது, பயனாளிகளுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கே எனும் கருத்தியல் உறுதியாகிறது. தற்காலத்தில் வளர்ச்சி பெற்றிருக்கும் இந்நீதிக் கருத்தியல் சங்க காலத் தமிழத்திலும் இருந் துள்ளது.

வணிகர்களிடம் சங்க காலத் தமிழக அரசுகள் சுங்கவரி பெற்றுள்ளன. சுங்கம் பெற்றுக் கொள்வதோடு அரசின் பணி நின்றுவிடவில்லை. சுங்கம் வரி செலுத்திய வணிகர்களின் தொழிலுக்கு இடையூறு நேராமலும் அவர்களின் பொருள்கள் களவு போகாமல் பாதுகாத்துத் தருவதுமான கடமையையும் சங்க கால அரசுகள் மேற்கொண்டுள்ளன என அறிய முடிகிறது.

வணிகர்கள் பொருட்களை ஏற்றிக் கொண்டு செல்லுதலை *வணிகச் சாத்து* என அக்காலத்தில் குறிப்பிட்டனர். வணிகச் சாத்தொன்றைக் கொள்ளையர்கள் வழிமறித்து நன்கு கொள்ளையடித்துள்ளனர்.[29] "தரை வாணிகத்தில் வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் தொல்லை கொடுத்தனர்."[30] இத்தகைய கொள்ளையர் களிடமிருந்து வணிகப்பொருளைக் காப்பதே அரசு செலுத்தும் நீதியாக இருக்க முடியும்.

வணிகப் பொருளைக் காப்பது நீதி செலுத்தல் பொருட்டே. ஏனெனின் சுங்க வரி பெறப்பட்டுள்ளது. சுங்க வரி பெறுகிறபோது அதனைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பும் அரசைச் சார்கிறது. இதிலிருந்து தவறுவது வணிகர்களுக்கு அநீதி வழங்குவதாகக் கருதப்பட்டது.

வெளிநாடுகளிலிருந்து வரும் பொருள்களுக்கும் உள்ளூர் வணிகப் பொருள்களுக்கும் உல்கு வரி எனப்படும் சுங்க வரி வாங்கப்பட்டுள்ளது. சுங்க வரி வணிகப்பொருள்களுக்கு வாங்கப்பட்டுள்ளபடியால் அப்பொருள்களைப் பாதுகாக்கும் பொறுப்பு குறிப்பிட்ட அரசைச் சார்கிறது. அப்பொறுப்பைத் தட்டிக் கழிப்பது அரசியல் முறையன்று என்று சங்ககாலத் தமிழகம் உணர்ந்துள்ளது. எனவேதான் வணிகப் பொருள்களைப் பாதுகாக்க பண்ட சாலைகள் அமைத்து அவற்றிலுள்ள வணிகப்பொருட்களுக்குக் கடுங்காவல் அமைத்துப் பாதுகாத்துள் ளனர். அக்கடுங்காவலை '**அருங்கடிப் பெருங்காப்பு**'[31] எனச் சிறப்பித்துக் கூறி யுள்ளனர்.

இதுமட்டும் இல்லாமல், சங்க காலத் தமிழக அரசுகள் வணிகச் சாத்துக்குப் பாதுகாவல் வழங்கியுள்ளன. இதனை பெரும்பாணாற்றுப்படை

> "தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
> உல்குடைப் **பெருவழிக் கவலை காக்கும்**
> **வில்லுடை வைப்பின்** வியங்காட்டியவின்"[32]

எனப் பதிவு செய்கிறது. வணிகச் சாத்துப் பாதுகாப்பாகச் செல்ல ஆங்காங்கே வில் ஏந்திய வீரர்களைப் பாதுகாப்பிற்கு நிறுத்தி வைத்திருந்தது அக்கால அரசு. மேலும், பயணப்படுவதற்கான வழிகளையும் செப்பமாய்ப் பராமரித்துள்ளது என்பதையும் அறியமுடிகிறது.

பண்டசாலை அமைத்து வணிகர்களின் பொருள்களைப் பாதுகாப்பதும் வீரர்களை அமர்த்திப் பொருட்களைக் கொள்ளையர்களிடமிருந்து பாதுகாப்பதும் அவர் தொழில் சிறக்க நல்ல வழித்தடங்களை அமைத்துக் கொடுப்பதும் சுருங்கச் சொல்லின் '*பாதுகாப்பு உணர்வும் தொழில் சிறக்க பொதுவசதியும் ஏற்படுத்தித் தருவதே*' வணிகர்களைப் புரக்கும் நீதிக் கருத்தியலாகச் சங்க காலத் தமிழகத்தில் திகழ்ந்தது எனலாம்.

## அரசியல் சார்ந்த நீதி மேலாண்மை

வலிமை பெற்றவன் தலைமைப் பொறுப்பேற்கும் நிலைமையே நாடோடி-களாக அலைந்து கொண்டிருந்த காலத்தில் இருந்தது. குழு குழுவாகச் செயல்-பட்டு மன்னராட்சிக் காலம் மலர்ந்த பின்னர் வலிமை பெற்றவன் தலைமைப் பொறுப்பேற்கும் நடைமுறை மாறிவிட்டது எனலாம். சங்க இலக்கியச் சான்றுகள் கொண்டு, பழந்தமிழகத்தில் மன்னராட்சிக் காலத்தில் **அரசுரிமை மாற்றம் தொடர்பாகக் கடைப்பிடிக்கப்பட்ட நீதிக் கருத்தியல்** என்னவாக இருந்திருக்கக் கூடும் என்பதை இப்பகுதி ஆய்வின் அடிப்படையில் கண்டறிய முற்படுகிறது. அரசியல் நிலைத்தன்மையே அதன் தலைவனைச் சார்ந்தது என்பர். எனவே அரசியலில் 'அரசுரிமை மாற்றம் தொடர்பாக நிலவிய நீதிக் கருத்தியல்' மிக இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது.

### பன்னாட்டளவில் அரசுரிமை மாற்ற நடைமுறைகள்

தலைமைப் பொறுப்பில் இருக்கும் மன்னர் இறந்துவிட்டாலோ அல்லது தன் பதவியிலிருந்து விலகிக்கொண்டாலோ அப்பொறுப்பிற்கு உரியவரைத்

தேர்ந்தெடுப்பர். மன்னர் பதவி விலகுவதற்கு முன்னரே அடுத்த வாரிசினைப் பொதுவாகத் தேர்ந்தெடுத்து விடுவது வழக்கம். ஒருவேளை அடுத்த வாரிசைத் தேர்ந்தெடுக்க முடியாமல் இறந்துவிட்டால், மன்னரின் குருதிவழி உறவினர் களுள் ஒருவரைத் தலைமைப் பொறுப்புக்கு உரியவராக்குவது வழக்கமாக இருந் திருக்கிறது.

**தலைப்பிள்ளை முறை** (Primogeniture)[33]

மன்னர் அடுத்த வாரிசை அறிவிக்காமல் இறந்துவிட்டாலோ அல்லது பதவி விலகிவிட்டாலோ மன்னரின் பிள்ளைகளுள் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். அவ்வாறு தேர்ந்தெடுக்கும் போது மன்னர் விட்டுச் சென்றுள்ள ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் என வகைப்படுத்துவர். பெண்பிள்ளை களைக் காட்டிலும் அனைத்து ஆண்பிள்ளைகளுக்கே அரசுரிமை மாற்றத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டது. பெண்பிள்ளையை விட ஆண்பிள்ளை வயதில் இளையவனாக இருந்தாலும் ஆண் பிள்ளைகளுக்கே பெண்களைக் காட்டிலும் முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

அடுத்து, ஆண்பிள்ளைகளை முறைவழி பிறப்பு எனவும் முறை அல்வழி பிறப்பு எனவும் வகைப்படுத்தப்படும். முறையல்வழி பிறந்த ஆண்பிள்ளைக் காட்டிலும், முறைவழி பிறந்த ஆண்பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப் பட்டது. இங்கும் வயது வரம்பு முதன்மைப்படுத்தப்படாமல் பிறப்பு மட்டுமே முதன்மைப்படுத்தப்பட்டிருந்தது. எனவே முறையல்வழி பிறந்த ஆண்பிள்ளை மூத்தவனாக இருந்த போதும் அவனால் ஆட்சிப் பொறுப்புக்கு வரமுடியாது. முறைவழி பிறந்த ஆண்பிள்ளை இளையவனாக இருந்த போதிலும் அவனையே ஆட்சிப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுப்பர்.

அடுத்து, முறைவழி பிறந்த ஆண்பிள்ளைகளை வயது அடிப்படையில் வகைப்படுத்துவர். அவர்களுள் மூத்த ஆண்பிள்ளைக்கே அரசுரிமை மாற்றம்

செய்யப் பட்டிருந்தது. இனி, மேற்சுட்டிய வரிசையில் முறைவழி ஆண்பிள்ளை இல்லாத போது முறையல்வழி ஆண்பிள்ளைக்கு அரசுரிமை மாற்றம் செய்யப்படும். முறையல்வழி ஆண்பிள்ளையும் இல்லாத போதே பெண்பிள்ளைகளுக்கு அரசுரிமை மாற்றம் செய்யப்பட்டது.

**நேரிய தலைப்பிள்ளை முறை** (Absolute Primogeniture)[34]

தலைப்பிள்ளை முறையை எவ்விதப் பாலினப் பாகுபாடும் இல்லாமல் மிக நேர்த்தியாக நாடுகள் சில கடைப்பிடித்தன. அம்முறைமை நேரிய தலைப்பிள்ளை முறை என்று அழைக்கப்பட்டது. அதாவது, தலைமைப் பொறுப்புக்குரிய அடுத்த வாரிசை அறிவிக்காமல் மன்னர் இறந்துவிட்டால், மன்னர் விட்டுச்சென்றுள்ள அனைத்துப் பிள்ளைகளையும் பாலினப் பாகுபாடின்றி வயதின் அடிப்படையில் வரிசைப்படுத்துவர். அவர்களுள் (ஆண் அல்லது பெண்) மூத்தப் பிள்ளைக்குத் தலைமைப் பொறுப்பு வழங்கப்படும்.

பெண்பிள்ளைக்குத் திருமணம் நடைபெற்ற பின்னரும் அவரின் ஆட்சிப் பொறுப்பைக் கணவருக்குப் பெரும்பாலும் மாற்றுவதில்லை. ஆட்சிப் பொறுப்பி லிருக்கும் பெண்பிள்ளை இறந்த பின்னர் அவரின் கணவர் உயிரோடு இருந்தால் ஆட்சிப் பொறுப்பு முதலில் அவரைச் சென்றடையும். அதன் பின்னர்தான் அம்மையாரின் பிள்ளைகளைச் சென்றடையும் நடைமுறை இருந்துள்ளது.

**உடன்பிறப்பு முறை** (Agnatic Seniority)[35]

மன்னர் இறந்துவிட்ட பின்னர் அவரோடு உடன்பிறந்தவர்களுள் மூத்தவர்க்கு அரசுரிமை மாற்றம் செய்யப்படும் வழக்கமும் இருந்திருக்கிறது. இதனால் ஒரு தலைமுறையில் இருக்கும் உடன்பிறந்த அனைத்து ஆண்வாரிசுகளும் இறந்த பின்னரே அடுத்த தலைமுறையினர்க்கு அரசுரிமை

மாற்றம் செய்யப்பட்டது. இந்த நடைமுறையில் பெண்பிள்ளைகளும் அவர்தம் வாரிசுகளும் முழுமையாக விலக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

மேற்சுட்டிய இம்மூன்று நடைமுறைகளே பெரும்பாலும் அரசுரிமை மாற்ற விதியாகப் பன்னாட்டளவில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

**தமிழகத்தில் அரசுரிமை மாற்றமும் நீதிக் கருத்தியலும்**

சங்க இலக்கியக் குறிப்புகளைக் கொண்டு பழங்காலத் தமிழகத்தில் அரசுரிமை எவ்வாறு மாற்றப்பட்டது என்பதை அறிய முடிகிறது. அவ்வாறு அரசுரிமை மாற்றத்தில் எழுந்த சிக்கலும் அச்சிக்கலைத் தீர்க்க கடைப்பிடிக்கப் பட்ட நீதிக் கருத்தியலும் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

**பழவிறல் தாயம்**

> “மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
> பால்தர வந்த பழவிறல் தாயம்”[36]

தந்தை மூத்து இறந்தபின்னர் அவன்வழித் தோன்றும் அரசுமுறை என்கிற தாய முறையை ‘பழவிறல் தாயம்’ என்று புறநானூற்றில் சோழன் நலங்கிள்ளி குறிப்பிட்டுள்ளார். முன்னர்ச் சுட்டியது போன்றே தமிழகத்திலும் தலைப்பிள்ளை முறை நடைமுறையில் இருந்திருக்கிறது என்பதை இப்புறநானூற்று வரிகள் மெய்ப்பிக்கின்றன. மன்னரின் காலத்துக்குப் பின்னர் அவரின் ஆண் பிள்ளை களுள் தலைப்பிள்ளைக்கு அரசுரிமை மாற்றம் செய்யப்படுவதே அரசுரிமை மாற் றத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நீதியாக இருந்துள்ளது.

**பெண்பிள்ளைகளும் அரசுரிமை மாற்றமும்**

சங்க காலத் தமிழகத்தில் மன்னரின் பெண்பிள்ளைகளுக்கு அரசுரிமை மாற்றம் நேரடியாகச் செய்யப்பட்டதற்கான குறிப்புகள் கிடைக்கவில்லை. ஒரு இளவரசனுக்குத் துணைவியாகி அங்குப் பட்டத்து அரசியாகத் திகழ்வதே அவர் களுக்கான அரசுரிமையாக இருந்தது. பட்டத்து அரசி உயிரோடு இருக்கும் போது அரசர் இறக்க நேரிட்டால் அரசுரிமை உயிரோடு இருக்கும் அரசியார்க்கு மாற்றம் செய்யப்படுவதில்லை. மாறாக அரசரின் ஆண்பிள்ளைகளுள் தலைப் பிள்ளைக்கே அரசுரிமை செல்லும்.

“ஓரரசனுக்குப் பின் அரியணை யேறற்குரியவன், அவ்வரசனுடைய கோப் பெருந்தேவியின் மூத்த மகனாவன். மூத்தமகன் இறந்துவிடின் இளையமகனும், ஆண்மக்கள் இல்லாதபோது மகள்வழிப் பேரன்மாருள் மூப்புடையவனும், பேரன் மாரும் இல்லாதபோது கோப்பெருந்தேவிக்கு அடுத்த தேவியின் புதல்வருள் மூப்புடையவனும், அவரும் இல்லாத போது பிற நெருங்கிய உறவினருள் தகுதி மிக்கவனும், அரியணையேறுவர்”[37] எனத் தேவநேய பாவாணர் குறிப்பிட்டுள் ளார். இதில் அனைத்து அரசுரிமையும் ஆண்மக்களுக்கே செல்வதன்றிப் பெண் மக்களுக்குச் செல்வதில்லை என்பது தெளிவாகிறது.

**பழவிறல் தாயத்திற்கு விதிவிலக்கு**

பழவிறல் தாயம் என்பதுதான் நடைமுறையில் இருந்த அரசுரிமை மாற்றச் சட்டவியல் எனினும் அதற்கு விதிவிலக்காக மற்றுமொரு கருத்துருவும் சங்கக்காலத்தில் இருந்துள்ளது. ‘வயது அடிப்படையிலான அரசுரிமை மாற்றம்’ என்பதற்குப் பதிலாகத் ‘**திறமை அடிப்படையிலான அரசுரிமை மாற்றம்**’ எனும் கருத்தியலும் சங்க காலத் தமிழகத்தில் உருவெடுத்துள்ளது.

"குடிபுர விரக்குங் கூரில் ஆண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்றாள்
**விழுமியோன் பெறுகுவ னாயின்** ஆழ்நீர்
அறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை
என்றூழ் வாடுவறல் போல நன்றும்
நொய்தா லம்ம தானே மையற்று
விசும்புற வோங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்தர் அரசுகெழு திருவே."[38]

எனச் சோழன் நலங்கிள்ளி பழவிறல் தாயம் மூலம் ஒருவன் அரசுரிமை பெறுவதைக் காட்டிலும் சிறந்த (விழுமியோன்) ஆண்மையாளன் பெறுதலே சிறப்புக் குரியது எனத் தன் எண்ணத்தைப் பதிவு செய்திருக்கிறான்.

"ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்"[39]

என ஆரிய படைகடந்த நெடுஞ்செழியன் பழவிறல் தாயம் மூலம் மூத்தோனுக்கு அரசுரிமை மாற்றம் செய்யப்படாது என்றும், அவன் உடன்பிறந்தோருள் **சீரிய அறிவுடையோனுக்கே அரசுரிமை மாற்றம் செய்யப்படும்** எனத் தெளிவாகவும் அழுத்தமாகவும் குறிப்பிட்டுள்ளான்.

இத்தகைய பழவிறல் தாய முறைக்கான விதிவிலக்கு பிற நாட்டின் (பழங்கால) அரசுரிமை மாற்றச் சட்டவியலில் காண்பது அரிது. அதாவது பிறப்பின் அடிப்படையில் அமைந்த அரசுரிமையைக் காட்டிலும் திறமை அடிப்படையிலான அரசுரிமை சிறந்தது; அதுவே மக்களுக்கு ஆற்றும் நீதி எனும் கருத்தியல் மாற்றம் சங்க காலத் தமிழகத்தில் திகழ்ந்துள்ளது.

**வயது வரம்பு**

அரசுரிமை எந்த வயதில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பது குறித்து வெளிப்படையாக எவ்விதக் குறிப்புகளும் இல்லை. எனினும், உய்த்துணரும் வகையில் குறிப்பு ஒன்று சங்க இலக்கியங்களில் உண்டு.

"பரந்துபடு நல்லிசை எய்தி, மற்று நீ
உயர்ந்தோர் உலகம் எய்திப்; பின்னும்
ஒழித்த தாயம் அவர்க்குஉரித்து அன்றே"[40]

எனப் புல்லாற்றூர் எயிற்றியனார், கோப்பெருஞ்சோழனை நோக்கி வினவியுள் ளார். கோப்பெருஞ்சோழன் தன் மகன்கள் இருவரை எதிர்த்துப் போரிட முனைந்த போது இச்செய்யுள் பதிவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேற்சுட்டிய வரிகளில் அரசுரிமை மாற்றம் குறித்த செய்தி பொதிந்துள்ளது. கோப்பெருஞ் சோழன் இறந்த பின்னர்த் தானாகவே அரசுரிமை (தாயம்) அவனின் மகனைச் சென்றடையும் எனும் செய்தி கிடைக்கப் பெறுகிறது. அதாவது அரசப் பொறுப் பிலிருக்கும் மன்னன் இறந்த பின்னர்தான் அடுத்த தலைமுறைக்கு அரசுரிமை மாற்றப்படுகிறதே தவிர வயது வரம்பு எதுவும் காரணமாக அமையவில்லை என்பதைத் தெளியலாம்.

இதே அரசனின் வரலாற்றின் மூலம் இன்னொரு செய்தியும் கிடைக்கிறது. அதாவது, புல்லாற்றூர் எயிற்றியனார் சொல் கேட்டுத் தன் மகன்களுக்கு அரசுரி மையைத் தந்து பின்னர் வடக்கிருந்து உயிர்விடுகிறான் கோப்பெருஞ் சோழன். இதிலிருந்து, மன்னன் கருதும் எந்நேரத்திலும் தன்னுடைய அரசுரிமையை அடுத்த தலைமுறை எய்துமாறு செய்வதும் அரசுரிமை மாற்றத்தில் நீதியாக முறையாக சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது என்பதை உறுதிபடுத்த முடிகிறது.

"கிண்கிணி களைந்த கால் ஒண் கழல்தொட்டுக்
குடுமி களைந்த நுதல்வேம்பின் ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி,
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்க அவன் கண்ணி! தார்பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே; பால்விட்டு
அயினியும் இன்றுஅயின் றனனே; வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே; அவரை
அழுந்தப்பற்றி அகல்விசும்பு ஆர்ப்புஎழக்
கவிழ்ந்துநிலம் சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும்அதனினும் இலனே!"[41]

எனும் புறநானூற்றுச் செய்யுள் **பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப்** பற்றியதாம். இச்செய்யுளின் மூலம் மிக இளமையிலேயே அவன் போர் புரிய சென்றமை விளங்குகிறது. 'தாலி களைந்தன்றும் இலனே' எனும் தொடர் அவனைச் சிறுவனாகக் காட்டுகிறது.

மேலும் 'பால்விட்டு அயினியும் இன்று அயின்றனனே' எனும் தொடர் குழந்தைப் பருவத்திலிருந்து அவன் தற்போதுதான் சிறுவன் பருவத்திற்கு வந்துள்ளான் என்பதைச் சுட்டி நிற்கிறது. ஆக, சிறுவனாக இருக்கும் போதே அவனுக்கு அரசுரிமை தரப்பட்டிருப்பதைக் கருத முடிகிறது. இவ்வரலாறும் அரசுரிமைக்கு வயது வரம்பு உள்ளதாகத் தெரிவிக்கவில்லை. எனவே, சங்க இலக்கியக் குறிப்புகளின் மூலம் சங்க காலத் தமிழகத்தில் '**அரசுரிமை மாற்றத்திற்கு வயது வரம்பு எதுவும் இல்லை**' எனலாம்.

**தாய்வயிற்றிருந்து தாயம் எய்தல்**

மிக முற்போக்கான அரசுரிமை மாற்ற நடைமுறை ஒன்று சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது என்பதைப் பொருநராற்றுப்படை மூலம் அறியலாம். பொருநராற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் சோழன் கரிகாலன் ஆவான். அரசனின் வரலாற்றைச் சொல்லும் முடத்தாமக்கண்ணியார், சோழன் கரிகாலன் அரசுரிமை பெற்ற வரலாற்றுக் குறிப்பினோடு சேர்த்துச் சட்டவியல் குறிப் பினையும் பதிவு செய்துள்ளார். அது வருமாறு,

> "உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்
> முருகற் சீற்றத் துருகெழு குருசில்
> தாய்வயிற்று இருந்து தாயம் எய்தி
> எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்ப"[42]

அரசப்பொறுப்பிலிருந்த மன்னன் வாரிசின்றி இறந்து விடுகிறான். ஆனால், அவனுடைய வாரிசு கருவாக மனைவியின் வயிற்றில் இருக்கிறது. இந் நிலையில் அரசுரிமை யாருக்குச் சொந்தம்? எனும் மிக நுணுக்கமான ஆய்வு வினா எழுகிறது. அரசுரிமை கோர பிறக்கவிருக்கும் குழந்தை ஆணாக இருக்க வேண்டும். கருவிலிருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என எப்படித் தீர்மானிக்க இயலும்? இன்னும் பிறக்காத குழந்தைக்கு எவ்வாறு அரசுரிமை தர இயலும்? குழந்தை பிறக்கும் வரை யார் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று வழிநடத் துவது? என்பனவெல்லாம் மேற்சுட்டிய வினாவின் தொடர்ச்சியாக எழும் ஆய்வுக்குரிய வினாக்களாம்.

'தாய்வயிற்று இருந்து தாயம் எய்தி' எனும் வரி மிகவும் கருதத்தகது. அதாவது, சோழன் கருவிலிருக்கும் போதே அரசுரிமை பெற்றுவிட்டான் என்பதைக் குறிக்கிறது இத்தொடர். இதன்மூலம், பிறந்த குழந்தை ஆணாக

இருந்தால் அந்தக் குழந்தைக்கு அரசுரிமையை ஒப்படைப்பதுதான் முறையான நீதியாகும் என்பதைச் சங்க காலத் தமிழகம் அறிந்திருந்தது எனலாம். மேலும் அதுவரை மன்னனின் உடன்பிறந்தாரோ அல்லது அமைச்சர் குழுவோ அல்லது படைத்தலைவரோ நாட்டின் அரசப் பொறுப்பைத் தற்காலிகமாக ஏற்றிருப்பர்.

ஆண்குழந்தை பிறந்தவுடனேயே அரசுரிமை மாற்றம் செய்யப்படும். ஏனெனின் முன்னர்க் கண்டது போலப் பழங்காலத் தமிழகத்தில் அரசுரிமை மாற்றத்திற்கு வயது வரம்பு இன்மையால் பிறந்த உடனேயோ அல்லது சிறுவனாக வளர்ச்சி பெற்ற பின்போ அரசுரிமை மாற்றம் நிகழும் என்பது விளங்குகிறது. அதுவரை அப்பொறுப்பில் இருப்பவரின் அதிகாரம் இடைக்காலத்திற்கு மட்டுமேயாம். கருவில் இருக்கும் குழந்தைக்கும் அநீதி வழங்கப்படக் கூடாது எனும் தெளிவான பார்வை ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டமை தமிழ்ச்சமூகத்தின் தனிச் சிறப்பாம்.

கருவிலிருக்கும் குழந்தைக்கு அரசுரிமை உண்டு என்று வேறு எந்த நாட்டினது பழங்காலச் சட்டவியல் கோட்பாடுகளிலும் குறிக்கப்படவில்லை என்பது கூடுதல் தனிச் சிறப்புக்குரியதாம்.

“The unborn royals were increasingly granted the right to succession. In 1284, King of Scotland Alexander III designated his future unborn children as heirs presumptive by the act of parliament to avoid potential squabbles among loyal descendants of his lineage. The 1315 entail of Scottish king Robert the Bruce allowed the unborn collateral individuals to be in line for the throne beyond his brother Edward and daughter Marjorie Bruce. After the death of Albert II of Germany in 1439, his then-unborn son Ladislaus the Posthumous inherited his father's sovereign rights. In 1536, the British Parliament gave the unborn children of Henry VIII and Jane Seymour precedence in the line of

royal succession."[43] எனும் குறிப்பிலிருந்து கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரை பிறக்கப்படாத கருவிலிருக்கும் குழந்தையின் உரிமை பேசப் படவில்லை. கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதலே கருவிலிருக்கும் குழந்தையின் உரிமை அரசுரிமை மாற்றத்தில் நிலைநாட்டப்படுகிறது. ஆனால் இவற்றிற்கு முன்னோடியாகச் சங்க காலத் தமிழகம் *கருவிலிருக்கும் பிறக்கப்படாத குழந்தைக்கு உரிய அரசுரிமையைப் பாதுகாத்து வழங்கி அரசியல் நீதி செலுத்தியிருப்பதை* அறிந்து கொள்ள முடிகிறது.

சங்க இலக்கியக் குறிப்பிலிருந்து தமிழகத்தில் அரசுரிமை மாற்றம் தொடர்பான சட்டவியல் குறிப்புகள் கீழ்க்காணுமாறு அமைந்துள்ளன.

- பழவிறல் தாய நடைமுறைப்படி மன்னனுக்குப் பிறகு அவன் மகன்களுள் மூத்தோனுக்கு அரசுரிமை மாற்றம் செய்யப்படுவதே அரசியல் நீதியாக இருந்தது.
- பழவிறல் தாய நடைமுறைக்கு விதிவிலக்காகத் திறமை அடிப்படையில் இளையோனுக்கும் அரசுரிமை மாற்றம் செய்யலாம் எனும் கருத்தியல் உருவாக்கம் பெற்றுள்ளது. நேரடியாக மக்கள் பயன்பெறுவர் என்பதால் இக்கருத்து வரவேற்புக்குரியதாய் அமைந்தது.
- மன்னனின் பெண்பிள்ளைகளுக்கு அரசுரிமை கோரும் உரிமை இல்லை. இதில், பெண்களுக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது.
- அரசுரிமை மாற்றம் செய்ய வயது வரம்பு எதுவும் இல்லை.
- வாரிசு கருவிலிருக்கும் போது மன்னன் இறக்க நேரிட்டால் கரு உயிரோடு பிறப்பின், அந்த ஆண் குழந்தைக்கே அரசுரிமை உரியது. இடைக்கால ஆட்சி புரிந்தவர் கருவிலிருந்த குழந்தை பிறந்த பின்னர்க் குழந்தைக்குரிய ஆட்சியை ஒப்படைத்ததன் மூலம் அக்குழந்தையின் அரசுரிமை நீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.

## பொருளாதாரம் சார்ந்த நீதி மேலாண்மை

மக்கள் தனித்தனியாக வாழ்ந்து பின்னர்க் கூட்டமாக வாழ்வதின் பயனை உணர்ந்தனர் என்று மானுடவியல் வரலாறு கூறுகிறது. கூட்டமாக வாழ்கின்ற போது தலைவர் இருந்தாக வேண்டிய கட்டாயத்தை அறிந்து வீரதீரம் நிறைந்த ஒருவரைப் பலர் சேர்ந்து தேர்ந்தெடுத்துள்ளனர். அவ்வாறு தேர்ந்தெடுத்த நபர்க்குக் கூட்டத்தைப் பாதுகாப்பதற்காகப் பொதுமக்களுக்கு வழங்கப்படாத அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. சுருங்கச் சொல்லின் மக்கள் தங்களுடைய அரசியல் உரிமைகளை அந்தத் தலைவரிடம் ஒப்படைத்தனர். மக்களைப் பகைவர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும் என்பதே அந்தத் தலைவரின் தொடக்கக்கால முதன்மைப் பணியாகத் திகழ்ந்தது. காலம் செல்லச் செல்ல அந்தக் குறிப்பிட்ட குழுவினருக்குள் *ஏற்படும் சிக்கல் தகராறுகளைத் தீர்த்து வைக்க வேண்டிய பணியும்* சேர்ந்து கொண்டது. அடுத்த கட்டமாகக், குழுவினர் பயன்படுத்தக் கூடிய பொதுவசதிகள் சிலவற்றைச் செய்து தர வேண்டிய பொறுப்பும் அந்தத் தலைவரை வந்தடைந்தது எனலாம். மக்களின் பொதுப் பயன்பாட்டுக்காகச் செய்து தரப்படும் வசதிகளுக்குப் பொருள் தேவைப்பட்டது. தனது சொந்தப் பொருளாதாரத்தைக் கொண்டு அந்த வசதிகளை நிறைவு செய்வது எந்தத் தலைவர்க்கும் இயலாத ஒன்றாகும். தலைவரால் இயலாத சூழல் ஆனால் செயலும் நடந்தாக வேண்டும். இந்தச் சூழ்நிலையில்தான் மக்களிடமிருந்தே பொருள் திரட்டுவது என முடிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இத்தகைய முடிவுதான் 'வரி' எனும் கருத்துரு தோன்ற அடிப்படையாக இருந்திருக்க வேண்டும். மேற்குறிப்பிட்டவை மானுடவியல் கூறும் செய்திகளின் சுருக்கமான வடிவமாகும்.

### வரி பெறுதலும் பொருளாதார நீதியும்

நீதி என்பது சமவுரிமையை நிலைநாட்டுவதாகும். சமவுரிமை பாதிக்கும் போது மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்பர். ஆனால் வரி பெறுதலில் இந்தக் கோட்பாடு எவ்வளவு தூரம் பொருந்திவரும் என்பது சிந்தனைக்குரியது.

மக்கள் ஒவ்வொருவரும் தம் வருமானத்தின் அடிப்படையிலேயே வரி செலுத்து கின்றனர். அதாவது குறைவாகப் பொருளீட்டக் கூடியவர் குறைவாகவே வரி செலுத்துவார்; பெரும்பொருளை ஈட்டக் கூடியவர் அதற்கேற்ற வகையில் வரி செலுத்த கட்டாயப்படுத்தப்படுவார். மக்களிடமிருந்து அரசுக்கு வருகின்ற வரி வருமானம் ஒரே அளவாகவும் சமமாகவும் இருப்பதில்லை. எனினும், வரியைக் கொண்டு மக்கள் பயன்பாட்டிற்காக ஏற்படுத்தப்படும் பொதுவசதிகளைப் பயன் படுத்த சமவுரிமை வழங்கப்படுகிறது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

வரிப் பணத்தைக் கொண்டு மக்களின் பொதுப்பயன்பாட்டிற்காகச் சாலை அமைக்கப்பட்டால் அதை அனைவரும் பயன்படுத்த வேண்டும். அதாவது குறைவாக வரி செலுத்தியவர் பயன்படுத்தக் கூடாது என்றோ அதிகமாக வரி செலுத்தியவரே பயன்படுத்த வேண்டும் என்றோ கூறினால் அது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

எனவே மக்களிடமிருந்து பெறுகின்ற வரிப்பணத்தைச் செலவிடுவதில் அரசு நீதிமுறையோடு இயங்க வேண்டும். இல்லையேல் மக்களுக்குப் பெரும் துயர் ஏற்படுவதோடு அரசுக்கும் பழி வந்து சேரும். **இவ்வாறாக வரிப்பணம் பெறுவதன் பின்னணியில் பொருளாதார நீதிச் செயன்மை மறைந்துள்ளதை நன்கு உணரலாம்**.

மேலும், மக்களுக்கு விதிக்கப்படும் வரியும் நீதிமுறை சார்ந்து இருக்க வேண்டும். **கூடுதல் வரிவிதிப்பு, பொருந்தா வரிவிதிப்பு, வரி தண்டுவதில் கடுமை, அளவு கடந்த தண்டனை முதலியவை நீதிமுறைக்குப் புறம்பானவை யாகும்**. வரிப்பணம் செலவிடுவதில் நீதிமுறை எவ்வாறு பிறழக்கூடாதோ அவ்வாறு வரிவிதிப்பிலும் வரிபெறுவதிலும் கூட நீதிமுறை பிறழாமல் இருப்பது சிறப்பெனக் கூறுவர்.

எனவே சங்க காலத் தமிழகத்தில் அரசுகளுக்கு எவ்வாறெல்லாம் வரி கிடைத்தது என்பதையும், அவ்வரியை அரசு செலவிட்ட பாங்கு நீதிமுறை சார்ந் திருந்ததா என்பதையும் வரிவிதிப்பு மற்றும் வரிபெறுதல் ஆகியவற்றில் கடைப் பிடிக்கப்பட்ட நீதிமுறை எத்தகையது என்பதையும் இவை தொடர்பான பொரு ளாதார நீதிக் கருத்தியலின் வளர்ச்சி எவ்வாறு இருந்தது என்பதையும் இப்பகுதி ஆய்வுக்குக் கொள்கிறது.

பழங்கால நாகரிகங்கள் பெரும்பான்மைவற்றில் வரிக் கொள்கை இருந்துள்ளது. தன்மை, அளவு, காலம் முதலிய சில கூறுகளின் அடிப்படையில் வரிக் கொள்கைகள் வேறுபடுகின்றன. ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் திகழ்ந்த சங்க காலத் தமிழகத்தில் பொருளியல் சார்ந்த சட்டம் மற்றும் நீதி மேலாண்மை குறித்து ஆய்வு செய்கிறது இப்பகுதி.

“பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
**இறையொருங்கு நேர்வது நாடு**”[44]

எனும் குறட்பா அரசனுக்குச் செலுத்தும் வரியினைப் பற்றி வெளிப்படையாகப் பதிவு செய்துள்ளது. எதிர்பாராத செலவினங்கள் ஏற்பட்டாலும் அரசுக்குச் செலுத்தக் கூடிய வரியினைத் தவறாது செலுத்த வல்லதே நல்ல நாடு எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். பல வகையான வரிகளைச் சங்க இலக்கியங்கள் சுட்டியுள்ளன. அவற்றை நிரல்படுத்தி இனிக் காணலாம்.

**வரி விதிக்கும் அதிகார மையம்**

சங்க காலத் தமிழகத்தில் வரி விதிக்கக் கூடிய அதிகார மையமாக ஆட்சிப் பொறுப்பேற்றவர் திகழ்ந்துள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. கீழ்க் காணும் புறநானூற்றுச் சான்று செய்யுள் ஆட்சியாளரே வரி விதிக்கும் அதிகாரம் பெற்றிருந்தார் என்பதைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறது.

“அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே,
கோடி யாத்து, நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம்போலத்,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே”**45**

எனும் செய்யுளில், வரிவிதிப்புச் செய்யும் அதிகார மையம் தொடர்பான செய்திகள் உள்ளன. முறையற்ற வரிவிதிப்பைப் புலவர் பிசிராந்தையார் தன் மன்னனுக்குச் சுட்டிக்காட்டும் வண்ணம் இச்செய்யுள் அமைந்துள்ளது. இதில், ‘*வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு*’ எனும் செய்யுள் அடி ஆய்விற்குரியது. ‘முறை அறியாத ஆரவார மிக்கவர்களோடு’ எனும் பொருள்படும்படியாக அமைந்துள்ளது. இவ்வடியின் மூலம் அக்காலத்தில் வரியைத் தீர்மானித்து அரசனுக்குப் பரிந்துரை செய்வதற்கெனத் தனிக் குழுயொன்று செயல்பட்டிருக்க வேண்டும் என்பதை அறியலாம். அந்தக் குழுவினர் மன்னனுக்குத் தவறான வரிக்கொள்கையைப் பரிந்துரைத்திருக்க வேண்டும். அரசனும் ஆய்வு செய்யாது அதனை நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். இதனால்தான் முறை அறியாத ஆரவாரமிக்கவர் என்று அக்குழுவினரைப் புலவர் கூறியிருக்க வேண்டுமென உணர முடிகிறது.

வரிவிதிப்புச் செய்யும் அதிகார மையமாகத் தனிக்குழு செயல்பட்டிருக் கலாம் என அறிந்து கொண்டாலும் அக்குழுவின், ‘தலைமைக்கும் தலைமையாக’ மன்னனே இருந்துள்ளான் என்பதையும் அறியமுடிகிறது. அக்காலத்தில் எல்லாத் துறையின் அதிகாரப் புள்ளியாகவும் மன்னனே திகழ்ந்துள்ளான் என்பது வெள்ளிடை மலையாம். வரிவிதிப்பு அளவைத் தீர்மானிக்கக் கூடிய ஆணையத் திற்கும் மன்னனே தலைமைப் பொறுப்பில் இருந்துள்ளான். அதனால்தான்

புலவர் (இன்றைய மேல்முறையீடு போல) நேரடியாக மன்னனிடம் முறை யிட்டுள்ளார். இவ்வாறு மன்னனை நேரடியாக அணுகி முறையிடும் வழக்கத்தை வேறுபல செய்யுள்களிலும் காணமுடிவதால் இந்நடைமுறை மேல்முறையீட்டு நடைமுறையோடு ஒத்துப் போவதை மறுப்பதற்கில்லை.

மேற்சுட்டிய புறநானூற்றுச் செய்யுள் வாயிலாக அக்காலத்தில் வரிவிதிப்பு அளவைத் தீர்மானித்துப் பரிந்துரை செய்வதற்கெனத் தனி ஆணையம் இருந் திருக்க வேண்டுமெனவும், அவ்வாறு செயல்பட்ட ஆணையத்தின் தலைமைக்கும் தலைமைப் பொறுப்பில் மன்னனே இருந்துள்ளான் எனவும் அறிய முடிகிறது.

**வரி வகைகள்**

முன்பே குறிப்பிட்டது போல ஆய்வுக்கு எடுத்துக்கொண்டது இலக்கிய நூல்கள் என்பதனால், இலக்கியங்களில் உள்ள குறிப்புகள் மட்டுமே பயன் படுத்தப்பட்டுள்ளன. இலக்கியச் செய்திகளைத் தாண்டியும் பழங்காலத் தமிழ்ச் சமூகம் தொடர்பாக அகழ்வாய்வில் வேறு பலப்பல தரவுகளும் கிடைத்துள்ளன. இதனடிப்படையில், சங்க இலக்கியங்கள் அக்காலத்துத் தமிழ்ச்சமூகத்தை முழுமையாகப் பதிவு செய்துள்ள படைப்புகள் எனக் கூறுவதற்கு இல்லை. சங்க இலக்கியச் செய்யுள்களில் குறிப்பிட்ட சில முதன்மையான வரிகள் குறித்த பதிவு களைக் காணமுடிகிறது. அவற்றைத் தனித்தனியே இனிக் காணலாம்.

**பயன்துய்ப்பு வரி**

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை வெள்ளைக்குடி நாகனார் பாடியுள்ள புறநானூற்றுச் செய்யுளின்[46] வரலாறு, வரி தொடர்பான செய்தியினைப் பகர்கிறது. ‘பழஞ்செய்க்கடன்’ எனும் சொல்லாட்சி கையாளப் பட்டுள்ளது. ‘செலுத்தப் படாதிருந்த பழைய வரி’ என இத்தொடர்க்குப் பொருள் காணப்பட்டுள்ளது.

“சோழ வள நாடாயினும், ஒரு சமயம், உழவர்களால் அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்த இயலவில்லை. ஒருகால், பயிர்கள் நோயினால் தாக்கப்பட்டு விளைவு இல்லாமற் போயிருக்கலாம். அரசனிடம் இவ்வுண்மையை எடுத்துக் காட்டி வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டலாம் – என்றால் அரசனைக் காண்பது அரிய செயலாக இருந்தது. காட்சிக்கு எளியனாக அவன் இல்லை. அத்துடன் துதிபாடும் வீணர் கூட்டம், அவனிடம் பொய் கூறி உண்மையை மறைத்துவிடது.

உழவர்களின் துன்பத்தை அறிந்த புலவர், வெள்ளைக் குடி நாகனாரின் உள்ளம் வருந்தியது. நலிந்து மெலிந்த உழவர்களின் உண்மை நிலையை எடுத்துக் கூறிப் பரிகாரம் தேடத் தானே அரசனைப் பார்க்கச் சென்றார்.

இப்பாடலில் வெள்ளைக்குடி நாகனாரின் பரந்த அரசியல் அறிவு, நிறைந்த ஆற்றல், அஞ்சாமை, உயர்ந்த கோட்பாடு, வெல்லுந் திறன், நோக்கிச் சொல்லித் திறன் தொண்டுள்ளம் முதலிய அரிய பண்புகள் வெளியாகின்றன.

புலவரின் அறிவுரையைக் கேட்ட அரசன், பழைய வரி நிலுவையைத் தள்ளி உழவர்களின் துன்பத்தை நீக்குகிறான்”[47] என முனைவர் கு. இராஜவேலு அவர்கள் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட உரையிலிருந்து சில செய்திகள் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமின்றி உறுதிபடுகின்றன.

- ✓ அரசு, வரி விதித்திருக்கிறது.
- ✓ மக்கள் வரி செலுத்தியுள்ளனர்.
- ✓ போதிய வருமானமின்றி வரியைச் செலுத்தாத நிலையும் இருந்துள்ளது.
- ✓ அவ்வாறு செலுத்தாத வரிகளைச் சேர்த்து வைத்து வாங்கும் வழக்கம் இருந்துள்ளது.

- ✓ மக்களிடம் வரிபெறும் அதிகாரிகள் வரியைத் தள்ளுபடி செய்யாத நிலையில் மேல்முறையீட்டுக்கு வாய்ப்பிருந்துள்ளது.
- ✓ வரி விலக்கு கொடுக்கும் அதிகாரம் அரசிடம் இருந்துள்ளது.

ஆகியவை உறுதிபடுகின்றன. இனி, எதன்பொருட்டு அரசாங்கம் வரி விதித்துள்ளது எனும் வினா எழுகிறது. பெரும்பான்மை உரைகளில் குறிப்பிட்டுள்ளவாறு செய்க்கடன் என்பது நிலவரி எனக் கொண்டாலும் அது சிறப்பாக உழவர்களின் விளைச்சலுக்கான வரியாகவே இருந்திருக்க வேண்டும்.

நிலவரி என்கிற போது அது சொத்துவரி (Property Tax) என்பது போலாகும். விளைச்சலுக்கான வரி என்கிற போது அது உற்பத்தி வரியின் கீழ் வரும். எனவே நிலவரி என்பதற்கும் விளைச்சலுக்கான வரி என்பதற்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. அக்காலத்தில், உழவர்கள் மட்டுமன்றிப் பலரும் நிலத்தைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும், அக்காலத்தில் நிலங்கள் அரசுடைமை யாகவும் இருந்திருக்க வேண்டும். அதனால்தான் அரசர்கள் தாம் விரும்பிய நிலங்களை விரும்பியவர்களுக்கு எவரின் அனுமதியும் இழப்பீடும் இன்றித் தானமாக வழங்க முடிந்திருக்கிறது.

அரசுடைமையாக நிலங்கள் இருந்தாலும் மக்கள்தாம் நிலத்தைப் பயன்படுத்தியுள்ளனர். அதனின்று வரும் பயனைத் துய்த்துள்ளனர். துய்த்த பயன் அடிப்படையில் வரி செலுத்தியுள்ளனர். இதன்மூலம் அக்காலத்தில் நிலங்களைப் பொறுத்தவரையில் சொத்துரிமை அரசுக்குரியதாகவும், துய்ப்பதற்கான உரிமை மக்களுக்குரியதாகவும் இருந்திருக்க வேண்டும் என முடிவு செய்யலாம். எனவே நில வரி என்பதை நிலத்தின்று வரும் *பயன் துய்ப்பு வரி* எனக் கொள்ளுவதே பொருத்தமாக இருக்கும்.

இதனை மேலும் உறுதிபடுத்தும் விதமாக மலைபடுகடாத்தின் செய்யுள் அடிகள் சான்றாக அமைகின்றன. அவை துய்ப்பு வரி பற்றிக் குறிப்பிட்டுள்ளன எனலாம்.

"திருந்துவே லண்ணற்கு விருந்துஇறை சான்மஎன,

நறவு நாள் செய்த குறவர், தம் பெண்டிரோடு"[48]

என வரும் அடிகளை நோக்குக.

'இறை' எனும் சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. இறைவன், தலைவன், அரசன், வரி, நடுநிலை, துன்பம் எனப் பொருள்கொள்ளக் கூடிய இலக்கிய ஆட்சிகள் உண்டு. மேற்குறிப்பிட்ட மலைபடுகடாத்தின் அடிகளில் பயின்று வரும் இறை எனும் சொல்லுக்கு 'வரி' எனும் பொருள் பொருந்துவதாக உள்ளது. மலைபடுகடாத்தின் தலைவன் நன்னன் ஆவான். இங்குத் திருந்துவேல் அண்ணல் என அவன்தான் சுட்டப் படுகிறான். எனவே மீண்டும் 'இறை' என்று அவனைச் சுட்ட வேண்டிய தேவை அங்கு இல்லை. ஆதலால் நன்னனுக்குப் புதிய வரியாய்த் தருவதற்குத் தேனெடுத்த குறவர்கள் எனப் பொருள்படுகிறது. இது பழைய வரி இல்லை அதாவது பழஞ்செய்க்கடன் அன்று எனத் தெளிவிக்கப்பட்டது.

தேனெடுத்தல் குறவர்களின் தொழில்களுள் ஒன்று. இங்குத் தேனெடுக் கின்ற உழைப்பு மட்டும்தான் குறவர்க்கு உரியது. மற்றபடி, தேன் இயற்கைச் செல்வம் ஆகும் என்பதைக் கருத வேண்டும். அதனைத் துய்ப்பதற்கு முழு உரிமையும் குறவர்க்கு உண்டு. எனினும், அத்துய்ப்பிற்கு வரி செலுத்தப் பட்டுள்ளது என்பதை இதன்மூலம் அறிகிறோம். ஒரு நாட்டின் அரசு இயந்திரம் இயங்க வேண்டுமெனின் அந்நாட்டின் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். சிறுதுளி பெருவெள்ளம் போலப் பல தரப்பு மக்களின் துய்ப்பு வரியையும் ஏதோ ஒரு வகையில் அதாவது நாணயமாகவோ விளைபொரு ளாகவோ பண்டமாற்றுப் பொருளாகவோ இயற்கைப் பொருளாகவோ ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனக் கருத முடிகிறது. இயற்கையைப் பயன்படுத்தி உண்டாக்கும் பொருட்களுக்கு மட்டுமே துய்ப்புவரி பெற்றுள்ளனர் என உறுதி யாகக் கருதுவதற்கு இடமுண்டு.

**உற்பத்தி வரி**

போர் தொடங்குவதற்கு முன்பு அரசன் தன்னுடைய வீரர்களுக்குப் பெரும் விருந்து வைக்கும் வழக்கம் தமிழ்நாட்டில் இருந்துள்ளது. மேலும், போர் நடைபெறும் காலத்திலும் வீரர்களுக்கு உணவு வழங்குவது அரசின் பொறுப் பாகும். மேலும், அரசனை நாடி வரும் புலவர்கள், பாணர்கள், இரவலர்கள் முதலிய பலர்க்கும் அரசன் உணவு வழங்கியுள்ளதாகச் சங்க இலக்கியக் குறிப்புண்டு. பண்ணன் எனும் மன்னன் பசிப்பிணி மருத்துவன் என்றே வழங்கப்பட்டுள்ளான். தொடர்ந்து மக்களுக்கு உணவுக் கொடை வழங்கியுள் ளான் எனச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். இவற்றின் மூலம் அரசுக்கோ அரசாட்சிக்கோ நெல்லின் தேவை எவ்வளவு இருந்துள்ளது என்று அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வளவு நெல் அரசுக்கு எப்படிக் கிடைத் திருக்கும்? எனும் வினா எழுகிறது. கட்டாயம் உற்பத்தி வரிகளை நெல்மணி யாய்ப் பண்டமாற்றித் தருமாறு அறிவுறுத்தியிருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு.

இதை உறுதிபடுத்தும் விதமாக முத்தொள்ளாயிரம் அமைகிறது. நிலத்தில் விளையும் நெல்லின் அளவில் ஆறில் ஒரு பங்கு அரசுக்கு வரியாகச் செலுத்தப் பட வேண்டும் எனும் வரிக்கொள்கை இலக்கியங்களில் உண்டு. இதனை முத்தொள்ளாயிரம் சுட்டிக் காட்டுகிறது.

> “என்னெஞ்சும் நாணும் நலனும் இவையெல்லாம்
> மன்னன் புனனாடன் வௌவினான் – என்னே
> அரவகல் அல்குலாய் **ஆறில் ஒன் றன்றோ**
> **புரவலர் கொள்ளும் பொருள்**”[49]

உற்பத்தியாகும் பொருளில் ஆறில் ஒரு பங்கை அரசு தனக்குரிய வரியாகக் கொண்டிருக்கிறது என்பதை முத்தொள்ளாயிரம் மூலம் அறிகிறோம். எனவே அக்காலத்தில் உற்பத்தி வரி இருந்துள்ளது என்பதை அறியலாம்.

**புரவு வரி**

குடிமக்களைக் காக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. குடிமக்களைக் காப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை இன்றைய அரசுகள் எடுத்து வருகின்றன. எதிரி நாட்டிடமிருந்து, பயங்கரவாதிகளிடமிருந்து, பொரு ளாதார வறுமையிலிருந்து, இயற்கைச் சீற்றத்திடமிருந்து எனப் பலநிலைகளில் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுகளைச் சார்ந்திருக்கிறது. இனக் குழு எனவொன்று உருவான அன்றே அக்குழுவின் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்திருப்பவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் ஏற்பட்டுவிட்டது எனலாம். எனவே குடிமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பல்லாயிரம் ஆண்டு களாக அரசுக்கு உரியதெனத் தீர்மானிக்க முடிகிறது.

குடிமக்களைப் பாதுகாப்பதற்காகப் போர்ப்படை, காவல் படை, இயற்கைச் சீற்றத்தின்போது மக்களைத் தங்கவைக்க பொதுவிடம், பஞ்சத்தின் போது மக்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டிய தானியங்களைப் பாதுகாக்கும் பொதுக்கிடங்கு எனப் பற்பல பொது அமைப்புகளை அரசு நிறுவிட வேண்டும். அவற்றை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் ஆகும் செலவை மக்களிடமிருந்தே சங்க காலத் தமிழக அரசு பெற்றுள்ளது என்பதைச் சங்க இலக்கியச் செய்யுள் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

> “பாடிச் சென்றோர்க்கு அன்றியும் வாரிப்
> புரவிற்கு ஆற்றாச் சீறூர்த்
> தொன்மை சுட்டிய வன்மை யோனே”[50]

எனும் செய்யுளில் இடம்பெற்றுள்ள ‘புரவு’ எனும் சொல் புரவு வரியைக் குறிக்கிறது.

“எந்நாளும் பாடி வந்தவர்க்கு அல்லாமல் புரவு வரி கட்டுதற்கும் இயலாத சிறிய அவ்வூர்க்கு வழிவழியாக வரும் கொடையாளனும் அவன்”[51] என முதுமுனைவர் இளங்குமரனார் மேற்சுட்டிய அடிகளுக்கு உரையெழுதியுள்ளார். புரவு வரி எனும் குறிப்புள்ளதே தவிர அவ்வரி என்றால் என்ன? என்பது பற்றிய விரிவான விளக்கம் காணப்படவில்லை.

புரத்தல் எனின் ‘காத்தல்’ எனும் பொருளது. இதனால் பொருள் கொடுத்துக் காப்பவன் புரவலன் எனப்படுகிறான். ‘புரவு’ என்பதற்குக் காத்தல் என்பதும் பொருள் ஆகும். மக்களைப் பாதுகாக்கும் பணிக்கு வரியாகப் பெறுவது புரவு வரியாய் இருந்திருக்க வேண்டும். இன்றைக்குச் சேவை வரி (Service Tax) பல்வேறு பணிக்கு விதிக்கப்படுகிறது. அது போல அன்றைக்குப் புரவுப்பணியாற்றியமைக்குப் புரவு வரி விதிக்கப்பட்டுள்ளது எனலாம்.

**உல்கு வரி**

சங்க இலக்கியங்களில் உல்கு வரி குறித்துப் பல இடங்களில் காணமுடிகிறது. இன்றைய சுங்க வரிதான் அன்றைய உல்கு வரியாகும். ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் கடல்வழியாக வாணிகம் நடைபெற்றுள்ளது. அயல்நாட்டுப் பொருள்கள் தமிழகத்திற்கும் தமிழ்நாட்டுப் பொருள்கள் அயலகத்திற்கும் வந்தும் போயும் கொண்டிருந்தன. அவ்வாறு ஏற்றுமதி இறக்குமதி பொருட்களுக்கு வரி விதித்து வாங்கியுள்ளனர் தமிழ்நாட்டு அரசர்கள் எனச் சங்க இலக்கியச் செய்யுள்கள் மூலம் உறுதியாக அறியமுடிகிறது.

“வேலாழி வியன்தெருவின்
நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்விசைத் தொழின்மாக்கள்

காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைகல்தொறும் அசைவின்றி
உல்கு செய"[52]

என வரும் செய்யுள் அடிகளில் உல்கு வரி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்காலத்தில் அரசுக்குக் கிடைத்த வரி வருவாய்களுள் உல்கு வரி குறிப்பிடத் தகுந்த ஈட்டத்தை அளித்துள்ளது. மேலும், அயல்நாட்டு குடிகள் துறைமுகத்துக்கு வந்து போய்க் கொண்டிருந்த சூழலும் இருந்துள்ளது. எனவே அங்கு அரசால் மிகுந்த காவல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வணிகப் பொருட்களின் குவிப்பு, பெருஞ்செல்வத்தின் நடமாட்டம், அயல்நாட்டு மக்கள் நடமாட்டம் இருப்பதனால் எல்லா வகையிலும் பாதுகாப்பு வழங்க வேண்டிய இடமாகத் திகழ்கிறது. எனவே வில்லுடை வீரர்கள் அங்குக் கடுங்காவல் பணியைச் செய்துள்ளனர் என அறிந்துகொள்ள முடிகிறது.

வரி செலுத்தியதன் அடையாளமாக சோழர்களின் புலிச்சின்னம் துறை முகத்தில் இருந்த பொருட்களின் மீது பொறிக்கப்பட்டதாகப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

"அளந்து அறியாப் பல பண்டம்
வரம்பு அறியாமை வந்து ஈண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடைய வல் அணங்கின் நோன்
புலிப்பொறித்து புறம்போக்கி"[53]

எனும் செய்யுள் அடிகள், அந்தத் துறைமுகத்தில் நடைபெறுவதை அப்படியே படம்பிடித்துக் காட்டியுள்ளது. இவ்வளவு பொருட்கள்தாம் வந்துள்ளன என

அளந்து கூற முடியாத வகையில் பெரும் எண்ணிக்கையில் பொருட்கள் வந்து கொண்டிருக்க அவற்றைப் பாதுகாத்துச் சுங்க வரிபெற்றமைக்கு அடையாள மாகப் புலி இலச்சினை பொறித்துப் பின்னர் அனுப்பியுள்ள வழக்கம் அற்றைக் காலத்தில் இருந்துள்ளதெனப் பட்டினப்பாலையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

இதன்மூலம் உல்கு வரியின் முதன்மைத்துவத்தை விளங்கிக் கொள்ள முடிகிறது. அரசுக்குப் பேரளவு ஈட்டம் இதன்மூலம் அற்றைக் காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். எனவே அதிகப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அறியலாம். மேலும், திருக்குறளில் பிற வரிகளைப் பொதுநிலையில் குறிப்பிட்டுள்ள திருவள்ளுவர் உல்கு வரியைப் பற்றித் தனித்துக் குறிப்பிட்டுள்ளார்.

"உறுபொருளும் **உல்கு** பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்"[54]

எனும் குறட்பா மூலமும் உல்குவரியின் முதன்மைத்துவம் நன்கு விளங்கும். உல்குடைப் பெருவழியைப் பாதுகாப்பதற்கே இத்தனைச் சிறப்பு ஏற்பாடுகள் எனின், அதனைப் பெறுவதற்கும் பெற்றதை அரசுக் கருவூலத்தில் சேர்ப்பதற்கு மெனத் தனித்தனி ஆயங்கள் இருந்திருக்க வேண்டும். இப்பணியில் பற்பல கணக்காயர்கள் ஈடுபட்டிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

**வரிவிலக்கும் வரி தள்ளுபடியும்**

விதிகள் இயற்றப்படும் போதே விதிவிலக்குகளும் பிறக்கின்றன என்பது உலக விதியாகும். அதுபோல வரிவிதிப்பு என்கிற போதே வரிவிலக்குகளும் எழுந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. இதனைப் பிற்கால மன்னர் களின் ஆட்சியில் பெரிதும் காணமுடிகிறது. புலவர்களுக்கு, வீரர்களுக்கு,

உழைப்பாளர்களுக்கு நிலங்களைத் தானமாக மன்னர்கள் கொடுப்பர். அவ்வாறு கொடுக்கும் நிலங்களுக்கு வரிவிலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதனை 'இறை யிலி நிலங்கள்' என்பர். மேலும் கோயில்களுக்கென வழங்கப்பட்ட நிலங்களும் இத்தகையனவே. **எனவே வரிவிலக்கு கொடுக்கும் நடைமுறை தமிழகத்தில் இருந்துள்ளது எனக் கருத இடமுண்டு எனினும், சங்க இலக்கியச் செய்யுள்களில் வரிவிலக்குத் தொடர்பான பதிவுகள் இருப்பதாகத் தெரியவில்லை**.

வரிவிலக்குத் தொடர்பான பதிவுகள் இல்லாதபோதும் **வரித் தள்ளுபடிக் கான பதிவுகள்** சங்க இலக்கியத்தில் உண்டு. இற்றைக் காலத்தில் உழவர்கள் வங்கியில் வாங்கும் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்படும். இதற்குக் காரணம் பலவுள. எதிர்பார்த்த மழை பொழியாமல் இருந்திருக்கும், மழையிருந்தும் எதிர்பாராத பூச்சிகளால் பாதிப்பு ஏற்பட்டிருக்கும், பூச்சிகளால் பாதிப்பற்ற நிலையிலும் திடிரெனப் பயிர்களில் நோய்தொற்றுப் பரவியிருக்கும், சில நேரங்களில் அதிக மழை பொழிந்து வெள்ளம் ஏற்பட்டுப் பயிர்கள் வீணாகவும் போவதுண்டு. மேற்சொன்ன எவ்விதச் சிக்கல்களும் இல்லாத நிலையிலும் எதிர்பார்த்த விலை கிடைக்காமல் போய்விடுவதுண்டு. இப்படிப் பல காரணங்களால் உழவர்கள் தாம் பெற்ற வங்கிக்கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போவதுண்டு. பெற்ற கடனையே திருப்பிச் செலுத்தாதபோது மக்கள் வரிப் பணத்தை எவ்வாறு செலுத்த இயலும்? அதனால் வரி செலுத்தாமல் நிலுவையில் வைத்துவிட்டனர்.

மேற்சொன்ன சூழ்நிலைகள் வெளிப்படையாக ஏற்படக்கூடியவை. இதனை மிக எளிதாக அரசால் கணிக்கவும் முடியும் கணக்கிடவும் முடியும். இவற்றைக் கருத்தில் கொண்டு நடுவண் அரசும், மாநில அரசுகளும் உழவர் நலத்தைப் பேணுவதற்காகவும் மீண்டும் அவர்கள் உழவுத் தொழிலில் ஈடுபடுவதற்காகவும் அவர்கள் வங்கியில் பெற்ற பயிர்க்கடனைத் தள்ளுபடி

செய்யச் சட்டத்தில் இடமுண்டு. வேறு எந்தத் துறைக்கும் இத்தகைய சலுகை கொடுக்கப்படுவதில்லை. மிகமிக அரிதாகச் சிறுதொழில் புரிவோர்க்கு வழங்கப் படுவதுண்டு. அதுவும் உழவர்களுக்குக் கொடுப்பது போன்று அமைவதில்லை என உறுதிபடக் கூறலாம்.

சங்க இலக்கியங்கள் பதிவு செய்திருக்கும் சமுதாயம் இருந்த காலத்தில் வங்கிகள் இருந்ததற்கான வாய்ப்புகள் இல்லை. அவர்களுக்கு அரசாங்கத்திடம் இருந்த பொருளாதாரக் கடமை ஒன்றே ஒன்றுதான். அது வரி செலுத்துதல் ஆகும். உழவர்கள் இயற்கையை நம்பிப் பணி செய்பவர்கள். மேற்சொன்ன காரணங்களால் பாதிப்புற்ற உழவர்கள் குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கான வரியைச் செலுத்தாமல் இருந்துள்ளனர். எனினும் அடுத்த பருவத்தில் சேர்த்துச் செலுத்த தீர்மானித்திருக்க வேண்டும். ஆனால் அடுத்த பருவத்திலும் எதிர் பார்த்த விளைவோ அல்லது ஈட்டமோ ஏற்படாதிருந்திருக்க வேண்டும். இச்சூழ் நிலையில்தான் கடந்த பருவத்தின் வரிச்சுமை, நடப்புப் பருவத்தின் வரிச்சுமை ஒன்றாகச் சேர்ந்து பெருஞ்சுமை உழவர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என ஐயத்துக்கு இடமின்றிக் கருத இடமுண்டு. இவ்வாறு சேர்ந்த வரிச்சுமையைத் தான் ‘பழஞ்செய்க்கடன்’ எனச் சங்க இலக்கியப் படைப்பு வரலாற்றில் காண முடிகிறது.

வரிகளைத் தீர்மானித்துப் பரிந்துரைக்கவும், வரிகளைப் பொதுமக்க ளிடமிருந்து பெறுவதற்கும் அதிகாரிகள் இருந்தபோதிலும் பழஞ்செய்க்கடனைத் தள்ளுபடி செய்ய அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. இனி, பழஞ்செய்க்கடன் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் வழக்கம் போல அரசனிடமே இருந்துள்ளது. எனவே அதிகாரிகள் தள்ளுபடி செய்ய மறுத்த நிலையில் அவ்வழக்கு அரசனிடம் மேல்முறை யீடாய் வந்துள்ளது. அரசனும் அவ்வழக்கை உசாவிப் பழஞ்செய்க்கடனைத் தள்ளுபடி செய்துள்ளான்.

இதனைப் புறநானூற்றுச் செய்யுளின் தோற்ற வரலாற்றின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. எனவே அக்காலத்தில் வரியைத் தள்ளுபடி செய்யும் நடைமுறை இருந்துள்ளது என்பது உறுதிபடுகிறது.

***திறை***

மக்களிடமிருந்து பெறப்பட்ட வரிகளைத் தாண்டிப் பிற வகையிலும் அரசுகள் வரி வாங்கியுள்ளன எனச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. ஓர் அரசின் ஆளுகைக்கு உட்பட்ட சிறு அரசிடமிருந்து, ஆளுகைக்கு உட்படுத்திய அரசு வரி பெற்றுள்ளது என அறிந்துகொள்ள முடிகிறது. இதற்குத் 'திறை' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனை உறுதிபடுத்தும் இலக்கியச் சான்றுகள் வருமாறு,

"வேந்துதந்த பணிதிறையால்
சேர்ந்தவர் கடும்பார்த்தும்
ஓங்கு கொல்லியோர் அடுபொருந!"[55]

"பகைப்புல மன்னர் பணி**திறை தந்து**நின்
நகைப்புல வாணர் நல்குரவு அகற்றி
மிகப் பொலியர்தன் சேவடி அத்தை"[56]

"ஒன்று நன்கு உடைய பிறர் குன்றம்; என்றும்
இரண்டு நன்கு உடைத்தே கொண்பெருங் கானம்;
நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டித்
தொடுத்து உணக் கிடப்பினும் கிடக்கும்; அஃதான்று
**நிறைஅருந் தானை வேந்தரைத்**
**திறைகொண்டு** பெயர்க்கும் செம்மலும் உடைத்தே"[57]

எனும் செய்யுள்களில் பகைநாட்டு அரசன் பணிந்து திறை செலுத்தியதையும் அதனால் உண்டான செல்வத்தின் மூலம் பேரரசர்கள் தம்மைச் சேர்ந்தவரைக் காப்பாற்றியதையும் அறிய முடிகிறது. இதன்மூலம் தன் ஆளுகைக்குட்பட்ட அரசுகளிடமிருந்து 'ஆளுகை வரி' திறை எனும் பெயரில் பெறப்பட்டுள்ளது எனலாம்.

"பிணிக்கதிர், நெல்லின் செம்மல் மூதூர்
நுமக்குஉரித்து ஆகல் வேண்டின், **சென்றுஅவற்கு**
**இறுக்கல் வேண்டும் திறையே**; மறுப்பின்
ஒல்வான் அல்லன் வெல்போ ரான்எனச்
சொல்லவும் தேறீர் ஆயின், மெல்லியல்
கழற்கனி வகுத்த துணைச்சில் ஓதிக்
குறுந்தொடி மகளிர் தோள்விடல்
இறும்பூது அன்றுஅஃது அறிந்துஆ டுமினே"[58]

எனும் செய்யுளில், அவரவர் ஊர் அவரவரிடம் இருக்க வேண்டுமானால் தவறாது திறை செலுத்திவிடுங்கள் எனவும், அவ்வாறு செலுத்த மறுத்தால் அதனால் ஏற்படும் விளைவுகள் கொடிதாக இருக்கும் எனவும் எச்சரிக்கப்பட் டுள்ளது. இதன்மூலம், திறை செலுத்துவது கட்டாயமான ஒன்றெனவும், திறை செலுத்த மறுத்தல் குற்றமெனவும் அறிந்துகொள்ளலாம். குற்றம்புரிந்தோர்க்குத் தண்டனை வழங்குதலே நீதியாக அக்காலத்தில் உணரப்பட்டது.

**தவறான வரிவிதிப்பு**

முறையான ஆட்சிக்குச் சான்றாகப் பல அரசுகளைச் சங்க இலக்கியம் காட்டியுள்ளது. அதேநேரம் அன்றைய சமூகத்தில் நிகழ்ந்த தவறுகளையும் பதிவு செய்யாமல் விட்டுவிடவில்லை. எடுத்துக்காட்டாகத் தவறான வரிவிதிப்பு பற்றிய குறிப்பினைச் சுட்டலாம்.

“வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு”[59]

எனும் திருக்குறள் தவறான வரிவிதிப்பினைப் பற்றிக் கூறுகிறது. முறையான வரி விதிப்பு இல்லையேல் அது வழிப்பறிக்குச் சமமானது என்கிறது குறட்பா. முறையற்ற வரிவிதிப்பால் அரசுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் இருக்கலாம் ஆனால் குடிமக்களிடையே பெரும் குழப்பமும் வாழ்வாதாரச் சிக்கலும் ஏற்படும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. பின்வரும் செய்யுள்கள் தவறான வரிவிதிப்பு குறித்துப் பதிவு செய்துள்ளன.

“அலவுற்றுக் குடிகூவ, **ஆறின்றிப் பொருள்வெஃகி**க்
கொலையஞ்சா வினைவரால் கோல்கோடி யவன்நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்”[60]

“ஊறஞ்சி நிழல்சேர்ந்தார்க்கு உலையாது காத்தோம்பி
**ஆறின்றிப் பொருள்வெஃகி** அகன்றநா டுறைபவர்”[61]

“காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே,
மாநிறைவு இல்லதும், பன்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே,
கோடி யாத்து, நாடுபெரிது நந்தும்;
**மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்**
**வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,**
**பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,**
யானை புக்க புலம்போலத்,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே”[62]

எனும் செய்யுள் அடிகள் மூலம், சங்க இலக்கியம் காட்டும் தமிழகத்தில் முறையற்ற வரிவிதிப்பு இருந்துள்ளது என அறியமுடிகிறது. எனவேதான் அதனைக் குறை கூறி இலக்கியப் படைப்புகள் எழுந்துள்ளன. முறையற்ற வரி விதிப்பு கொடுங்கோல் ஆட்சியின் அறிகுறி என்கிறது கலித்தொகை. மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

மக்களிடமிருந்து எவ்வளவு வரி பெறுவதெனத் தீர்மானிப்பதற்குத் தனி ஆயம் இருந்திருக்க வேண்டும். இது பிசிராந்தையாரின் செய்யுள் மூலம் தெரிய வருகிறது. 'வரிசை யறியாக் கல்லென் சுற்றம்' எனும் தொடர் இதனை உறுதி படுத்துகிறது. அந்த ஆயத்தின் தலைமைப் பொறுப்பு அரசனிடம் இருந்துள்ளது என்பதையும் இச்செய்யுள் வழி அறிந்துகொள்ள முடிகிறது. ஆயத்து உறுப்பினர் கள் தவறுதலாகவோ அல்லது முறையின்றியோ வரி விதித்தால் அதனை மன்னனிடம் மேல்முறையீடு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது எனவும் அறிய முடிகிறது.

**பொருளாதார நீதிக் கருத்தியல்**

மேற்சொன்னவற்றிலிருந்து சங்க காலத் தமிழகத்தில் பொருளாதார அறிதல் நன்றாக இருந்துள்ளது என அறியமுடிகிறது. பயன்துய்ப்பு வரி மூலமாகவும், உற்பத்தி வரி மூலமாகவும், புரவு வரி மூலமாகவும், உல்கு எனப்படக்கூடிய சுங்க வரி மூலமாகவும், திறை எனப்படக் கூடிய கப்பம் மூலமாகவும் அரசுக்கு வருவாய் வந்துள்ளது என அறியமுடிகிறது. வரி விதிப்பில் நீதி பிறழப்பட்டு மக்களுக்கு அநீதி வழங்கப்பட்டுள்ளது என இலக்கியச் சான்றுகள் மூலம் உணரமுடிகிறது. மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மன்னனிடம் நேரடியாக முறையிட்டு உரிய தீர்வழியும் பெறப்பட்டுள்ளது என்பதையும் அறிகிறோம். உழவர்களிடமிருந்து உற்பத்தி

வரி ஆறில் ஒரு பங்காகப் பெறப்பட்டிருக்கிறது எனும் குறிப்புள்ளது. ஆனால் இயற்கைச் சீற்றத்தினாலோ அல்லது மழை பொய்த்த நேரத்திலோ வரி செலுத்த முடியாத சூழலில் மக்கள் இருந்துள்ளனர். அந்நேரத்தில் மக்களிடம் வரி செலுத்த கட்டாயப்படுத்துதல் அநீதியான செயலாகச் சங்க காலத் தமிழகம் உணர்ந்துள்ளது. இதற்குத் தீர்வழியாக அடுத்துவரும் ஆண்டுகளில் வரியைச் சேர்த்து செலுத்த வழிவகை காணப்பட்டுள்ளது. மேலும், அடுத்த தீர்வழியாக வரி தள்ளுபடியும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடுமையான சூழல் நிலவும் போது மட்டுமே இரண்டாம் வகை தீர்வழி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் மக்களைக் கொடுமை படுத்தி அவர்களிடமிருந்து வரி பெறுவது தவறு எனும் பொருளாதாரம் சார்ந்த நீதிக் கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் நிலவியுள்ளது என அறியலாம்.

### போர் சார்ந்த நீதி மேலாண்மை

உலகம் முழுதுமிருந்த பெரும்பான்மை அரசுகள் போரைச் சந்தித்திருக்-கின்றன. தற்காப்புக்காகவோ அல்லது எல்லை விரிவாக்கத்திற்காகவோ ஏறத்தாழ உலகம் முழுதும் போர்கள் நடைபெற்றுள்ளன. தற்காலத்தில் ஒரு நாடு பிறதொரு நாட்டின்மீது போர்தொடுக்க வேண்டுமெனின் எளிதில் போர்செய்ய இயலாது. ஐக்கிய நாடுகள் அவையம் அதற்கெனச் சில வரையறைகளைத் வகுத்து வைத்துள்ளது.

- போர்க்குற்றம்
- போர்க்காலத்தில் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்
- போர்க் கைதிகள்

எனப் போர் நடைபெறும்போது அவ்வவ் நாடுகள் கடைப்பிடிக்க வேண்டிய பல நடைமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவற்றின்மூலம் **இருதரப்பின் உரிமைகளுக்கும் மதிப்பளிக்கப்பட்டு நீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.** ஆனால், பழங்கால

அரசாட்சிகளில் போர் நிகழ்த்துவதற்கான வரன்முறைகள் பன்னாட்டளவில் தற்காலத்தில் உள்ளது போல் இருந்திருக்க வாய்ப்பில்லை. என்றாலும் **சங்க காலத் தமிழகம் 'போர் சார்ந்த நீதி மேலாண்மை'யில்** எவ்வாறு இருந்துள்ளது என விரிவாகப் பதிவிடுகிறது இப்பகுதி.

**போர் அறிவிப்பு** (Declaration of War)

உரிமைகளை மதித்தல் என்பது நீதிக் கருத்தியலின் வரையறைகளுள் ஒன்று. அவ்வகையில் போர்தொடுக்கப்படும் நாட்டிற்குப் தன்மீது பகைநாடு போர்த்தொடுக்கவிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள உரிமையுண்டு என இன்றைய பன்னாட்டுச் சட்டங்கள் கூறுகின்றன. "Considering that it is important, in order to ensure the maintenance of pacific relations, that hostilities **should not commence without previous warning**"[63] என தற்காலப் பன்னாட்டுச் சட்டங்கள் மூலம் அறிகிறோம்.

சங்க காலத் தமிழகத்தில் இதற்கு ஒப்பான நடைமுறை வழக்கத்தில் இருந்துள்ளது. 'ஆநிரை கவர்தல்' என்பது அந்நடைமுறையின் பெயர். போர் தொடுக்கப்படும் நாட்டிலிலுள்ள ஆநிரைகளைக் கவர்ந்து வருதலை 'ஆகோள்'[64] எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவார். இந்நடைமுறை மறைமுகப் போர் அறிவிப்புச் செய்கையாக அக்காலத்தில் இருந்துள்ளது.

இதன்மூலம் அக்காலத்தில் தன்மீது தொடுக்கப்படும் போர் குறித்து முன்பே அறிந்து கொள்வதற்கான ஒருநாட்டின் உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது எனலாம். இத்தகைய உரிமை பாதுகாக்கப்பட்டதனால் **போர் நீதி நிலை நிறுத்தப்பட்டுள்ளது** என்பதை அறியலாம்.

**(பாதுகாப்பு வளையத்திற்குச் செல்ல) இயலாதோர்க்கு வாய்ப்பளித்தல்**

பள்ளிக்கூடம், முதியோர் இல்லம், மருத்துவமனைகள் முதலியவை போரின் போது தாக்குதலுக்கு இலக்காகக் கூடாது என்பது **தற்காலப் போர் நீதியாகும்**.

“Stressing the need for alleged perpetrators of **crimes against children in situations of armed conflict to be brought to justice** through national justice systems and, where applicable, international justice mechanisms and mixed criminal courts and tribunals in order to end impunity”[65] போரின்போது சிறுவர்கள் மீது தொடுக்கப்படும் போர்க்குற்றங்களை நீதியின் பார்வைக்குக் கொண்டு வர வேண்டும் என வலியுறுத்துகிறது. சிறுவர்களுக்குக் கல்வி கற்கவும் நன்முறையில் வாழவும் உரிமையுண்டு. அவ்வுரிமைகள் போரின்போது பாதிக்கப்படுவதால் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் களைய ஐக்கிய நாடுகள் அவையம் முனைந்துள்ளது. இதைப் போலவே மருத்துவமனைகள் மீது தொடுக்கப்படும் தாக்குதலையும் ஐக்கிய நாடுகள் அவையம் கவலை வெளிப்படுத்தியுள்ளதை, “Expressing deep concern about attacks as well as threats of attacks in contravention of applicable international law against schools and/or hospitals, and protected persons in relation to them as well as the closure of schools and hospitals in situations of armed conflict as a result of attacks and threats of attacks, and calling upon all parties to armed conflict to immediately cease such attacks and threats”[66] மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. எனவே இயலாதவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதே போர் நீதி என்றும்; இயலாதவர்களைத் தாக்குவது அவர்களுக்கு வழங்கப்படும் அநீதி என்றும் அறிந்து கொள்ள முடிகிறது.

சங்க காலத் தமிழகத்தில் இதுபோன்ற போர் சார்ந்த நீதிக் கருத்தியலுக்கு இடமிருந்துள்ளது என்பதைப் புறநானூற்றுச் செய்யுள் உறுதிபடுத்துகிறது.

“ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்,

எம்அம்பு கடிவிடுதும், நுன்அரண் சேர்மின் என
அறத்துஆறு நுவலும் பூட்கை, மறத்தின்"[67]

கால்நடைகள், பெண்கள், நோயாளிகள், குழந்தை பெறாதவர்கள் ஆகியோரைப் பாதுகாப்புப் பகுதி நோக்கிச் செல்லுமாறு அறிவிக்கப்படுகிறது. சிறுவர்கள் அக் காலப் போர்களில் ஈடுபட்டிருந்ததனால் அவர்களை இப்பட்டியலில் இணைக்க வில்லை என்பதும், அக்காலப் போர்களில் பெண்கள் ஈடுபடவில்லை என்பதனால் அவர்களை இப்பட்டியலில் இணைத்துள்ளனர் என்பதும் கருதத்தக்கன. மேலும், நோயாளிகள் என்றது இன்றைய மருத்துவமனையின் அடையாளமாக உள்ளது எனலாம். எனவே இயலாதவர்களுக்கு உரிய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் எனும் **போர் சார்ந்த நீதிக் கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் உருவாக்கம் பெற்றுள்ளது** எனலாம்.

**போர்க்கைதிகளின் உரிமைகள் பாதுகாத்தல்**

போர்க்கைதிகளுக்கும் உரிமைகள் உண்டு என அழுத்தமாக வாதிடுகிறது தற்காலத்துப் பன்னாட்டுச் சட்டம். "Prisoners of war may in no circumstances renounce in part or in entirety the rights secured to them by the present Convention, and by the special agreements referred to in the foregoing Article, if such there be."[68] என ஜெனிவா உடன்படிக்கை தெரிவிக்கிறது. இதன்மூலம் போர்க்கைதிகளுக்கும் உரிமைகள் கொடுத்து நீதி நிலைநிறுத்தப் பட்டுள்ளது.

போர்க்கைதிகளிடம் கனிவாக நடந்து கொள்ளவேண்டும்;[69] அவர்களுக்கு உறைவிடம், உணவு, உடை வாய்ப்பேற்படுத்தித் தரவேண்டும்;[70] சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி பராமரிக்கப்பட வேண்டும்;[71] வழிபாட்டு உரிமை வழங்கப்பட வேண்டும்;[72] அவர்கள் தமக்கேற்படும் குறைகளைத் தெரிவிக்க அனுமதிக்கப்பட வேண்டும்[73] எனப் பல்வேறு உரிமைகளை ஜெனிவா

உடன்படிக்கை போர்க்கைதிகளுக்கு வழங்கியதன் மூலம் தற்காலத்தில் போர் நீதி (War Justice) நிலைநாட்டப்பட்டுள்ளது.

“கிள்ளிவளவன் காலத்து மலையமான் எக்காரணம் பற்றியோ சோழனது சீற்றத்திற்கு ஆளானான். அதனால் கிள்ளிவளவன் அவனை என்ன செய்தான் என்பது விளங்கவில்லை; ஆயின் அவன் மக்கள் இருவரையும் சிறைப் பிடித்துக் கொணர்வித்தான்; அவர்களை யானையால் இடறச் செய்யத் தீர்மானித்தான்.”[74] இதையறிந்த புலவர் கோவூர்கிழார் இளஞ்சிறார்களைக் கொல்வது முறையன்று என எடுத்துரைத்துள்ளார்.[75]

இவ்வரலாற்றுக் குறிப்பு மூலம், **இளஞ்சிறார் பருவத்திலுள்ள போர்க்கைதி களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் எனும் போர் சார்ந்த நீதிக் கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் உருவாக்கம் பெற்றுள்ளது** எனத் துணியலாம்.

போரில் வென்ற போது எதிர்நாட்டின் போர்வீரர்கள், பணியாட்கள், அரசப் பதவி வகித்தவர்கள் முதலியோரை தம் நாட்டுக்குச் சிறைப்படுத்தி அழைத்து வந்த குறிப்புகள் சங்க இலக்கியச் செய்யுள்களில் உள்ளன. இவ்வாறு சிறைப்படுத்தப் பட்டவர்களைக் கட்டாயப் பணி ஊழியத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர். அதாவது இவர்களைக் குற்றவாளிகளைப் போலச் சிறைச்சாலையில் அடைக்காமல் தம் நாட்டுக் குடிமக்களைப் போலவே நடத்தியுள்ளனர். ஆனால், அரசு சொல்லும் பணிகளைத்தாம் இவர்கள் கட்டாயம் செய்தாக வேண்டும் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

கரிகால் சோழன் பல்லாயிரம் எதிர்நாட்டு வீரர்களைக் கொண்டு காவிரியின் கரைகளை உயர்த்தியுள்ளான் எனும் கருத்து அறிஞர்களிடையே நிலவுகிறது. இது ‘கட்டாயப் பணி ஊழியம்’ எனும் கருத்தோட்டத்திற்குச் சான்றாக அமைகிறது. தமிழ் இணையக் கல்விக்கழகம் தனது பாடநூலில் பின்வரும் கருத்தைப் பதிவு செய்துள்ளது.

“கரிகால் சோழன் சிறந்ததொரு கப்பற்படையையும் கொண்டிருந்தான். இப்படையுடன் இலங்கை மேல் போர் தொடுத்தான் அதில் வெற்றியும் எய்தினான். இதுபற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தாலும் அங்கிருந்து பல்லாயிரக்கணக்கான வீரர்களைக் கொண்டு வந்து, அவர்களைக் கொண்டு காவிரியாற்றின் கரையை உயர்த்தி அமைத்தான்.”[76]

சேர மன்னனும் எதிர்நாட்டுப் பகைவீரர்களை இவ்வாறு தன் நாட்டுக்குக் கொண்டு வந்துள்ளான் எனப் பதிற்றுப்பத்தின் மூலம் அறிய முடிகிறது.

“நயன்இல் வன்சொல் யவனர்ப் பிணித்து,
நெய்தலைப் பெய்து, கைபிற் கொளீஇ”[77]

எனும் செய்யுள் அடிகளின் மூலம், எதிர்நாட்டு வீரர்களின் தலையில் எண்ணெய் ஊற்றி அவர்தம் கைகளைப் பின்புறமாகக் கட்டி அழைத்து வந்தான் என்று அறியலாம். இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களைக் ‘கொண்டி’ எனும் அடைமொழியால் சுட்டும் வழக்கம் இருந்துள்ளது என்பதைச் சங்க இலக்கியங்கள் உறுதி செய்கின்றன. கொண்டி எனும் சொல்லுக்குக் கொள்ளை எனும் பொருளும் உண்டு. இதனை,

“பொருநனும் இளையன்; கொண்டியும் பெரிதென
எள்ளி வந்த வம்ப மள்ளர்”[78]

எனும் புறநானூற்றுச் செய்யுள் மூலம் அறியலாம். கொள்ளப்படுவது ‘கொள்ளை’. அது போலவே கொண்டுவரப்பட்ட மனிதர் ‘கொண்டி மாந்தர்’ எனப் பொருள்கொள்வது சிறப்பாம்.

**கொண்டி மள்ளர் – போர்க்கைதியான ஆண் வீரர்**

கொண்டுவரப்பட்ட ஆண் வீரர்களைக், 'கொண்டி மள்ளர்' என்பர். அதுபோலக் கொண்டுவரப்பட்ட பெண்களைக், 'கொண்டி மகளிர்' என்பர். இந்த மரபினைச் சங்க இலக்கியத்தில் பெரிதும் காண முடிகிறது. 'மள்ளர்' என்பது பொதுவாக வீரர்களைக் குறிக்கும். 'கொண்டி மள்ளர்' எனப்படுபவர் போர்க் கைதியாக எதிரி நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட வீரர்கள் ஆவர். இவர்களுக் கான வேறுபாட்டை இலக்கியப் பதிவுகளின் மூலம் எளிதில் அறிந்து கொள்ளமுடிகிறது.

> "ஒருமுற் றிருவ ரோட்டிய வொள்வாட்
> செருமிகு தானை வெல்போ ரோயே
> ஆடுபெற் றழிந்த **மள்ளர் மாறி**
> நீகண் டனையே"[79]

> "மகளிர் மலைத்தல் அல்லது **மள்ளர்**
> **மலைத்தல்** போகிய சிலைத்தார் மார்ப
> செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்
> நெய்தலங் கான னெடியோய்
> எய்தவந் தனம்யாம் ஏத்துகம் பலவே"[80]

எனும் செய்யுள்களில் மள்ளர் எனும் சொல் பயின்று வந்துள்ளது. இது 'வீரர்கள்' எனும் பொருள்படப் பொதுவாக நிற்கிறது. இனிக் கொண்டி மள்ளர் குறித்த பதிவுகளைக் காணலாம்.

> "துய்வீ வாகை நுண்கொடிஇ உழிஞை
> வென்றி மேவல் உருகெழு சிறப்பின்
> கொண்டி மள்ளர் கொல்களிறு பெறுக"[81]

எனும் செய்யுளடிகளுக்குத், '*தான் வென்ற நாட்டிலிருந்து கொண்டுவந்த கொண்டி மள்ளர்களுக்கு ஆண்யானைகளை வழங்குனான்.*' எனப் பொருள் சொல்லப்படுகிறது.

**கொண்டி மகளிர் – பெண் போர்க்கைதிகள்**

கொண்டி மகளிர் – women who were brought (after battle victories)[82] எனக் கொண்டி மகளிர் குறித்த விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இனிக் கொண்டி மகளிர் குறித்த சங்க இலக்கியப் பதிவுகளைக் காணலாம்.

"**கொண்டி மகளிர்** உண் துறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலர் அணி மெழுக்கம் ஏறிப் பலர் தொழ
வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்
பரு நிலை நெடுந்தூண் ஒல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையவும்"[83]

"ஒண்சுடர் விளக்கத்துப் பலருடன் றுவன்றி
நீனிற விசும்பி லமர்ந்தன ராடும்
வானவ மகளிர் மானக் கண்டோர்
நெஞ்சு நடுக்குறூஉக் **கொண்டி மகளிர்**
யாம நல்யாழ் நாப்ப ணின்ற
முழவின் மகிழ்ந்தன ராடிக் குண்டுநீர்ப்
பனித்துறைக் குவவுமணன் முனைஇ மென்றளிர்க்
கொழுங்கொம்பு கொழுதி நீர்நனை மேவர
நெடுந்தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி"[84]

எனும் செய்யுள் அடிகளால், கொண்டி மகளிர்களைப் பற்றிய செய்திகள் பதிவாகி யுள்ளன. கொண்டி மகளிர்கள் தம் பகுதியில் அமைந்துள்ள மறங்களில் விளக்கேற்றும் பணியினையும், பொது விடங்களில் யாழ் இசைக்கும் பணியினையும் செய்துள்ளனர் என அறிந்து கொள்ள முடிகிறது. அதாவது அன்றாடம் நிகழ்த்தபட வேண்டிய துணைமைப் பணிகள் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டன எனக் கருத இடமுண்டு. மேலும், அவர்கள் விலைமகளிர்களாகவும் ஆக்கப்பட்டனர் என பழைய உரைகள் மூலம் அறியலாம்.

மேற்சுட்டிய பதிவுகளின் மூலம் அரசர்கள் போர்புரிந்து வெற்றி பெற்ற நாட்டிலிருந்து ஆண் பெண்களைத் தம் நாட்டுக்குக் கொண்டுவரும் வழக்கமும்; அவர்களைக் கொண்டி மள்ளர், கொண்டி மகளிர் எனச் சுட்டுவதும்; அவர்களைச் சிறைச்சாலையில் அடைத்து வைக்காமல் தம் குடிமக்களைப் போலவே நடத்தியதும்; அவர்களுக்கு வேண்டிய உணவு உடை உறையுள் ஆகிய அடிப்படை வசதிகளைச் செய்துதரும் ஏற்பாடுகளும்; அவர்களிடமிருந்து வரியைப் பொருளாகப் பெறுவதற்குப் பதிலாய்க் கட்டாயப் பணி ஊழியத்தின் மூலம் உழைப்பு பெறப்பட்ட சூழலும் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது என உறுதியாகச் சுட்டலாம். ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய பணிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் அவர்களுக்கு ஊதிய வருவாய் உறுதி செய்யப் பட்டுள்ளது எனலாம். இவற்றின் மூலம், தற்காலத்தில் போர்க்கைதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள போர் சார்ந்த நீதி வரையறைக் கோட்பாடுகளுள் பெரிதும் **சங்ககாலத் தமிழகம் போர்க்கைதிகளுக்கு வழங்கி அவர்களுக்கான உரிமையைப் பாதுகாத்து நீதி செலுத்தியிருக்கிறது** எனத் துணிந்து கூறலாம்.

**போரால் பாதிக்கப்பட்ட மக்களும் மறுநிர்மானமும்**

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளைச் சீர் செய்வதே அவர்களுக்கு வழங்கப்படும் நீதியாகும் என்கிறது தற்காலச் சட்டவியல். “Post-conflict reconstruction is broadly understood as a complex, holistic and multidimensional process encompassing effort to simultaneously improve military (restoration of law and order), political (governance), economic (rehabilitation and development) and **social conditions (justice and reconciliation)**.”[85] (தமிழாக்கம்: போர்க்குப்பின்னான மறுநிர்மானம் என்பது பல கோணங்களில் செயல்படுத்த வேண்டிய முன்னெடுப்பாகும். சட்டம் ஒழுங்கைக் காக்க காவல்படை மேம்பாடு, அரசமைப்பை நிலைப்படுத்த அரசியல் மேம்பாடு, வளர்ச்சிக்கு வித்திடும் பொருளாதார மேம்பாடு, சமூக மேம்பாடு என அனைத்தையும் ஒருசேர மேம்படுத்துவதாகும்.) இவ்வாறு போர்க்குப் பின் நிர்மானம் செய்ய வேண்டிய துறைகள் பல இருந்தாலும் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையை மேம்படுத்தித் தருதலும் போர் சார்ந்த நீதி மேலாண்மையுள் ஒன்றாகும் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

சங்க காலத் தமிழகத்தில் ஏராளமான போர்கள் நடைபெற்றதற்கான செய்திப் பதிவுகள் கிடைக்கின்றன. போர்க்குப் பின்னர் நிகழ்த்தப்பட வேண்டிய மறுநிர்மானம் குறித்த பதிவுகளும் கிடைக்கின்றன.

“யாண்டுபல கழிய வேண்டுபுறத்து இறுத்து
மேம்பட மரீஇய வெல்போர்க் குருசில்”[86]

பொருள்: நீ அழித்தநாடுகளிற் கொள்ள வேண்டும் நிலங்களிலே பலயாண்டுகளும் போம்படி தங்கி, **அந்நிலங்கள் பண்டையின் மேலாதற்கு அடிப்படவிருந்த வெல்லும் பேரினையுடைய தலைவனே!**[87] எனப் பாண்டியன்

நெடுஞ்செழியன் கடைப்பிடித்த போர் சார்ந்த நீதிக் கருத்தியல் இவ்வரிகள் மூலம் விளக்கப் படுகின்றது.

தாம் வாழும் நாட்டில் பகை அரசர்கள் போர் தொடுக்க வரும்போது தம் தாய்நாட்டைக் கைவிட்டு மக்கள் புலம்பெயரக் கூடியவர்கள்.[88] அதே நாட்டில் போர் ஓய்ந்த பின்னர்ப் புலம்பெயர்ந்தவர்கள் தம் நாட்டுக்குத் திரும்பும் வழக்கம் கொண்டவர்கள்.[89]

இவ்வாறு போரால் பாதிக்கப்படும் மக்களை அரவணைத்து அவர்களின் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் உறுதி செய்வதே அவர்களுக்கான உரிமையை வழங்குவதாகும். இந்நீதிக் கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளதாகத் தெரிகிறது.

**இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்** பகை அரசை வெற்றி பெறுகிறான். பின்னர் அவ்விடத்தில், "பாதுகாப்பிடம் காணாமல் திசையெங்கும் தேடி வருந்திய மக்கள் தொகுதி அனைத்தும் இக்குடை நிழற்கண் வருக"[90] என வயவர் அழைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்மூலம் பகையரசின் மக்களுக்குப் பாதுகாப்பிடம் வழங்கி அவர்களை மேம்படுத்தித் தரவேண்டும் **போர் சார்ந்த நீதிக் கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் நிலைபட்டிருப்பதை உணரலாம்**.

**களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்** எனும் சேர மன்னனின் மாட்சிகளைப் பற்றிக் கூறிவரும்போது அவனால் போரினால் "தளர்ந்து வருந்திய குடிமக்கள் மகிழ்ந்து ஒழுகும்படி செய்து"[91] வரக்கூடியவன் எனப் பதிற்றுப்பத்துக் கூறுகிறது. "துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றி"[92] எனவும் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. இதனால் *களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் தான் செய்த போரினால் தளர்ந்த குடிமக்களை மீண்டும் அவர்கள் நல்வாழ்வு பெற செய்ய*

*வேண்டிய செயல்களை ஆற்றிப் போர் சார்ந்த நீதி நிலைபாட்டிற்குச் சான்றாக வாழ்ந்துள்ளான்* என அறியலாம்.

போர்க்குப் பின்னர்த் தன்னாட்டில் வளர்ச்சிப் பணிகள் செய்வதோடு தாம் வெற்றி பெற்ற நாட்டிலுள்ள மக்களையும் தன் மக்களாகவே கருதி வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. இது சங்ககாலத் தமிழகத்தின் சிறப்புகளுள் ஒன்று எனலாம்.

"படுபிணம் பிறங்க நூறிப் பகைவர்
கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தே"[93]

"பகைவர் நாட்டில் அழிந்து கெட்ட குடிமக்களை அவர்கள் நாட்டில் மீண்டும் வாழும்படி செய்தும் விளங்குகின்ற"[94] அரசன் செல்வக்கடுங்கோ வாழியாதன் எனப் பதிவு செய்கிறது பதிற்றுப்பத்து.

மேற்சொல்லியிருக்கும் குறிப்புகளின் மூலம் போர் சார்ந்த நீதிக் கருத்தியல் வளர்ச்சி பெற்ற சமுகமாகவே சங்க காலத் தமிழகம் திகழ்ந்துள்ளது எனலாம். போர் தொடங்குவதற்கு முன்னர் ஆநிரை கவர்தல் மூலம் போர் அறிவிப்பு, போர்நடைபெறும் போது இயலாதவர்கள் பாதுகாப்பிடம் செல்ல வாய்ப்பளித்தல், இளஞ்சிறார்களான போர்க்கைதிகளின் உரிமையைப் பாதுகாக்க முனைந்தமை, போர்க்குப் பின்னர் மக்கள் சிறப்பாக வாழ மறுநிர்மானப் பணிகள் மேற்கொள்ளுதல் என மனிதவுரிமைகளைப் போரின் போதும் காக்க வேண்டும் எனும் போர் சார்ந்த நீதிக் கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் வளர்நிலையில் இருந்துள்ளது எனலாம்.

<u>அடிக்குறிப்புகள்</u>

1. சி.பாலசுப்பிரமணியன், ***சங்க இலக்கியம் சில பார்வை***, சென்னை, 1989, பக். 141.
2. குறுந். 221.
3. பெரும்பாண். 155-165.
4. புறம். 33.
5. ஐங்குறு. 47, 48, 49; நற். 239; அகம். 340; புறம் 343.
6. நற். 183.
7. குறுந். 269: 4-6; அகம். 140.
8. அகம். 61.
9. பொருநர். 214-217.
10. அகம். 296: 8-10.
11. குறுந். 100: 3-5.
12. பெரும்பாண். 164-166.
13. நற். 97:6-9, 118:8-11.
14. சி.பாலசுப்பிரமணியன், ***சங்க இலக்கியம் சில பார்வை***, சென்னை, 1989, பக். 151.
15. நா. பார்த்தசாரதி, ***பழந்தமிழர் கட்டடக் கலையும் நகரமைப்பும்***, சென்னை, 1992, பக். 175.
16. சுந்தரசண்முகனார், ***தமிழ் அங்காடி***, புதுவை, 1993, பக். 277.
17. சி.பாலசுப்பிரமணியன், ***சங்க இலக்கியம் சில பார்வை***, சென்னை, 1989, பக். 154.
18. மேலது பக். 156-157.
19. கா.கோவிந்தன் (மொழிபெயர்ப்பாளர்), ***பி.டி. சீனிவாச ஐயங்காரின் தமிழர் வரலாறு*,** சென்னை, 2000, பக். 160.
20. சி.பாலசுப்பிரமணியன், ***சங்க இலக்கியம் சில பார்வை,*** சென்னை, 1989, பக். 157.
21. கா.கோவிந்தன் (மொழிபெயர்ப்பாளர்), ***பி.டி. சீனிவாச ஐயங்காரின்***

***தமிழர் வரலாறு***, சென்னை, 2000, பக். 21-22.

22. சி.பாலசுப்பிரமணியன், ***சங்க இலக்கியம் சில பார்வை***, சென்னை, 1989, பக். 163.
23. Ball, Warwick, ***Rome in the East: The transformation of an empire***, London and New York: Routledge, 2000, p.123.
24. https://archive.india.gov.in/business/consumer_rights/measures_act.php accessed on 26.8.2019.
25. http://legislative.gov.in/documents/legislative-references/list-of-acts-yearwise?field_acts_yearwise_tid=All&page=6 accessed on 26.8.19.
26. பட்டினப். 210.
27. திருக். 120.
28. https://timesofindia.indiatimes.com/india/No-toll-for-bad-roads-SC-tells-NHAI-in-pro-user-order/articleshow/48703523.cms accessed on 25.08.2016.
29. அகம். 167:7-9.
30. சி.பாலசுப்பிரமணியன், ***சங்க இலக்கியம் சில பார்வை***, சென்னை, 1989, பக். 154.
31. பட்டினப். 133.
32. பெரும்பாண். 80-82.
33. Order of Succession, available at https://en.wikipedia.org/wiki/Order_of_ succession, seen on 26.08.2016.
34. Primogeniture, available at https://en.wikipedia.org/wiki/Primogeniture, seen on 26.08.2016.
35. Agnatic Seniority, available at https://en.wikipedia.org/wiki/Agnatic_seniority, seen on 26.08.2016.
36. புறம். 75:1-2.
37. தேவநேயப் பாவாணர், ***பழந்தமிழாட்சி***, சென்னை, 2012, பக். 116.
38. புறம். 75:4-12.
39. புறம். 183:5-7.
40. புறம். 213:9-11.

41. புறம். 77.
42. பொருநர். 130-133.
43. Fetal Rights, available at https://en.wikipedia.org/wiki/Fetal_rights#cite_ref-Penman_19-1, seen on 25.08.2019.
44. திருக். 733.
45. புறம். 184:5-11.
46. புறம். 35.
47. கு. இராஜவேலு, ***புறநானூறு புதிய தளிர்கள்***, சென்னை, 1999, செய்யுள் 35.
48. மலைபடு. 319-320.
49. முத்தொள். 37.
50. புறம். 330:5-7.
51. உரையாசிரியர் இளங்குமரனார், ***புறநானூறு***, கோவிலூர், 2003, செய்யுள் 330.
52. பட்டினப்.119-25.
53. பட்டினப். 131-35.
54. திருக். 756.
55. புறம். 22:26-28.
56. புறம். 387:12-14.
57. புறம். 156.
58. புறநா. 97:18-25.
59. திருக். 552.
60. கலித். 10:5-7
61. கலித். 26:19-20.
62. புறம். 184.
63. Preamble of Hague Convention (III) of 1907 on the Opening of Hostilities signed on 18 Oct of 1907 at The Haugue.
64. தொல்-பொருள்-2-3.
65. UN Security Council Resolution 1998 (2011), Adopted by the Security Council at its 6581st meeting, on 12 July 2011, p.1. Available at

https://www.un.org/ga/search/view_doc.asp?symbol=S/RES/1998%20 (2011)Lang=E&Area=UNDOC accessed on 26.08.2019.

66. Ibid p.2.
67. புறம். 9:1-6.
68. Article 7 of ***Geneva Convention Relative to The Treatment of Prisoners of War*** of 12 August 1949, available at https://www.un.org/en/genocide prevention/documents/atrocity-crimes/Doc.32_GC-III-EN.pdf accessed on 26.08.2019.
69. Ibid p.97.
70. Ibid p.102.
71. Ibid pp.103-104.
72. Ibid p.106.
73. Ibid p.121.
74. மா.இராசமாணிக்கனார், ***சோழர் வரலாறு***, சென்னை, 1947, பக். 79.
75. புறம். 46.
76. தமிழ் இணையக் கல்விக் கழகம், ***சோழ மன்னர்கள் (இளங்கலைப் பாடத் திட்டப் பகுதி)*** சென்னை. இணைய பக்கம் www.tamilvu.org/courses/ degree/a031/a0311/html/a0311554.htm கண்டது 16.04.2014.
77. பதிற்றுப். 2:8-9.
78. புறம். 78:6-7.
79. பதிற்றுப். 63:11-14.
80. புறம். 10:9-13.
81. பதிற்றுப். 43:23-25.
82. வைதேகி எர்பெட் மொழிபெயர்ப்பாளர், *Learn Sangam Tamil, பத்துப்பாட்டு – பட்டினப்பாலை*, இணைய முகவரி www.learnsangamtamil.com/ pattinapalai/ கண்டது 14.04.2014.
83. பட்டினப். 246-251.
84. மதுரைக். 580-588.
85. Nikolaos Tzifakis, *Post-Conflict Economic Reconstruction,* available at

https://pesd.princeton.edu/?q=node/260 accessed on 26.08.2019.

86. மதுரைக். 150-151.

**87.** நச்சினார்க்கினியர் (உரையாசிரியர்), ***பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினிய ருரையும்***, தஞ்சை, 1986, பக். 354.

88. கலித்.78:4-6.

89. கலித். 78:8-9.

90. அ.மா.பரிமணம் உரையாசிரியர், ***பதிற்றுப்பத்து மக்கள் பதிப்பு***, கோவிலூர், 2003, பக். 46.

91. மேலது பக். 104.

92. பதிற். 32, 37.

93. பதிற். 69.

94. அ.மா.பரிமணம் உரையாசிரியர், ***பதிற்றுப்பத்து மக்கள் பதிப்பு***, கோவிலூர், 2003, பக். 246.

# இயல் 5: சங்க கால நூல்களில் நீதியின் அங்கங்கள்

நீதி பெறுவது தனிமனிதனுக்கான உரிமையாகும். “The dead cannot cry out for justice; it is a duty of the living to do so for them.”[1] (தமிழாக்கம்: நீதி வேண்டி இறந்தவர்களால் குரலெழுப்ப முடியாது. தமக்கான நீதி வேண்டிக் குரலெழுப்பதுவது உயிரோடு இருப்பவர்களின் கடமையாகும்.) நீதி என்கிற இறுதித் தீர்வை அடைவதற்குச் சில கூறுகள் தேவைப்படுகின்றன. அக்கூறுகளே நீதியின் அங்கங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. சங்க காலத் தமிழகத்தில் நீதியின் அங்கங்கள் குறித்த ஆய்வை இப்பகுதி பதிவு செய்கிறது.

## நீதியின் அங்கங்கள் – பொது அறிமுகம்

சங்க காலத் தமிழகத்தில் நிலவிய நீதி தொடர்பான கருத்துப் படிவத்தை சங்க கால நூல்கள் நமக்கு விளக்குகின்றன. இன்றைய காலக்கட்டத்தில் நீதியின் பரிணாம வளர்ச்சி மிகுந்துள்ளதைச் சமூக வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. குற்றவியல் நீதிமுறை மூன்று முதன்மையான பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை வருமாறு:

“The criminal-justice system consists of three main parts:

1. Law enforcement agencies, usually the police
2. Courts and accompanying prosecution and defence lawyers
3. Agencies for detaining and supervising offenders, such as prisons and probation agencies.”[2]

தமிழாக்கம்: குற்றவியல் நீதிமுறை மூன்று முதன்மைக் கூறுகளை உடையது.

1. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்பு, பொதுவாகக் காவல்துறை
2. **விசாரணை** பொதுவாக நீதிமன்றம் குறுக்கு விசாரணை வழக்கறிஞர்கள்
3. **தண்டனை** பொதுவாகச் சிறைக்காவல் மற்றும் கண்காணிப்பு அமைப்பு

மேற்சுட்டப்பட்டிருக்கும் விளக்கத்தின் மூலம் நீதியின் உறுப்புகளாக மூன்று உள்ளன. இதனைச் சுருக்கமாகக் காவல்துறை, விசாரணை மற்றும் தண்டனை அமைப்பு எனக் கூறிவிட முடியும்.

**காவல்துறை**

காவல்துறையின் செயல்பாடுகள் இன்றைய காலத்தில் தவிர்க்க முடியாதபடி வளர்ந்துள்ளது. நாட்டில் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பில் காவல்துறையின் பங்களிப்பு மிகப் பெரியது. இதனைத் தமிழ்நாடு அரசு பின்வருமாறு தெரிவித்துள்ளது.

> "The World cannot sustain itself without water
> Peace will not prevail sans effective Policing
> Growth will not be there without Peace and Prosperity"[3]

(தமிழாக்கம்: நீரில்லாமல் உலகு இயங்காது; காவல்துறை இல்லாமல் அமைதி நிலவாது; அமைதியும் வளமும் இல்லாமல் வளர்ச்சியிருக்க முடியாது) எனக் காவல்துறையின் தேவையைத் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. நாட்டின் அனைத்து எல்லைகளிலும் காவல்துறை தன் பணியைச் செவ்வனே செய்வதனால்தான் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறது.

> "The Director General of Police, Law and Order, heads the State Police Force. The entire State Police organization functions under 4 Zones headed by the Zonal Inspectors General of Police. These Zones are again subdivided into eleven Ranges headed by the Deputy Inspectors General of Police. There are seven Commissionerates headed either by a Director General of Police / Inspector General of Police / Deputy Inspector General of Police. There are 33 Districts including 2 Railway Districts and each one is administered by a Superintendent of Police in command. There are 244 Subdivisions, each headed by an Assistant Superintendent of Police or a Deputy Superintendent of Police"[4]

(தமிழாக்கம்: சட்டம் ஒழுங்கு காவல்துறை இயக்குநர் மாநிலத்தின் காவல் படைக்குத் தலைமைப் பொறுப்பாளர் ஆவார். ஒட்டுமொத்த மாநிலக் காவல் அமைப்பும் நான்கு மண்டலக் காவல்துறைத் தலைவர்களின் கீழ் இயங்குகிறது. இம்மண்டலங்கள் பதினொரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு காவல்துறைத் துணைத்தலைவர்களின் கீழ் இயங்குகிறது. ஏழு ஆணையரகங்கள் உள்ளன. அவை காவல்துறை இயக்குநர் அல்லது காவல்துறைத் தலைவர் அல்லது காவல்துறைத் துணைத்தலைவர் தலைமையின் கீழ் செயல்படுகின்றன. இரண்டு தொடரியக மாவட்டம் உள்பட இருக்கின்ற 33 மாவட்டங்களும் காவல்துறைக் கண்காணிப்பாளர் தலைமையில் உள்ளன. 244 துணைப்பகுதி காவல்துறைத் துணைக்கண்காணிப்பாளர் அல்லது உதவிக் கண்காணிப்பாளர் பொறுப்பில் செயல்படுகின்றன.) இதன்மூலம் தற்போது நடைமுறையில் உள்ள காவல்துறை நிர்வாக அமைப்பை அறிந்து கொள்ள முடிகிறது.

**விசாரணை அமைப்பு**

விசாரணை அமைப்பு என்பது பொதுவாக நீதிமன்றம் ஆகும். சங்க காலத்தில் மன்றம், அறங்கூறு அவையம், பொதியில் என்பவை எல்லாம் விசாரணை அமைப்பாக இருந்தன என்பதையும் அவை செயல்பட்ட விதத்தையும் இயல் இரண்டில் பதிவாகி யுள்ளது. தற்போது விசாரணை அமைப்பு வெகுவாக வளர்ச்சி யடைந்துள்ளது. நீதி மன்றத்தை மட்டும் சார்ந்தில்லாமல் பிற சட்ட அமைப்புகளையும் அரசாங்கங்கள் உருவாக்கியுள்ளன. The Arbitration and Conciliation (Amendment) Act, 2015 எனும் சட்டம் 2016-ஆம் ஆண்டின் 3-ஆவது சட்டமாக மைய அரசால் நிறைவேற்றப்பட்டது. திருத்த சட்டத்திற்கான மூலச்சட்டம் 1996-ஆம் ஆண்டே நாடாளுமன்றத்தால் நிறை வேற்றப்பட்டது. வழக்கில் ஈடுபடும் இருதரப்பும் இணைந்து ஒருமனதாக நடுவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தம் வழக்கைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு இச்சட்டம் வழி வகை செய்கிறது.

பன்னாட்டளவில் மாற்று விசாரணை அமைப்பாக தன்தேர்வு நடுவர் தீர்ப்பாயம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. "The General Assembly, Recognizing the value of arbitration as a method of settling disputes arising in the context of international commercial relations, convinced that the establishment of rules for *ad hoc* arbitration that are acceptable in countries with different legal, social and economic systems would significantly contribute to the development of harmonious international economic relations"[5] என ஐக்கிய நாடுகளின் அவையம் 1976-ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றித் தன் உறுப்பு நாடுகளுக்குச் சுற்றறிக்கை அனுப்ப வழிவகை செய்துள்ளது.

மேற்சுட்டியிருக்கும் தரவுகள் விசாரணை அமைப்பின் வரலாற்று மாற்றங்களை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. நீதி எட்டப்படுவதற்கு விசாரணை மிக இன்றி யமையாதது என்பதை இதன்மூலம் உணரலாம். சங்கக் காலத் தமிழகத்தில் விசாரணை களம் எப்படியிருந்தது எனும் ஆய்வு வினாவிற்கான விடையைப் பின்வரும் பகுதி பதிவு செய்துள்ளது.

**தண்டனை**

தண்டித்தல் எனப்படும் உளவியல் சார்ந்த கருத்தியல் வரையறை செய்ய முடியாத அளவுக்குக் காலப் பழமையானது. கோபம் என்கிற உணர்விலிருந்தும் மற்றும் சண்டையிடுதலால் வரும் விளைவிலிருந்தும் உண்டாவதே தண்டித்தல் என்பது பொதுவாகச் சுட்டப்படும் கோட்பாடாகும்.[6] தண்டனை மேலாண்மை நீண்ட நெடிய வரலாறு கொண்டது.

குற்றவாளியைக் கடுமையாகத் தண்டிப்பது போல் தோன்ற வேண்டும் ஆனால் எளிதான தண்டனை வழங்க வேண்டும் என "கடிதோச்சி மெல்ல எறிக"[7] எனும் தொடர் மூலம் திருவள்ளுவர் சுட்டிக் காட்டுவார். "Always seek justice, but love only mercy. To love justice and hate mercy is but a doorway to more injustice"[8] (தமிழாக்கம்: நீதி கோருங்கள் ஆனால் கருணை பக்கம் நில்லுங்கள்;

நீதியை மட்டும் விரும்பி கருணையை வெறுத்தால் அது அநீதிக்கான வழியாக அமைந்துவிடும்.) எனக் குற்றவாளிகளைச் சற்றே கடுமையில்லாமல் தண்டிக்க வேண்டும் என்கிற கோட்பாடு சமூகத்தில் நிலவியது.

என்றாலும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு வருவதே நடைமுறையில் உள்ளது. “பாதிக்கப்பட்டவர், குற்றவாளி மற்றும் சமூகம் ஆகிய மூன்று புள்ளிகளுக்கிடையே ஏற்படும் முரண்பாடாகத்தான் குற்றங்கள் கருதப்படுகின்றன.”[9] எனவே குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவது பாதிக்கப்பட்டவர்க்கும் சமூகத்திற்கும் ஆறுதலாக அமைகிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. நீதியை எட்டுவதற்கான உறுப்புகளுள் தண்டனையும் ஒன்றாக இடம்பெறுவதை இதனால் அறியலாம். சங்க காலத் தமிழகத்தில் தண்டனை தொடர்பான கருத்தியல் எவ்வாறு இருந்தது என்பதை இவ்வியலின் பின்பகுதி விளக்குகிறது.

## விசாரணை குறித்த செய்திப் பதிவு

நீதியை நோக்கி நகரும் பயணத்தில் ‘விசாரணை’ எனும் பகுதி மிக இன்றியமையாதது. சாட்டப்படும் குற்றங்கள் எல்லாம் உண்மையாக இருப்பதில்லை. அவற்றை விசாரித்தே உறுதிபடுத்த வேண்டியுள்ளது.

சங்க காலத் தமிழகத்தில் இவ்விசாரணை கருத்துருவின் வளர்ச்சி எவ்வாறு இருந்துள்ளது என்பதை இப்பகுதி பதிவு செய்கிறது. விசாரணைக்கென ஓர் அமைப்பு சங்க காலத்தில் இருந்துள்ளது என்பதை இவ்வாய்வேட்டின் இயல் இரண்டு விளக்கி நிலைநாட்டியுள்ளது. அதனைத் தொடர்ந்து, சங்க காலத்தில் விசாரணை எவ்வாறு நடைபெற்று உள்ளது என்பதைக் கண்டறிய வேண்டும்.

கி.மு. 300 முதல் கி.மு.1 வரையிலான வரலாற்றுக் காலக்கட்டத்தில் தமிழகத்தில் முறைமன்றம் இருந்தமை முன்கூறப்பட்டுள்ள பகுதிகளில் உறுதி

செய்யப்பட்டுள்ளது. இனி, சட்ட விதிமுறைகளில் தேர்ச்சி பெற்ற அறிஞர்கள், சட்ட அறிவுறுத்துநர்கள் இருந்தனரா என்றும், விசாரணை அமைப்போடு அவர்களின் பங்களிப்பு என்ன? என்பதை ஆய்வு செய்யும் பகுதியாக இது அமைகிறது.

**பழங்காலப் பன்னாட்டுச் சட்டவியல் அறிஞர்கள்**

பழங் காலக்கட்டத்தில் பன்னாட்டளவில் வெவ்வேறு நாடுகளில் சட்ட அறிஞர்கள் இருந்தமையை உறுதி செய்ய முடிகிறது. இவர்கள் தங்கள் நாட்டு எல்லைக்குள் உருவாக்கப்பட்ட சட்ட விதிமுறைகளையும் ஒருசிலர் தம் நாட்டு எல்லையைத் தாண்டியுமுள்ள சட்டங்களையும் அறிந்து இருந்துள்ளனர்.

கிரேக்கம், உரோம நாடுகளில் சட்ட அறிவுறுத்துநர்கள் இருந்தமையை அறிய முடிகிறது. இவர்கள் வழக்கொன்றை விசாரிக்கின்றபோது நாட்டு எல்லைக்குள் பொருந்தும் சட்ட விதிகள், கூறிய தீர்வழி கூறியிருக்கின்றனர். பெரும்பாலும் தவறு இழைத்தவரிடமிருந்து தண்டத்தொகை வாங்கி, அத்தவற்றினால் பாதிக்கப்பட்டவர்க்கு வழங்கியுள்ளனர். பெயர் சுட்டிக் கூறுமளவிற்கு உரோம நாட்டில் மற்றும் கிரேக்க நாட்டில் சட்டவியல் அறிஞர்கள் இருந்துள்ளனர். இவர்களை இன்றைய நீதிமன்ற நடுவர்களைப் போலக் கருதவியலாது எனினும் அதன் தொடக்க நிலையராகக் கருத வாய்ப்பிருக்கிறது.

இந்தியாவில், 'மனு' என்பவரை சட்டவியல் அறிஞர்களுள் ஒருவராகக் கருதுவர். அவர் இயற்றிய 'மனு நீதி' வெகுவாகப் புகழ்பெற்ற சட்டவியல் தொகுப்பாகக் கருதப்படுகிறது. ஆனால் இச்சட்டத் தொகுப்பு முழுமையானது என்று சொல்வதற்கு இல்லை. ஏனெனின் இது அடிப்படையில் இந்து சமயத்து மக்களுக்கான சட்டமாக மட்டுமே திகழ்வதோடு சாதிக்கொரு நீதி வகுத்து

மனிதர்களுக்கான சட்டமாகத் திகழ்வது இல்லை. இந்து மதம் எனும் சிறு வட்டத்துக்குள் சிக்கிக் கொண்ட விதிமுறையாகவே மனு நீதி கருதப்படுகிறது.

**காவிதி மாக்கள்**

> "காலொடு பொலிந்த கோலக் கட்டிற்
> கடிநாட் செல்வத்துக் **காவிதி மாக்கள்**
> படியிற் றிரியாது படுத்தனர் வணங்கப்
> பட்டச் சின்னுதற் பதுமா பதியொடு"[10]

எனவும்,

> "கோயின் மகளிருங் கோப்பெரு முதியரும்
> வாயின் மறவருஞ் சாயாச் செய்தொழிற்
> கணக்கருந் திணைகளுங் **காவிதிக் கணமும்**
> அணித்தகு மூதூ ராவண மாக்களும்"[11]

எனவும் பெருங்கதை காவிதி மக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. எனினும் அவர்களின் பொறுப்பு நிலை என்ன என்பதைப் பெருங்கதை எங்கும் விளக்கவில்லை. மேற்சுட்டப்பட்டிருக்கும் செய்யுள் வரிகள் மூலம் காவிதிப் பட்டத்தினர் சமூகத்தில் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்குச் சிறந்து விளங்கினர் என்பது தெளிவாகின்றது.

> "புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
> அரைசு கட்டிலில் துஞ்சியது அறியாது
> ஆசான் பெருங்கணி **அறக்களத்து அந்தணர்**
> **காவிதி** மந்திரக் கணக்கர் தம்மொடு
> கோயில் மாக்களும் குறுந்தொடி மகளிரும்"[12]

என்னும் சிலப்பதிகாரச் செய்யுள் வரிகள், நுணுக்கமோடு காணப்பட வேண்டியவை. 'அறக்களத்து அந்தணர் காவிதி' எனக் கூட்டிப் பொருள்

கொள்ளின் காவிதி மாக்களின் பணிநிலை ஓரளவுக்கு வெளிப்படுமாறு இருக்கும். அவ்வகையில் **‘அறக்களத்து அறவோராகிய காவிதி’** எனப் பொருள் கொள்ள முடியும். ‘அறக்களம்’ என்பது அறங்கூறு அவையத்தைக் குறிப்பதாய் நிற்கிறது. எனவே, காவிதி மாக்கள் என்போர் அறங்கூறு அவையத்தோடு தொடர்பு கொண்டவராய் இருத்தல் வேண்டும் என்று மேற்சுட்டிய சிலப்பதிகாரச் செய்யுள் வழி உறுதியாகிறது. மேலும் இதனை உறுதிப்படுத்த மதுரைக்காஞ்சி துணைசெய்கிறது.

**மதுரைக்காஞ்சி தரும் விளக்கம்**

பெருங்கதையின் மூலம் காவிதி மாக்கள் என்போர் சமூகத்தில் சுட்டத்தக்க நிலையில் திகழ்ந்துள்ளனர் எனப் பெறமுடிகிறது. சிலப்பதிகாரத்தின் மூலம் காவிதி மாக்கள் அறங்கூறு அவையத்தோடு தொடர்புடையவராக இருத்தல் வேண்டும் எனத் தெளிய முடிகிறது. இனி, மதுரைக்காஞ்சி காவிதி மாக்கள் குறித்துக் கூறியிருப்ப வற்றைக் காண்பது இவ்வாய்வுக்குப் பெரிதும் துணைசெய்கிறது.

“நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்
தாவுதி மண்ணி யவிர் துகின் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
**நன்றுந் தீதுங் கண்டாய்ந் தடக்கி**
**அன்பும் அறனும் ஒழியாது காத்துப்**
**பழியொரீஇ யுயர்ந்து பாய்புகழ் நிறைந்த**
**செம்மை சான்ற காவிதி மாக்களும்”**[13]

எனக் காவிதி மாக்களின் இயல்பை வெகு தெளிவாக மதுரைக் காஞ்சி சுட்டுகின்றது. ‘செம்மை சான்ற காவிதி மாக்கள்’ என அவர்களின் நிலையுயர்வை

வெளிப்படுத்துகிறது. மேலும், அவர்களின் கடமைகளையும் இயல்பினையும் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

கடமைகளாகக் கீழ்க்காணும் மூன்றினைச் சுட்டுகிறது

- நன்றையும் தீதையும் கண்டு ஆய்தல்
- ஆய்வு முடிவில் முரண்படுவோரை அடக்குதல்
- அடக்கும் போதும் அன்பையும் அறத்தையும் தவறாது கடைப்பிடித்தல்

இயல்புகளாகக் கீழ்க்காணும் மூன்றினைச் சுட்டுகிறது

- பழிநிலையை நீக்குதல்
- பண்பு வழி பிறரினும் உயர்ந்திருத்தல்
- புகழ் நிறைந்திருத்தல்

**காவிதி மாக்களும் சட்டவியல் தொடர்பும்**

அறங்கூறு அவையத்தைத் தொடர்ந்து காவிதி மாக்களை மதுரைக் காஞ்சி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கது. ஏற்கெனவே சிலப்பதிகாரம் வழி காவிதி மாக்கள் அறங்கூறு அவையத்தோடு தொடர்புடைய பொறுப்பாளர்கள் எனத் தெளிந்தோம். அதனை உறுதி செய்வது போன்று மதுரைக் காஞ்சியிலும் அறங்கூறு அவையத்தைத் தொடர்ந்து காவிதி மாக்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறங்கூறு அவையத்திற்கு வரும் தரப்பாளர்களுக்கு உளவியல் கருத்துரை வழங்குபவர்களும், தரப்பாளர்களின் முறையீடுகளை ஒழுங்குப்படுத்தும் நிர்வாக அலுவலர்களும் உண்டு என்று சென்ற பகுதியில் கண்டு தெளிந்தோம். ஆனால் வழக்கு நடைமுறை இத்தோடு நிறைவு பெறுவதில்லை. முறையிடப்பட்ட வழக்குக்கு அறம் சார்ந்து ஒரு முடிவு வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் வழக்கு நடைமுறை முழுமை பெறும்.

அறங்கூறு அவையத்திற்கு வரும் வழக்குகளிலுள்ள நன்றையும் தீதையும் ஆய்ந்து பார்க்கும் பொறுப்பு காவிதி மாக்களுக்குரியதாகும். அப்போதைக்கு நிலவிய சட்டத்தொகுப்பு நூலான உரைநூலைத் துணைக்குக் கொண்டும் ஆய்வு மேற்கொள்ளப் படும். நன்றையும் தீதையும் ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரும்போது அந்த முடிவோடு உடன்படாதார் முரண்பட முயலும் போது அவர்களை அடக்குதலும் காவிதி மாக்களின் பொறுப்பாகும். அடக்க முற்படும் நிலையிலும் தரப்பாளர் மீது கடுமை செலுத்தாது அன்பையும் அறத்தையும் தவறாது செலுத்தும் பொறுப்பு அவர்களுடையதாம்.

மேற்சுட்டிய நடைமுறையின் மூலம் மூன்று சட்டவியல் பொறுப்புகள் காவிதி மாக்கள் மீது சுமத்தப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. அவை வருமாறு:

- முறைமன்றத்தின் நடுவர்க்குரிய பொறுப்பு (Judicial Responsibility)
- முடிவை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு (Execution Responsibility)
- தனிமனித வுரிமையை மதித்துச் செயல்படும் பொறுப்பு (Responsibility of Protecting Human Rights of an Individual)

எனவே காவிதி மாக்கள் மேற்குறிப்பிட்ட மூன்று சட்டவியல் தொடர்புடைய பொறுப்புக்குரியவர் என்பது தெளிவாம்.

**முறை (நீதி) வழங்கும் காவிதி மாக்கள்**

சட்டவியல் அறிஞர்கள் அனைத்திற்கும் மேலானதாக முறையைக் (நீதி) கருதுவர். சட்ட விதிகள் என்பதும் கூட முறையை அடைய உதவும் வழிவகை என்பர். “Justice is the end, the law is merely the instrument and the means; and the instrument must be defined by reference to its end”[14] என உரைப்பார் சட்டவியல் அறிஞர் சால்மண்டு.

சட்டவிதிகளின் ‘முதன்மை நோக்கம்’ முறையை அடைவதுதான். முறையைக் குலைக்கும் வகையில் இருக்கும் சட்டவிதிகளை யாரும் பொருட்படுத்த மாட்டார்கள். முறையை அடைவதற்குச் சட்டவிதிகள் உதவ வேண்டுமே தவிர அவை தொந்தரவாக இருக்கக் கூடாது. இதனை நன்கு உணர்ந்துள்ளமையால்தான் நம் முன்னோர்கள் காவிதி மாக்கள் எக்காரணம் கொண்டும் அன்பையும் அறத்தையும் விட்டுக் கொடுக்கும் இயல்பினராய் இருத்தல் கூடாது என்பர்.

**காவிதிப் பட்டம் பெற்றோர்**

சங்க இலக்கியச் செய்யுள் ஆசிரியர்களுள் சிலர் காவிதிப் பட்டம் பெற்றுள்ளனர். அவ்வரலாற்று மனிதர்களை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாகும். அவர்கள் வருமாறு:

- ✓ ஆவூர் காவிதிகள் சகாதேவனார்[15]
- ✓ இளம்புல்லூர்க் காவிதி[16]
- ✓ கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்[17]
- ✓ கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்[18]

**முறைமன்ற வழக்குரைஞர்கள்**

முறைமன்றத்திற்கு வரும் வழக்குகளைத் தீர்த்து வைக்க நடுவர்கள் இருந்தது போலவே அக்காலத்தில் வழக்கு கொண்டுவரும் மக்கள் சார்பாக அவர்தம் கருத்துகளை அவையில் எடுத்துச்சொல்வதற்கென மனிதர்களும் இருந்துள்ளனர் என அறியமுடிகிறது. இன்று அத்தகையவர்கள், வழக்குரைஞர்கள் என அழைக்கப் படுகின்றனர்.

“நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து

**வல்லார் ஆயினும் புறமறைத்துச் சான்றோரைச்**

சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி

நல்லிதின் இயக்கும் அவன்சுற்றத்து ஒழுக்கமும்"[19]

நன்னனின் நாநவில் அவையத்தில் தம் சார்புச் செய்திகளைக் கூறுவதற்கு இயலாதவர் ஆயினும் அதனைப் பெரிது படுத்தாமல் அவர்தம் சார்புச் செய்திகளைத் தெளிவாகச் சொல்லி, உரிய சான்றுகள் காட்டி, சோர்வில்லாது நின்று விளக்கம் கொடுப்பவர்கள் இருந்து நல்ல முறையில் அவையம் இயக்கப்படுகிறது என மலைபடுகடாம் பதிவு செய்துள்ளது. இதன்மூலம், வழக்குரைஞர்கள் இருந்துள்ளனர் எனக் கூறுவதைக் காட்டிலும் வழக்குரைஞர் போலச் செயல்பட்டவர்கள் அதாவது மக்களுக்கு அவையத்தில் உதவியவர்கள் இருந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. இந்தப் பணிக்காக மக்களிடம் கட்டணம் பெற்றதாகத் தெரியவில்லை.

### சட்டவியல் அறிவுறுத்துநர்

மேற்சுட்டியுள்ள தரவுகளின் மூலம், சங்கக்காலத் தமிழகத்தில் சட்டவியல் அறிவுறுத்துநர்கள் இருந்திருக்கின்றனர் எனத் தெளியலாம். சட்ட அறிவுறுத்துநரை அன்றைக்குக் காவிதி மாக்கள் எனக் குறிப்பிட்டுள்ளனர். எனினும் காவிதி மாக்களுக்குச் சட்ட அறிவுறுத்தலையும் கடந்து கூடுதலான சட்டவியல் பொறுப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வழக்குரைஞர் போலச் செயல்பட்டவர்கள் இருந்துள்ளனர்.

## தண்டனை குறித்த செய்திப் பதிவு

நீதியியலின் இன்றியமையாத கூறுகளுள் ஒன்று தண்டித்தல். ஒருவர் மீதான குற்றம் உறுதி செய்யப்பட்டவுடன் அவர்க்கு உரிய தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. இதனைச் சங்க இலக்கியங்களில் பல்வேறு செய்யுளின் கண் காணமுடியும். எனவே இப்பகுதி சங்க இலக்கியங்களில் தண்டனை

குறித்துப் பதிவாகியிருக்கும் வரலாற்று நிகழ்வுகள் மற்றும் கருத்தியல் பதிவுகளைத் தொகுத்து ஆய்வு செய்ய முற்படுகிறது.

"எங்கண் இனையர் எனக்கருதின் ஏதமால்
தங்கண்ண ரானும் **தகவில கண்டக்கால்**
**வன்கண்ண னாகி ஒறுக்க** ஒறுக்கல்லா
மென்கண்ணன் ஆளான் அரசு".[20]

என்பது சங்க இலக்கியத்துக்குப் பின்னர்த் தோன்றிய பழமொழி நானூற்றில் இடம் பெற்றுள்ள வெண்பாவாகும். தமக்கு மிகவும் வேண்டியவரே தவறு செய்துவிட்டாலும் அதனைக் கண்டறியும்போது நம் மனத்தை நெகிழவிடாமல் உரியவாறு தவறுக்கு ஏற்ற தண்டனை (ஒறுப்பு) வழங்க வேண்டும் என்கிறது இச்செய்யுள். பிற்காலச் சமூகக் கருத்தியலுக்கு முன்னோடியாய்ச் சங்க காலத் தமிழகம் அமைந்திருக்கிறது எனலாம்.

தண்டம் என்றால் என்ன? என்பதற்குப் பரிமேலழகர் உரையில் விளக்கம் காண முடிகிறது. "தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழுக்கு நெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்ததற் பொருட்டு ஒப்ப நாடி அதற்குத் தகவொறுத்தல்"[21] எனப் பரிமேலழகர் பதிவு செய்துள்ளார். இதிலிருந்து ஒரு செய்தி உறுதியாகிறது. குற்றம் புரிந்தவர்கள் மீண்டும் அக்குற்றம் புரியாதிருக்க வேண்டும் என்பதற்காகத் தண்டம் வழங்கப்பட்டுள்ளது என்பதாம் அது. இதனோடு இன்னொரு இன்றியமையாத காரணமும் உண்டு. குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனையைப் பார்த்து குற்றங்களில் ஈடுபடுவதிலிருந்து பொதுமக்கள் தம்மைத் தடுத்துக் கொள்வர் என்பது இரண்டாவது இன்றியமையாத காரணமாகும்.

சங்ககாலத் தமிழகத்தின் தண்டனை குறித்த நெறிமுறைகளை விளங்கிக் கொள்ள வேண்டுமெனின் சில அடிப்படைச் செய்திகளை உணர்ந்துகொள்ள

வேண்டும். முன்னரே குறிப்பிட்டது போலப் பல்வேறு அறநெறிக் கருத்துகள் மூலமும், அறக்கொள்கையை மீறினால் ஏற்படும் விளைவு குறித்த எச்சரிப்பு மற்றும் விழிப்புணர்வு மூலமும் குற்றங்கள் நடைபெறவே இடங்கொடாமல் சமூகம் திகழ்ந்துள்ளது. இதையும் மீறி யாரேனும் குற்றம் புரிந்தால் அதற்குத் தக்க தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்படும் தண்டனைகளை மூன்றுவகையாகப் பகுத்துவிடலாம்.

- ***உடலியல் தண்டனை***
- ***பொருளியல் தண்டனை***
- ***உளவியல் தண்டனை***

**உடலியல் தண்டனை**

குற்றவாளியை உடலளவில் துன்புறுத்தல் உடலியல் தண்டனை எனப்படும். சிறைத்தண்டனை, கை வெட்டுதல், உயிர்வெளவல் முதலியவற்றை உடலியல் தண்டனைக்குச் சான்றாகக் கூறலாம். இத்தகைய தண்டனைக்குச் சங்க இலக்கியத்தில் ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. சேரன் கணைக்கால் இரும்பொறையைச் சோழன் சிறையில் அடைத்தது[22], மலையமான் குழந்தை களைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் யானையைக் கொண்டு நசுக்க முற்பட்டது[23] எனப் பலப்பல சான்றுகள் உள்ளன.

**பொருளியல் தண்டனை**

குற்றவாளிக்கு உடலியல் தண்டனைக்குப் பதிலாக அரசுக்குக் குறிப்பிட்ட அளவு பொருள் செலுத்த உத்தரவிடுதல் பொருளியல் தண்டனையாகும். இதற்கும் சங்க இலக்கியத்தில் சான்று உள்ளது. காவல் மரத்தின் கனியை அறியாது தின்ற குற்றத்திற்காகப் பெண்ணொருத்திக்கு உயிர்வெளவும் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது வழங்கப்பட்ட தண்டனையிலிருந்து தப்புவதற்கு அப்பெண்ணின் தந்தை 81 யானைகளும் பெண்ணின் எடைக்கு நிகராகப் பொன் கொடுப்பதாகவும் கூறியுள்ளார். அரசன் தன் உத்தரவில் இதைக் குறிப்பிட்டிருந்தால் அது பொருளியல் தண்டனை யாகக் கருதப்பட்டிருக்கும்.

"ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிலை
பொன்செய் பாவை கொடுப்பவும்"[24]

எனும் செய்யுள் மூலம், மேற்சொன்னது உறுதியாகிறது. சங்க இலக்கியத்திற்குப் பின் தோன்றிய பெருங்கதையிலும் இத்தகைய குறிப்புள்ளது.

"இத்துறை மேவ எத்துறை யாயினும்
ஆடன்மின் யாவிரும் ஆடுவி ருளிரெனின்
ஆடகப் பொன்னினு மளவி னியன்ற
பாவை யாகும் படுமுறை"[25]

எனும் வரிகளில், அரசனின் மகள் நீராட விருப்பதனால் இத்துறையில் யாரும் நீராட வேண்டா எனவும், மீறி நீராடினால் அக்குற்றத்திற்கு நும் எடை அளவுள்ள பொன்னால் ஆன பாவை தர நேரிடும் எனவும் கூறப்பட்டுள்ளன. இக்கருத்தியலுக்கு முன்னோடியாய்ச் சங்க காலம் அமைந்துள்ளதை உணர முடிகிறது. இதன்மூலம் குற்றத்திற்குப் பொருளியல் தண்டனை வழங்கிய நடைமுறை அக்காலத் தமிழகத்தில் இருந்துள்ளது என்பதை உறுதி செய்ய முடிகிறது.

**உளவியல் தண்டனை**

குற்றவாளியை உளவியலாகத் துன்புறுத்துவது இன்றைய அறிவியல் வளர்ச்சி மிகுந்த சூழலில் 'உளவியல் தண்டனை' எனப்படும். குற்றவாளியை அச்சுறுத்துவது, வெட்கப்படச் செய்வது, குற்றவாளியின் குற்ற உணர்வைத் தூண்டிவிடுவது முதலிய செய்கைகள் உளவியல் தண்டனையாகக் கருதப்படுகின்றன. இத்தகைய உளவியல் தண்டனைகள் சில நேரங்களில் மனச்சிதைவு, இறப்பு முதலிய கடுமையான விளைவுகளையும் உண்டாக்கக் கூடியவை. எனவே பெரும்பான்மையான நாடுகள் உளவியல் தண்டனைகளை வெளிப்படையான சட்டங்களால் நடைமுறைப்படுத்துவது இல்லை.

சங்க காலத் தமிழகத்தில் ‘உளவியல் தண்டனை’ என்பது முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகத் திகழ்ந்துள்ளது. தனி ஒருவரால் அல்லது அரசால் உளவியல் தண்டனைகள் வழங்கப்பட்டதில்லை என்பது நோக்கத்தக்கது. ‘பழி’ என்னும் இரட்டை எழுத்துச் சொல்தான் அக்காலத்து உளவியல் தண்டனையாக விளங்கியுள்ளது. இந்த உளவியல் தண்டனை சமூகத்தால் வழங்கப்பட்டுள்ளது. சமூகத்தில் பொதுவான முறையில் நிலவி வரும் அறக்கோட்பாடுகளை மீறுபவர்க்குப் பழியுண்டாகும். மக்கள், புலவர், அறிஞர், வருங்காலத் தலை-முறை எனச் சமூகத்தின் உறுப்பாளர்களின் தூற்றுதலைப் பெறவேண்டி வருமே எனும் உள்ளார்ந்த அச்சத்தின் காரணமாகப் பெரும்பாலும் பலர் குற்றத்தில் ஈடு-படாது இருந்துள்ளனர். அதிகார உச்சத்திலிருக்கும் அரசர் களையும் இந்தச் ***சமூக உறுப்பாயம்*** கட்டுப்படுத்தியுள்ளது எனலாம். பிற தண்டனைகளுக்கு அஞ்சாத அரசர்களும் பழிக்கு அஞ்சியுள்ளனர் என அறிந்துகொள்ள முடிகிறது.

> “புகழெனின் உயிரும் கொடுக்குவர் **பழியெனின்**
> உலகொடு பெறினும் கொள்ளலர்”[26]

> “சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
> அருஞ்சமஞ் சிதையத் தாக்கி, முரசமொடு
> ஒருங்கு அகப் படேஎன் ஆயின்; பொருந்திய
> என் நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது,
> கொடியன்எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்,
> **குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக**!”[27]

> “அமர்வெஞ் செல்வ! நீ அவர்க்கு உலையின்,
> இகழுநர் உவப்பப், **பழியெஞ் சுவையே!”** [28]

இவ்வாறான செய்யுள்கள் பிறப்பதற்குக் காரணமாகச் சமூக உறுப்பாயத்தின் மீது மக்களும் அரசர்களும் கொண்டிருந்த மதிப்பே ஆகும். எக்காரணம்

கொண்டும் தமக்குப் பழி வந்துவிடக் கூடாது என்பதில் பெரும்பான்மையான மன்னர்கள் இருந்துள்ளனர். மன்னர்கள் எவ்வழியோ அவ்வழி மக்களும் இருந்துள்ளனர். இதனால் மிகச் சிறந்த செம்மையான முறையில் உளவியல் தண்டனை சமூக உறுப்பாயத்தின் மூலம் அன்று இருந்துள்ளது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

**தவற்றுக்கு ஏற்ற தண்டனை**

ஒருவனுடைய குற்றம் உறுதியான பின்னர் அவனைத் திருத்துதற்கும் பிறர்க்கு அச்சம் ஊட்டுதற்கும் தண்டனை வழங்கப்படுவதே பொது மரபாக இருந்துள்ளது. இந்த மரபே சிறப்புக்குரிய மரபாகவும் போற்றப்பட்டுள்ளது. மற்றவர்கள் சொல்லிவிட்டனர் என்பதற்காகவே தண்டனை வழங்காது, ஆராய்ந்து வழங்கிய நடைமுறை அன்று இருந்துள்ளதைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

"பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே;
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி"[29]

எனும் செய்யுளின் மூலம், தவற்றுக்கு ஏற்ற தண்டனை வழங்கப்பட்டுள்ளது என அறிய முடிகிறது. குற்றத்தின் பாதிப்பு சிறிதளவாக இருப்பின் அதற்கேற்றத் தண்டனையும் குற்றத்தின் பாதிப்பு பேரளவில் இருப்பின் அதற்கேற்றத் தண்டனையும் வழங்குவதே அக்கால முறைமையாகக் கொண்டிருந்தனர் என்பதை இச்செய்யுள் முன்வைக்கிறது. இக்கருத்தியலைத் திருக்குறள் மேலும் உறுதி செய்கிறது.

"தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து"[30]

ஒறுப்பதிலும் கூட குற்றத்தின் பாதிப்பளவை ஒத்தவாறுதான் ஒறுத்தல் வேண்டும் எனும் சட்டவியல் நோக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது. அதே நேரம், இந்தச் சட்டவியல் அடிப்படையை மீறினால் ஏற்படும் விளைவையும் திருக்குறள் சுட்டத் தவறவில்லை.

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்"[31]

'கையிகந்த தண்டம்' என்பது குற்றத்தின் பாதிப்பளவுக்கு ஒத்தவாறு தண்டனை இல்லாமல் அளவுகடந்து போதலாகும். அவ்வாறு அளவுகடந்த தண்டனை வேந்தனின் வலிமையைத் தேய்க்கும் அரமாக அமைந்துவிடுமாம். எனவே பொதுப்படையாய்த் தண்டனை வழங்குவதற்கான நெறிமுறையைத் திருக்குறள் கீழ்வருமாறு பதிவாக்கி யுள்ளது.

"கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்"[32]

கடுமையாகக் கண்டித்து ஆனால் மென்மையாகத் தண்டிக்கும் நடைமுறையைக் குறள் சொல்லிச் செல்கிறது. எனவே மேற்குறிப்பிட்டவற்றுள் இருந்து குற்றத்தின் பாதிப்புக் கேற்ற அளவே தண்டிக்கும் கொள்கை அக்காலத் தமிழகத்தில் இருந்துள்ளது என அறிந்துகொள்ள முடிகிறது.

**குற்றங்களும் தண்டனையும்**

சங்க இலக்கியங்களில் அக்காலத்தில் நடைபெற்ற அனைத்துக் குற்றங்களும் பதிவாகியிருக்க வாய்ப்பில்லை என்பது தெளிந்த உண்மை. படைப்பின் போக்கிற்கும் நோக்கிற்கும் உதவும் வகையிலான காட்சி அமைப்புகளில் இடம்பெற்றிருக்கும் குற்றங்களை மட்டுமே ஆய்வுக்கு

எடுத்துக்கொள்ள முடிகிறது. இவற்றைக் கொண்டு அக்காலத்தில் இந்தக் குற்றங்கள் மட்டும்தாம் இருந்தன என்று கருதுவது வரலாற்று ஆய்வுக்குப் பொருந்தாது.

**உறவு கொண்ட பின்னர்ப் பெண்ணை ஏமாற்றுவது குற்றம்**

அக்கால அகத்துறையில் களவொழுக்கம் கற்பொழுக்கம் என இருவகையான ஒழுக்க நெறிகளைக் காணமுடிகிறது. களவொழுக்கத்தில், இயற்கைப் புணர்ச்சி நடைபெற்ற பின்னர் அப்பெண்ணும் அவ்வாணும் திருமணம் செய்து கொண்டு கற்பொழுக்கத்தைக் கடைப்பிடிப்பர். களவொழுக்கத்தின் போது பெண்ணின் நலத்தைத் துய்த்துவிட்டுப் பின்னர்ப் பெண்ணை ஏமாற்றுவது மிகமிகக் கடுமையான குற்றமாகக் கருதப்பட்டுள்ளது. அக்குற்றம் புரிந்த ஆடவனுக்கு அதிகளவு இறப்புத் தண்டனை வரை விதிக்கப்பட்டுள்ளது.

“தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
கரும்பமல் படப்பைப் பெரும் பெயர்க் கள்ளூர்த்
திரு நுதல் குறுமகள் அணி நலம் வவ்விய
அறன் இலாளன் அறியேன் என்ற
திறன் இல் வெஞ்சூள் அறிகரி கடாஅய்
முறி ஆர்பெருங் கிளை செறியப் பற்றி
நீறு தலைப் பெய்த ஞான்றை
வீறு சால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே”[33]

எனும் அகநானூற்றுச் செய்யுள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. சுண்ணாம்பு நீர் தலையில் ஊற்றித் தண்டனை அளித்துள்ளனர்.

**பொகுட்டெழினி வரலாறு – (திறை செலுத்த மறுத்தல் குற்றம்)**

பேரரசுக்கு உட்பட்டிருக்கும் சிற்றரசுகள் பருவம் தவறாது திறை செலுத்த வேண்டும். அவ்வாறு திறை செலுத்த மறுத்துவிட்டால் அது குற்றமாகக் கருதப்படும். திறை செலுத்துவதற்கு மறுத்த சிற்றரசனுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

"… … கொடாஅ
உருகெழு மன்னர் ஆர்எயில் கடந்து
நிணம்படு குருதிப் பெரும்பாட்டு ஈரத்து
அணங்குடை மரபின் இருங்களம் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்
வைகல் உழவ!"[34]

இச்செய்யுள் மூலம், திறை கொடாத மன்னர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்ட விதத்தை அறியமுடிகிறது. போர்க்களத்தில் கழுதைகளை ஏரில் பூட்டி வெள்வரகும் எள்ளும் (கொள்ளும்) விதைக்கப்பட்டுள்ளது. ஊர்களில் கரும்புள்ளி / செம்புள்ளி குத்தி ஒருவனை அவமதிப்பதன் மூலம் தண்டித்தல் வழக்கத்தில் இருந்த ஒன்றுதான். அதுபோலப் போர்க்களத்தில் கழுதையைப் பயன்படுத்தி உழுது வெள்வரகும் எள்ளும் விதைத்தல் திறை செலுத்தாத மன்னனுக்கு அவமானம் ஏற்படுத்தித் தண்டித்தல் ஆகும்.

இது மட்டுமின்றி, திறை கொடுக்க மறுக்கும் அரசன் மீது போர் தொடுக்கலாம். அவன் ஊரைத் தீயிட்டு அழிக்கலாம். போரில் திறை செலுத்த மறுத்தவன் தோற்றால், அவனைச் சிறையில் அடைக்கலாம். திறை செலுத்த மறுத்தவனுக்கு இறப்புத் தண்டனையும் வழங்கப்படலாம். இவையெல்லாம்

இயல்பான போரின் கூறுகளாகவே அமைந்துள்ளன. வெள்வரகும் எள்ளும் விதைத்துத் தண்டிக்கும் செய்தி புதியதாக அமைந்துள்ளது.

**ஆநிரைகளைப் பிறநாட்டவர் கவர்வது குற்றம்**

புறத்துறையின் முதல் திணையே ஆநிரைகளைக் கவர்வது பற்றிப் பேசுவதாகும். போரின் தோற்றுவாயாக அக்காலத்தில் அமைந்தது ஆநிரைகளைக் கவர்தலே ஆகும். ஒரு நாட்டின் ஆநிரைகளைப் பிறநாட்டவர் கவர்வது குற்றமாக எல்லா நாடுகளாலும் கருதப்பட்டது.

“முன்னூர்ப் பூசலில் தோன்றித் தன்னூர்
நெடுநிரை தழீஇய மீளி யாளர்
விடுகணை நீத்தம் துடிபுணை யாக
வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து
வையகம் புலம்ப வளைஇய பாம்பின்
வைஎயிற்று உய்ந்த மதியில் மறவர்
கையகத்து உய்த்த கன்றுடைப் பல்ஆன்
நிரையொடு வந்த உரையன் ஆகி
உரிகளை அரவம் மானத் தானே”[35]

ஆநிரைகளைக் கவர்ந்து சென்றவர் யாரெனத் தெரிந்து அவர்மீது பகைகொள்வது வழக்கம். பிறநிலத்தவர், தன்னிலத்திலுள்ள ஆநிரைகளைக் கவர்ந்த குற்றத்திற்காக அவர்களைத் தொடர்ந்து சென்று போரிட்டு அவர் ஊரை அழித்த பின்னர் கவர்ந்த ஆநிரைகளை மீட்டு வருவர். மேற்குறிப்பிட்டுள்ள செய்யுள் இதனை உறுதி செய்கிறது.

**பெருஞ்சேரல் இரும்பொறை வரலாறு - (முரசுக்கட்டிலைப் பிறர் பயன்படுத்துவது குற்றம்)**

அக்காலச் சமூகத்தில் போர் என்பது அன்றாட நிகழ்வு போன்று திகழ்ந்தது எனின் மிகையில்லை. போர்க்கும் போர்வெற்றிக்கும் ஒவ்வொரு

மன்னனும் முதன்மை அளித்தான். குடிமக்களும் அவ்வாறே இருந்துள்ளனர். இந்நிலையில் போர்க்காகப் பயன்படும் அத்துணைப் பொருட்களையும் சிறப்புறு மதிப்புடன் போற்றி யுள்ளனர். போரை அறிவிக்கும் முரசு அவற்றுள் ஒன்று. போர்முரசு வைப்பதற்கு என்று தனி இடம் உண்டு. அதனை முரசுகட்டில் என்பர். முரசுகட்டிலை முரசுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். வேறு யாராவது அதனைப் பயன்படுத்தினால் அது பெருங் குற்றமாகும்.

> “குருதி வேட்கை உருகெழு முரசம்
> மண்ணி வாரா அளவை எண்ணெய்
> நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
> அறியாது ஏறிய என்னைத் தெறுவர
> இருபால் படுக்கும்நின் வாள்வாய் ஒழித்ததை”[36]

எனும் செய்யுளின் மூலம் முரசு கட்டிலைப் பிறர் பயன்படுத்துவது குற்றம் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. போற்றலுக்குரிய முரசுகட்டிலில் யாராவது துஞ்சினால் அவர்க்கு இறப்புத் தண்டனை வழங்குவது வழக்கமாக இருந்திருக்க வேண்டும். அதனால்தான் ‘இருபால் படுக்கும் நின் வாள்வாய் ஒழித்ததை’ எனப் புலவர் பாடியுள்ளார். அந்தளவுக்கு முரசு மற்றும் முரசுகட்டில் ஆகியவற்றை அக்கால மன்னர்கள் மதித்தனர் போலும்.

### அன்னி மிஞிமி வரலாறு – (அத்துமீறலுக்குத் தண்டனை வழங்கப்படும்)

குற்றம் நடைபெற்றால் அக்குற்றத்தை விசாரித்துக் குற்றத்தினால் விளைந்த பாதிப்புக்கு ஏற்பத் தண்டனை வழங்குவது அக்கால மரபாக இருந்துள்ளது. கையிகந்த தண்டனை அதாவது அளவு கடந்த தண்டனை அல்லது முறைதவறிய தண்டனை வழங்கினால் அதுவும் குற்றமாகவே கருதப்பட்டுள்ளது எனலாம். **இதனை அன்னி மிஞிலி வரலாற்றின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது**.

“பாசிலை அமன்ற பயறுஆ புக்கென,
வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து, அருளாது,
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்,
கலத்தும் உண்ணாள், வாலிதும் உடாஅள்,
சினத்தின் கொண்ட படிவம் மாறாள்,
மறம்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்,
செருஇயல் நல்மான் திதியற்கு உரைத்து, அவர்
இன்உயிர் செகுப்பக் கண்டு, சினம் மாறிய
அன்னி மிஞிலி போல”[37]

அன்னி மிஞிலியின் தந்தை ஆக்களை மேய்க்கிறார். இடையில் களைப்பினால் கண்ணயர்ந்தார். இதனால் ஆக்கள் பயிரை மேய்ந்துவிடுகின்றன. இது குற்றமே. இக்குற்றத்திற்குக் கோசர்கள் பெரியவரின் கண்களையே பறித்துவிடுகின்றனர். பயிர் நாசமடைந்ததனால் ஏற்பட்ட இழப்பிற்கு இழப்பீடு பெற்றிருக்கலாம். ஆனால் அவரின் **கண்களையே பறித்துவிட்டது முறையான தண்டனை இல்லை;** அளவுக்கு மீறிய தண்டனையாகும். இதனைத் திதியன் என்பானிடம் அன்னி மிஞிலி முறையிட வழக்கிலுள்ள உண்மையை உணர்ந்து கொண்ட திதியன் கோசர்களுக்குத் தண்டனை வழங்கும் முகத்தான் அவர்களைக் கொன்றான். இதிலிருந்து அளவுக்கு மீறிய அல்லது முறையற்ற தண்டனை வழங்குவதையும் குற்றமாகவே அக்காலத்தில் கருதினர் என அறியமுடிகிறது.

**நன்னன் வரலாறு – (அரசின் காவல் மரத்துப் பயனைத் துய்த்தல் குற்றம்)**

ஒவ்வொரு மன்னனும் தன்னாட்டுக்கென ஒரு காவல் மரத்தை உண்டாக்கிக் கொள்வது வழக்கம். அம்மரம் முழுமையும் அரசின் கட்டுப்பாட்டில் இருந்துவரும். அந்த மரத்திற்கு இடையூறு விளைவிப்பது

குற்றமாகும். இடையூறு விளைவிப்பது மட்டுமன்றி அம்மரத்தின் பயனை அனுமதி யின்றித் துய்ப்பதும் குற்றமாகக் கருதப் பட்டுள்ளது. அதற்குத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

"மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிலை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன்"[38]

எனும் செய்யுள் கூறும் வரலாற்றின் மூலம் காவல் மரத்தின் பயனைத் துய்த்ததற்குப் பெண்ணொருத்தி தண்டிக்கப்பட்டுள்ளாள் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. எனவே, காவல் மரத்தின் பயனைப் பிறர் அனுமதியின்றித் துய்ப்பது தண்டனைக்குரிய குற்றம் என உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும், இவ்வழக்கு சட்டவியல் ஆய்வுக்குப் பெரிதும் பயன்படுகிறது.

**உயிர்வௌவல் தண்டனை**

பலவகையான தண்டனைகளைச் சங்க இலக்கியங்களில் காண நேரிட்டாலும் இறப்புத் தண்டனையை மிக அதிகமாகக் காணமுடிகிறது. எதற்கெடுத்தாலும் குறிப்பாக மன்னர்கள் பிறரின் உயிரை எடுத்துவிடுவதில் கருத்தாக இருந்துள்ளனர் எனக் கூறலாம். அந்தளவுக்கு இறப்புத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இறப்புத் தண்டனையை உயிர்வௌவல் என இலக்கியம் பதிவு செய்துள்ளது.

"நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது **உயிர்வௌவல்"**[39]

எனப் பதிவு செய்யும் அளவுக்கு உயிர்வௌவல் அக்காலத்தில் இருந்துள்ளது. முறை எனப்படுவது இரக்கம் இல்லாமல் உயிரெடுத்தல் எனக் கலித்தொகை

பதிவாக்கி யுள்ளது. இதன்மூலம் அக்காலத்தில் உயிர்வெளவும் தண்டனை மிகுதியாக இருந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

குற்றவாளியெனக் கருதப்பட்டவர்களுக்கு உயிர்வெளவும் தண்டனை வழங்கப் பட்டதும், அதை நிறைவேற்றுவதற்குப் பல்வேறு வழிமுறைகள் கையாளப்பட்டுள்ளன. உடலை மண்ணில் புதைத்து, யானையின் மூலம் தலையை இடறச் செய்தல்; தலையில் சுண்ணாம்பு நீர் பெய்தல்; ஒருவர் இறக்கும் வரை சிறையில் அடைத்தல்; தலையை வெட்டியெடுத்தல் என்பன சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன.

**குற்றமனம்**

குற்றம் புரிந்தாலும் குற்றம் செய்ய வேண்டும் எனும் எண்ணத்துடன் செய்யப்பட்டால்தான் அது குற்றமாகும் என்பது தற்காலச் சட்டவியல் கோட்பாடாகும். அதனை ‘Mens Rea’ எனும் சட்டவியல் சொல்லின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இக்கொள்கை சங்க இலக்கியத் தமிழகத்தில் சிறப்பாகக் கடைப்பிடிக்கப் பட்டுள்ளது.

மோசிகீரனார் எனும் புலவர் முரசு கட்டிலில் தன்னுடைய களைப்பினால் உறங்கி விடுகிறார். அக்காலத்தில் முரசு கட்டிலில் உறங்குவது பெருங்குற்றமாகும். ஆனால், புலவர்க்கு மன்னன் தண்டனை வழங்கவில்லை. மோசிகீரனார் முரசு கட்டிலில் வேண்டுமென்றே தூங்கவில்லை. இதனைத் தம் வாக்காகவே ‘அறியாது ஏறிய என்னை’[40] எனப் பதிவு செய்துள்ளார். இங்குக் கருதவேண்டியது என்னவெனில் புலவர் தவறு செய்திருக்கிறார் என்றாலும் வேண்டுமென்றே அத்தவற்றைச் செய்ய வில்லை. எனவே அவர்க்குக் குற்றமனம் இல்லை என்பது தெளிவாகிறது. அதற்கேற்ப இரும்பொறையும் புலவரைத் தண்டிக்கவில்லை. இதனால், குற்றமனம் இல்லாதவரைத்

தண்டித்தல் கூடாது எனும் கொள்கை அக்காலத் தமிழகத்தின் சட்டவியல் கோட்பாடாக இருந்துள்ளது என அறியலாம்.

இக்கருத்தினை மேலும் உறுதி செய்யும் வண்ணமாக அமைகிறது நன்னன் வரலாறு. காவல் மரத்தின் கனி ஒன்று ஆற்றில் விழுந்துவிடுகிறது. அதனை எடுக்க காவலர்கள் முயல்கிறார்கள். ஆனால் அது ஆற்றின் நீரோட்டத்தில் மிதந்து செல்கிறது. ஒரு பெண் அதே ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கிறாள். அவளை நெருங்குகிறது கனி. நெருங்கியது காவல் மரத்தின் கனியென்று **அறியாமல் அதைச் சுவைக்கிறாள்** அந்தப் பெண். இதனைக் கண்ட காவலர்கள் அவளைக் கைது செய்து நன்னன் முன் நிறுத்துகிறார்கள். நன்னனும் கொலைத்தண்டனை வழங்கினான். அவள் தந்தை இழப்பீடு தருவதாகக் கூறியும் ஏற்க மறுத்துள்ளான் நன்னன். இவ்வழக்கில் அந்தப் பெண் உண்மையில் குற்றவாளியா? எனும் வினா எழுகிறது. குற்றமனம் இல்லாமல் செய்தது எவ்வாறு குற்றமாகும்? இதனை நன்னன் கவனிக்கத் தவறிவிட்டான். அதனால் தவறு இழைத்துவிட்டான். குற்றமனம் இல்லாத ஒருவரைத் தண்டித்தது குற்றமாகும் எனவே சமூக உறுப்பாயத்தினரால் பழி சுமத்தப்பட்டு அவன் புறக்கணிக்கப்பட்டான்.

மேற்குறிப்பிட்ட வரலாற்று வழக்குகளின் மூலம் சங்க காலத் தமிழகத்தில் குற்றமனம் இல்லாதவரைத் தண்டித்தல் கூடாது என்கிற சிறந்த கொள்கையும்; குற்றமனம் இல்லாதவரைத் தண்டித்தல் பெரும்குற்றமாகும் எனும் கொள்கையும் நீதி செலுத்தும்போது பின்பற்றப்பட்டுள்ளது என அறிய முடிகிறது.

**அறம்சார்ந்த குற்றங்களின் பட்டியல்**

அறம் என்பதுதான் அக்காலத்தில் சட்ட ஒழுங்கைத் தமிழகத்தில் நிலைநாட்டியது எனலாம். மேலும் சட்டவியல் மூலங்களுள் ஒன்றாகவும் அறக் கொள்கைகளே திகழ்ந்தன. சட்டத் தகுதி பெறும் அறங்கள், சட்டத் தகுதி பெறா

அறங்கள் என அறங்களை இருவகையாகப் பகுக்க முடியும். சட்டத் தகுதி பெறும் அறங்களை மீறுதல் குற்றமாகக் கருதப்பட்டது. அதற்குத் தண்டனையும் வழங்கப்பட்டது. ஆனால் சட்டத்தகுதி பெறாத அறங்களை மீறுதல் சட்டப்படியான குற்றமாகக் கருதப்படவில்லை. எனினும், முன்னர்க் குறிப்பிட்ட சமூக உறுப்பாயத்தில் பழிக்குரியவையாக அவை கருதப்பட்டன.

“ஆன்முலை அறுத்த அறன்இல் லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வது ஆயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ”[41]

சட்டத்தகுதி பெறாத அறம்சார்ந்த குற்றங்கள் பலவற்றைச் சங்க இலக்கியங்களில் காணமுடியும். மேற்சுட்டிய செய்யுளில் இருவகையான அறங்களையும் காணமுடியும். செய்ந்நன்றி கொல்லுதல் என்பது சட்டத்தகுதி பெறாத அறம். செய்ந்நன்றி கொன்று விட்டானென ஒருவன் மீது வழக்கிட முடியாது. ஆனால், சமூக உறுப்பாயத்தில் பழி ஏற்பட்டுவிடும். ஆன் உயிரோடு இருக்கும்போது அதன் முலைகளை அறுத்தல் குற்றம். விலங்குக்கு இடையூறு ஏற்படுத்துவது என்பதனோடு அதனை வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் மனிதனுக்கும் இடையூறு ஏற்படுத்துவதாகும். எனவே இது சட்டத் தகுதி பெறும் அறமாகும்.

“செம்மையின் இகந்தொரீஇப் பொருள்செய்வார்க்கு அப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ”[42]

செம்மையின் இகந்து, ஒரீஇப் பொருள் செய்தல் – சட்டத்தகுதி பெறும் அறம் மீறுகை. ஏனெனின், செம்மையின் இகந்து போதல் என்பது எப்படியும் பிறர்க்கு

ஏதாவது ஒரு வகையில் துன்பம் செய்தலே ஆகும் என்பது வெளிப்படை. எனவே அதுவும் குற்றமாக எண்ணப்பட்டது.

### சோழன் நெய்தலங் கானல் இளஞ்சேட் சென்னி வரலாறு – பொறுத்தருளியதும் (மன்னித்தலும்) உண்டு

குற்றவாளிகள் தம் தவற்றை உணர்ந்து பொறுத்தருளும்படி கேட்டால் சில சூழல்களில் அவர்களைப் பொறுத்தருளியதும் உண்டு.

> "வந்தடி பொருந்தி முந்தை நிற்பில்
> தண்டமும் தணிதிநீ **பண்டையிற் பெரிதே"**[43]

அச்செய்யுள் மூலம் இதனை உணரலாம். குற்றவாளிகள் பணிந்து தம் குற்றங்களைப் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொள்ள அவர்களுக்கு வழங்கிய தண்டனைகளைத் தணித்திருக்கும் வரலாற்றையும் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

### அரசனும் தவறிழைப்பான்

அக்காலம், அரசுகள் முடியாட்சியில் இயங்கிய காலமாகும். "Rex non potest peccare,"[44] என்பது பன்னாட்டளவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சட்டவியல் கோட்பாடுகளுள் ஒன்றாகும். இதன்பொருள் "The King Can Do No Wrong".[45] அதாவது, அரசர்கள் தவறு இழைப்பதே இல்லை என்பதாகும். இக்கோட்பாட்டினைத்தான் பெரும்பாலும் அனைத்து அரசுகளும் பின்பற்றி வந்துள்ளன என அறியமுடிகிறது. ஆனால், **சங்க இலக்கியத் தமிழகம் பன்னாட்டளவிலான இக்கொள்கையிலிருந்து மாறுபடுகிறது**. ஆம், **அரசர்களும் தவறிழைக்கக் கூடியவர்களே எனச் சங்க காலச் சமூகம் நிலைநாட்டியுள்ளன**.

அவ்வாறு தவறிழைக்கும்போது, சமூக உறுப்பாயத்தவர்கள் அதனைத் தட்டிக் கேட்கும் உரிமை படைத்தவர்கள் என்பதையும் சங்க காலத் தமிழகம் நன்கு நிலைநாட்டியுள்ளது. இதன்மூலம் செம்மாந்த சட்டவியலைக் கொண்ட சமூகமாகத் தமிழ்ச்சமூகம் திகழ்ந்துள்ளதை அறியலாம்.

காவல்மரத்தின் கனியை அறியாது உண்டதற்காகப் பெண்ணொருத்திக்குக் கொலைத்தண்டனை வழங்கினான் நன்னன். இது முற்றிலும் அறத்திற்கு முரணானது. எனவே அவனைப் ‘பெண்கொலை புரிந்த நன்னன்’ என்றே சமூக உறுப்பாயம் பழித்துள்ளது. மேலும், அவனை மட்டுமன்றி அவன் தலைமுறை சார்ந்தவர்களையும் புலவர்கள் பெரிதும் பொருட்படுத்தாத காட்சிகளையும் சங்க இலக்கியத்தில் காண முடிகிறது. இதன்மூலம் மன்னனும் தவறிழைக்கக் கூடியவனே என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது[46].

வரிவிதிப்பில் சரியான முறையைக் கடைப்பிடிக்க தவறிய மன்னன் பாண்டியன் அறிவுடை நம்பியிடம் புலவர் பிசிராந்தையார் நேரடியாக அவனின் பிழையைச் சுட்டிக் காட்டியுள்ளார். இதுவும் மன்னன் தவறிழைக்கக் கூடியவன் என்பதோடு சமூக உறுப்பாயத்தினர் மன்னனை நெறிப்படுத்தும் வல்லமை கொண்டவர்கள் என்பதையும் நிலைநாட்டுகிறது[47].

ஒரு தவறும் இழைக்காத மலையமானின் மக்களை யானையின் காலால் நசுக்க குளமுற்றத்துத் துஞ்சிய சோழன் முற்படுகையில் புலவர் கோவூர்கிழார் தலையிட்டு அறத்தை விளக்கிக் குழந்தைகளைக் காப்பாற்றினார். எனவே புலவர் தலையீட்டால் அங்கு நடைபெறவிருந்த தவறு தடுக்கப்பட்டது[48].

சிலப்பதிகாரத்தில் பாண்டியனின் தவறு சுட்டிக்காட்டப்பட்டது. தன் தவற்றை உணர்ந்து கொண்ட பாண்டியன்,

"யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே"[49]

எனச் சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ளதும் கருதத்தக்கது. இவற்றின் மூலம் அரசன் தவறிழைப்பதில்லை எனும் பன்னாட்டுச் சட்டவியல் கோட்பாட்டை ஏற்காமல் அரசனும் தவறிழைக்கக் கூடியவனே எனும் செம்மாந்த சட்டவியல் கோட்பாட்டைப் பின்பற்றியுள்ளது சங்க இலக்கியத் தமிழகம்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"[50]

எனும் குறட்பாவும் இவ்விடத்தில் ஒப்ப நோக்கிச் சிந்திக்கத்தக்கதாம்.

**ஆராய்ச்சி மணி (Bell of Justice)**

குற்றவாளிகள் தமக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் குறித்து மேல்முறையீடு செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனச் சங்க இலக்கியச் செய்யுளால் உணர்ந்து கொள்ளமுடிகிறது. மேல்முறையீடு என்றாலே அது மன்னனிடம் செய்வதாகவே இருந்துள்ளது. பொருத்தமில்லாத தண்டனையோ தவறான உரைமுடிவோ கொடுக்கப் பட்டால் மன்னனிடம் மேல்முறையீடு செய்யலாம். இதற்காகச் சிறப்பான வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதுதான் ஆராய்ச்சி மணி.

சோழன் அரண்மனையில் இருந்த ஆராய்ச்சி மணியை ஆனொன்று இழுத்து முறைவேண்டியதாகப் படித்துள்ளோம். உண்மையில் ஆனொன்று அவ்வாறு செய்ததா இல்லையா என்பது வேறுவகையான ஆய்வுக்கு

இட்டுச்செல்லும். ஆனால் அந்தக் கதையின் மூலம் ஆராய்ச்சி மணியெனும் கருத்தியல் தமிழகத்தில் இருந்துள்ளது என அறிந்துகொள்ள முடிகிறது.

ஆராய்ச்சி மணி எனும் கருத்தியலை உறுதி செய்கிறது சங்க இலக்கியச் செய்யுள். அது வருமாறு

"… … ஆனா
மணிகிளர் முன்றில் தென்னவன் மருகன்
பிணிமுர சிரங்கும் பீடுகெழு தானை"[51]

சோழன் அரண்மனையில் ஆராய்ச்சி மணி இருந்துள்ளதைப் போலவே பாண்டியன் அரண்மனை முன்றிலும் ஆராய்ச்சி மணியிருந்துள்ளதை இச்செய்யுள் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. எனவே முறையற்ற தண்டனைகளை மன்றமோ, அவையமோ தவறுதலாகக் கொடுத்துவிட்டால் மன்னனிடம் நேரடியாக மேல்முறையீடு செய்து கொள்ள வாய்ப்பாக இந்நடைமுறை சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது.

## பிற நடைமுறை குறித்த செய்திப் பதிவு

சங்க காலத் தமிழகத்தில் காவல்துறை போன்ற அமைப்பு இல்லாவிடினும் தற்காலக் காவல்துறை மேற்கொள்ளும் பணிகளுள் பெரும்பாலும் அக்காலக் காவலர் செய்துள்ளனர் எனும் கருதுகோளின் அடிப்படையில் காவல்துறை பற்றிய ஆய்வுக் குறிப்புகள் வருமாறு:

### ஊர்க்காவல் படை

ஊரில் நடைபெறும் குற்றங்களிலிருந்து மக்களைக் காப்பதற்காக ஊர்க்காவல் படை அக்காலத்தில் இருந்துள்ளது. அக்காவல் படையில்

பணிபுரிய சில தகுதிகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. இவற்றை மதுரைக்காஞ்சி நமக்கு எடுத்துரைக்கிறது.

"துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கொள்கையர்
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்குநுண் டேர்ச்சி
**ஊர்க்காப் பாளர்** ஊக்கருங் கணையினர்"[52]

இரவுப் பணியின் போது தூங்கக் கூடாது; அஞ்சா நெஞ்சம் படைத்தவராக இருத்தல் வேண்டும்; சட்ட நூல் வழியினின்று பிழையாது செயல்பட வேண்டும்; நுட்பமான அறிவு பெற்றிருக்க வேண்டும்; ஆயுதப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்பவை ஊர்க்காப்பாளர்க்கான தகுதிகளாக மதுரைக் காஞ்சி குறிப்பிட்டுள்ளது.

**இரவில் சுற்றுக்காவல் புரியும் காவலர்**

ஊரில் மக்கள் உறங்கிய பிறகு குற்றச் செயல் நிகழ்வது இயல்பானதே! அதைத் தடுக்கும் விதமாக இரவில் சுற்றுக்காவல் புரியும் காவலர் படையும் அக்காலத்தில் ஒன்று இருந்துள்ளது. இக்காவல் படை இரவில் நடைபெறும் குற்றங்களைப் பெரிதும் தடுத்து நிறுத்தும் பணியை மேற்கொண்டிருக்க வேண்டும்.

"இரும்பிழி மகாஅரிவ் அழுங்கல் மூதூர்
விழவின் றாயினும் துஞ்சா தாகும்:
மல்லல் ஆவணம் மறுகுடன் மடியின்,
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்;
பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சின்
**துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்"**[53]

இச்செய்யுள் மிக மிக அருமையாகக் காவல் துறையின் இருப்பையும் தேவையையும் விளக்கிக் காட்டுகிறது. இச்செய்யுளின் பொருள் வருமாறு:

ஆரவாரமுள்ள பெரிய ஊர். விழாக்கள் இல்லையென்றாலும் அவ்வூர் மக்கள் விரைவில் தூங்க மாட்டார்கள்; ஏனெனின் அங்குக் கடைத்தெருக் களிலும் பிற தெருக்களிலும் மக்கள் நடமாட்டம் இருப்பதனால் அவ்வொலியால் ஊர் தூங்காது. அப்படியே கடைத்தெருக்களில் எழும் ஒலி அடங்கினாலும், தாய் தூங்கமாட்டாள். ஒருவேளை தாய் உறங்கிவிட்டாலும், **அவ்வூரில் சுற்றுக்காவல் மேற்கொண்டிருக்கும் காவலர்கள் தூங்காமல் பணிபுரிவார்களாம்**. இதனை நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் 'துயிலாத கண்களை யுடையராய் ஊர்க்காவலர் விரைந்து சுழல்வர்' என உரையெழுதி யுள்ளார்.

எனவே இதன்மூலம், இரவில் சுற்றுக்காவல் மேற்கொண்ட காவல் பிரிவைப் பற்றி அறியலாம்.

**மெய்க்காப்பாளர்**

மன்னனைப் பாதுகாப்பதற்கு என்றே மெய்க்காப்பாளர் பிரிவு ஒன்று இருந்துள்ளது. அவர்களைப் பெருமூதாளர் எனக் குறிப்பிடுவர்.

"துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்கு நடைப்
**பெரு மூதாளர் ஏமம்** சூழ"[54]

பெருமூதாளர் (மெய்க்காப்பாளர்) மன்னனுக்குப் பாதுகாவலாகப் பாசறையில் நடந்து கொண்டனர் என்கிறது முல்லைப்பாட்டு. வேந்தர்களைப் பாதுகாக்கும் பிரிவு அந்தக் காலத்தில் இருந்துள்ளதை இதன்மூலம் அறிய முடிகிறது.

**சிறைக்காவலர்**

சங்க காலத்தில் சிறைகள் இருந்துள்ளன. அவற்றில் பணிபுரியும் காவலர்களும் இருந்துள்ளனர்.

“**அதிர்கழல் வேந்தன் அடி பிழைத்தாரை**
**ஒறுக்கும் தண்டத்து உறு சிறைக்கோட்டம்**
விருப்பொடும் புகுந்து வெய்து உயிர்த்துப் புலம்பி
ஆங்குப் பசியுறும் ஆருயிர் மாக்களை
வாங்கு கையகம் வருந்த நின்று ஊட்டலும்
ஊட்டிய பாத்திரம் ஒன்றென வியந்து
**கோட்டம் காவலர்** கோமகன் தனக்கு இப்
பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும்
யாப்பு உடைத்தாக இசைத்தும் என்றேகி”[55]

இந்த மணிமேகலைச் செய்யுள் இன்றைய சிறைச்சாலையைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. சிறைக்கோட்டம் எனும் பெயரில் சிறைச்சாலை இருந்துள்ளது. தவறு இழைத்தோர் தண்டனைப் பெறுவதற்கான இடமாக அது இயங்கியுள்ளது என்பதை அறியலாம். சிறைச்சாலை பாதுகாப்பிற்காகத் தனியே ஒரு காவல் பிரிவு இருந்துள்ளது என்பதைக் ‘**கோட்டம் காவலர்**’ எனும் தொடர் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

புறநானூற்றுச் செய்யுள் ஒன்றின் குறிப்பு சிறையில் பணிபுரிந்த காவலர்களைப் பற்றிக் கூறுகிறது. சேரன் கணைக்கால் இரும்பொறைக்குத் தண்ணீர் வழங்க தாமதித்த சிறைக்காவலர்களால் சேர மன்னன் மனமுடைந்தான்[56] என்கிற குறிப்பு நோக்கத்தக்கது. இதன்மூலம், சிறையைக் காப்பதுடன், சிறைச்சாலையில் மனித உரிமைப் பணி மேற்கொள்ளவும் காவலர்கள் இருந்துள்ளனர் என்பதை அறியலாம்.

**போர்ப் படை வீரர்கள்**

போரில் விரைந்து செயல்படும் வீரர்கள் எனப் பதிற்றுப்பத்து கூறுகிறது. போரில் ஈடுபடும் படைவீரர்கள் நாட்டைக் காக்கும் பெரும்பொறுப்பு வாய்ந்தவர் என்பது வெளிப்படை.

"உரம்துரந்(து) எறிந்த கறைஅடிக் கழல்கால்
கடுமா மறவர் கதழ்தொடை மறப்ப"[57]

"வசைஇல் வெம்போர் வானவன் மறவன்"[58]

"போர் எனில் புகலும் புனைகழல் மறவர்"[59]

இக்குறிப்பே அன்றி ஏராளமான சங்க இலக்கியக் குறிப்புகள் போரிடும் வீரர்கள் பற்றி உள்ளன. அவற்றிலிருந்து, யானைப்படை – தேர்ப்படை – குதிரைப்படை – ஆயுதம் ஏந்திய காலாட் படை எனப் படைவீரர்களைப் பகுத்துக் கொள்ள வாய்க்கிறது.

**மதில் காவலர்கள்**

கோட்டை மதில் மிக முதன்மையானது. அதனை எப்போதும் காவல் புரிய வேண்டும். போர் நிகழ்ந்தாலும் போர் நிகழவில்லை என்றாலும் எப்போதும் காவல் கண்காணிப்புக்கு உரிய பகுதி கோட்டை மதிலாகும். அதனைக் காப்பதற்கும் தனி காவல் படை இருந்துள்ளது.

"மன்னெயில் எறிந்து மறவர்த் தரீஇ"[60]

இது போர் நிகழும்போது எதிரி நாட்டுக் கோட்டை மதிலைப் பாதுகாத்த வீரர்கள் தோற்றுப் போன செய்தியைப் பதிற்றுப்பத்துக் கூறுகிறது.

**பாசறைக் காவலர்**

அக்கால மன்னர்கள் போரின்போது பாசறை அமைப்பதுண்டு. அவ்வாறு அமைக்கப்படும் பாசறையைக் காக்கும் காவல் வீரர்கள் இருந்துள்ளனர்.

"தெறலருந் தானைப் பொறையன் பாசறை
நெஞ்ச நடுக்குறூஉந் துஞ்சா மறவர்"[61]

பாசறைக் காவலில் ஈடுபட்டிருந்த காவலர்கள் தூங்குவதில்லை என நற்றிணை கூறுகிறது.

**பாசறைக் காவலில் பெண்கள்**

வியப்புக்குரிய ஒரு செய்தி இலக்கியக் குறிப்பிலிருந்து கிடைக்கிறது. பாசறைக் காவலில் பெண்களும் ஈடுபட்டுள்ளனர் என்பதுதான் அது. இதை முல்லைப்பாட்டில் காண்கிறோம்.

"குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி **ஒள்வாள்**
**விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்"**[62]

மன்னன் பாசறையில் மங்கையர் தம் கச்சில் வாள் வைத்திருந்தனர் என்கிறது முல்லைப்பாட்டு.__*காவல் துறையில் பெண்கள் அப்போதே அடியெடுத்து வைத்துள்ளனர்* எனக் கருதுவதற்கு இவ்வரிகள் இடம் கொடுக்கின்றன.

**பாசறைக் காவலில் மாற்றுத் திறனாளிகள்**

காவல் பணியில் மாற்றுத் திறனாளிகளும் அக்காலத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதை முல்லைப்பாட்டு நமக்குக் கூறுகிறது. இது மேலும் நம்மை வியப்படையச் செய்கிறது.

“எழினி வாங்கிய வீரறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர் உழையராக”[63]

(**பொருள்:** பாசறையில், நாவால் பேச முடியாத ஆனால் உடல்குறிப்பால் சொல்லக் கூடிய மிலேச்சர் இருந்தனர்.)

பொறுப்பு வாய்ந்த துறையான காவல் படையில் பெண்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் இடம் வழங்கியுள்ளது தமிழர் சால்புக்குச் சான்றாகும். சங்க இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாக நின்று இத்தகைய அரிய செய்திகளைப் பதிவு செய்துள்ளன.

**இறக்குமதி பண்டங்கள் காப்பு**

சங்க காலத் தமிழர்கள் பல்வேறு நாட்டு மக்களுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அதனால் ஏற்றுமதியும் இறக்குமதியும் துறைமுகத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும். இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மிகுதியாக ஓரிடத்தில் குவியும்போது எளிமையாகக் களவாடப்பட வாய்ப்பிருக்கிறது. எனவே அவற்றைப் பாதுகாப்பதற்கு என்றே ஒரு காவல் பிரிவு செயல்பட்டிருக்கிறது.

“அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
**அருங்கடிப் பெருங்காப்பின்**
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி”[64]

அளப்பதற்குக் கடினம் எனக் கூறுமளவு பல பண்டங்கள் வரம்பு இல்லாமல் துறைமுகத்தில் வந்துள்ளன. அவற்றைக் காக்கும் பொறுப்பைக் காவலர்களுள்

ஒரு பிரிவினர் ஏற்றிருந்தனர். அருமையான கடுமையான பெரிய பாதுகாப்பு (அருங்கடிப் பெருங்காப்பு) அப்பண்டங்களுக்கு வழங்கப்பட்டது. காவலர்களுள் இன்னொரு பிரிவினர் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் மேல் புலி முத்திரையிட்டு அனுப்பிக் கொண்டிருந்தனர் எனப் பட்டினப்பாலை கூறுகிறது.

மேலும், பொருட்களுக்குச் சுங்க வரி பெறப்பட்ட செய்தியும் பட்டினப்பாலை இலக்கியத்தில் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

***நீர்நிலைக் காவலர்***

நீர்நிலைக் காவலர் என்கிற தொடரே நமக்குப் புதியதாக இருக்கும். ஆனால் சங்க இலக்கியம் இதனைப் பதிவு செய்துள்ளது. குளத்தைப் பாதுகாக்கும் காவல் வீரனைப் போலத் தன் பெண்ணைப் பாதுகாக்கும் தாய் ஒருத்தித் தன் தூக்கத்தைக் கைவிட்டாள் என்கிறது அகநானூறு.

“எறிதிரைத் திவலை தூஉஞ் சிறுகோட்டுப்
பெருங்குளம் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில்மறந் தனளே”[65]

**எல்லைக்காவல் படை**

நாட்டின் எல்லைகளைக் காத்து நிற்பதற்கு எனத்தனிப்பிரிவு செயல்பட்ட குறிப்பைச் சிறுபாணாற்றுப்படை நமக்குக் கூறுகிறது.

“**குடபுலங் காவலர்** மருமான்”[66]

“**தென்புலங் காவலர்** மருமான்”[67]

“**குணபுலங் காவலர்** மருமான்”[68]

என்கிற குறிப்புகள் எல்லைப்புலங்களைக் காப்பதற்கு அரசன் அல்லது அரசன் பணியமர்த்திய ஒரு வீரனின் தலைமையில் எல்லைக் காவல் படை இயங்கியிருக்க வேண்டும் என அறிய முடிகிறது.

**உளவுப் படைவீரர்கள்**

பிற நாட்டில் என்ன நடைபெறுகிறது என்பதை அறிந்து கொள்ள உளவுப் பிரிவு அக்காலத்தில் செயல்பட்டிருக்கிறது. ஒற்றர் படை எனவும் இதைக் கூறுவர். இக்காலத்தில் intelligence எனக் கூறும் காவல் பிரிவு அன்றும் இருந்துள்ளது. ஒற்றர்கள் எனத் தெரிய வந்தால் அவர்களுக்குக் கொலைத்தண்டனை வரை வழங்கப் பட்டுள்ளது[69]. மேலும் பல இடத்தில் ஒற்றர்கள் பற்றிய குறிப்பு சங்க இலக்கியத்தில் உண்டு.

திருக்குறளில் 59-ஆவது அதிகாரம் 'ஒற்றாடல்'. இந்த அதிகாரம் முழுமையும் ஒற்றர்களைப் பற்றியே பேசுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

"ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல்"[70]

இதற்கும் முற்பட்ட தொல்காப்பியத்திலும் ஒற்றர்கள் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. "**ஒற்றின் ஆகிய வேயே**"[71] எனச் சுட்டுகிறது தொல்காப்பியம். எனவே ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கும் மேலான மரபில் உளவறிதல் இயங்கிவருகிறது எனலாம்.

**ஏனல் காவலர்**

இனி, பொதுமக்களின் தினை புனங்களைக் காப்பதற்குத் தனியே ஒரு ஊர்ப்படை இருந்துள்ளது. இவர்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில்

கிடைக்கின்றன. **தினைப்புனைங்களை 'ஏனல்' எனக் குறிப்பது வழக்கம்**. எனவே தினைப்புனங்களை விலங்குகளிடமிருந்து காப்பவர்களை 'ஏனல் காவலர்' என்று கூறும் மரபு இருந்துள்ளது.

"எழாஅ யாகலி னெழில்நலந் தொலைய
அழாஅ தீமோ நொதுமலர் தலையே
**ஏனல் காவலர்** மாவீழ்த்துப் பறித்த
பகழி யன்ன சேயரி மழைக்கண்"[72]

"யானே யீண்டை யேனே யென்னலனே
**ஏனல் காவலர்** கவணொலி வெரீஇ"[73]

"ஒளி திகழ் ஞெகிழியர், கவணையர், வில்லர்,
களிறு என ஆர்ப்பவர், ஏனல் காவலரே"[74]

"ஏனல்அம் காவலர் ஆனாது ஆர்த்தொறும்"[75]

இவர்கள் ஆயுதங்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகிறது. (பகழி என்றால்) வில்; (கவண் என்றால்) கவண்கல் ஆகிய ஆயுதங்களை ஏனல் பாதுகாப்புக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

**கழனிக் காவலர்**

கழனி என்பது மருத நிலத்தில் இருக்கும் பகுதி. அதனைக் காப்பதற்கு ஒரு காவல் படை இருந்துள்ளது. இக்காவல் படை பொதுமக்களால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பாக இருப்பதற்குப் பெரிதும் வாய்ப்புண்டு.

"கழனி காவலர் சுரி நந்து உடைக்கும்"[76]

“செழுஞ்செய் நெல்லின் சேயரிப் புனிற்றுக் கதிர்
மூதா தின்றல் அஞ்சிக், காவலர்
பாகல் ஆய்கொடிப் பகன்றையொடு பரீஇ”[77]

(நெல் விளைந்துள்ள கழனியைக் காவலர்கள் காத்த காட்சியை இவ்விலக்கியக் குறிப்பு காட்டுகிறது.)

**வீட்டுக் காவலர்**

இன்றைக்கு வீட்டுக் காவலுக்கு அமர்த்தப்படும் காவலர் (security) போன்றவரும் அக்காலக்கட்டத்தில் இருந்துள்ளனர். இவர்களை வீட்டின் தலைவர் பணிக்கு அமர்த்திய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் காணக் கிடைக்கின்றன.

“நல்மனை, நெடுநகர்க் காவலர்”[78]

ஏனல் காவலர், கழனிக் காவலர், வீட்டுக் காவலர் ஆகிய மூன்று காவலர்களும் தனிப்பட்ட முறையில் மக்களே ஏற்படுத்திக் கொண்டதாக இருக்கலாம் எனக் கருதமுடியும். காவல் காக்கப்பட்டதாகச் சுட்டப்பட்ட பொருட்கள் யாவும் தனியார்க்குச் சொந்தம் என்பதே இக்கருத்துத் தோன்ற காரணமாகும்.

**சாட்சியம் – நீதியின் அங்கம்**

பாதிப்படைந்த ஒருவர்க்கு நீதி வழங்குவதற்கு முன்னர் சில அடிப்படைகள் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

- பாதிப்படைந்ததாகக் கூறுபவர் உண்மையாகவே பாதிப்பு அடைந்தவர்தானா?

- குற்றம் சுமத்தப்பட்டவர் உண்மையாகவே குற்றம் புரிந்தவர்தானா?
- குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றம் புரிந்தவர் என்றாலும் குற்ற மனத்தோடு குற்றம் புரிந்தாரா?

முதலிய சில அடிப்படை ஆய்வுகள் மிக இன்றியமையாதனவாக உள்ளன. இவற்றை உறுதிப்படுத்திக் கொள்ள முறையான சான்றுகள் தேவைப்படும். எனவே உரிய சான்றுகளும், சாட்சியங்களும் நீதியின் அங்கங்களாகத் திகழ்கின்றன என்பது வெள்ளிடை மலை.

தண்டனை வழங்கும்போது கவனமாக வழங்குதல் வேண்டும். குற்றவாளிக்குத் தண்டனை கிடைக்கவில்லை எனினும் எக்காரணம் கொண்டும் குற்றம் செய்யாதவர்களுக்குத் தண்டனை வழங்கிவிடக் கூடாது என்பதெல்லாம் இன்றைய வளர்ச்சி பெற்ற நீதியியல் கருத்தாக்கங்கள் ஆகும். ஒருவருக்குத் தண்டனை வழங்குவதெனின் அவர் புரிந்த குற்றம் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். குற்றத்தை உறுதி செய்வதற்குச் சான்றுகளும் சாட்சிகளும் மிக இன்றியமையாதவையாகும்.

தண்டனை மட்டுமன்றிப் பாதிக்கப்பட்ட ஒருவர்க்கு உரிய நீதி கிடைக்க வேண்டுமெனினும் சான்றுகளும் சாட்சிகளும் தேவையாகின்றன. ஒருவர் தானுற்ற பாதிப்பை உறுதி செய்வதற்கு இவை இன்றியமையாதவை ஆகும்.

மேலும், ஒரு தனிமனிதனின் உரிமையை நிலைநாட்டுவதற்கும் சான்றுகளும் சாட்சியங்களும் தேவைப்படுகின்றன. இவ்வாறு குற்றவியல், உரிமையியல், இழப்பீடு முதலிய எல்லாச் சட்டவியல் சூழல்களிலும் ஒரு மனிதனின் நிலைப்பாட்டை உறுதி செய்ய சான்றுகளையும் சாட்சியங்களையும் முதன்மைக் குறிப்புகளாக இன்றைய சட்டவியல் நோக்குகிறது. இந்தத் தெளிவு பழங்காலத் தமிழ்நாட்டில் செறிவாகவே இருந்துள்ளது என்பதை இலக்கியச் சான்றுகள் உறுதி செய்கின்றன.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெரியபுராணத்தில் சான்று சாட்சியம் குறித்த தெளிவாக விளக்கம் இடம்பெற்றுள்ளது. திருமலைச் சருக்கத்தில் தடுத்தாட் கொண்ட புராணத்தில் கீழ்வரும் செய்யுள் இடம்பெறு கிறது. இச்செய்யுள் சாட்சியத்தை மூன்று வகையாகப் பகுத்து விரிவான சட்டவியல் அறிவைப் பதிவு செய்துள்ளது.

"ஆட்சியில் ஆவணத்தில் அன்றிமற்று அயலார் தங்கள்
காட்சியில் மூன்றிலொன்று காட்டுவாய் என்ன 'முன்னே
மூட்சியிற் கிழித்த ஓலை படியோலை மூல ஓலை
மாட்சியில் காட்ட வைத்தேன்' என்றனன் மாயை வல்லான்"[79]

எனும் பெரியபுராணச் செய்யுள் சான்றுகளை மூன்றாகப் பகுத்துப் பதிவு செய்துள்ளது. அவற்றை '*ஆட்சி*', '*ஆவணம்*' மற்றும் '*அயலார் காட்சி*' எனப் பெயரிட்டுள்ளார் சேக்கிழார். இவற்றுக்குக் கோவை வழக்கறிஞர் திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியார் கொடுத்துள்ள விளக்கவுரை வருமாறு:

"ஆட்சி-ஆவணம்-காட்சி- என்பன மூன்றும் அக்காலத்தில் தமிழர் நீதிமுறையிற் பொருள் நிச்சயிக்க உதவும் மூவகைச் சாட்சியங்களாம். இது முதல் வரிசை 209-ஆம் பாட்டு வரை அந்நாள் நீதிச் சபையார் வழக்கு விசாரித்து முடிவு செய்யும் நீதிமுறைகள் செவ்வனே உணர்த்தப் பெற்றன. அந்தமுறை எவ்வாற்றானும் இந்நாள் மிக உயர்வாகக் கருதப்படும் நமது நீதிமுறைக்கு ஒரு சிறிதும் பின்னிடாமையும் காணத்தக்கது. அதனினும் பலவகையில் உயர்ந்து காணப்பெறும். இந்நாள் நீதிமுறையிற் காணும் பொருட்செலவு – காலநீட்டிப்பு – முதலிய பல குறைகளும் அந்நாள் நீதிமுறையில் நேரிடாமையும் காணலாம்.

"ஆட்சி – சான்றோரிடத்துத் தொன்றுதொட்டு வழங்கி வருவதும், அது காரணம்பற்றி யாவராலும் ஒப்புக் கொள்ளப் பெறுவதுமான உலக வழக்கு, இவ்வழக்குக்கு ஆட்சியில்லை என்று "இந்த மாநிலத்திலில்லை" (வரிசை 198)

என முன்னரே கூறினார்களேனும், வழக்கு ஏற்றும் முறைகளைத் தெரிவிக்கும் நியாயம் பற்றி இங்குப் பொதுவகையிலுள்ள எல்லாச் சாட்சியங்களையும் கூறியவாறு.

“ஆவணம் – வழக்கின் பகுதிகளைக் காட்டக் கூடிய விவரங்கள் எழுதப்பெற்ற ஓலைகள். இதனையே – இசைவினால் எழுதும் ஓலை – என்றும், ஓலை தந்தைதன் தந்தை நேர்ந்தது என்றும் – முன்னர்க் குறித்தனர்.

“மற்று அயலார் தங்கள் காட்சி – வழக்கின் பகுதிகளிற் பிறர் தாங்கண்டதைச் சொல்வது – இதனை ஆவணச் சாட்சியின் (documentary evidence) வேறுபிரித்து வாய்மொழிச் சாட்சி என்பர் (oral evidence) நவீனர். தாம் தாம் கண்டதைச் சொல்வதே இவ்வகைச் சாட்சியாம் என்னக் காட்சி என இதற்குப் பெயர் வழங்கினர். ஒருவர் சொல்லக் கேட்டது சாட்சியாகதென்பதாம் (Hearsay is not evidence)”**80**.

மேற்காணும் எழுத்தாக்கம் அக்கால நீதிமுறையை நன்கு விளக்கியிருக்கிறது. விளக்கவுரையில் காணப்படும் புராணக் குறிப்புகளை நீக்கின் கீழ்க்காணும் சாட்சியம் பற்றிய கருத்துரு தெளிவாகக் கிடைக்கும். *ஆட்சி என்பது குறிப்பிட்ட நிலப்பகுதியில் அல்லது நாட்டில் நிலவிவரும் பழக்க வழக்கங்களைக் குறிப்பிடுவதாகும். ஆவணம் என்பது எழுத்து வடிவிலானது; எழுதிக் கொடுப்பவர் பற்றிய தகவல்கள், எழுதிப் பெறுபவர் பற்றிய தகவல்கள், கைச்சாத்து (கையெழுத்து) போன்ற ‘நபரை உறுதிபடுத்தும் அடையாளம்’ எனப் பல பகுதிகள் அதில் இடம்பெற்றிருக்கும். மூன்றாவதாய்க் குறிப்பிட்டிருக்கும் அயலார் காட்சி என்பது தமக்கு எவ்விதத்திலும் தொடர்பற்றவர் நேரில் பார்த்ததைக் குறிப்பிடுகிறது.*

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் நீதியியல் அங்கமான சாட்சியச் சட்டவியலின் (Jurisprudence of Evidence) வளர்ச்சிக்குச் சங்க கால நீதியியல்

நடைமுறைகள் முன்னோடியாய் அமைந்துள்ளன என்பது வரலாற்று உண்மை யாகும். இப்பகுதி சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சாட்சியம் குறித்த பகுதிகளைத் தொகுத்துச் சங்க கால நீதியியல் கருத்துரு நிலவரத்தை ஆய்வு செய்ய முற்படுகிறது.

“வெறிஅயர் களத்தினின் தோன்றும் துறைவன்
குறியா னாயினும் குறிப்பினும் பிறிதொன்று
அறியாற்கு உரைப்பவோ யானே? எய்த்த இப்
பணைஎழில் மென்தோள் அணைஇய அந்நாள்
பிழையா வஞ்சினம் செய்த
**கள்வனும் கடவனும் புணைவனும் தானே”** [81]

இச்செய்யுளின் கடைசி அடிக்கு, “கள்வன் கடவன் புணைவன் முறையே குற்றவாளி விசாரிப்பவன் அல்லது வழக்குத் தொடுப்பவன், சான்று (புணை) கூறுபவன். மூவரும் ஒருவனேயாதலால், அவன் வழங்கினாலன்றி, நீதி கிடைக்காதென்பது குறிப்பு. அக்கால வழக்காடு முறை காண்க”[82] என உரை எழுதப்பட்டுள்ளது. இச்செய்யுள் முறைமன்றத்தின் (நீதிமன்றம்) செயல்பாட்டை மிகச் சுருக்கமாகப் பதிவு செய்துள்ளது.

இச்செய்யுளின் இறுதி அடி முழுமையும் சட்டவியல் பார்வை கொண்டுள்ளது. இதன்மூலம் சங்க காலத் தமிழகத்திலிருந்த நீதியியல் விழிப்புணர்வு நிலையை உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஒரு மனிதரைக் குற்றவாளி எனத் தீர்மானிப்பதற்கு முன்பு உரியவகையில் விசாரித்து அறிவது சட்டக் கடமையாகும். விசாரணையின்போது அவரைக் குற்றம் சுமத்தப்பட்டவர் என்று அழைப்பது இன்றைய சட்டவியல் நாகரிகமாகும். விசாரிக்கிற போது தக்க சான்றுகளின் வழி அவரது குற்றம்

உறுதி செய்யப்பட்டால் மட்டுமே அவரைக் குற்றவாளி என்பது சட்டவியல் வழக்கமாகும். எனவே குற்றவாளி என ஒருவரைத் தீர்மானிப்பதற்கு விசாரணை முதன்மையாகவும் அவ்விசாரணைக்குச் தக்க சான்றுகள் துணைமையாகவும் திகழ்கின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். இந்தச் சட்டவியல் தெளிவு சங்க காலத் தமிழகத்தில் செறிவாகத் திகழ்ந்துள்ளது என்பதை மேற்குறிப்பிட்டுள்ள இலக்கியச் சான்றின் மூலம் உறுதியாகிறது.

"யாரும் இல்லை; தானே கள்வன்
தான்அது பொய்ப்பின் யான்எவன் செய்கோ?
திணைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே" [83]

சட்டவியல் சான்று குறித்து மறைமுகமாக ஆனால் தெளிவாக இச்செய்யுள் பதிவு செய்துள்ளது எனலாம். இச்செய்யுளின் பின்புலம் வருமாறு: களவொழுக்கத்தின் படி தலைவன் தலைவி புணர்ச்சி நடைபெறுகிறது. புணர்ந்துவிட்டுச் சென்ற தலைவன் திருமணம் செய்யாமல் காலம் தாழ்த்தி வருகிற சூழலில் இச்செய்யுள் எழுந்துள்ளது. தலைவன் திருமணம் செய்யாமல் காலம் தாழ்த்துதல் தலைவி நெஞ்சில் ஐயத்தை உண்டாக்கியுள்ளது. இதனால் தன்னுடைய தோழியிடம் தன் நிலையைப் பற்றிக் கூறுவதாகச் செய்யுள் நடையிடுகிறது. தலைவன் தலைவியைப் புணர்ந்தபோது யாரும் இல்லை; தலைவன் மட்டுமே இருந்துள்ளான் எனத் தலைவி வருத்தப்படுவதிலிருந்தே தன் நிலையை உறுதிசெய்ய **தன்னிடம் எந்தச் சான்றும் இல்லையே** என வருந்துவதும் தெரியவருகிறது. இதன்மூலம் சான்றுகள் குறித்த விழிப்புணர்வு அக்காலக் கட்டத்தில் நிலவியுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

"பூக்கொய் மகளிரில் தோன்றும் நாடன்
**தகாஅன் போலத் தான்தீது மொழியினும்**

**தன்கண் கண்டது பொய்க்குவது அன்றே**

தேக்கொக்கு அருந்தும் முள்எயிற்றுத் துவர்வாய்

வரைஆடு வன்பறழ்த் தந்தைக்

கடுவனும் அறியும்அக் கொடியோ னையே" [84]

குறுந்தொகையின் இச்செய்யுளும் கண்ணால் காணும் சாட்சியத்தின் அழுத்தத்தைப் பதிவு செய்துள்ளது எனலாம். செய்யுளின் பொருள் வருமாறு: "பூக்கொய்யும் மகளிரைப் போலத் தோன்றும் மலைநாடன், களவிற் கூடிவிட்டுத் தகுதியில்லாதவன் போலப் பொய் கூறித் தீயவற்றைக் கூறுகின்றான். அதாவது களவிற் கூடியதை மறுக்கின்றான். அங்ஙனம் மொழியினும் தேமாம் பழங்களைத் தின்னும் முள் போன்ற பற்களையும் சிவந்த வாயையும் உடையதும், மலைமீது விளையாடும் வலிமை வாய்ந்த குட்டிக்குத் தந்தையுமாகிய ஆண்குரங்கும் (நான் மட்டுமன்றிக் குரங்கும்) அக் கொடியவனை அறியும். அது தன் கண்ணால் கண்டதை, இல்லையென்று மறுத்துப் பொய் கூறாதல்லவா?"[85] என உரை காணப்பட்டிருக்கிறது.

முன்னர்க் கூறியவாறு கண்ணால் காணும் மனிதர்களின் கூற்றையே சாட்சியாக எடுத்துக்கொள்ள வேண்டுமெனும் கருத்தை இச்செய்யுள் மிக ஆழமாகப் பதிவாக்கி யுள்ளது. அதாவது, தந்தைக் கடுவன் அவ்விடத்தில் இருந்துள்ளது. அது குருகினைப் போல நிகழ்ச்சியைப் பாராமல் இருக்கவில்லை. தன்னுடைய கண்ணால் பார்த்துள்ளது. எனவே அதன் சான்று பொய்யாகாது எனத் தோழி உறுதியாகக் கூறுகிறாள். இங்கு நோக்கத்தக்கது காட்சியமைப்பும் அதன்மூலம் வெளிப்படும் சட்டவியல் பார்வையும் ஆகும். இந்தக் காட்சியமைப்பின் மூலம், சான்றாகும் தகுதி தம் கண்ணால் நேரடியாகப் பார்ப்பவர்க்கே உண்டு எனும் கருத்தியல் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதை உணரலாம்.

**கருத்தியல் வரலாற்று ஆய்வு இது என்பதனால் மேற்காணும் இலக்கியச் சான்றுகளில் இலக்கியப் புனைவுகளுக்கு அப்பாற்பட்டு இடம்பெற்றிருக்கும்**

**உரிய கருத்தாக்கங்கள் மட்டுமே இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. சுருங்கச் சொல்லின் கண்ணால் காணும் சாட்சிகள் குறித்த சங்க காலக் கருத்துருவை மேற்சுட்டியுள்ள இலக்கியச் சான்றுகள் முன்வைக்கின்றன. இவற்றைத் தனிமனிதச் சிந்தனைகள் என்பதைக் காட்டிலும் சமூகக் கருத்தியல்களாகவே நோக்கிட முடிகிறது. ஏனெனின், ஒரே மாதிரியான கருத்துகள் வெவ்வேறு வகையில் பல ஆசிரியர்களால் வெளிப்பட்டுள்ளன என்பதே அடிப்படைக் காரணமாகும்.**

**அலரும் சாட்சியும்**

தலைவன் தலைவி ஆயோரின் பழக்கம், உறவு குறித்து ஊர்மக்கள் பொதுப்பட உரைப்பது அலர் எனப்படும். இது அகச்செய்யுள்களில் இடம்பெறும். தலைவன் தலைவி கூடுவது, அவர்கள் பிரிவது, தலைவனின் பரத்தமை ஒழுக்கம் முதலியவை அலராகப் பரவுவது உண்டு. களவொழுக்கம் கற்பொழுக்கம் ஆகிய இரு ஒழுக்கத்திலும் அலர் எழுவது உண்டு. பொதுவாக, இதனை இலக்கியச் சுவைக்காகப் புலவர்கள் பெரிதும் பயன்படுத்துவது வழக்கம். **அலர் என்னும் கருத்தியல் இலக்கியச் சுவையைத் தாண்டிச் சட்டவியல் எல்லைக்கு உட்பட்டிருக்கிறது.** இதனைப் பின்வரும் செய்யுள்கள் உறுதி செய்கின்றன.

> "சூதார் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து
> நின்வெங் காதலி தழீஇ நெருநை
> ஆடினை என்ப புனலே அலரே
> **மறைத்தல் ஒல்லுமோ மகிழ்ந**
> புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்று ஒளியே"[86]

அலர் பரவியுள்ளதால் நீ உண்மையை மறைக்க வியலாது எனத் தலைவி கூறுவதாக அச்செய்யுள் அமைந்துள்ளது. அலர் எவ்வாறு பரவியது என ஆய்வு

செய்ய வேண்டி உள்ளது. இதற்கும் இச்செய்யுளே ஒருவாறு பதிலுரைக்கிறது. தலைவனும் பரத்தையும் புனலாடியதை ஒருவர் பார்த்துப் பிறரிடம் சொல்ல, பார்த்தவர் சொன்னதையே இன்னொருவரும் பார்க்க இப்படியே சொல்லும் காட்சியும் ஊரில் அலராகப் பரவி யிருக்க வேண்டுமெனத் தீர்மானிக்க இயல்கிறது. அலராகப் பரவியதில் கண்வழிச் செய்திகளைக் காட்டிலும் செவிவழிச்செய்தியே மிகுதியாக இருக்கும் என்பதிலும் ஐயம் இல்லை. என்றாலும் அக்காலத்தில் வேறு உறுதியான சான்றுகள் கிடைக்காத போது அலரையும் சாட்சியாக ஏற்கும் வழக்கம் இருந்துள்ளது எனக் கருத இச்செய்யுள் இடமளிக்கிறது.

“பலர்இவண் ஒவ்வாய் மகிழ்ந அதனால்
**அலர்தொடங் கின்றால் ஊரே** மலர
தொல்நிலை மருதத்துப் பெருந்துறை
நின்னொடு ஆடினள் தண்புனல் அதுவே” [87]

இச்செய்யுளும் அலரை அடிப்படையாகக் கொண்டு தலைவனுக்கு வாயில் மறுக்கிறாள் தோழி. தலைவன் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுத்திருக்க வேண்டும். ஆதலால்தான் ‘ஒவ்வாய் மகிழ்ந’ எனக் குறிப்பிட்டிருக்கிறார் புலவர். குற்றச்சாட்டைத் தலைவன் மறுக்கிறபோது அதனை ஊர்மக்களின் அலர் கொண்டு பொய்யாக்குகிறாள் தோழி. **எனவே அலரையும் சான்றாக அதாவது சாட்சியாகப் பயன்படுத்தியிருக்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளதை இதன்மூலம் அறிய முடிகிறது.** மேலும், சாட்சி கொண்டு தன்தரப்பை மெய்ப்பித்தல் குறித்த விழிப்புணர்வும் இருந்துள்ளது எனலாம்.

“அலமரல் ஆயமோடு அமர்துணை தழீஇ
நலமிகு புதுப்புனல் ஆடக் கண்டோர்
**ஒருவரும் இருவரும் அல்லர்**
பலரே தெய்ய எம் மறையா தீமே” [88]

அலர் எழுவதற்கான அடிப்படைக் காரணத்தையும், அலரின் உறுதித் தன்மையும் இச்செய்யுள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. ஒருவர் இருவர் என்கிற நிலையை எல்லாம் கடந்து பலர் பார்க்கும் அளவுக்குத் தலைவன் பரத்தையரோடு நெடுநாளாக இருந்துள்ளான் போலும். சிலர் பார்த்து அலர் எழுந்து அது பலரால் உறுதி செய்யப் பட்ட நிலையை இச்செய்யுள் விளக்குகிறது. மேற்சுட்டிய அலர் குறித்த மூன்று செய்யுள்களிலும் ஒன்றை அடிப்படையாகக் காணலாம். அது என்னவெனில், அலரைச் சாட்சியாக அக்காலத்து மக்கள் பயன்படுத்தத் தவறியதில்லை என்பதாம்.

"தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
கரும்பமல் படப்பை, பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய
அறனி லாளன், அறியேன் என்றி
திறனில் வெஞ்சூள், **அறிகரி கடாஅய்**
முறிஆர் பெருங்கிளை செறியப் பற்றி
நீறு தலைப்பெய்த ஞான்றை
வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே" [89]

எனும் செய்யுள் நோக்கத்தக்கது. தலைவியின் பெண்மை நலத்தைத் துய்த்த பிறகு தலைவியை ஏற்க மறுத்துள்ளான் ஒருவன். அவனுக்குத் தண்டனை கொடுத்துள்ளனர். சுண்ணாம்பு நீரைத் தலையில் ஊற்றியுள்ளனர் என அறிந்து கொள்ள முடிகிறது. இங்கு நோக்கத்தக்கது என்னவெனில் தண்டனை வழங்குவதற்கு முன்னர் அவையத்தார் சாட்சிகளை விசாரித்துள்ளனர். இதனை 'அறிகரி கடாஅய்'[90] எனும் தொடர் மூலம் அறிய முடிகிறது.

இவ்வாறான வழக்குகளின் முடிவுகளைத் தீர்மானிப்பதற்குக் கண்ணால் பார்த்த சாட்சிகள் மட்டுமன்றிச் (அலர் மூலமாகச்) செவிவழிச் செய்தி அறிந்த சாட்சிகளும் உதவியிருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு. எனவே

செவிவழிச் செய்தி பிற ஆதாரங்களோடு ஒத்துப்பட்டுப் போனதெனின் அச்செவிவழிச் செய்தியையும் விசாரணையில் சாட்சியாக உட்படுத்தி நீதி வழங்க முயன்றிருக்கிறது சங்க காலத் தமிழகம் எனும் முடிவுக்கு வரமுடிகிறது.

**பொய்ச்சாட்சி**

வழக்குகளைத் தீர்மானித்து முடிவு செய்வதற்குச் சாட்சிகள் பெரிதும் உதவியது போலவே வழக்குகளைத் திசைதிருப்பப் பொய்ச்சாட்சிகள் துணை போயிருக்கின்றன. சங்க இலக்கியம் அறிமுகப்படுத்தும் தமிழகத்தில் பொய்ச்சாட்சியம் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. அதே நேரம் பொய்ச்சாட்சிகளை மிகக் கடுமையாகப் புறக் கணித்துள்ளனர். பொய்ச்சாட்சி கூறுவோர்களைக் கடுமையான பழிக்கு உள்ளாக்கி யுள்ளனர். சான்றோர் பொய்ச்சாட்சி கூறுவதில்லை எனும் கருத்தியல் அக்காலத்தில் நிலவியுள்ளது.

*“அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை”* [91]

எனும் செய்யுளடி அதனை உறுதிபடுத்துகிறது. பொய்ச்சாட்சி கூறுதல் ஆன்றோரின் இயல்புக்கு உகந்தது இல்லை எனப் பதிவு செய்கிறது. அவ்வாறெனின், அறிகரி பொய்த்தல் பிறர்க்கு உண்டோ? எனும் வினா இத்தொடருள் மறைந்துள்ளது. ‘உண்டு’ என்றுதான் இவ்வினாவிற்குப் பதிலுரைக்க வேண்டியுள்ளது. சங்க இலக்கியத்தில் பல சான்றுகள் ‘உண்டு’ எனக்கூறும் விடைக்கு ஆதரவாகவே அமைந்துள்ளன.

“விரி காஞ்சித் தாது ஆடி இரும் குயில் விளிப்பவும்,
பிரிவு அஞ்சாதவர் தீமை மறைப்பென்மன்; மறைப்பவும்,
**கரி பொய்த்தான்** கீழ் இருந்த மரம் போலக் கவின் வாடி,
எரி பொத்தி, என் நெஞ்சம் சுடும் ஆயின், எவன் செய்கோ?” [92]

இச்செய்யுள் பொய்ச்சாட்சி கூறுபவனை அக்காலச் சமூகம் எவ்வாறு நோக்கி யுள்ளது என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. பொய்ச்சாட்சி கூறுபவன் தங்கி இருந்த மரம் வாடி விடுமாம். அந்தளவுக்குப் பொய்ச்சாட்சி கூறுபவன் நச்சுத் தன்மை கொண்டவன் என உருவகப்படுத்தியுள்ளது கலித்தொகை.

மேலும், சிலப்பதிகாரத்திலும் பொய்ச்சாட்சி கூறுபவர்களைப் பற்றிய செய்தி உண்டு. ஒருவர் பொய்ச்சாட்சி சொல்லுகிறபோது பாவை மன்றத்தில் இருக்கும் பாவை தன் நாவால் கூறாது கண்ணீர் உகுக்கும் என அறிகிறோம். பாவை எனும் கருத்தியல் உண்மையா கற்பனையா எனும் ஆய்வுக்குச் செல்லாமல், பாவைக் காட்சியின் பின்னணியில், பொய்ச்சாட்சி குறித்த விழிப்புணர்வு சங்க காலத் தமிழகத்தில் நிலவியுள்ளது என்பது விளங்கும். சங்க காலத்தைத் தொடர்ந்து சங்கம் மருவிய காலத்திலும் பொய்ச் சாட்சியம் குறித்த அறிதல் இருந்துள்ளது என அறிந்துகொள்ள முடிகிறது.

பொய்ச்சாட்சியம் குறித்த தெளிவும் விழிப்புணர்வும் எச்சரிப்பும் பின்னாளில் எழுந்த இலக்கியங்களிலும் காணமுடிகிறது. இதனை ‘மன்றோரம்’ எனும் வழக்கால் குறித்துள்ளனர்.

“வேதாளம் சேருமே வெள்ளருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே – மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
**மன்றோரம் சொன்னார் மனை”** [93]

எனச் செய்யுள் இயற்றப்பட்டுள்ளது. மன்று என்பது முறைமன்றத்தைக் குறிக்கிறது. ‘ஓர்ந்து நடவாமை’க்கு எதிர்ப்பதமாக ஓரம் என்பது அமைந்துள்ளது. மன்று + ஓரம் = மன்றோரம். அதாவது முறைமன்றத்தில் ஒருவருக்குச் சார்பாகப்

பொய் சொல்லுவது எனப் பொருளாகும். இதனால் தமிழகத்தில் பழங்காலம் முதல் பொய்ச்சாட்சி குறித்த விழிப்புணர்வும், பொய்ச்சாட்சி கூறுபவர்கள் மீதான வெறுப்புணர்வும் தெள்ளத் தெளிவாகப் புலப்படுகின்றன.

**தடயங்களும் சாட்சிகளும்**

குற்றவியல் சார்ந்த குற்றங்களைத் தீர்மானிப்பதற்கும் சாட்சிகள் தேவைப்படும். குற்றத்தைக் கண்ணால் பார்த்த சாட்சி, குற்றம் புரிவதற்குத் திட்டமிடலை அறிந்த சாட்சி எனச் சாட்சிகளை இன்றைய முறைமன்றம் ஏற்றுக் கொள்ளும். இதுபோன்ற நேரடிச் சாட்சிகள் கிடைக்காத சூழலிலும் கூட தடயங்களை வைத்துக் கொண்டு குற்ற வாளியைத் தீர்மானிப்பது வழக்கத்தில் உள்ளது. இவ்வாறு தடயங்களைக் கொண்டு குற்றத்தை உறுதிபடுத்தும் வழக்கம் சங்க இலக்கியம் காட்டியுள்ள தமிழகத்தில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

> “நீங்கும்கால் நிறம் சாய்ந்து, புணரும்கால் புகழ் பூத்து
> நாம் கொண்ட குறிப்பு, இவள் நலம் என்னும் தகையோ தான்
> எரி இதழ் சோர்ந்து உக ஏதிலார்ப் புணர்ந்தமை
> **கரிகூறும் கண்ணி**யை, ஈங்கு எம்இல் வருவதை?” [94]

என்கிற கலித்தொகைச் செய்யுளில் தலைவன் பரத்தையைப் புணர்ந்ததை மறுத்துக் கூறுகிறான். ஆனால் தலைவியோ அவன் வேறொரு பெண்ணைத் தழுவியுள்ளான் என்பதை உறுதிபடக் கூறுகிறாள். தலைவியின் உறுதிக்குக் காரணமாக அமைந்தது தலைவன் கழுத்திலிருந்த மாலையாகும். வேறொரு பெண்ணைப் புணர்ந்ததால் அந்த மாலை கசங்கிப் போய் இருந்துள்ளது. எனவே அந்த மாலையே தடயமாய் நின்று சாட்சியாக அமைந்துவிட்டது எனச் செய்யுள் பதிவு செய்துள்ளது.

இந்தக் காட்சி அமைப்பின் மூலம், சங்க காலத் தமிழகத்தில் தடயங்களைக் கொண்டும் குற்றங்களைக் கண்டறியும் விழிப்புணர்வு இருந்துள்ளது என அறிந்து கொள்ள முடிகிறது.

**முன்னோடிக் காவலர்கள்**

சங்க காலத் தமிழகத்தில் தற்போது இயங்கிவரும் காவல்துறைக்கு முன்னோடி யாகக் காவலர்கள் இருந்துள்ளனர். பொதுப்பணிக்கெனப் பல்வேறு காவல் பிரிவுகள் இருந்துள்ளன. ஊர்க்காவல், இரவுச் சுற்றுக்காவல், மெய்க்காப்பாளர் படைப்பிரிவு, சிறைக்காவல், போர்ப்படை, மதில்காப்புப் படை, பாசறைக் காவல்படை, சுங்கப்பொருள் பாதுகாப்புப் படை, நீர்நிலைக் காவல், எல்லைக்காவல் படை, உளவுப்படை முதலியவை பொதுப்பணிக்கான காவல்படையாகச் செயல்பட்டுள்ளன. ஏனல் காவல், கழனிக் காவல், வீட்டுக் காவல் முதலியவை தனியாரால் அமர்த்தப்பட்ட தனியார் காவலர்கள் ஆவர். குற்றங்கள் நிகழவிடாமல் தடுப்பது காவலர்களின் பெரும்பணியாக இருந்துள்ளது. குற்றம் நிகழ்ந்தால் குற்றவாளியைக் கைதுசெய்தல், மன்னன் அல்லது மேலதிகாரி முன்னிலையில் நிறுத்துதல் முதலிய பணிகள் அவர்களுக்கு உரியதாக இருந்துள்ளது. சங்க காலத் தமிழகத்தின் காவல் பணியில் மாற்றுத் திறனாளிகளும் பெண்களும் ஈடுபட்டிருந்தனர். அயல்நாட்டு வணிகர்கள் இங்குக் கொண்டுவந்த வணிகப் பண்டங்களைப் பாதுகாப்பதற்கெனத் தனிப்படை இருந்தது சங்க காலத் தமிழகத்தின் வெளியுறவுச் சீர்மையின் அடையாளம்.

மக்களிடையே ஏற்படுகின்ற வழக்குகளைத் தீர்த்து நீதி வழங்க, சாட்சியங்கள் சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. கண்ணால் பார்க்கும் சாட்சியைப் பெரிதும் நம்பியுள்ளனர். அதேநேரம் பொய்ச்சாட்சி குறித்த விழிப்புணர்வும் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது. இதனால் நீதி வழங்குவதில் தவறு ஏற்படக் கூடாது எனும் கருத்தியல் சங்க காலத்தில்

நிலவியுள்ளதை அறியமுடிகிறது. *மேலும், தடயங்களையும் சாட்சியாகக் கொள்ளும் தன்மையும் அறிவும் அக்காலத்தில் இருந்துள்ளது என்பதற்கும் சான்றுகள் கிடைக்கின்றன.*

நீதி வழங்கப்படுவதற்கு உதவக்கூடிய துணை அமைப்புகளான காவல்படை, சாட்சியம் தொடர்பான கருத்தியல் தெளிவு சங்க காலத் தமிழகத்தில் மிக நன்றாகவே நிலவியுள்ளது.

<u>**அடிக்குறிப்புகள்**</u>

1. Lois McMaster Bujold, a novelist. https://www.brainyquote.com/quotes/lois_mcmaster_bujold_389472 accessed on 04.07.2019.

2. https://en.wikipedia.org/wiki/Criminal_justice#cite_note-1 accessed on 02.07.2019.

3. Tamil Nadu Police Policy Note, *On Demand No.22,* ***Home, Prohibition And Excise Department***, Government Of Tamil Nadu, 2016, p.1.

4. Ibid, pp.4-5.

5. Official Records of the General Assembly (UNO) – Thirty First Session, *99th Plenary meeting, 15-Dec-1976*, Pg. 182 https://documents-dds-ny.un.org/doc/RESOLUTION/GEN/NR0/302/81/IMG/NR030281.pdf?OpenElement.

6. Faris, Ellsworth. "The Origin of Punishment", *International Journal of Ethics*, vol. 25, no. 1, 1914, p.55.

7. திருக். 562.

8. Criss Jami's Quote, in the Book Healology. https://www.goodreads.com/quotes/tag/punishment accessed on 07.08.2016.

9. O'Hara, Erin Ann, and Maria Mayo Robbins. "Using Criminal Punishment to Serve Both Victim And Social Needs." ***Law and Contemporary Problems***, vol. 72, no. 2, 2009, p.202

10. பெருங். 3,22:281-284.

11. பெருங். 5, 6:88-91.

12. சிலப். 22:6-10.

13. மதுரைக். 493-499.

14. Alex Frame, ***Salmond: Southern Jurist***, Melbourne, 1995, p. 219.

15. அகம். 159.

16. நற். 89.

17. நற். 218.

18. நற். 364.

19. மலைபடு. 77-80.

20. பழ. 322.

21. பரிமேலழகர் (உரையாளர்), ***திருக்குறள்: உரைப்பாயிரம்***.

22. புறம். 74.

23. புறம். 46.

24. குறுந். 292:3-4.

25. பெருங். 1. 40:371-3.

26. புறம். 182:5-6.

27. புறம். 72:7-12.

28. புறம். 213:17-18.

29. புறம். 10:2-4.

30. திருக். 561.

31. திருக். 567.

32. திருக். 562.

33. அகம். 256:14-21.

34. புறம். 392:5-11.

35. புறம். 260:12-20.

36. புறம். 50:5-9.

37. அகம். 262:4-12.

38. குறுந். 292:1-5.

39. கலித். 133:12-13.

40. புறம். 50.

41. புறம். 34:1-7.

42. கலித். 14:14-15.

43. புறம். 10:5-6.

44. ***The Encyclopedia Britannica***, 11th Edition, New York, 1911, p.925.

45. Ibid, p. 925.

46. குறுந். 292.

47. புறம். 184.

48. புறம். 46.

49. சிலப். 10:75-78.

50. திருக். 448.

51. புறம். 388:12-14.

52. மதுரைக். 644-647.

53. அகம். 122.

54. முல்லைப். 53-54.

55. மணிமே. 19:42-48.

56. புறம். 74.

57. பதிற். 28.

58. அகம். 143.

59. புறம். 31.

60. பதிற். 37.

61. நற். 18.

62. முல்லைப். 45-47.

63. முல்லைப். 64-66.

64. பட்டினப். 131-135.

65. அகம். 252.

66. சிறுபாண். 47.

67. சிறுபாண். 63.

68. சிறுபாண். 79.

69. புறம். 47.

70. திருக். 583.

71. தொல். புறத். நூற்பா 3.

72. நற். 13.

73. குறுந். 54.

74. கலித். 52.

75. அகம். 12.

76. நற். 280.

77. அகம். 156.

78. அகம். 22.

79. பெரிய. 202.

80. சி.கே. சுப்பிரமணிய முதலியார், ***திருத்தொண்டர் புராணம் (மூலமும் விளக்க உரையும்)***, கோயம்புத்தூர், 1975, பக். 231-232.

81. குறுந். 318:3-8.

82. தமிழண்ணல் (உரையாளர்), ***குறுந்தொகை மூலமும் உரையும்***, கோவிலூர், 2002, பக். 378.

83. குறுந். 25.

84. குறுந். 26:3-8.

85. தமிழண்ணல் (உரையாளர்), ***குறுந்தொகை மூலமும் உரையும்***, கோவிலூர், 2002, பக். 53

86. ஐங்குறு. 71.

87. ஐங்குறு. 75.

88. ஐங்குறு. 64.

89. அகம். 256:14-21.

90. அகம். 256.

91. குறுந். 184:1.

92. கலித். 34:8-11.

93. நல்வழி 23.

94. கலித். 78:11-14.

## நிறைவுரை

### சங்க காலத்தில் நீதிக் கருத்தியல்

பற்பல கருத்தியல்களின் ஆய்வுக் களமாகச் சங்க காலம் அமைகிறது. அவ் வகையில் சங்க காலத்தில் நீதிக் கருத்தியலின் வரலாறு (History of the Concept of Justice in Sangam Age) எத்தகையதாக இருந்திருக்கும் எனப் பல்வேறு கோணங் களில் ஆய்வுத் தலைப்பை அணுகும்வகையில் இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

'சங்க காலம்' மற்றும் 'நீதி' இவையிரண்டின் அடிப்படை வரையறையை ஒட்டி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சங்க காலத்தின் வரையறையாகப் பல் வேறு கருத்துகள் நிலவுகின்றன. இன்னும் சங்க காலத்தின் கால வரையறையைத் தீர்மானிக்கும் ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. என்றாலும் பரவலாக அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் வரையிலான காலக்கட்டத்தைச் சங்க காலமாகக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

நீதி என்பதன் சங்க கால வரையறையை அணுகுவதற்கு முன்பு தற்கால நீதிக் கருத்தியலின் வரையறையைத் தீர்மானிக்க வேண்டியுள்ளது. கலைக்களஞ் சியங்கள், பொது அகராதிகள், சட்ட அகராதிகள், சட்ட அறிஞர்களின் நூல்கள் முதலியவை முன்வைத்துள்ள கருத்துகளை ஒருங்கே தொகுத்துப் பார்க்கும்போது

| | |
|---|---|
| * நேர்மை | * சமவாய்ப்பு |
| * நடுநிலைமை | * உரிமை வழங்கல் |
| * ஏற்றத்தாழ்வின்மை | * உழைப்புக்குரிய ஊதியம் |

ஆகியவை நீதியின் கருத்தியல் பொருளாகக் கிடைக்கிறது. எனவே *நன்னெறி எனக் கருதப்படும் நேர்மை நடுநிலைமை ஏற்றத்தாழ்வின்மை சமவுரிமை*

*போன்றன ஒருங்கிணைந்த நடைமுறைச் செயன்மையை நீதி* எனலாம். இது **அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் முதலியவை மூலம் பெறப்பட்டிருக்கும்** ஒரு பொதுவிளக்கம் ஆகும்.

சிக்கல்கள் வருமுன்னரே அவற்றைத் தடுத்தலும், சிக்கல் வந்த பின்னர் பாதிக்கப்பட்டவர்க்குத் தீர்வழி அளித்துக் காத்தலும் **நடைமுறை வாழ்வியலில்** நீதி எனப்படுகிறது. எனவே *நன்னெறி எனக் கருதப்படும் நேர்மை நடுநிலைமை ஏற்றத்தாழ்வின்மை சமவுரிமை போன்றன ஒருங்கிணைந்த நடைமுறைச் செயன்மை மூலம் தடுக்கப் படும் அத்துமீறலும் கொடுக்கப்படும் பாதுகாப்பும் நீதி எனலாம்* என நீதியின் பொதுவிளக்கம் சற்றே விரிகிறது.

குற்றவாளிக்குத் தண்டனை வழங்குவதன் மூலம் பாதிக்கப்பட்டவரின் இழப்பு ஈடுகட்ட முடியாது என்றாலும் பாதிக்கப்பட்டவர்க்கு ஒருவித உளவியல் நிறைவு ஏற்படுகிறது. அதனால் நீதி என்பது உளவியல் நிறைவில் இயங்கும் அருவத் தன்மையது எனும் **சட்டவியல் அறிஞர்களின் கருத்தும் சரியானதாகும்**. எனவே நீதியின் பொது விளக்கத்தை மேலும் விரிவாக்க வேண்டியுள்ளது. *நன்னெறி எனக் கருதப்படும் நேர்மை நடுநிலைமை ஏற்றத்தாழ்வின்மை சமவுரிமை போன்றன ஒருங்கிணைந்த நடைமுறைச் செயன்மை மூலம் தடுக்கப் படும் அத்துமீறலும் கொடுக்கப்படும் பாதுகாப்பும் மனிதர்களின் உளவியல் நிறைவும் உள்ளடங்கிய அருவநிலை நீதி எனப்படும்* என்கிற புதிய பொதுவிளக்கம் நீதிக் கருத்தியலுக்குக் கிடைக்கிறது.

அடுத்து, நீதிக் கருத்தியலின் தோற்றம் வளர்ச்சி வரலாற்றை அணுக வேண்டியுள்ளது. இதன்மூலம் சமூகத்தில் படிப்படியாக நீதிக் கருத்தியல் பெற்ற பரிணாம வளர்ச்சியின் மூலம் மக்களின் அறிவு முதிர்ச்சி அடையாளப்படுத்தப் படுகிறது. நீதிக் கருத்தியலின் வரலாற்று ஆய்வுக் கருத்துகள் வருமாறு.

- ✓ மனித இன வளர்ச்சியின் அடிப்படையில் நீதியின் தோற்ற வளர்ச்சி மூன்று நிலையில் வகுக்கப்பட்டுள்ளது.
- ✓ தனிமனிதன் தன்னுடைய அல்லது தன் குடும்பத்தினுடைய நலன் மற்றும் பாதுகாப்புக்காகச் செய்யப்படும் அனைத்தும் நீதியாகவே கருதப்பட்ட காலக் கட்டம் நீதியின் முதல்நிலையாகச் சுட்டப் படுகிறது.
- ✓ மனிதன் இனக்குழுக்களாக இயங்கிய நேரத்தில் ஏற்பட்ட சிக்கல் களுக்குப் பெரிதும் ‘பழிக்குப் பழி’ என்பதை நீதியாகக் கருதப்பட்ட காலக்கட்டம் நீதியின் இரண்டாம் நிலையாகச் சுட்டப்படுகிறது.
- ✓ குற்றம், குற்றவாளி, உரிமை, கடமை முதலியவற்றை நன்கு உணர்ந்து கொண்டு நேர்மை, நியாயம், நடுநிலைமை, சமவுரிமை முதலிய கோட்பாடுகளைப் பின்பற்றுவது நீதியெனக் கருத வேண்டும் என்கிற நிலைக்குப் படிப்படியாக வளர்ந்துவந்த காலக் கட்டம் நீதியின் மூன்றாம் நிலையாகச் சுட்டப்படுகிறது.
- ✓ நீதி தோற்ற வளர்ச்சி வரலாற்றில் நீதிமன்றம் போன்ற அமைப்புகள் இருந்துள்ளதை உறுதி செய்ய முடிகிறது. இவ்வமைப்புகள், தாம் இருக்கின்ற இடம் சார்ந்த வழக்குகளை மட்டும் கையாண்டு நீதி செலுத்தி வந்துள்ளன என அறிய முடிகிறது.
- ✓ வரலாற்றுப் பதிவுகளின் மூலம் நீதி செலுத்துவதில் சமயங்களின் பங்கு இடைக்காலத்தில் இருந்துள்ளதை உணரமுடிகிறது.
- ✓ முழுமையான குடியாட்சி மலர்ந்த பின்னர்ச் சமயம், அரசியல் முதலிய தலையீடுகள் பெரிதாக இல்லாமல் தன்னாட்சி பெற்று இயங்கும் நீதித்துறை உண்டாகி யிருக்கிறது. இதன்மூலம் நேர்மை, நடுநிலைமை, ஏற்றத்தாழ்வின்மை, சமவுரிமை முதலியவற்றின் மூலம் சட்டப்படியான நீதி வழங்கும் அமைப்பாகத் திகழ்கிறது.

நீதியின் தோற்ற வரலாற்றை ஆய்வு செய்ததன் மூலம், காலந்தோறும் மாறும் இயல்புடையது நீதி என்பது தெளிவாகிறது. மேலும் நீதி வரையறையில்

இடம்பெற்றுள்ள 'மனிதர்களின் உளவியல் நிறைவு' எனும் தொடர் முற்றிலும் பொருத்தமானது என்பதை நீதியின் தோற்ற வளர்ச்சி வரலாற்றின் மூலம் உறுதி செய்யமுடிகிறது.

எத்தனை புதிய துறைகள் உருவானாலும் அத்தனைத் துறைகளிலும் தலையிடும் தன்மை நீதிக்கு உண்டு என்பதை நீதியின் வகைப் பகுப்புகளைக் கொண்டு அறிய முடிகிறது.

தற்கால நீதியின் நிலைப்பாடு சிறப்பாகச் செயல்படுகிறது எனவும் அதற்கு முறையாக அமைக்கப்பட்டிருக்கும் நீதிமன்றங்கள் பெரிதும் துணை செய்கின்றன என்பதையும் அதனால் சமூகத்தில் பல பயன்கள் ஏற்படுகின்றன என்பதையும் அறியமுடிகிறது.

இத்தகைய தற்கால நீதிக்கருத்தியலின் வளர்நிலையோடு சங்க காலத்தில் நிலவிய நீதிக் கருத்தியலை ஒப்பிட்டுப் பார்க்க சங்க காலப் பதிவுகளான இலக்கியத் தரவுகளே நமக்குப் பெரிதும் உதவுகின்றன. **சங்க காலத்தைச் சேர்ந்த அழகன்குளம் பகுதியில் கிடைத்த உரோமானிய மட்கலங்களான ரௌலட்டட் மட்கலனில் 'வாதுமேத'** எனும் தொடர் கிடைத்துள்ளது. இதனைத் தொல்லியல் அறிஞர் நடன காசிநாதன் 'வாதிடுவதில் வல்லவன்' எனப் பொருள் கண்டிருக்கிறார். அகழ்வாய்வுச் சான்றாக இதுமட்டுமே நீதிக் கருத்தியலோடு தொடர்புடையதாக உள்ளது. மேலும், **சங்க காலத்திற்கு முந்தைய காலக்கட்டத்தைச் சேர்ந்த முதலைக்குளம் பகுதியில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் 'பெண்கள் அவை' பற்றிக் குறிப்புள்ளது**. இதன்மூலம் சங்க காலத் திற்கும் முந்திய (Pre Sangam Age) காலத்திலிருந்தே தமிழகத்தில் ஊர் அவை அமைப்பும், வாதிடுபவர்களும் இருந்துள்ளனர் எனத் துணியலாம்.

அக்காலத் தமிழக வரலாற்றை ஆவணப்படுத்துவதில் சங்க இலக்கியங் களின் பங்களிப்பு முதன்மையானதாகும். அகழ்வாய்வு செய்ததன் மூலம் கிடைத்த தரவுகளோடு நேரடியாகச் சங்க இலக்கியச் செய்திகள் ஒத்துப்போகும் தன்மை உடையனவாய்த் திகழ்கின்றன என்று பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் உறுதி கூறுகிறது. தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை சங்க கால நீதிக் கருத்தியலை அறிய பெரிதும் உதவுகின்றன. இலக்கியங்களை வரலாற்று ஆவணமாகக் கருதி வரலாற்று ஆய்வை மேற்கொள்ளும் நடைமுறை பன்னெடுங் காலமாக இருந்து வருகிறது. குறிப்பாகக் கருத்தியல் வரலாற்று ஆய்வுகளுக்கு (Conceptual Research) இலக்கியங்கள் தகுதிவாய்ந்த வரலாற்றுச் சான்றாவணங்களாகப் பன்னாட்டு அளவில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

சங்க காலத் தமிழகத்தில் சரியாக நீதி செலுத்துவதன் அடையாளமாகச் செங்கோல் எனும் கருத்தியல் திகழ்ந்துள்ளது. அரசாட்சியின் முதன்மை நோக்க மாக நீதி செலுத்துதல் இருந்துள்ளது. அக்காலத்தில் நீதி குறித்த கருத்தியல் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. நீதி சார்ந்தே மன்னன் இயங்க வேண்டுமென்பது சமூகக் கட்டமைப்பாக இருந்துள்ளது. மன்னன் முறைதவறினால் அதைச் சுட்டிக் காட்ட அறிவர்க்கும் பொதுமக்களுக்கும் உரிமை வழங்கப்பட்டிருந்த காட்சிகள் சங்க காலத்தில் காணப்பட்டுள்ளன. நீதிமுறை தவறும் மன்னன் தானே அழிந்து போவான் என்றும், அவன் நாடு எவ்வித முன்னேற்றமுமின்றிக் கெடும் என்றும், அவன் குடிமக்கள் அவனால் கடும் பாதிப்புக்கு உள்ளாவர் என்றும் அக்கால மக்கள் நீதி தவறுவதால் ஏற்படும் தீமைகளை நன்கு அறிந்திருந்தனர்.

சங்க காலத் தமிழகத்தில் நீதிக் கருத்தியல் குறித்த விழிப்புணர்வு நன்கு இருந்துள்ள நிலையிலும் நீதி வரையறை வளர்நிலையிலேயே இருந்துள்ளது எனலாம். கொலைத்தண்டனையே நீதியின் அடையாளம் எனக் கருதும்படி ‘முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வெளவல்’ எனப்படுகிறது. அதே

நேரம் *தவறிழைக்காத ஆனால் குற்றம் சாட்டப்பட்ட நல்லவர்களைக் குற்றப் பழியிலிருந்து பாதுகாத்தல் மற்றும் பாதிப்படைந்தவர்க்குத் தீர்வழி கொடுத்துப் பாதுகாத்தல் ஆகியவை நீதி எனப்படும்* எனும் கருத்தியலும் சங்க காலத்தில் இருந்துள்ளது.

நீதி செலுத்தும்போது வேண்டியவர் வேண்டாதவர் என்னும் பாகுபாடு இன்றியும் விருப்பு வெறுப்பின்றியும் இருக்க வேண்டும்; இரு தரப்பினரையும் சமமாகக் கருதும் நடுநிலைமை எண்ணம் இருக்க வேண்டும்; இருதரப்பு வாதங் களையும் நன்கு கேட்டறிந்து ஆராய வேண்டும்; விசாரணையின்போது இரு தரப்புக்கும் தத்தம் தரப்பு நியாயங்களைச் சொல்ல சமவாய்ப்பு தரப்பட வேண்டும்; இறையாண்மையின் அடையாளமாக அதிகாரம் செலுத்திக் குற்றங்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும் ஆகிய நடைமுறைகள் யாவும் நீதி செலுத்தும் போது கடைப்பிடிக்க வேண்டும் எனும் தெளிவு சங்க காலத் தமிழகத்தில் நிலவி யுள்ளது.

இன்றைய நீதிமன்றங்களைப் போல் சங்ககாலத் தமிழகத்தில் வழக்குகளை எதிர்கொண்டு நீதி வழங்க ஊர்தோறும் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மன்றம், அவையம், அறங்கூறு அவையம் எனும் நிலையில் அவை செயல்பட் டிருக்க வேண்டுமெனக் கருத இலக்கியச் சான்றுகள் இடம்கொடுக்கின்றன. ஊர் களைப் பற்றிக் குறிப்பிடும்போது மன்றங்களையும், தலைநகரங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அறங்கூறு அவையம் எனச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. எனவே புகார், மதுரை, உறந்தை முதலிய நாட்டின் தலைநகரத்திலுள்ள நீதி வழங்கும் மையங்களாக அறங்கூறு அவையம் செயல்பட்டுள்ளன எனவும் அதன் தலைமைப் பொறுப்பிலிருந்தவன் அவ்வவ் நாட்டின் மன்னன் என்பதும் தெரிய வருகிறது.

சங்க காலத் தமிழகத்தில் நீதி வழங்குதலில் 'அறம்' எனும் கருத்தியலுக்குப் பெரும்பங்குண்டு. அறத்தின் அடிப்படையில் நீதி வழங்கும் நடைமுறை அக்

காலத்தில் இருந்துள்ளது. சங்க இலக்கியப் பதிவுகளிலிருந்து அக்காலத்தில் அறக் கருத்தியல் இருவகையாகத் தமிழகத்தில் இருந்துள்ளது என அறியமுடிகிறது. **சூழலின் அழுத்தத்திற்கு இடம்கொடுக்காமல் எப்போதும் மாற்றமின்றி ஒரே நிலையிலிருக்கும் *பொது அறக்கருத்தியல்*,** அடுத்தது, **சார்ந்துள்ள சூழலைப் பொருத்து அவரவர் நிலைக்கேற்ப மாற்றம் பெறக்கூடிய *சூழல்சார் அறக் கருத்தியல்*** என இருவகைக் கருத்தியலும் சங்க காலத்தில் நிலவியிருந்ததை உணர முடிகிறது.

அறக்கருத்தியலை மன்னன் எப்போதும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது சங்க காலச் சமூகத்தின் கட்டமைப்புகளுள் ஒன்றாகவே இருந்துள்ளது எனலாம். '*அறன்நெறி பிழையாத் திறனறி மன்னன்*' என மன்னனுக்கும் அறத்திற்கும் இருந்துள்ள உறவைப் பல சான்றுகள் மூலம் அறியமுடிகிறது. அதே போல நீதி வழங்கும் அமைப்பான 'அவையம்' அறத்தின் மறுபதிப்பாக இருந்துள்ளது என '*அறன்நிலை திரியா அன்பின் அவை*', '*உறந்தை அவையத்து அறம்கெட அறியாதாங்கு*' முதலிய பல இலக்கியச் சான்றுகள் மூலம் தெளியலாம்.

நீதி செலுத்துவதில் அறக் கருத்தியலின் பங்களிப்பு மிகுதியாக உண்டு எனினும் நீதிக் கருத்தியல் அறக்கருத்தியல் இடையே வேறுபாடுகளும் உள்ளன. பொதுவாக அறம் அறிவுறுத்தலோடு நிற்கும் ஆனால் நீதி வலியுறுத்திச் செயல் பட வைக்கும். நீதியரசர்களால் குற்றவாளிக்குத் தண்டனை வழங்க முடியும் ஆனால் அறவாணர்களால் வெறும் அறிவுரை மட்டுமே வழங்க இயலும். இதற்குக் காரணம் நீதிக் கருத்தியலோடு அதிகாரம் இணைக்கப்பட்டிருந்ததே ஆகும்.

அனைத்துத் துறைகளிலும் சிக்கல் எழுவதால் எல்லாத் துறைகளிலும் நீதி செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. சங்க இலக்கியச் சான்றுகளிலிருந்து அக்காலத்தில் பல துறைகளில் நீதி மேலாண்மை முறையாக இருந்துள்ளதை

அறிய முடிகிறது. சான்றாக வணிகம், அரசியல், பொருளாதாரம், போர் முதலிய துறைகளைக் குறிப்பிடலாம்.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழர்கள் வணிகத்துறையில் சிறப்புற்று இருந்துள்ளனர். உள்ளூர் வணிகம், நில எல்லை கடந்த நாட்டிடை வணிகம், கடல் எல்லை கடந்த நாட்டிடை வணிகம் என முறைப்படுத்தப்பட்ட வணிக அமைப்பு அக்காலத் தமிழகத்தில் இருந்துள்ளது. இதை நிறுவ பலப்பல வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன. வணிக நிலைப்பாடுகளில் சிக்கல் ஏற் பட்டபோதெல்லாம் அவற்றை உரியவாறு தீர்த்து **நுகர்வோர்க்கும் வணிகப் பெருமக்களுக்கும் அத்துறையின் தேவை சார்ந்து நீதி வழங்கப்பட்டுள்ளது**.

நுகர்வோர் எக்காரணம் முன்னிட்டும் ஏமாற்றப்படக் கூடாது என்பதில் சங்க காலச் சமூகக் கட்டமைப்புக் கவனமாக இருந்துள்ளது. வணிகர்களிடம் இருந்து நடுவுநிலைமையை எதிர்பார்த்துள்ளது. கொடுக்கும் பொருளின் அளவும் தரமும் குறைவுபடாது பார்த்துக் கொள்ள வேண்டும் எனும் கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் நிலவியுள்ளது. இந்நடைமுறைகளும் நீதி செலுத்துதலே ஆகும். சிக்கல் வந்தபின்னர் அதைத் தீர்ப்பது போன்றே சிக்கல் வரவிடாமல் வரும்முன்னர் காத்தலும் நீதி செலுத்துவதே ஆகும்.

வணிகர்களிடமிருந்து சுங்கம் பெறப்பட்டிருக்கிறது. அதற்கு ஈடாக அவர் களின் தொழில் நடைபெற வேண்டிய அடிப்படைக் கட்டமைப்புகளை உண்டு பண்ணியுள்ளனர். வணிகர்களுக்கு வேண்டிய சாலை வசதிகள், வணிகச் சாத்து களுக்கான பாதுகாவல், பண்ட சாலைகள் அமைத்துத் தருதல், இறக்குமதிப் பொருட்களுக்குக் கடுமையான பாதுகாப்புக் கொடுத்தல், கொள்ளையர்களை ஒடுக்குதல் என வணிகர்களுக்குத் தேவையானவற்றைச் செய்துள்ளனர். சுங்கம் பெற்று இவ்வசதிகளைச் செய்து தராதிருந்தால் அது வணிகர்களுக்கு இழைக்கப் படும் அநீதியாகும் எனும் கருத்தியலின் அடிப்படையில் வசதிகள் செய்துதந்து அவர்களின் உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது.

அரசுரிமை மாற்றம் என்பது சங்ககாலத்தில் நடைபெறும் இன்றியமையாத அரசியல் நிகழ்வாகும். இத்துறையில் அவரவர் உரிமையைப் பாதுகாப்பதே அவரவர்க்கு வழங்கப்படும் நீதியாக இருந்துள்ளது.

பழவிறல் தாயம் நடைமுறைப்படி மன்னனுக்குப் பிறகு அவன் மகன்களுள் மூத்தோனுக்கு அரசுரிமை மாற்றம் செய்யப்படுவதே அரசியல் நீதி யாக இருந்துள்ளது. பழவிறல் தாயம் நடைமுறைக்கு விதிவிலக்காகத் திறமை அடிப்படையில் இளையோனுக்கும் அரசுரிமை மாற்றம் செய்யலாம் எனும் கருத்தியல் சங்ககாலத் தமிழகத்தில் உருவாக்கம் பெற்றுள்ளது. மன்னனின் பெண் பிள்ளைகளுக்கு அரசுரிமை கோரும் உரிமை இல்லை. **இதில், பெண்களுக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது எனலாம்**. வாரிசு கருவிலிருக்கும்போது மன்னன் இறக்க நேரிட்டால் வயிற்றிலிருக்கும் கரு உயிரோடு பிறப்பின், அந்த ஆண் குழந்தைக்கு அரசுரிமை உரியது எனும் கருத்தியல் சங்க காலத்தமிழகத்தில் நிலவியது. இதன் மூலம் கருவின் உரிமையையும் பாதுகாத்த சமூகமாக அக்காலச் சமூகம் இருந்துள்ளது.

வரிப்பணம் பெறுவதன் பின்னணியில் பொருளாதார நீதிச் செயன்மை மறைந்துள்ளதை நன்கு உணரலாம். மக்களுக்கு விதிக்கப்படும் வரியும் நீதிமுறை சார்ந்திருக்க வேண்டும். கூடுதல் வரிவிதிப்பு, பொருந்தா வரிவிதிப்பு, வரி தண்டுவதில் கடுமை, அளவு கடந்த தண்டனை முதலியவை நீதிமுறைக்குப் புறம் பானவையாகும். வரிவிதிப்பில் நீதிமுறை எவ்வாறு பிறழக்கூடாதோ அவ்வாறு பெற்ற வரிப்பணத்தைச் செலவிடுவதிலும் நீதிமுறை பிறழக் கூடாது எனும் பொருளியல் தெளிவு சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது.

பயன்துய்ப்பு வரி, உற்பத்தி வரி, புரவு வரி, உல்கு வரி, கப்பம் வழியாக அரசுக்கு வருவாய் வந்துள்ளது என அறியமுடிகிறது. **சங்க காலத் தமிழகத்தில் வரிவிதிப்பில் நீதி பிறழப்பட்ட காட்சிகளைக் காணமுடிகிறது**. இவ்வாறு

மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மன்னனிடம் நேரடியாக முறையிடும் வாய்ப்பு மக்களுக்கும் அறிவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. இயற்கைச் சீற்றத் தினால் உழவர் துயருற்ற காலத்தில் வரி நிலுவை அல்லது வரி தள்ளுபடி செய்து அவர்களுக்குத் தீர்வழி கொடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மக்களைக் கொடுமை படுத்தி அவர்களிடமிருந்து வரி பெறுவது தவறு எனும் பொருளியல் சார்ந்த நீதி கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் நிலவியுள்ளது.

போர்த்துறையில் சங்க காலத் தமிழகம் ஆற்றிய நீதி மேலாண்மை வியப்பு அளிக்கிறது. திடிரெனப் போர் தொடுக்காமல் எதிர்நாட்டிற்கு ஆநிரை கவர்தல் மூலம் போர்தொடுப்பை அறிவித்தல் தற்காலத்தில் பன்னாட்டளவில் கடைப் பிடிக்கப்படும் போர்தொடுப்பு அறிவிக்கைக்கு ஈடான செயலாக உள்ளது.

போர்க்காலத்தில் இயலாதோரை பாதுகாப்பு வளையத்திற்குச் செல்ல வாய்ப்பளித்த காட்சியை இலக்கியம் பதிவுசெய்துள்ளது. முதியோர்களையும், பெண்களையும், நோயாளிகளையும், கால்நடைகளையும் பாதுகாப்பு வளையத் திற்கு அனுப்பிய செய்கை தற்காலத்தில் பள்ளிக் கூடம், முதியோர் இல்லம், மருத்துவமனை முதலியவற்றின் மீது தாக்குதல் செய்யக்கூடாது எனும் போர்நீதிக்கு ஒப்பானதாகப் பார்க்கப்படுகிறது.

போரில் கைதிகளாகக் கொண்டு வருபவர்களை எப்படி நடத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் அவையம் அறிவுறுத்தியுள்ளது. அதாவது போர்க்கைதி களுக்குரிய உரிமை காக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்கிறது. சங்க காலத் தமிழகம் ஏறத்தாழ போர்க்கைதிகளின் உரிமைகள் பலவற்றைப் பாது காத்துள்ளது வியப்பைத் தருகிறது. ஆண் போர்க்கைதிகளைக் கொண்டி மள்ளர் என்றும் பெண் போர்க்கைதிகளைக் கொண்டி மகளிர் என்றும் குறிப்பிடுவது அக்கால வழக்கம்.

கொண்டி மள்ளர், கொண்டி மகளிர் இவர்களுக்கான உறைவிடம், உணவு உடுப்பு, அவர்களுக்கேற்ற வேலைவாய்ப்பு, சிறைச்சாலையில் அடைக்காமல் தன் குடிமக்களைப் போன்றே நடத்துதல் எனப் பல முன்னோடி செயன்மை புரிந்து போர்க்கைதிகளுக்கு போர்நீதி நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

கொண்டி மகளிர் தம் பகுதியில் அமைந்துள்ள மறங்களில் விளக்கேற்றும் பணியினையும், பொதுவிடங்களில் யாழ் இசைக்கும் பணியினையும் ஆற்றி யுள்ளனர். ஒரு சிலர் பரத்தமைத் தொழிலில் ஈடுபட்டதாகவும் குறிப்புள்ளது. கொண்டி மள்ளர்க்கும் கொண்டி மகளிர்க்கும் உரிய பணிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு ஊதிய வருவாய் உறுதி செய்யப்பட்டுள்ளது.

போர்தொடங்குவதற்கு முன்னர் ஆநிரை கவர்தல் மூலம் போர் அறிவிப்பு, போர்நடைபெறும் போது இயலாதவர்கள் பாதுகாப்பிடம் செல்ல அனுமதி அளித்தமை, போர்க்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்க முனைந்தமை, போர்க்குப் பின்னர் மக்கள் சிறப்பாக வாழ மறுநிர்மானப் பணிகள் மேற்கொள் ளுதலென மனிதவுரிமைகளைப் போரின் போதும் காக்க வேண்டும் எனும் போர் சார்ந்த நீதிக் கருத்தியல் சங்க காலத்தில் வளர்நிலையில் இருந்துள்ளது.

முறையாக நீதி செலுத்துவதற்குச் சில துணைச்செயன்மைகள் உதவி புரிகின்றன. அவற்றை நீதியின் அங்கள் எனப்படுகின்றன. காவல், விசாரணை, தண்டனை முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

சங்க காலத் தமிழகத்தில் விசாரணை முறை செம்மையாக இருந்துள்ளது. உளவியல்படி வழக்குத் தரப்பாளர்களைக் கையாண்டு அவர்களின் அச்சம் தீர்த்து இனியமொழி பேசி நம்பிக்கையூட்டி விசாரணை நடைபெற்றதாக அறிய முடிகிறது. இதற்காகக் காவிதி மாக்கள் எனும் பொறுப்பில் பணியாற்றியவர்கள்

உண்டு. இவர்கள் தவிர அவையில் பேசத் தெரியாத மக்களின் குறைகளை எடுத்துரைப்பதற்காக வழக்குரைஞர் பொறுப்பிலும் சிலர் பணியாற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

குற்றமனம் இல்லாமல் செய்யப்படும் குற்றங்களுக்குத் தண்டனை வழங்க கூடாது என்பது தற்கால நீதியியல் வளர்ச்சி. இவ்வளர்ச்சிக் கருத்தியல் சங்க காலத் தமிழகத்திலும் நிலவியுள்ளது. செய்யப்படும் **தவற்றுக்கு ஏற்ற தண்டனை வழங்கப்பட வேண்டுமெனும் நீதிக்கருத்தியல்** அக்காலத்தில் இருந்துள்ளது.

அரசர்கள் தவறு இழைப்பதே இல்லை என்னும் கோட்பாட்டைப் பெரும்பாலும் அனைத்து முடியாட்சி அரசுகளும் பின்பற்றி வந்துள்ளன. ஆனால் சங்க காலத் தமிழகம் பன்னாட்டளவிலான இக்கொள்கையிலிருந்து மாறுபடுகிறது. ஆம், அரசர்களும் தவறிழைக்கக் கூடியவர்களே எனச் சங்க காலச் சமூகம் நிலைநாட்டியுள்ளது.

பொதுமக்களுக்கு அநீதி இழைக்கப்படாமல் தடுக்க காவல் படை சங்க காலத் தமிழகத்தில் பல பணிகளை மேற்கொண்டிருந்தது. ஊர்க்காவல், சிறைக் காவல், போர்ப்படை, மதில்காப்புப் படை, பாசறைக் காவல்படை, சுங்கப்பொருள் பாதுகாப்புப் படை, நீர்நிலைக் காவல், எல்லைக் காவல் படை, உளவுப்படை முதலியவை பொதுப்பணிக்கான காவல்படையாகச் செயல்பட்டுள்ளன. சங்க காலத் தமிழகத்தின் காவல் பணியில் மாற்றுத் திறனாளிகளும் பெண்களும் ஈடுபட்டிருந்தனர் என்பது கூடுதல் சிறப்பு.

சரியான தீர்ப்புரை கொடுக்க சரியான சாட்சியங்கள் தேவைப்படுகின்றன எனும் கருத்தியல் அக்காலத் தமிழகத்தில் இருந்துள்ளது. கண்ணால் பார்க்கும் சாட்சியைப் பெரிதும் நம்பியிருந்தனர். அதேநேரம் பொய்ச்சாட்சி குறித்த

விழிப்புணர்வும் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது. மேலும், தடயங்களையும் சாட்சியாகக் கொள்ளும் அறிவுநுட்பம் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன.

சங்க காலத் தமிழகத்தில் சிற்சில அநீதி காட்சிகளும் பதிவாகியுள்ளன. என்றாலும் அவற்றுக்கான மேல்முறையீட்டு வாய்ப்பும் இருந்து உள்ளதைக் கருத வேண்டும். எனவே சங்க காலத் தமிழகத்தில் நீதிக் கருத்துரு செப்பமான வளர்நிலையில் இருந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

# BIBLIOGRAPHY

## Primary Sources

### International

*Convention on Access to Information, Public Participation in Decision-making, and Access to Justice in Environmental Matters*. New York: United Nations, 1999. Print.

*Convention on the Non-Applicability of Statutory Limitations to War Crimes and Crimes against Humanity*. New York: United Nations, 1968. Print.

*Charter of the United Nations and Statute of the International Court of Justice*. New York: United Nations, 2005. Print.

*General Agreement on Tariffs and Trade*. Lake Success, NY: United Nations, 1947. Print.

*Rome Statute of the International Criminal Court*. The Hague: International Criminal Court, 2011. Print.

*Universal Declaration of Human Rights*. NY, NY: United Nations, 2017. Print.

### National

*The Constitution of India = Bhārata Kā Saṃvidhāna*. New Delhi: Ministry of Law & Justice, Govt. of India, 2005. Print.

*The Protection of Human Rights Act, 1993: With Procedural Regulations*. New Delhi: National Human Rights Commission, 1994. Print.

Geeta Sekhon. *Training Module for the Judges on Anti-Human Trafficking*. New Delhi: Department of Justice, 2012. Print.

## Secondary Sources

### Books

Ayyappan̲, Kā. *Cilappatikāram: Pan̲muka Vācippu*. Cen̲n̲ai: Mār̲r̲u, 2009. Print.

Bedford, Paul. *The Forgotten Land*. N.p.: Robert Hale, an Imprint of The Crowood, 2018. Print.

Benard, Cheryl. *The Battle behind the Wire: U.S. Prisoner and Detainee Operations from World War II to Iraq*. Santa Monica, CA: RAND, 2011. Print.

Bhatia, Harbans Singh. *Justice System and Mutinies in British India*. New Delhi: Deep & Deep Publications, 2001. Print.

Caṇmukacuppiramaṇiyam, Mā. *Kuṟṟa Iyal Caṭṭam = Criminal Law*. Tirunelvēli: Teṉṉintiya Caivacittānta Nūṟpatippuk Kaḻakam, 1995. Print.

Caravaṇaṉ, Pa. *Caṅka Kālam*. Chennai: Kiḻakku, 2015. Print.

Carroll, James. *Crusade: Chronicles of an Unjust War*. N.p.: Metropolitan /Henry Holt, 2004. Print.

Cōti, E. *Nīti*. Putuccēri: Naṉmoḻip Patippakam, 2017. Print.

Davies, Malcolm, Hazel Croall, and Jane Tyrer. *Criminal Justice*. Pearson Education, 2010. Print.

*Environmental Justice, Social and Economic Factors, Women's Travel, and Accessibility and Mobility 2007*. Transportation Research Board, 2007. Print.

Gottlieb, Robert, and Anupama Joshi. *Food Justice*. N.p.: MIT, 2013. Print.

Graves, Dianne. *In the Midst of Alarms: The Untold Story of Women and the War of 1812*. Montreal: Robin Brass Studio, 2007. Print.

Hilgers, Thomas W., and Dennis J. Horan. *Abortion and Social Justice*. N.p.: Sheed & Ward, 1972. Print.

Ilakkuvaṉār, Ci. *Ilakkiyam Kūṟum Tamiḻar Vāḻviyal: Caṅka Kālam*. Ceṉṉai: Ilakkuvaṉār Ilakkiya Iṇaiyam, 2011. Print.

Irani, K. D., and Morris Silver. *Social Justice in the Ancient World*. Greenwood, 1995. Print.

Javarlāl, Kē Ji. *Cilappatikāram*. Chennai: Kiḻakku, 2010. Print.

Jeyamōkaṉ. *Aṟam: Uṇmai Maṉitarkaḷiṉ Ktaikaḷ*. Tiruvaṇṇāmalai: Vamci Puks, 2014. Print.

Kāmāṭci, Mu. *Caṅka Kālam: Tolporuḷ Āyvukaḷ*. Ceṉṉai: Niyu Ceñcuri Puk Havus, 2011. Print.

*National Criminal Justice Thesaurus: Descriptors for Indexing Law Enforcement and Criminal Justice Information*. U.S. Dept. of Justice, National Institute of Justice, 1998. Print.

*Our Indian & Colonial Forces*. Dean & Son, Limited, 1888. Print.

Purohit, B. R., and Sandeep Joshi. *Social Justice in India*. Rawat Publications, 2003. Print.

Rajagopalachari, C. *The Second Book of Kural: A Selection from the Old Tamil Code for Princes, Statesmen and Men of Affairs*. Madras: Rochouse & Sons, 1937. Print.

Kumarakuruparar. *Tirukkuṟaḷ: Aṟam*. Madras: Solden &, 1928. Print.

Valentino, Benjamin A. *Final Solutions: Mass Killing and Genocide in the Twentieth Century*. N.p.: Cornell UP, 2004. Print.

Vēṅkaṭacāmi, Mayilai Cīṉi. *Paḻaṅkālat Tamiḻar Vāṇikam: Caṅka Kālam*. Ceṉṉai: Srīceṇpakā Patippakam, 2011. Print.

Vicary, Tim. *Justice*. Oxford UP, 2008. Print.

Willoughby, Westel Woodbury. *Social Justice*. Charleston: Nabu, 2010. Print.

**Dissertations**

Forst, Rainer, and John M. M. Farrell. *Contexts of Justice: Political Philosophy beyond Liberalism and Communitarianism*. Diss. Frankfurt (Main), 2002. Print.

Freund, Anne. *Managing Conflict in Strategic Business Networks: An Organizational Justice Perspective*. Diss. Zugl.: Oestrich-Winkel, Europ. Business School, Diss, 2007. Print.

Halsey, Brad A. *Homeland Security Strategic Plan for the Non-major Local Law Enforcement Agency*. Diss. Naval Postgraduate School, September, 2011. Print.

Lou, Herbert H. *Juvenile Courts in the United States*. Diss. 1927. Print.

Prabhakaran, Saroja. *Women's Development in the Sangam Age and the Present times*. Diss. Bharathiar University, Print.

Rüedi, Lejla. *War Crimes Trials in Bosnia and Herzegovina: Selected Aspects of Transitional Justice Mechanisms*. Diss. Print.

**Encyclopedia**

Benekos, Peter J., and Alida V. Merlo. *Controversies in Juvenile Justice and Delinquency*. Newark, NJ: LexisNexis, 2004. Print.

Burgess, David S. *Fighting for Social Justice: The Life Story of David Burgess*. Detroit: Wayne State UP, 2000. Print.

Clark, Suzette, and Patricia Ranald. *Trade Justice*. North Sydney, NSW: Australian Catholic Social Justice Council, 2005. Print.

Kirchheimer, Otto. *Political Justice*. New Jersey: Princeton U Press, 2016. Print.

McLaughlin, Andrew C. *The Courts*. Chicago, IL: U of Chicago, 1912. Print.

Ollhoff, Jim. *Police*. Minneapolis, MN: ABDO Pub., 2013. Print.

Williams, Paul, and Michael P. Scharf. *Peace with Justice?: War Crimes and Accountability in the Former Yugoslavia*. Lanham: Rowman & Littlefield, 2002. Print.

**Journals**

Condry, Rachel. "Prisoners' Families and the Problem of Social Justice." *Oxford Scholarship Online* (2018): n. pag. Print.

Gosseries, Axel. "The Myth of Ownership: Taxes and Justice." *Disputatio* 1.19 (2005): 271-77. Print.

Huxford, Grace. "Brainwashing in Britain: Korean War Prisoners of War." *The Korean War in Britain* (2018): 96-126. Print.

Kennedy, Gavin. "'peace, Easy Taxes, and Justice'." *Adam Smith* (2008): 227-44. Print.

Valls, Andrew. "Racial Justice and Criminal Justice." *Oxford Scholarship Online* (2018): n. pag. Print.

**Websites**

Best, Jessica. "What Are the Four Parts to Criminal Justice?" *Legal Beagle*. N.p., 06 May 2019. Web. 29 Aug. 2019.

"Problem-solving Courts: National Center for State Courts." *Problem-solving Courts | National Center for State Courts*. N.p., 08 Aug. 2019. Web. 29 Aug. 2019. <https://www.ncsc.org/Services-and-Experts/Areas-of-expertise/Problem-solving-courts.aspx>.

"Standard Minimum Rules for the Treatment of Prisoners." *OHCHR*. N.p., n.d. Web. 29 Aug. 2019. <https://www.ohchr.org/EN/ProfessionalInterest/Pages/TreatmentOfPrisoners.aspx>.

"Tax Justice." *Econlib*. N.p., n.d. Web. 29 Aug. 2019.

"Treatment of Prisoners of War." *OHCHR*. Web. 29 Aug. 2019. <https://www.ohchr.org/EN/ProfessionalInterest/Pages/TreatmentOfPrisonersOfWar.aspx>.

"We Are Children, Not Soldiers." *UNICEF USA*. N.p., 05 May 2015. Web.

இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com

editor@inamtamil.com

UAN.TN03D0061112


# பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

# International E-Journal of Tamil Studies

**இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!**


மலர்:5 இதழ்:18 ஆகஸ்ட் 2019 Vol. 5 Issue : 18 August 2019








ஆ.சந்திரன்
எஸ்.கலைச்செல்வம்
ஷா. முஹம்மது அஸ்ரின்
ப.ராகசுதா
சீ.விஜயன்

ஆ.மணி
ச.கண்ணதாசன்
இரா. இராஜா
வ.கோபாலகிருஷ்ணன்
மூ.அகல்யா

ம.செந்தில்குமார்
எம்.என்.இக்ராம்
சி.சாவித்ரி
சே.முனியசாமி
க.பாலாஜி

Inam ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
International E-Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (கோவை)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திருமிகு எப்.எச்.அகம்மது சிப்லி (இலங்கை)

இதழாக்கமும் வெளியீடும்
இனம் பதிப்பகம், கோவை
inameditor@gmail.com
www.inamtamil.com
9600370671, 9677821364

ஆகஸ்ட் 2019 மலர் : 5 இதழ் : 18
August 2019 Volume V Issue 18

# உள்ளே ...

**தமிழ்ச் செவ்வியல்**

பாட்டு - பத்துப்பாட்டு : பெயர்மாற்ற வரலாறு
The history of the name change pattu to pathuppaattu
முனைவர் ஆ.சந்திரன் | Dr.A.Chandran | 4

சங்க காலத்தில் நிலவிய சாட்சியச் சட்டவியல்
Jurisprudence of Evidence existed in Sangam Age
எஸ்.கலைச்செல்வம்/S. Kalaiselvan | 17

கீழ்க்கணக்கு நூல்களில் 'இளிவரல்' மெய்ப்பாடு
The emotion of disgust in keezhkanakku
ஷா. முஹம்மது அஸ்ரின்/S.Mohamed Azrin | 25

தொல்காப்பிய வழி அகத்திணை மாந்தர்கள்
Tolkippian way internal Mankind
ப.ராகசுதா/B.Ragasudha & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 30

பாணர்களின் உணவுப்பொருளாதாரமும் அரசியல் மரபும் (Food Economy of Paanar is Political Tradition)
ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 35

பத்துப்பாட்டில் உணவு
Food in Paththuppattu
சி.விஜயன்/ C.Vijayan & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 42

**பக்தி இலக்கியம்**

அடியாரைத் தெய்வமாக்கிய மதுரகவியாழ்வாரின் அமுத மொழிகள்
Aṭiyārait teyvamākkiya maturakaviyāḻvāriṉ amuta moḻikaḷ
முனைவர் ஆ.மணி/Dr.A.Mani | 49

மீவியற் புனைவுகளுள் 'கனவு' பெறும் இடம் (திருவிளையாடற் புராணத்தை முன்வைத்து)
Dream and the story flow in the supernatural things (Based on the Thiruvilaiyadal Puranam)
முனைவர் ச.கண்ணதாசன்/Dr.S.Kannadasan | 55

## Chief Editors

**Dr.M.Muneesmoorthy**
*Assistant Professor in Tamil*
*Bishop Heber College, Trichy - 17.*

**Dr.T.Sathiyaraj**
*Assistant Professor in Tamil*
*Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.*

## ADVISORY TEAM

*Dr.S.V.Shanmugam (Chidambaram)*
*Dr.S.Rajaram (Nagarkovil)*
*Dr.Silambu.N.Selvarasu (Pondichery)*
*Dr.N.Veluchamy (Salem)*
*Sri S.SriKantharasa (Australia)*

## Editorial Team

*Dr.A.Mani (Pondichery)*
*Dr.G.Balaji (Coimbatore)*
*Dr.R.Gunaseelan (Coimbatore)*
*Dr.N.Rajendran (Coimbatore)*
*Dr.R.Raja (Trichy)*
*Dr.B.Sivamaruthi (Thailand)*
*Dr.S.Muthuselvam (Madurai)*
*Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)*
*Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)*



**சூனிய சம்பாஷணையில் புலப்பாட்டு உத்திகள்**
**Expressional Strategies on Cipher Discourse**
முனைவர் இரா. இராஜா/Dr.R.Raja | 65

**பெரியவாச்சான்பிள்ளை உரையில் வினா அமைப்பு**
**Question Structure of Periyavachan Pillai Commentary**
வ.கோபாலகிருஷ்ணன்/V.Gopalakrishnan | 73

**தற்கால இலக்கியம்**

**தாயுமானவனாகிய இமையத்தின் பெத்தவன்**
**The mother is the epitome of this (Imayam)**
மு.அகல்யா / M. Ahalya & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 79

**வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்**

**பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி - பின்னணியும் பிரயோகமும் -**
**Multiculturalism, psychoanalysis (background and application)**
எம்.என்.இக்ராம்/M.N.Ikaram | 84

**ஒப்பிலக்கியம் கற்பித்தல் அணுகுமுறைகள் (திருக்குறள் - வேமன சதகம்)**
**Comparative Teaching Approaches (Thirukkural - Vamana Satakam)**
முனைவர் சி.சாவித்ரி | Dr.Ch.Savithri | 108

**முதுகுளத்தூர் சதாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் (பேரர்)**
**Mudukulathur sathavathanam saravanaperumal kavirayar and his erudition**
முனைவர் சே.முனியசாமி / Dr.S.MUNIYASAMY | 122

**சிந்துவெளி - பெருங்கற்காலத் தரவுகளை முன்வைத்துப் பாண்டியரின் தொன்மங்கள்**
**(Pandiyas myth based on the Indus civilization - Megalithic evidences)**
முனைவர் க.பாலாஜி | Dr.G.Balaji | 137


...

மதிப்பிடப்பெற்றது

# சங்க காலத்தில் நிலவிய சாட்சியச் சட்டவியல்

Jurisprudence of Evidence existed in Sangam Age

எஸ்.கலைச்செல்வம்/S. Kalaiselvan[2]

**Abstract:** Sangam Age is one of the pinnacles of the Great Tamil Civilization. Sangam Literatures are the only & primary research sources to understand the various & vibrant life styles of people of Sangam Age. Ettu Thogai & Paththu Paattu had given enormous and significant proofs to develop the ideology concerning Jurisprudence of Evidence. This article deals with Jurisprudence of Evidence that existed in Sangam Polity. It also explains the clarity that possessed by the general public regarding the Evidence in their day to day life events.

Date of submission: 2019-06-20
Date of acceptance: 2019-07-23
Date of Publication: 2019-08-05
Corresponding author's Name: எஸ்.கலைச்செல்வம்
Email: contact.asks@gmail.com

**Keywords:** Sangam Age, pathuppaattu, ettu thogai, thogai, sangam literature, Tamil Civilization, Jurisprudence, ideology, Sangam Polity, Evidence, S.Kalaiselvan, பாட்டு, பத்துப்பாட்டு, பெயர்மாற்ற வரலாறு, அகம், புறம், ஆற்றுப்படை, எட்டுத்தொகை, சங்க காலத்தில், சாட்சியச் சட்டவியல், எஸ்.கலைச்செல்வம்.

இலக்கியங்களைக் காலக்கண்ணாடிகள் என்பர். வரலாற்றுக் குறிப்புகள் தெளிவாக இல்லாதபோது இலக்கியங்களே பெரிதும் துணைபுரிகின்றன என்பது பன்னாட்டளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வு நெறிமுறைகளுள் ஒன்றாகும். சங்க காலத்தின் சட்டவியல் எனும் பெரும்பார்வையில் சிறு கீற்றே சாட்சியச் சட்டவியல் குறித்த இவ்வாய்வு.

சட்டவியலின் இன்றியமையாத பகுதிகளுள் ஒன்று தண்டனை. மக்களுக்கோ அரசுக்கோ இடையூறு ஏற்படுத்தும் வகையில் குற்றம் செய்பவர்கள் தண்டிக்கப் படுகிறார்கள். தண்டனையின் நோக்கம் இரண்டெனச் சட்டவியல் அறிஞர்களின் கருத்து. குற்றவாளிக்குத் தண்டனை வழங்குவதன் மூலம் அவரை மேலும் தவறு செய்ய விடாமல் தடுத்தல் முதல் நோக்கமாகும். குற்றவாளிக்கு வழங்கும் தண்டனையைப் பார்க்கும்போது, தவறு செய்தால் தங்களுக்கும் இதுபோன்றே நடைபெறும் எனும் அச்சத்தைப் பொதுமக்களுக்கும் பிறர்க்கும் ஏற்படுத்துதல் இரண்டாவது நோக்கமாகும்.

தண்டனை வழங்கும்போது கவனமாக வழங்குதல் வேண்டும். குற்றவாளிக்குத் தண்டனை கிடைக்கவில்லை எனினும் எக்காரணம் கொண்டும் குற்றம் செய்யாதவர் களுக்குத் தண்டனை வழங்கிவிடக் கூடாது என்பதெல்லாம் இன்றைய வளர்ச்சி பெற்ற சட்டவியல் கருத்தாக்கங்கள் ஆகும். ஒருவருக்குத் தண்டனை வழங்குவதெனின் அவர் புரிந்த குற்றம் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். குற்றத்தை உறுதி செய்வதற்குச் சான்றுகளும் சாட்சிகளும் மிக இன்றியமையாதவையாகும்.

---

[2] Ph.D. Research Sholar, Dept. of History, Pachaiyappa's College, Chennai – 30. e-mail : contact.asks@gmail.com, Mobile : 8608899008

தண்டனை மட்டுமன்றிப் பாதிக்கப்பட்ட ஒருவர்க்கு உரிய நீதி கிடைக்க வேண்டுமெனினும் சான்றுகளும் சாட்சிகளும் தேவையாகின்றன. ஒருவர் தானுற்ற பாதிப்பை உறுதி செய்வதற்கு இவை இன்றியமையாதவை ஆகும்.

மேலும், ஒரு தனிமனிதனின் உரிமையை நிலைநாட்டுவதற்கும் சான்றுகளும் சாட்சியங்களும் தேவைப்படுகின்றன. இவ்வாறு குற்றவியல், உரிமையியல், இழப்பீடு முதலிய எல்லாச் சட்டவியல் சூழல்களிலும் ஒரு மனிதனின் நிலைப்பாட்டை உறுதி செய்யச் சான்றுகளையும் சாட்சியங்களையும் முதன்மைக் குறிப்புகளாக இன்றைய சட்டவியல் நோக்குகிறது. இந்தத் தெளிவு பழங்காலத் தமிழ்நாட்டில் செறிவாகவே இருந்துள்ளது என்பதை இலக்கியக் குறிப்புகள் உறுதி செய்கின்றன.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெரியபுராணத்தில் சான்று சாட்சியம் குறித்த தெளிவாக விளக்கம் இடம்பெற்றுள்ளது. திருமலைச் சருக்கத்தில் தடுத்தாட் கொண்ட புராணத்தில் கீழ்வரும் செய்யுள் இடம்பெறுகிறது. இச்செய்யுள் சாட்சியத்தை மூன்று வகையாகப் பகுத்து விரிவான சட்டவியல் அறிவைப் பதிவு செய்துள்ளது.

*ஆட்சியில் ஆவணத்தில் அன்றிமற்று அயலார் தங்கள்*
*காட்சியில் மூன்றிலொன்று காட்டுவாய் என்ன 'முன்னே*
*மூட்சியிற் கிழித்த ஓலை படியோலை மூலஓலை*
*மாட்சியில் காட்ட வைத்தேன்' என்றனன் மாயை வல்லான்* - பெரிய.202

எனும் பெரியபுராணச் செய்யுள் சான்றுகளை மூன்றாகப் பகுத்துப் பதிவு செய்துள்ளது. அவற்றை உலகவழக்கு, ஆவணம் மற்றும் அயலார் காட்சி எனப் பெயரிட்டுள்ளார் சேக்கிழார். உலக வழக்கு என்பது குறிப்பிட்ட நிலப்பகுதியில் அல்லது நாட்டில் நிலவிவரும் பழக்கவழக்கங்களைக் குறிப்பிடுவதாகும். ஆவணம் என்பது எழுத்து வடிவிலானது; எழுதிக் கொடுப்பவர் பற்றிய தகவல்கள், எழுதிப் பெறுபவர் பற்றிய தகவல்கள், கைச்சாத்து (கையெழுத்து) போன்ற 'நபரை உறுதிபடுத்தும் அடையாளம்' எனப் பல பகுதிகள் அதில் இடம்பெற்றிருக்கும். மூன்றாவதாய்க் குறிப்பிட்டிருக்கும் அயலார் காட்சி என்பது தமக்கு எவ்விதத்திலும் தொடர்பற்றவர் நேரில் பார்த்ததைக் குறிப்பிடுகிறது. இத்தகைய செறிவான சாட்சியம் குறித்த சட்டவியல் அறிவுக்குச் சங்க இலக்கிய நூல்கள் முன்னோடியாய் அமைந்துள்ளன எனக் கூறின் அது மிகையன்றாம். இப்பகுதி சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சாட்சியம் குறித்த பகுதிகளைத் தொகுத்து ஆய்வு செய்ய முற்படுகிறது.

*வெறிஅயர் களத்தினின் தோன்றும் துறைவன்*
*குறியா னாயினும் குறிப்பினும் பிறிதொன்று*
*அறியாற்கு உரைப்பவோ யானே? எய்த்த இப்*
*பணைஎழில் மென்தோள் அணைஇய அந்நாள்*
*பிழையா வஞ்சினம் செய்த*
***கள்வனும் கடவனும் புணைவனும் தானே*** - குறுந்.318:3-8

இச்செய்யுளின் கடைசி அடிக்கு, "கள்வன் கடவன் புணைவன் முறையே குற்றவாளி விசாரிப்பவன் அல்லது வழக்குத் தொடுப்பவன், சான்று(புணை) கூறுபவன். மூவரும் ஒருவனேயாதலால், அவன் வழங்கினாலன்றி, நீதி கிடைக்காதென்பது குறிப்பு. அக்கால வழக்காடுமுறை காண்க"[1] என உரை எழுதப்பட்டுள்ளது. இச்செய்யுள் முறைமன்றத்தின்(நீதிமன்றம்) செயல்பாட்டினை மிகச் சுருக்கமாகப் பதிவு செய்துள்ளது.

இச்செய்யுளின் இறுதி அடி முழுமையும் சட்டவியல் பார்வை கொண்டுள்ளது. இதன்மூலம் சங்க இலக்கியம் அடையாளப்படுத்தியுள்ள தமிழகத்திலிருந்த சட்டவியல் விழிப்புணர்வு நிலையை உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஒரு மனிதரைக் குற்றவாளி எனத் தீர்மானிப்பதற்கு முன்பு உரிய வகையில் உசாவி அறிவது சட்டக் கடமையாகும். உசாவுகையின்போது அவரைக் குற்றம் சுமத்தப்பட்டவர் என்று அழைப்பது இன்றைய சட்டவியல் நாகரிகமாகும். உசாவுகிறபோது தக்க சான்றுகளின்வழி அவரது குற்றம் உறுதி செய்யப்பட்டால் மட்டுமே அவரைக் குற்றவாளி என்பது சட்டவியல் வழக்கமாகும். எனவே குற்றவாளி என ஒருவரைத் தீர்மானிப்பதற்கு உசாவுகையும், சான்றுகளும் இன்றியமையாதவையாகத் திகழ்கின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். இந்தச் சட்டவியல் தெளிவு சங்க இலக்கியத் தமிழகத்தில் செறிவாகத் திகழ்ந்துள்ளது என்பதை மேற்குறிப்பிட்டுள்ள குறுந்தொகைச் செய்யுளின் மூலம் உறுதியாகிறது.

பெரியபுராணம் சான்றுகளை மூன்று வகையாகப் பகுத்துப் பதிவு செய்துள்ளது என முன்னர்க் கண்டோம். அதுபோலச் சங்க இலக்கியங்கள், 'சான்றுகளை' எவ்வாறு பதிவு செய்துள்ளன எனும் ஆய்வு வினா எழுகிறது.

*யாரும் இல்லைத் தானே கள்வன்*
*தான்அது பொய்ப்பின் யான்எவன் செய்கோ?*
*தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால*
*ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்*
*குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே* – குறுந். 25

இச்செய்யுள் முழுவதும் சட்டவியல் சான்று குறித்து மறைமுகமாக ஆனால் தெளிவாகப் பதிவு செய்துள்ளது எனலாம். இச்செய்யுளின் பின்புலம் வருமாறு: களவொழுக்கத்தின் படி தலைவன் – தலைவி புணர்ச்சி நடைபெறுகிறது. புணர்ந்துவிட்டுச் சென்ற தலைவன் திருமணம் செய்யாமல் காலம் தாழ்த்தி வருகிற சூழலில் இச்செய்யுள் எழுந்துள்ளது. தலைவன் திருமணம் செய்யாமல் காலம் தாழ்த்துதல் தலைவி நெஞ்சில் ஐயத்தை உண்டாக்கியுள்ளது. இதனால் தன்னுடைய தோழியிடம் தன் நிலையைப் பற்றிக் கூறுவதாகச் செய்யுள் நடையிடுகிறது. தலைவன் தலைவியைப் புணர்ந்தபோது யாரும் இல்லை; தலைவன் மட்டுமே இருந்துள்ளான் எனத் தலைவி வருத்தப்படுவதிலிருந்தே தன் நிலையை உறுதிசெய்யத் தன்னிடம் எந்தச் சான்றும் இல்லையே என வருந்துவதும் தெரிய வருகிறது. இதன்மூலம் சான்றுகள் குறித்த விழிப்புணர்வு அக்காலக்கட்டத்தில் நிலவியுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

மேலும் சான்று குறித்த இன்னொரு செய்தியும் இச்செய்யுளில் புதைந்திருப்பதை உணரலாம். புணர்ச்சி நடைபெற்றபோது யாரும் இல்லை என வருத்தம் தெரிவித்த பின்னர் அவ்விடத்தில் குருகு இருந்ததைத் தலைவி சுட்டிக் காட்டுகிறாள். அங்குக் குருகு இருந்தாலும் அது சான்றாகும் தகுதியைப் பெறவில்லை என்பதைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறாள். குருகு, தகுதி பெறாததற்கு அவள் சுட்டுகிற காரணம் சட்டவியல் நோக்கம் கொண்டுள்ளதாக அமைகிறது. அக்காரணம் வருமாறு: 'அவ்விடத்தில் குருகு இருந்தது எனினும் அது நீரோட்டத்தில் ஆரல்மீன்களின் வரவைப் பார்த்துக் கொண்டிருந்ததே தவிர எங்களை – அதாவது எங்கள் கூட்டத்தை – நோக்கவில்லை. அதனால் சான்றாகும் தகுதி அதற்கில்லை' எனச் சுட்டி வருந்துகிறாள்.

"(அவன் என்னை மணந்தபோது) ஓடுகின்ற நீரில் ஆரல்மீனின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் தினையின் அடிபோற் கரிய சிறு கால்களை உடைய

நாரை மட்டும் அங்கே இருந்தது! (அதுவும் மீன்மீது குறியாக இருந்ததால், சான்றாகும் தகுதி இல்லை என்பது குறிப்பு)"[2] என உரை காணப்படுகிறது.

ஒருவன் அல்லது ஒருத்தி சான்றாகத் திகழ வேண்டுமெனின், அவர்க்கெனச் சில அடிப்படைத் தகுதிகளை இன்றைய 'இந்திய சாட்சியச் சட்டம்' வரையறுத்துள்ளது. அதுபோலச் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றிருக்கும் தமிழகத்திலும் சான்றாக ஒருவன் இருக்க வேண்டுமெனின் சில வரையறைகள் இருந்திருக்க வேண்டுமெனக் கருத இடமளிக்கிறது இச்செய்யுள். அதாவது அச்செய்யுளில் இடம்பெற்றிருக்கும் குருகு நிகழ்ச்சி நடைபெற்ற இடத்திலேயே இருந்தும்கூட சான்றாகும் தகுதியை அது பெறவில்லை. ஏனெனின், குருகு ஆரல்மீன்களின் வரவைப் பார்த்துக் கொண்டு நிகழ்ச்சியைத் தன் கண்ணால் பார்க்கவில்லையாம். அதனால் அதற்குச் சான்றாகும் தகுதி கிடையாதாம். இதிலிருந்து, சான்றாகும் தகுதியை ஒருவர் பெற வேண்டுமெனின் அவர் நிகழ்ச்சியைத் தன் கண்ணால் கண்டிருக்க வேண்டும் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. எனவே குருகைக் கொண்ட இந்தக் காட்சி அமைப்பு, 'சான்றாகும் தகுதியையும்' 'சான்றின் ஒரு வகையையும்' சுட்டிக் காட்டுகிறது.

*பூக்கொய் மகளிரில் தோன்றும் நாடன்*
*தகாஅன் போலத் தான்தீது மொழியினும்*
*தன்கண் கண்டது பொய்க்குவது அன்றே*
*தேக்கொக்கு அருந்தும் முள்எயிற்றுத் துவர்வாய்*
*வரைஆடு வன்பறழ்த் தந்தைக்*
*கடுவனும் அறியும்அக் கொடியோ னையே* – குறுந். 26:3–8

குறுந்தொகையின் இச்செய்யுளும் கண்ணால் காணும் சாட்சியத்தின் அழுத்தத்தைப் பதிவு செய்துள்ளது எனலாம். செய்யுளின் பொருள் வருமாறு: "பூக்கொய்யும் மகளிரைப் போலத் தோன்றும் மலைநாடன், களவிற் கூடிவிட்டுத் தகுதியில்லாதவன் போலப் பொய்கூறித் தீயவற்றைக் கூறுகின்றான். அதாவது களவிற் கூடியதை மறுக்கின்றான். அங்ஙனம் மொழியினும் தேமாம்பழங்களைத் தின்னும் முள் போன்ற பற்களையும் சிவந்த வாயையும் உடையதும், மலைமீது விளையாடும் வலிமை வாய்ந்த குட்டிக்குத் தந்தையுமாகிய ஆண்குரங்கும் (நான் மட்டுமன்றிக் குரங்கும்) அக் கொடியவனை அறியும். அது தன் கண்ணால் கண்டதை, இல்லையென்று மறுத்துப் பொய் கூறாதல்லவா?"[3] என உரை காணப்படுகிறது.

முன்னர்க் கூறியவாறு கண்ணால் காணும் மனிதர்களின் கூற்றையே சாட்சியாக எடுத்துக்கொள்ள வேண்டுமெனும் கருத்தை இச்செய்யுள் மிக ஆழமாகப் பதிவாக்கி யுள்ளது. அதாவது, தந்தைக் கடுவன் அவ்விடத்தில் இருந்துள்ளது. அது குருகினைப் போல நிகழ்ச்சியைப் பாராமல் இருக்கவில்லை. தன்னுடைய கண்ணால் பார்த்துள்ளது. எனவே அதன் சான்று பொய்யாகாது எனத் தோழி உறுதியாகக் கூறுகிறாள். இங்கு நோக்கத்தக்கது காட்சியமைப்பும் அதன்மூலம் வெளிப்படும் சட்டவியல் பார்வையும் ஆகும். இந்தக் காட்சியமைப்பின் மூலம், சான்றாகும் தகுதி தம் கண்ணால் நேரடியாகப் பார்ப்பவர்க்கே உண்டு எனும் கருத்தியல் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதை உணரலாம்.

**அலரும் சாட்சியும்**

தலைவன் தலைவி ஆகியோரின் காதல் ஒழுக்கம், உறவு குறித்து ஊர்மக்கள் பொதுப்பட உரைப்பது அலர் எனப்படும். இது அகச்செய்யுள்களில் இடம்பெறும். தலைவன் தலைவி கூடுவது, அவர்கள் பிரிவது, தலைவனின் பரத்தமை ஒழுக்கம்

முதலியவை அலராகப் பரவுவது உண்டு. களவொழுக்கம் கற்பொழுக்கம் ஆகிய இரு ஒழுக்கத்திலும் அலர் எழுவது உண்டு. பொதுவாக, இதனை இலக்கியச் சுவைக்காகப் புலவர்கள் பெரிதும் பயன்படுத்துவது வழக்கம். இலக்கியச் சுவையைத் தாண்டிச் சட்டவியல் எல்லைக்கு உட்பட்டு நிற்கிறது அலர் எனும் கருத்தியல் எனலாம். இதனைப் பின்வரும் செய்யுள்கள் உறுதி செய்கின்றன.

*சூதார் குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து*
*நின்வெங் காதலி தழீஇ நெருநை*
*ஆடினை என்ப புனலே அலரே*
***மறைத்தல் ஒல்லுமோ மகிழ்ந***
*புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்று ஒளியே* – ஐங்குறு. 71

அலர் பரவியுள்ளதால் நீ உண்மையை மறைக்கவியலாது எனத் தலைவி கூறுவதாக இச்செய்யுள் அமைந்துள்ளது. அலர் எவ்வாறு பரவியது என ஆய்வு செய்ய வேண்டி உள்ளது. இதற்கும் இச்செய்யுளே ஒருவாறு பதிலுரைக்கிறது. தலைவனும் பரத்தையும் புனலாடியதை ஒருவர் பார்த்துப் பிறரிடம் சொல்ல, பார்த்தவர் சொன்னதையே இன்னொருவரும் பார்க்க இப்படியே சொல்லும் காட்சியும் ஊரில் அலராகப் பரவி யிருக்க வேண்டுமெனத் தீர்மானிக்க இயல்கிறது. அலராகப் பரவியதில் கண்வழிச் செய்திகளைக் காட்டிலும் செவிவழிச்செய்தியே மிகுதியாக இருக்கும் என்பதிலும் ஐயம் இல்லை. என்றாலும் அக்காலத்தில் வேறு உறுதியான சான்றுகள் கிடைக்காதபோது அலரையும் சாட்சியாக ஏற்கும் வழக்கம் இருந்துள்ளது எனக் கருத இச்செய்யுள் இடமளிக்கிறது.

*பலர்இவண் ஒவ்வாய் மகிழ்ந அதனால்*
***அலர்தொடங் கின்றால் ஊரே மலர***
*தொல்நிலை மருதத்துப் பெருந்துறை*
*நின்னொடு ஆடினள் தண்புனல் அதுவே* – ஐங்குறு. 75

அலரை அடிப்படையாகக் கொண்டு தலைவனுக்கு வாயில் மறுக்கிறாள் தோழி. தலைவன் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுத்திருக்க வேண்டும். ஆதலால்தான் 'ஒவ்வாய் மகிழ்ந' எனக் குறிப்பிட்டிருக்கிறார் புலவர். குற்றச்சாட்டைத் தலைவன் மறுக்கிறபோது அதனை ஊர்மக்களின் அலர் கொண்டு பொய்யாக்குகிறாள் தோழி. எனவே அலரையும் சான்றாக அதாவது சாட்சியாகப் பயன்படுத்தியிருக்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளதை இதன்மூலம் அறிய முடிகிறது. மேலும், சாட்சி கொண்டு தன்தரப்பை மெய்ப்பித்தல் குறித்த விழிப்புணர்வும் இருந்துள்ளது எனலாம்.

*அலமரல் ஆயமோடு அமர்துணை தழீஇ*
*நலமிகு புதுப்புனல் ஆடக் கண்டோர்*
***ஒருவரும் இருவரும் அல்லர்***
*பலரே தெய்ய எம் மறையா தீமே* – ஐங்குறு. 64

அலர் எழுவதற்கான அடிப்படைக் காரணத்தையும், அலரின் உறுதித் தன்மையும் இச்செய்யுள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. ஒருவர், இருவர் என்கிற நிலையை எல்லாம் கடந்து பலர் பார்க்கும் அளவுக்குத் தலைவன் பரத்தையரோடு நெடுநாளாக இருந்துள்ளான் போலும். சிலர் பார்த்து அலர் எழுந்து அது பலரால் உறுதி செய்யப் பட்ட நிலையை இச்செய்யுள் விளக்குகிறது. மேற்சுட்டிய அலர் குறித்த மூன்று செய்யுள்களிலும் ஒன்றை அடிப்படையாகக் காணலாம். அது என்னவெனில், அலரைச் சாட்சியாக அக்காலத்து மக்கள் பயன்படுத்தத் தவறியதில்லை என்பதாம்.

*தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்*
*கரும்பமல் படப்பை, பெரும்பெயர்க் கள்ளூர்த்*
*திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய*
*அறனி லாளன், அறியேன் என்றி*
*திறனில் வெஞ்சூள், அறிகரி கடாஅய்*
*முறிஆர் பெருங்கிளை செறியப் பற்றி*
*நீறு தலைப்பெய்த ஞான்றை*
*வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே* – அகநா. 256:14–21

எனும் செய்யுள் நோக்கத்தக்கது. தலைவியின் பெண்மை நலத்தைத் துய்த்த பிறகு தலைவியை ஏற்க மறுத்துள்ளான் ஒருவன். அவனுக்குத் தண்டனை கொடுத்துள்ளனர். சுண்ணாம்பு நீற்றைத் தலையில் ஊற்றியுள்ளனர் என அறிந்து கொள்ள முடிகிறது. இங்கு நோக்கத்தக்கது என்னவெனில் தண்டனை வழங்குவதற்கு முன்னர் அவையத்தார் சாட்சிகளை உசாவியுள்ளனர். இதனை 'அறிகரி கடாஅய்' எனும் தொடர் மூலம் அறிய முடிகிறது.

மேற்சுட்டியவை அனைத்தும் அகத்துறை சார்ந்த தவறுகள் ஆகும். அகத்துறை அக்காலத்தில் செழுமையான அறநெறிகளுக்கு உட்பட்டே பெரிதும் இருந்தது. எனினும் சில தடுமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை மேற்சுட்டிய செய்யுள்கள் காட்டுகின்றன. இதனை, "இப்பாடலும் இதற்கு முந்திய பாடலும் போல்வன, அன்று களவொழுக்கத்தில் தடுமாற்றம் இருந்ததைப் புலப்படுத்துகின்றன. அடிக்குறிப்பாளர்களும் உரையாசிரியர்களும் அதை மாற்றி உரைகூறி விளக்கி நயப்படுத்த முயல்கின்றமையும் அவர்கள் எழுத்தில் புலனாகிறது"[4] எனத் தமிழண்ணல் அவர்களும் குறுந்தொகை26–ஆம் செய்யுளுக்கு உரை காணும்போது குறிப்பிட்டுள்ளார். இனி, இவ்வாறான அகத்துறை வழக்குகளின் முடிவுகளைத் தீர்மானிப்பதற்கு முன்னரே குறிப்பிட்டவாறு கண்ணால் பார்த்த சாட்சிகள், (அலர் மூலமாகச்) செவிவழிச் செய்தி அறிந்த சாட்சிகள் உதவியிருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு.

### பொய்ச்சாட்சி

வழக்குகளைத் தீர்மானித்து முடிவு செய்வதற்குச் சாட்சிகள் பெரிதும் உதவியது போலவே வழக்குகளைத் திசைதிருப்பப் பொய்ச்சாட்சிகள் துணை போயிருக்கின்றன. சங்க இலக்கியம் அறிமுகப்படுத்தும் தமிழகத்தில் பொய்ச்சாட்சியம் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. அதேநேரம் பொய்ச்சாட்சிகளை மிகக் கடுமையாகப் புறக் கணித்துள்ளனர். பொய்ச்சாட்சி கூறுவோர்களைக் கடுமையான பழிக்கு உள்ளாக்கி யுள்ளனர். சான்றோர் பொய்ச்சாட்சி கூறுவதில்லை எனும் கருத்தியல் அக்காலத்தில் நிலவியுள்ளது.

*அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை* – குறுந். 184:1

எனும் செய்யுளடி அதனை உறுதிபடுத்துகிறது. பொய்ச்சாட்சி கூறுதல் ஆன்றோரின் இயல்புக்கு உகந்தது இல்லை எனப் பதிவு செய்கிறது. அவ்வாறெனின், அறிகரி பொய்த்தல் பிறர்க்கு உண்டோ? எனும் வினா இத்தொடருள் மறைந்துள்ளது. 'உண்டு' என்றுதான் இவ்வினாவிற்குப் பதிலுரைக்க வேண்டியுள்ளது. சங்க இலக்கியத்தில் பல சான்றுகள் 'உண்டு' எனக்கூறும் விடைக்கு ஆதரவாகவே அமைந்துள்ளன.

*விரிகாஞ்சித் தாதுஆடி இரும்குயில் விளிப்பவும்*
*பிரிவு அஞ்சாதவர் தீமை மறைப்பென்மன் மறைப்பவும்*

*கரிபொய்த்தான் கீழ்இருந்த மரம்போலக் கவின்வாடி*
*எரிபொத்தி என்நெஞ்சம் சுடும்ஆயின் எவன்செய்கோ?* – கலித். 34:8–11

இச்செய்யுள் பொய்ச்சாட்சி கூறுபவனை அக்காலச் சமூகம் எவ்வாறு நோக்கியுள்ளது என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. பொய்ச்சாட்சி கூறுபவன் தங்கி இருந்த மரம் வாடி விடுமாம். அந்தளவுக்குப் பொய்ச்சாட்சி கூறுபவன் நச்சுத் தன்மை கொண்டவன் என உருவகப்படுத்தியுள்ளது கலித்தொகை.

மேலும், சிலப்பதிகாரத்திலும் பொய்ச்சாட்சி கூறுபவர்களைப் பற்றிய செய்தி உண்டு. ஒருவர் பொய்ச்சாட்சி சொல்லுகிறபோது பாவை மன்றத்தில் இருக்கும் பாவை தன் நாவால் கூறாது கண்ணீர் உகுக்கும் என அறிகிறோம். பாவை எனும் கருத்தியல் உண்மையா கற்பனையா எனும் ஆய்வுக்குச் செல்லாமல், பாவைக் காட்சி அமைப்பை அணுகும்போது பொய்ச்சாட்சி குறித்த விழிப்புணர்வு அக்காலத்தில் நிலவியுள்ளது என்பது விளங்கும். சங்க காலத்தைத் தொடர்ந்து சங்கம் மருவிய காலத்திலும் பொய்ச் சாட்சியம் குறித்த அறிதல் இருந்துள்ளது என அறிந்துகொள்ள முடிகிறது.

பொய்ச்சாட்சியம் குறித்த தெளிவும் விழிப்புணர்வும் எச்சரிப்பும் பின்னாளில் எழுந்த இலக்கியங்களிலும் காணமுடிகிறது. இதனை 'மன்றோரம்' எனும் வழக்கால் குறித்துள்ளனர்.

*வேதாளம் சேருமே வெள்ளருக்குப் பூக்குமே*
*பாதாள மூலி படருமே – மூதேவி*
*சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே*
***மன்றோரம் சொன்னார் மனை*** – நல்வழி 23

எனச் செய்யுள் இயற்றப்பட்டுள்ளது. மன்று என்பது முறைமன்றத்தைக் குறிக்கிறது. 'ஓர்ந்து நடவாமை'க்கு எதிர்ப்பதமாக ஓரம் என்பது அமைந்துள்ளது. மன்று + ஓரம் = மன்றோரம். அதாவது முறைமன்றத்தில் ஒருவருக்குச் சார்பாகப் பொய் சொல்லுவது எனப் பொருளாகும். இதனால் தமிழகத்தில் பழங்காலம் முதல் பொய்ச்சாட்சி குறித்த விழிப்புணர்வும், பொய்ச்சாட்சி கூறுபவர்கள் மீதான வெறுப்புணர்வும் தெள்ளத் தெளிவாகப் புலப்படுகின்றன.

**தடயங்களும் சாட்சிகளும்**

குற்றவியல் சார்ந்த குற்றங்களைத் தீர்மானிப்பதற்கும் சாட்சிகள் தேவைப்படும். குற்றத்தைக் கண்ணால் பார்த்த சாட்சி, குற்றம் புரிவதற்குத் திட்டமிடலை அறிந்த சாட்சி எனச் சாட்சிகளை இன்றைய முறைமன்றம் ஏற்றுக் கொள்ளும். இதுபோன்ற நேரடிச் சாட்சிகள் கிடைக்காத சூழலிலும் கூட தடயங்களை வைத்துக் கொண்டு குற்ற வாளியைத் தீர்மானிப்பது வழக்கத்தில் உள்ளது. இவ்வாறு தடயங்களைக் கொண்டு குற்றத்தை உறுதிபடுத்தும் வழக்கம் சங்க இலக்கியம் காட்டியுள்ள தமிழகத்தில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

*நீங்கும்கால் நிறம்சாய்ந்து புணரும்கால் புகழ்பூத்து*
*நாம்கொண்ட குறிப்பு இவள்நலம் என்னும் தகையோதான்*
*எரிஇதழ் சோர்ந்துஉக ஏதிலார்ப் புணர்ந்தமை*
***கரிகூறும் கண்ணியை*** *ஈங்கு எம்இல் வருவதை?* – கலித். 78:11–14

என்கிற கலித்தொகைச் செய்யுளில் தலைவன் பரத்தையைப் புணர்ந்ததை மறுத்துக் கூறுகிறான். ஆனால் தலைவியோ அவன் வேறொரு பெண்ணைத் தழுவியுள்ளான்

என்பதை உறுதிபடக் கூறுகிறாள். தலைவியின் உறுதிக்குக் காரணமாக அமைந்தது தலைவன் கழுத்திலிருந்த மாலையாகும். வேறொரு பெண்ணைப் புணர்ந்ததால் அந்த மாலை கசங்கிப் போய் இருந்துள்ளது போலும். எனவே அந்த மாலையே சாட்சியாக அமைந்துவிட்டது எனச் செய்யுள் பதிவு செய்துள்ளது.

இந்தக் காட்சி அமைப்பின் மூலம், சங்க இலக்கியம் காட்டியுள்ள தமிழகத்தில் தடயங்களைக் கொண்டும் குற்றத்தைக் கண்டறியும் விழிப்புணர்வு இருந்துள்ளது என அறிந்துகொள்ள முடிகிறது.

**ஆய்வு முடிவு**

இவற்றின் மூலம் அன்றைய காலக்கட்டத்தில் மக்களிடையே ஏதேனும் காரணம் பற்றி வழக்குகள் வந்துள்ளன என அறிய முடிகிறது. *அவ்வழக்கில் சரியான முடிவுகளைக் கொடுக்கச் சாட்சிகளைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்துள்ளது எனவும் அறியலாம். தரமான சாட்சிகள் எனச் சுட்டுவதற்குச் சில தகுதிகளை வரையறை செய்துள்ளனர் எனவும் அறியமுடிகிறது. மேலும், சாட்சிகள் அனைத்தையும் அப்படியே நம்பாமல் சாட்சிகளையும் ஆய்வு செய்து பொய்ச்சாட்சி எனக் கண்டறியும் தன்மையும் இருந்துள்ளது. மேலும், தடயங்களையும் சாட்சியாகக் கொள்ளும் தன்மையும் அறிவும் அக்காலத்தில் இருந்துள்ளது என்பதற்கும் இலக்கியச் சான்றுகள் கிடைக்கின்றன. எனவே, சங்ககாலத் தமிழகத்தில் வழக்கு உசாவுகை நடைமுறைகள் மிகச் சிறப்பாக இருந்துள்ளன எனவும் சாட்சியச் சட்டவியல் செறிவான நடைமுறையில் நிலவியது எனவும் தீர்மானிக்க முடிகிறது.*

**அடிக்குறிப்புகள்**

1. குறுந்தொகை (தமிழண்ணல் உரை), கோவிலூர் மடாலயம், கோவிலூர், 2002 (முதற்பதிப்பு), பக். 378
2. மேலது, பக்.52
3. மேலது, பக்.53
4. மேலது, பக்.54

INAM : INTERNATIONAL E-JOURNAL OF TAMIL STUDIES இனம் இனத்தைச் சேரும்

# சங்க காலத்தில் நீதிக்கருத்துரு – ஆய்வு

முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப் பெறும் ஆய்வேடு


ஆய்வாளர்

**சு. கலைச்செல்வன்**

முழுநேர ஆய்வாளர்

(2009 - 2014)

நெறியாளர்

முனைவர் திருமதி **ஆர். காஞ்சனா** **M.A.,M.Phil., Ph.D., MBA**

இணைப்பேராசிரியர் (ஓய்வு)

பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 600 030.



பச்சையப்பன் கல்லூரி

வரலாற்றுத்துறை

சென்னை – 600 030.

ஆகத்து 2019

# நிறைவுரை

## சங்க காலத்தில் நீதிக் கருத்தியல்

பற்பல கருத்தியல்களின் ஆய்வுக் களமாகச் சங்க காலம் அமைகிறது. அவ் வகையில் சங்க காலத்தில் நீதிக் கருத்தியலின் வரலாறு (History of the Concept of Justice in Sangam Age) எத்தகையதாக இருந்திருக்கும் எனப் பல்வேறு கோணங் களில் ஆய்வுத் தலைப்பை அணுகும்வகையில் இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

'சங்க காலம்' மற்றும் 'நீதி' இவையிரண்டின் அடிப்படை வரையறையை ஒட்டி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சங்க காலத்தின் வரையறையாகப் பல் வேறு கருத்துகள் நிலவுகின்றன. இன்னும் சங்க காலத்தின் கால வரையறையைத் தீர்மானிக்கும் ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. என்றாலும் பரவலாக அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் வரையிலான காலக்கட்டத்தைச் சங்க காலமாகக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

நீதி என்பதன் சங்க கால வரையறையை அணுகுவதற்கு முன்பு தற்கால நீதிக் கருத்தியலின் வரையறையைத் தீர்மானிக்க வேண்டியுள்ளது. கலைக்களஞ் சியங்கள், பொது அகராதிகள், சட்ட அகராதிகள், சட்ட அறிஞர்களின் நூல்கள் முதலியவை முன்வைத்துள்ள கருத்துகளை ஒருங்கே தொகுத்துப் பார்க்கும்போது

| | |
|---|---|
| * நேர்மை | * சமவாய்ப்பு |
| * நடுநிலைமை | * உரிமை வழங்கல் |
| * ஏற்றத்தாழ்வின்மை | * உழைப்புக்குரிய ஊதியம் |

ஆகியவை நீதியின் கருத்தியல் பொருளாகக் கிடைக்கிறது. எனவே *நன்னெறி எனக் கருதப்படும் நேர்மை நடுநிலைமை ஏற்றத்தாழ்வின்மை சமவுரிமை*

*போன்றன ஒருங்கிணைந்த நடைமுறைச் செயன்மையை நீதி* எனலாம். இது **அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் முதலியவை மூலம் பெறப்பட்டிருக்கும்** ஒரு பொதுவிளக்கம் ஆகும்.

சிக்கல்கள் வருமுன்னரே அவற்றைத் தடுத்தலும், சிக்கல் வந்த பின்னர் பாதிக்கப்பட்டவர்க்குத் தீர்வழி அளித்துக் காத்தலும் **நடைமுறை வாழ்வியலில்** நீதி எனப்படுகிறது. எனவே *நன்னெறி எனக் கருதப்படும் நேர்மை நடுநிலைமை ஏற்றத்தாழ்வின்மை சமவுரிமை போன்றன ஒருங்கிணைந்த நடைமுறைச் செயன்மை மூலம் தடுக்கப் படும் அத்துமீறலும் கொடுக்கப்படும் பாதுகாப்பும் நீதி எனலாம்* என நீதியின் பொதுவிளக்கம் சற்றே விரிகிறது.

குற்றவாளிக்குத் தண்டனை வழங்குவதன் மூலம் பாதிக்கப்பட்டவரின் இழப்பு ஈடுகட்ட முடியாது என்றாலும் பாதிக்கப்பட்டவர்க்கு ஒருவித உளவியல் நிறைவு ஏற்படுகிறது. அதனால் நீதி என்பது உளவியல் நிறைவில் இயங்கும் அருவத் தன்மையது எனும் **சட்டவியல் அறிஞர்களின் கருத்தும் சரியானதாகும்**. எனவே நீதியின் பொது விளக்கத்தை மேலும் விரிவாக்க வேண்டியுள்ளது. *நன்னெறி எனக் கருதப்படும் நேர்மை நடுநிலைமை ஏற்றத்தாழ்வின்மை சமவுரிமை போன்றன ஒருங்கிணைந்த நடைமுறைச் செயன்மை மூலம் தடுக்கப் படும் அத்துமீறலும் கொடுக்கப்படும் பாதுகாப்பும் மனிதர்களின் உளவியல் நிறைவும் உள்ளடங்கிய அருவநிலை நீதி எனப்படும்* என்கிற புதிய பொதுவிளக்கம் நீதிக் கருத்தியலுக்குக் கிடைக்கிறது.

அடுத்து, நீதிக் கருத்தியலின் தோற்றம் வளர்ச்சி வரலாற்றை அணுக வேண்டியுள்ளது. இதன்மூலம் சமூகத்தில் படிப்படியாக நீதிக் கருத்தியல் பெற்ற பரிணாம வளர்ச்சியின் மூலம் மக்களின் அறிவு முதிர்ச்சி அடையாளப்படுத்தப் படுகிறது. நீதிக் கருத்தியலின் வரலாற்று ஆய்வுக் கருத்துகள் வருமாறு.

- ✓ மனித இன வளர்ச்சியின் அடிப்படையில் நீதியின் தோற்ற வளர்ச்சி மூன்று நிலையில் வகுக்கப்பட்டுள்ளது.
- ✓ தனிமனிதன் தன்னுடைய அல்லது தன் குடும்பத்தினுடைய நலன் மற்றும் பாதுகாப்புக்காகச் செய்யப்படும் அனைத்தும் நீதியாகவே கருதப்பட்ட காலக் கட்டம் நீதியின் முதல்நிலையாகச் சுட்டப் படுகிறது.
- ✓ மனிதன் இனக்குழுக்களாக இயங்கிய நேரத்தில் ஏற்பட்ட சிக்கல் களுக்குப் பெரிதும் 'பழிக்குப் பழி' என்பதை நீதியாகக் கருதப்பட்ட காலக்கட்டம் நீதியின் இரண்டாம் நிலையாகச் சுட்டப்படுகிறது.
- ✓ குற்றம், குற்றவாளி, உரிமை, கடமை முதலியவற்றை நன்கு உணர்ந்து கொண்டு நேர்மை, நியாயம், நடுநிலைமை, சமவுரிமை முதலிய கோட்பாடுகளைப் பின்பற்றுவது நீதியெனக் கருத வேண்டும் என்கிற நிலைக்குப் படிப்படியாக வளர்ந்துவந்த காலக் கட்டம் நீதியின் மூன்றாம் நிலையாகச் சுட்டப்படுகிறது.
- ✓ நீதி தோற்ற வளர்ச்சி வரலாற்றில் நீதிமன்றம் போன்ற அமைப்புகள் இருந்துள்ளதை உறுதி செய்ய முடிகிறது. இவ்வமைப்புகள், தாம் இருக்கின்ற இடம் சார்ந்த வழக்குகளை மட்டும் கையாண்டு நீதி செலுத்தி வந்துள்ளன என அறிய முடிகிறது.
- ✓ வரலாற்றுப் பதிவுகளின் மூலம் நீதி செலுத்துவதில் சமயங்களின் பங்கு இடைக்காலத்தில் இருந்துள்ளதை உணரமுடிகிறது.
- ✓ முழுமையான குடியாட்சி மலர்ந்த பின்னர்ச் சமயம், அரசியல் முதலிய தலையீடுகள் பெரிதாக இல்லாமல் தன்னாட்சி பெற்று இயங்கும் நீதித்துறை உண்டாகி யிருக்கிறது. இதன்மூலம் நேர்மை, நடுநிலைமை, ஏற்றத்தாழ்வின்மை, சமவுரிமை முதலியவற்றின் மூலம் சட்டப்படியான நீதி வழங்கும் அமைப்பாகத் திகழ்கிறது.

நீதியின் தோற்ற வரலாற்றை ஆய்வு செய்ததன் மூலம், காலந்தோறும் மாறும் இயல்புடையது நீதி என்பது தெளிவாகிறது. மேலும் நீதி வரையறையில்

இடம்பெற்றுள்ள ‘மனிதர்களின் உளவியல் நிறைவு’ எனும் தொடர் முற்றிலும் பொருத்தமானது என்பதை நீதியின் தோற்ற வளர்ச்சி வரலாற்றின் மூலம் உறுதி செய்யமுடிகிறது.

எத்தனை புதிய துறைகள் உருவானாலும் அத்தனைத் துறைகளிலும் தலையிடும் தன்மை நீதிக்கு உண்டு என்பதை நீதியின் வகைப் பகுப்புகளைக் கொண்டு அறிய முடிகிறது.

தற்கால நீதியின் நிலைப்பாடு சிறப்பாகச் செயல்படுகிறது எனவும் அதற்கு முறையாக அமைக்கப்பட்டிருக்கும் நீதிமன்றங்கள் பெரிதும் துணை செய்கின்றன என்பதையும் அதனால் சமூகத்தில் பல பயன்கள் ஏற்படுகின்றன என்பதையும் அறியமுடிகிறது.

இத்தகைய தற்கால நீதிக்கருத்தியலின் வளர்நிலையோடு சங்க காலத்தில் நிலவிய நீதிக் கருத்தியலை ஒப்பிட்டுப் பார்க்க சங்க காலப் பதிவுகளான இலக்கியத் தரவுகளே நமக்குப் பெரிதும் உதவுகின்றன. **சங்க காலத்தைச் சேர்ந்த அழகன்குளம் பகுதியில் கிடைத்த உரோமானிய மட்கலங்களான ரௌலட்டட் மட்கலனில் ‘வாதுமேத’** எனும் தொடர் கிடைத்துள்ளது. இதனைத் தொல்லியல் அறிஞர் நடன காசிநாதன் ‘வாதிடுவதில் வல்லவன்’ எனப் பொருள் கண்டிருக்கிறார். அகழ்வாய்வுச் சான்றாக இதுமட்டுமே நீதிக் கருத்தியலோடு தொடர்புடையதாக உள்ளது. மேலும், **சங்க காலத்திற்கு முந்தைய காலக்கட்டத்தைச் சேர்ந்த முதலைக்குளம் பகுதியில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் ‘பெண்கள் அவை’ பற்றிக் குறிப்புள்ளது**. இதன்மூலம் சங்க காலத் திற்கும் முந்திய (Pre Sangam Age) காலத்திலிருந்தே தமிழகத்தில் ஊர் அவை அமைப்பும், வாதிடுபவர்களும் இருந்துள்ளனர் எனத் துணியலாம்.

அக்காலத் தமிழக வரலாற்றை ஆவணப்படுத்துவதில் சங்க இலக்கியங்களின் பங்களிப்பு முதன்மையானதாகும். அகழ்வாய்வு செய்ததன் மூலம் கிடைத்த தரவுகளோடு நேரடியாகச் சங்க இலக்கியச் செய்திகள் ஒத்துப்போகும் தன்மை உடையனவாய்த் திகழ்கின்றன என்று பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் உறுதி கூறுகிறது. தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை சங்க கால நீதிக் கருத்தியலை அறிய பெரிதும் உதவுகின்றன. இலக்கியங்களை வரலாற்று ஆவணமாகக் கருதி வரலாற்று ஆய்வை மேற்கொள்ளும் நடைமுறை பன்னெடுங் காலமாக இருந்து வருகிறது. குறிப்பாகக் கருத்தியல் வரலாற்று ஆய்வுகளுக்கு (Conceptual Research) இலக்கியங்கள் தகுதிவாய்ந்த வரலாற்றுச் சான்றாவணங்களாகப் பன்னாட்டு அளவில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

சங்க காலத் தமிழகத்தில் சரியாக நீதி செலுத்துவதன் அடையாளமாகச் செங்கோல் எனும் கருத்தியல் திகழ்ந்துள்ளது. அரசாட்சியின் முதன்மை நோக்கமாக நீதி செலுத்துதல் இருந்துள்ளது. அக்காலத்தில் நீதி குறித்த கருத்தியல் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. நீதி சார்ந்தே மன்னன் இயங்க வேண்டுமென்பது சமூகக் கட்டமைப்பாக இருந்துள்ளது. மன்னன் முறைதவறினால் அதைச் சுட்டிக் காட்ட அறிவர்க்கும் பொதுமக்களுக்கும் உரிமை வழங்கப்பட்டிருந்த காட்சிகள் சங்க காலத்தில் காணப்பட்டுள்ளன. நீதிமுறை தவறும் மன்னன் தானே அழிந்து போவான் என்றும், அவன் நாடு எவ்வித முன்னேற்றமுமின்றிக் கெடும் என்றும், அவன் குடிமக்கள் அவனால் கடும் பாதிப்புக்கு உள்ளாவர் என்றும் அக்கால மக்கள் நீதி தவறுவதால் ஏற்படும் தீமைகளை நன்கு அறிந்திருந்தனர்.

சங்க காலத் தமிழகத்தில் நீதிக் கருத்தியல் குறித்த விழிப்புணர்வு நன்கு இருந்துள்ள நிலையிலும் நீதி வரையறை வளர்நிலையிலேயே இருந்துள்ளது எனலாம். கொலைத்தண்டனையே நீதியின் அடையாளம் எனக் கருதும்படி 'முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்' எனப்படுகிறது. அதே

நேரம் *தவறிழைக்காத ஆனால் குற்றம் சாட்டப்பட்ட நல்லவர்களைக் குற்றப் பழியிலிருந்து பாதுகாத்தல் மற்றும் பாதிப்படைந்தவர்க்குத் தீர்வழி கொடுத்துப் பாதுகாத்தல் ஆகியவை நீதி எனப்படும்* எனும் கருத்தியலும் சங்க காலத்தில் இருந்துள்ளது.

நீதி செலுத்தும்போது வேண்டியவர் வேண்டாதவர் என்னும் பாகுபாடு இன்றியும் விருப்பு வெறுப்பின்றியும் இருக்க வேண்டும்; இரு தரப்பினரையும் சமமாகக் கருதும் நடுநிலைமை எண்ணம் இருக்க வேண்டும்; இருதரப்பு வாதங் களையும் நன்கு கேட்டறிந்து ஆராய வேண்டும்; விசாரணையின்போது இரு தரப்புக்கும் தத்தம் தரப்பு நியாயங்களைச் சொல்ல சமவாய்ப்பு தரப்பட வேண்டும்; இறையாண்மையின் அடையாளமாக அதிகாரம் செலுத்திக் குற்றங்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும் ஆகிய நடைமுறைகள் யாவும் நீதி செலுத்தும் போது கடைப்பிடிக்க வேண்டும் எனும் தெளிவு சங்க காலத் தமிழகத்தில் நிலவி யுள்ளது.

இன்றைய நீதிமன்றங்களைப் போல் சங்ககாலத் தமிழகத்தில் வழக்குகளை எதிர்கொண்டு நீதி வழங்க ஊர்தோறும் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மன்றம், அவையம், அறங்கூறு அவையம் எனும் நிலையில் அவை செயல்பட் டிருக்க வேண்டுமெனக் கருத இலக்கியச் சான்றுகள் இடம்கொடுக்கின்றன. ஊர் களைப் பற்றிக் குறிப்பிடும்போது மன்றங்களையும், தலைநகரங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அறங்கூறு அவையம் எனச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. எனவே புகார், மதுரை, உறந்தை முதலிய நாட்டின் தலைநகரத்திலுள்ள நீதி வழங்கும் மையங்களாக அறங்கூறு அவையம் செயல்பட்டுள்ளன எனவும் அதன் தலைமைப் பொறுப்பிலிருந்தவன் அவ்வவ் நாட்டின் மன்னன் என்பதும் தெரிய வருகிறது.

சங்க காலத் தமிழகத்தில் நீதி வழங்குதலில் 'அறம்' எனும் கருத்தியலுக்குப் பெரும்பங்குண்டு. அறத்தின் அடிப்படையில் நீதி வழங்கும் நடைமுறை அக்

காலத்தில் இருந்துள்ளது. சங்க இலக்கியப் பதிவுகளிலிருந்து அக்காலத்தில் அறக் கருத்தியல் இருவகையாகத் தமிழகத்தில் இருந்துள்ளது என அறியமுடிகிறது. **சூழலின் அழுத்தத்திற்கு இடம்கொடுக்காமல் எப்போதும் மாற்றமின்றி ஒரே நிலையிலிருக்கும் *பொது அறக்கருத்தியல்***, அடுத்தது, **சார்ந்துள்ள சூழலைப் பொருத்து அவரவர் நிலைக்கேற்ப மாற்றம் பெறக்கூடிய *சூழல்சார் அறக் கருத்தியல்*** என இருவகைக் கருத்தியலும் சங்க காலத்தில் நிலவியிருந்ததை உணர முடிகிறது.

அறக்கருத்தியலை மன்னன் எப்போதும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது சங்க காலச் சமூகத்தின் கட்டமைப்புகளுள் ஒன்றாகவே இருந்துள்ளது எனலாம். '*அறன்நெறி பிழையாத் திறனறி மன்னன்*' என மன்னனுக்கும் அறத்திற்கும் இருந்துள்ள உறவைப் பல சான்றுகள் மூலம் அறியமுடிகிறது. அதே போல நீதி வழங்கும் அமைப்பான 'அவையம்' அறத்தின் மறுபதிப்பாக இருந்துள்ளது என '*அறன்நிலை திரியா அன்பின் அவை*', '*உறந்தை அவையத்து அறம்கெட அறியாதாங்கு*' முதலிய பல இலக்கியச் சான்றுகள் மூலம் தெளியலாம்.

நீதி செலுத்துவதில் அறக் கருத்தியலின் பங்களிப்பு மிகுதியாக உண்டு எனினும் நீதிக் கருத்தியல் அறக்கருத்தியல் இடையே வேறுபாடுகளும் உள்ளன. பொதுவாக அறம் அறிவுறுத்தலோடு நிற்கும் ஆனால் நீதி வலியுறுத்திச் செயல் பட வைக்கும். நீதியரசர்களால் குற்றவாளிக்குத் தண்டனை வழங்க முடியும் ஆனால் அறவாணர்களால் வெறும் அறிவுரை மட்டுமே வழங்க இயலும். இதற்குக் காரணம் நீதிக் கருத்தியலோடு அதிகாரம் இணைக்கப்பட்டிருந்ததே ஆகும்.

அனைத்துத் துறைகளிலும் சிக்கல் எழுவதால் எல்லாத் துறைகளிலும் நீதி செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. சங்க இலக்கியச் சான்றுகளிலிருந்து அக்காலத்தில் பல துறைகளில் நீதி மேலாண்மை முறையாக இருந்துள்ளதை

அறிய முடிகிறது. சான்றாக வணிகம், அரசியல், பொருளாதாரம், போர் முதலிய துறைகளைக் குறிப்பிடலாம்.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே தமிழர்கள் வணிகத்துறையில் சிறப்புற்று இருந்துள்ளனர். உள்ளூர் வணிகம், நில எல்லை கடந்த நாட்டிடை வணிகம், கடல் எல்லை கடந்த நாட்டிடை வணிகம் என முறைப்படுத்தப்பட்ட வணிக அமைப்பு அக்காலத் தமிழகத்தில் இருந்துள்ளது. இதை நிறுவ பலப்பல வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன. வணிக நிலைப்பாடுகளில் சிக்கல் ஏற் பட்டபோதெல்லாம் அவற்றை உரியவாறு தீர்த்து **நுகர்வோர்க்கும் வணிகப் பெருமக்களுக்கும் அத்துறையின் தேவை சார்ந்து நீதி வழங்கப்பட்டுள்ளது**.

நுகர்வோர் எக்காரணம் முன்னிட்டும் ஏமாற்றப்படக் கூடாது என்பதில் சங்க காலச் சமூகக் கட்டமைப்புக் கவனமாக இருந்துள்ளது. வணிகர்களிடம் இருந்து நடுவுநிலைமையை எதிர்பார்த்துள்ளது. கொடுக்கும் பொருளின் அளவும் தரமும் குறைவுபடாது பார்த்துக் கொள்ள வேண்டும் எனும் கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் நிலவியுள்ளது. இந்நடைமுறைகளும் நீதி செலுத்துதலே ஆகும். சிக்கல் வந்தபின்னர் அதைத் தீர்ப்பது போன்றே சிக்கல் வரவிடாமல் வரும்முன்னர் காத்தலும் நீதி செலுத்துவதே ஆகும்.

வணிகர்களிடமிருந்து சுங்கம் பெறப்பட்டிருக்கிறது. அதற்கு ஈடாக அவர் களின் தொழில் நடைபெற வேண்டிய அடிப்படைக் கட்டமைப்புகளை உண்டு பண்ணியுள்ளனர். வணிகர்களுக்கு வேண்டிய சாலை வசதிகள், வணிகச் சாத்து களுக்கான பாதுகாவல், பண்ட சாலைகள் அமைத்துத் தருதல், இறக்குமதிப் பொருட்களுக்குக் கடுமையான பாதுகாப்புக் கொடுத்தல், கொள்ளையர்களை ஒடுக்குதல் என வணிகர்களுக்குத் தேவையானவற்றைச் செய்துள்ளனர். சுங்கம் பெற்று இவ்வசதிகளைச் செய்து தராதிருந்தால் அது வணிகர்களுக்கு இழைக்கப் படும் அநீதியாகும் எனும் கருத்தியலின் அடிப்படையில் வசதிகள் செய்துதந்து அவர்களின் உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது.

அரசுரிமை மாற்றம் என்பது சங்ககாலத்தில் நடைபெறும் இன்றியமையாத அரசியல் நிகழ்வாகும். இத்துறையில் அவரவர் உரிமையைப் பாதுகாப்பதே அவரவர்க்கு வழங்கப்படும் நீதியாக இருந்துள்ளது.

பழவிறல் தாயம் நடைமுறைப்படி மன்னனுக்குப் பிறகு அவன் மகன்களுள் மூத்தோனுக்கு அரசுரிமை மாற்றம் செய்யப்படுவதே அரசியல் நீதி யாக இருந்துள்ளது. பழவிறல் தாயம் நடைமுறைக்கு விதிவிலக்காகத் திறமை அடிப்படையில் இளையோனுக்கும் அரசுரிமை மாற்றம் செய்யலாம் எனும் கருத்தியல் சங்ககாலத் தமிழகத்தில் உருவாக்கம் பெற்றுள்ளது. மன்னனின் பெண் பிள்ளைகளுக்கு அரசுரிமை கோரும் உரிமை இல்லை. **இதில், பெண்களுக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது எனலாம்**. வாரிசு கருவிலிருக்கும்போது மன்னன் இறக்க நேரிட்டால் வயிற்றிலிருக்கும் கரு உயிரோடு பிறப்பின், அந்த ஆண் குழந்தைக்கு அரசுரிமை உரியது எனும் கருத்தியல் சங்க காலத்தமிழகத்தில் நிலவியது. இதன் மூலம் கருவின் உரிமையையும் பாதுகாத்த சமூகமாக அக்காலச் சமூகம் இருந்துள்ளது.

வரிப்பணம் பெறுவதன் பின்னணியில் பொருளாதார நீதிச் செயன்மை மறைந்துள்ளதை நன்கு உணரலாம். மக்களுக்கு விதிக்கப்படும் வரியும் நீதிமுறை சார்ந்திருக்க வேண்டும். கூடுதல் வரிவிதிப்பு, பொருந்தா வரிவிதிப்பு, வரி தண்டுவதில் கடுமை, அளவு கடந்த தண்டனை முதலியவை நீதிமுறைக்குப் புறம் பானவையாகும். வரிவிதிப்பில் நீதிமுறை எவ்வாறு பிறழக்கூடாதோ அவ்வாறு பெற்ற வரிப்பணத்தைச் செலவிடுவதிலும் நீதிமுறை பிறழக் கூடாது எனும் பொருளியல் தெளிவு சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது.

பயன்துய்ப்பு வரி, உற்பத்தி வரி, புரவு வரி, உல்கு வரி, கப்பம் வழியாக அரசுக்கு வருவாய் வந்துள்ளது என அறியமுடிகிறது. **சங்க காலத் தமிழகத்தில் வரிவிதிப்பில் நீதி பிறழப்பட்ட காட்சிகளைக் காணமுடிகிறது**. இவ்வாறு

மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மன்னனிடம் நேரடியாக முறையிடும் வாய்ப்பு மக்களுக்கும் அறிவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. இயற்கைச் சீற்றத் தினால் உழவர் துயருற்ற காலத்தில் வரி நிலுவை அல்லது வரி தள்ளுபடி செய்து அவர்களுக்குத் தீர்வழி கொடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மக்களைக் கொடுமை படுத்தி அவர்களிடமிருந்து வரி பெறுவது தவறு எனும் பொருளியல் சார்ந்த நீதி கருத்தியல் சங்க காலத் தமிழகத்தில் நிலவியுள்ளது.

போர்த்துறையில் சங்க காலத் தமிழகம் ஆற்றிய நீதி மேலாண்மை வியப்பு அளிக்கிறது. திடிரெனப் போர் தொடுக்காமல் எதிர்நாட்டிற்கு ஆநிரை கவர்தல் மூலம் போர்தொடுப்பை அறிவித்தல் தற்காலத்தில் பன்னாட்டளவில் கடைப் பிடிக்கப்படும் போர்தொடுப்பு அறிவிக்கைக்கு ஈடான செயலாக உள்ளது.

போர்க்காலத்தில் இயலாதோரை பாதுகாப்பு வளையத்திற்குச் செல்ல வாய்ப்பளித்த காட்சியை இலக்கியம் பதிவுசெய்துள்ளது. முதியோர்களையும், பெண்களையும், நோயாளிகளையும், கால்நடைகளையும் பாதுகாப்பு வளையத் திற்கு அனுப்பிய செய்கை தற்காலத்தில் பள்ளிக் கூடம், முதியோர் இல்லம், மருத்துவமனை முதலியவற்றின் மீது தாக்குதல் செய்யக்கூடாது எனும் போர்நீதிக்கு ஒப்பானதாகப் பார்க்கப்படுகிறது.

போரில் கைதிகளாகக் கொண்டு வருபவர்களை எப்படி நடத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் அவையம் அறிவுறுத்தியுள்ளது. அதாவது போர்க்கைதி களுக்குரிய உரிமை காக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்கிறது. சங்க காலத் தமிழகம் ஏறத்தாழ போர்க்கைதிகளின் உரிமைகள் பலவற்றைப் பாது காத்துள்ளது வியப்பைத் தருகிறது. ஆண் போர்க்கைதிகளைக் கொண்டி மள்ளர் என்றும் பெண் போர்க்கைதிகளைக் கொண்டி மகளிர் என்றும் குறிப்பிடுவது அக்கால வழக்கம்.

கொண்டி மள்ளர், கொண்டி மகளிர் இவர்களுக்கான உறைவிடம், உணவு உடுப்பு, அவர்களுக்கேற்ற வேலைவாய்ப்பு, சிறைச்சாலையில் அடைக்காமல் தன் குடிமக்களைப் போன்றே நடத்துதல் எனப் பல முன்னோடி செயன்மை புரிந்து போர்க்கைதிகளுக்கு போர்நீதி நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

கொண்டி மகளிர் தம் பகுதியில் அமைந்துள்ள மறங்களில் விளக்கேற்றும் பணியினையும், பொதுவிடங்களில் யாழ் இசைக்கும் பணியினையும் ஆற்றி யுள்ளனர். ஒரு சிலர் பரத்தமைத் தொழிலில் ஈடுபட்டதாகவும் குறிப்புள்ளது. கொண்டி மள்ளர்க்கும் கொண்டி மகளிர்க்கும் உரிய பணிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு ஊதிய வருவாய் உறுதி செய்யப்பட்டுள்ளது.

போர்தொடங்குவதற்கு முன்னர் ஆநிரை கவர்தல் மூலம் போர் அறிவிப்பு, போர்நடைபெறும் போது இயலாதவர்கள் பாதுகாப்பிடம் செல்ல அனுமதி அளித்தமை, போர்க்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்க முனைந்தமை, போர்க்குப் பின்னர் மக்கள் சிறப்பாக வாழ மறுநிர்மானப் பணிகள் மேற்கொள் ளுதலென மனிதவுரிமைகளைப் போரின் போதும் காக்க வேண்டும் எனும் போர் சார்ந்த நீதிக் கருத்தியல் சங்க காலத்தில் வளர்நிலையில் இருந்துள்ளது.

முறையாக நீதி செலுத்துவதற்குச் சில துணைச்செயன்மைகள் உதவி புரிகின்றன. அவற்றை நீதியின் அங்கள் எனப்படுகின்றன. காவல், விசாரணை, தண்டனை முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

சங்க காலத் தமிழகத்தில் விசாரணை முறை செம்மையாக இருந்துள்ளது. உளவியல்படி வழக்குத் தரப்பாளர்களைக் கையாண்டு அவர்களின் அச்சம் தீர்த்து இனியமொழி பேசி நம்பிக்கையூட்டி விசாரணை நடைபெற்றதாக அறிய முடிகிறது. இதற்காகக் காவிதி மாக்கள் எனும் பொறுப்பில் பணியாற்றியவர்கள்

உண்டு. இவர்கள் தவிர அவையில் பேசத் தெரியாத மக்களின் குறைகளை எடுத் துரைப்பதற்காக வழக்குரைஞர் பொறுப்பிலும் சிலர் பணியாற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

குற்றமனம் இல்லாமல் செய்யப்படும் குற்றங்களுக்குத் தண்டனை வழங்க கூடாது என்பது தற்கால நீதியியல் வளர்ச்சி. இவ்வளர்ச்சிக் கருத்தியல் சங்க காலத் தமிழகத்திலும் நிலவியுள்ளது. செய்யப்படும் **தவற்றுக்கு ஏற்ற தண்டனை வழங்கப்பட வேண்டுமெனும் நீதிக்கருத்தியல்** அக்காலத்தில் இருந்துள்ளது.

அரசர்கள் தவறு இழைப்பதே இல்லை என்னும் கோட்பாட்டைப் பெரும்பாலும் அனைத்து முடியாட்சி அரசுகளும் பின்பற்றி வந்துள்ளன. ஆனால் சங்க காலத் தமிழகம் பன்னாட்டளவிலான இக்கொள்கையிலிருந்து மாறுபடுகிறது. ஆம், அரசர்களும் தவறிழைக்கக் கூடியவர்களே எனச் சங்க காலச் சமூகம் நிலைநாட்டியுள்ளது.

பொதுமக்களுக்கு அநீதி இழைக்கப்படாமல் தடுக்க காவல் படை சங்க காலத் தமிழகத்தில் பல பணிகளை மேற்கொண்டிருந்தது. ஊர்க்காவல், சிறைக் காவல், போர்ப்படை, மதில்காப்புப் படை, பாசறைக் காவல்படை, சுங்கப்பொருள் பாதுகாப்புப் படை, நீர்நிலைக் காவல், எல்லைக் காவல் படை, உளவுப்படை முதலியவை பொதுப்பணிக்கான காவல்படையாகச் செயல்பட் டுள்ளன. சங்க காலத் தமிழகத்தின் காவல் பணியில் மாற்றுத் திறனாளிகளும் பெண்களும் ஈடுபட்டிருந்தனர் என்பது கூடுதல் சிறப்பு.

சரியான தீர்ப்புரை கொடுக்க சரியான சாட்சியங்கள் தேவைப்படுகின்றன எனும் கருத்தியல் அக்காலத் தமிழகத்தில் இருந்துள்ளது. கண்ணால் பார்க்கும் சாட்சியைப் பெரிதும் நம்பியிருந்தனர். அதேநேரம் பொய்ச்சாட்சி குறித்த

விழிப்புணர்வும் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது. மேலும், தடயங்களையும் சாட்சியாகக் கொள்ளும் அறிவுநுட்பம் சங்க காலத் தமிழகத்தில் இருந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன.

சங்க காலத் தமிழகத்தில் சிற்சில அநீதி காட்சிகளும் பதிவாகியுள்ளன. என்றாலும் அவற்றுக்கான மேல்முறையீட்டு வாய்ப்பும் இருந்து உள்ளதைக் கருத வேண்டும். எனவே சங்க காலத் தமிழகத்தில் நீதிக் கருத்துரு செப்பமான வளர்நிலையில் இருந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.